
கங்கை நாச்சியார்

கோவி. மணிசேகரன்



வானதி பதிப்பகம்

கங்கை நாச்சியார்

கோவி. மணிசேகரன்

செல்வி
பதிப்பகம்
காரைக்குடி

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு: நவம்பர், 1984

உரிமைகள் : ஆசிரியர்க்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை: ரூ. 14-00

அச்சிட்டோர் :
வள்ளல் பாரி அச்சகம்
26, வள்ளல் பாரி தெரு,
எம். ஜி. ஆர். நகர்.
சென்னை-600 078.

என் அன்பு

உடன்பிறவா தம்பி,

மாணவன்

நீலவனுக்கு

இந்நூல்

91/4

முன்னுரை

நீண்ட நாட்களாகவே மதுரை மன்னர் திருமலை நாயக்கரை எனது நாவலில் ஏற்றி மகிழ வேண்டும் என்று எண்ணியது இப்போது ஓரளவு நிறைவேறியது.

அது என்ன ஓரளவு?

பெருநாவலாகப் படைக்க ஆசைப்பட்டேன். அது சிறு நாவலாக முடிந்தது.

நாயக்கமன்னர்களில், தமிழர்கள் கையெடுத்துக் கும்பிடத்தக்கவர் திருமலை நாயக்க மன்னர். ஆந்திர வடுகரானுலும் கலைப்பணியாற்றிய காவலர். இவரிடம் நாம் தமிழ்ப்பணியை எதிர் பார்க்க முடியுமா?

'கங்கை நாச்சியார்' என்ற தலைப்பில் வெளி வரும் இந் நாவல், நாயக்க மன்னர் திருமலை நாயக்கர் காலத்தை மையமாகக் கொண்டதாகும்.

கங்கை நாச்சியார் என்ற பெயர் கண்காணும் நாச்சியார் என்றும் சேதுபதிகள் வரலாறு செப்பு கிறது. ஆனால் அது, மருவிய கொச்சைப் பெயர்; கங்கை நாச்சியார் என்ற பெயரின் திரிபு என்று வாதிப்பாரும் உண்டு. அந்த வாதிப்பையே நான் ஏற்றுப் பெயர் தந்தேன்.

இந் நாவலின் மிகப் பெரிய சிறப்பு ராமப் பய்யர். அந்தணக் குடிமகனாகிய இவர் காட்டிய வீர தீர சாகசங்கள் சரித்திரப் பிரசித்தம்,

'ராமப்பய்யன் அம்மானை' என்ற நாடோடிப் பாடல் முறையில் அமைந்த நூல் போதிய ஆதாரங்களைப் போதிக்கின்றன.

ஆயினும் திருமலை நாயக்கரை எண்ணிப் பார்க்கிற போது...

அது ஒரு பெருங்களங்கம். தமிழகத்து மன்னர்கள், அண்டை நாட்டு அரசர்களுடன் சமாதானம் செய்து கொள்ளதற்காக அவர்களது திருக்குமாரிகளை மனைவிகளாகக் கொள்ள நேர்ந்தது. அப்படிப் பார்க்கையில் தமிழக வரலாற்றிலேயே ராஜராஜ சோழமன்னன் ஒருவன்தான் ஒன்பது முதல் பதினைந்து மனைவிமார்கள் வரை மணந்ததாகத் தெரிகிறது. ஏனையவர் ஐந்தைத் தாண்டாதவர்கள்.

இவர்கள் யாவரும் அரசகுமாரிகள், அதிகாரமுள்ளவர்கள்.

ஆனால் திருமலை நாயக்கர்?

200 என வரலாற்றுப் பட்டியல் விரிக்கிறது.

இருவர் மட்டுமே அதிகாரப் பூர்வமான தேவிகள். ஏனைய 198 பெயர்கள் காமக்கிழத்திகள், இரவில் மின்னும் நட்சத்திரங்கள். பல இடங்களிலிருந்து எடுத்தும் பறித்தும் கொண்டுவரப் பட்டவர்கள். இந்தக் களங்கத்தைத் தமிழகம் சுமக்க வேண்டும் என்று தலையில் எழுதியிருக்க, யாரால் தடுக்க முடியும்?

தமிழரல்லாதவர்கள் களப்பிரர் காலத்திலிருந்து மராட்டியர் காலம்வரை செய்த அநியாயங்களுள் இது தலையானது.

தமிழர்கள் ஒன்றுபடாதபோது நிகழும் அசம்பாவிதங்களுக்காக வரலாறு இப்படி நாணப்பட்டுத்

தான் தீரவேண்டும் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு.

ராணி மங்கம்மாளையும், ராணி மீனாட்சியையும் கற்பின் கனலிகளாக இன்றைய வரலாறு எழுதுபவர்கள் வருணித்தாலும், ஆங்கிலேயர்களின் குறிப்புக்களைக் காணவேண்டுமே! செய்த பாவங்களுக்காக அவர்கள் கலைப்பணிகளையும் தானதருமங்களையும்செய்து பிராயச்சித்தம் தேடிக் கொண்டார்களே யொழிய, தமிழகத்தைத் துர்வாடையில் மூழ்கச் செய்ததை எப்படி மூடிமறைத்தாலும் எதிர்காலம் புதைபொருள் ஆராய்ச்சி செய்தே தீரும்.

ராமநாதபுரத்து மறவர்களான சேதுபதிகள், அந்த ராமேஸ்வரன் புண்ணியத்தில் துளிர்த்துத் தழைத்துவந்தார்களோ, தமிழகம் ஓரளவு தலைக் குனிவில் இருந்து தப்பியதோ!

இல்லையென்றால் தமிழகத்தை ஆண்டவனாலும் காப்பாற்றி இருக்க முடியாது.

ராணிமங்கம்மாளையும், ராணி மீனாட்சியையும் எழுதக்கூடாதென்று ஒருகாலத்தில் எண்ணியதுண்டு. பின்னர், சிலர் இவர்களைப்பற்றி எழுதிய நாவல்கள் சிலவற்றைப் பார்வையிட நேர்ந்த போது ஏன் எழுதக் கூடாது என்று தோன்றியது.

நாம் பொதுவாக ஒரு மரபைத் தெரிந்தோ தெரியாமலோ பின்பற்றி வருகிறோம்.

சரித்திரத்தில் தமிழ்க் கதாநாயக, நாயகிகளா? அவர்கள் அப்பழுக்கற்ற உத்தமர்கள்; அவர்கள் மீது கறைபடாமல் கவனித்துக் கொள்ள வேண்டும். இது ஒருவிதத்தில் பின்பற்றவேண்டிய

மரபேயாளுலும், எல்லாவற்றிலும் பின்பற்றி வர முடியாது. ஒரு தமிழ்ப்பாண்டிய குமாரன் எகிப்திய கிளியோபாத்ராவைக் காதலிப்பதாகக் கற்பனை செய்கிற போது, கிளியோபாத்ராவைக் கண்ணகியாக்கிவிட முடியுமா? ஆக்குங்கள் என்று ஒரு மரபு ஆணையிடுமாளுல், அந்த மரபு, ஒரு போலியான நாடகத்தைத் தயாரித்து விநியோகிக்கும் மரபாகவே இறுதியில் முடிந்துவிடும்.

இப்படி நம்மை நாமே ஏன் போலியாக்கிக் கொள்ள வேண்டும் என்கிற கேள்வியின் உந்தலில் எழுதப்பட்ட நாவல்தான் என்னுடைய 'நாயக்க மாதேவிகள்'.

இந்த நாவலும் வானதி பதிப்பக வயிலாகத் தான் வெளி வந்திருக்கிறது.

எனது நாவல்களை அன்புடன் வெளியிட்டு மகிழ்விக்கும் அருமை நண்பர் வானதி பதிப்பக உரிமையாளர் திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்கட்கு எனது நன்றி என்றும் உரித்தாகும்.

என்றும் போல் இன்றும் எனது அறிவான வாசக நெஞ்சங்களைக் கரம் கூப்பி வணங்குகிறேன்.

சாலிக்கிராமம்
சென்னை - 93

கோவி. மணிசேகரன்

1

ஆகாய வீதியில் அக்கினி ரதம் பவனி வந்து மேலே வாசலை முத்தமிடுகிறது.

கறுப்பும் சிவப்புமாயிருந்த மேகங்கள் மத்தியமாவதி பாடுகின்றன.

தமிழ் வளர்த்த மதுரையில் வாழ்கிறோம் என்கிற பெருமைமிகு மமதையில் புள்ளினங்கள், கம்பீரமாகப் பறந்து கூடுநோக்கிச் செல்கின்றன.

வாய்களில் நுரை தள்ள ஏறத்தாழ நூறு குதிரைகள், வேகவேகமாக அம்பு போலச் சீறிப்பாய்ந்து வருகின்றன. அவற்றின் மீது மறவர்ச்சீமையாம் சேது நாட்டின் வீரர்கள் ஆரோகணித்திருக்கிறார்கள். முன்னே மீன்கொடி ஏந்திய வீரன்.

திடுமென்று பெருத்த கூச்சல்.

வேகத்தைக் குறைத்துக் குதிரைகளை நிறுத்தலாம் என்பதற்கான சமிக்ஞை அது.

குதிரைகள் நிற்கின்றன.

மதுரைக்குத் தெற்கே இருகாவத தொலைவில், இருட்டி விட்டதால் ஓய்வுகாணுமாறு உத்தரவு பணிக்கிறான், இளைய சேதுபதி நாராயணத் தேவன்.

இவன்—

சிங்கமனைய சேது நாட்டின் தங்கமனைய தலைவன், இரண்டாம் சடையத் தேவரின் அன்புக்குரிய தங்கையான *கங்கை நாச்சியாரின் இரண்டாம் புதல்வன் இணையற்ற மறவக்குமரன்.

ஓர் அவசரமும் அதிமுக்கியமும் நிறைந்த செய்தி தாங்கித் துணிந்து மாறுவேடத்தில் துணைவர்களுடன் புறப்பட்டு வந்திருக்கிறான்.

புறப்படுகிற போதே அவனது அண்ணன் ரகுநாதன்—பட்டத்து இளவரசன்—எவ்வளவோ எடுத்துச் சொன்னான். இந்தத் தூதுவை யார் தாங்கிப் போனால் என்ன?

தம்பி நாராயணத் தேவனுக்கு மதுரையைப் பார்க்க வேண்டும் என்கிற தணியாத தாகம் நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது. பண்டு புகழ் மணக்க-விண்டுரைக்க முடியாத வியத்தகு சரித்திரம் படைத்த மதுரையல்லவா?

இப்போது அது நாயக்கர்பால் பட்டாலும் நலிந்து படவில்லை.

மேலும் தூதுவின் நோக்கம்—

'எங்கள் முன்னோர் கப்பம் கட்டினர். நாங்கள் கப்பம் கட்ட மறுத்து வருவதற்குக் காரணம் மறக்குடி மக்கள். எனவே கப்பம் கட்டுவதற்குப் பதிலாக மேன்மைமிகு மதுரை மன்னர் திருமலை நாயக்கர் தமது இளைய புத்திரி கங்கை நாச்சியாரை, எங்கள் இளவல் நாராயணத் தேவனுக்கு மண முடித்தால் சமாதானமாக உறவுகொண்டு வாழலாம். மறுப்பது மன்னர் விருப்பம். கப்பம் என்று வந்தால் களத்தில்தான் அதனைப் பெற முடியும்.

இச்செய்தியை நாராயணத்தேவன் கொண்டு செல்ல இரண்டாவது காரணமும் இருந்தது.

அது—

---

*கண்காணும் நாச்சியார் என்று சொல்வாருமுண்டு.

அந்த நாயக்கர் குலத்து நளினமிக்க கவிதையழகி என்று பல்லோரால் சொல்லப்பட்ட கங்கை நாச்சியையும் நேரில் காணவேண்டும் என்கிற ஒரு வசந்த அரிப்பு.

வானில் நட்சத்திரப் புஷ்பங்கள் கண் சிமிட்டத் தொடங்கிவிட்டன.

இனிமேல் அரண்மனைக்கு எவ்வாறு செல்லமுடியும்?

அக்கினி உதயம் கிழக்கை முத்தமிடட்டும் என்கிற ஆறுதலுடன் அவரவர் ஓய்வு கண்டனர்.

தொலைவில் தெரிந்த ஒரு பழம் மண்டபத்தில் நாராயணத்தேவன் ஓய்வுகொண்டான். அவனுடன் மட்டும் அவனது ஆருயிர் நண்பன் வீரமகன் வேலுதுரை இருந்தான்.

''வேலு! இந்தத் தூதுவைப் பற்றி நீ என்ன நினைக்கிருய்?'' —நாராயணத் தேவன் கேட்டான்.

வேலுதுரை வீரன் மட்டுமல்லாது சிந்தனு விவேகம் படைத்தவன்.

''நீ வந்திருக்கக்கூடாது. அவ்வளவு தான் என்னுல் சொல்ல முடியும்''— வேலுதுரை.

''மதுரையைப் பார்க்க ஆசைப்பட்டேன்.''

''பார்க்காமலா போய்விடப் போகிருேம். அதற்கு இது வல்ல நேரம்.''

''கங்கை நாச்சி எப்படியிருப்பாள் என்று...''

''உஸ்! ஊமைச் சிந்தனை! ஏதோ திருமலைநாயக்கர் சம்மதித்து விட்டது மாதிரியும், அவளை மணக்க அழகு இருக்கிறதா? அறிவு இருக்கிறதா? என்று நீ ஆராயப் போவதும் மாதிரி...''

''ஏன் சம்மதிக்க மாட்டாரா?''

வேலுதம்பி மிக்கவும் கூர்ந்து நோக்குகிருன். தீப்பந்தத்தின் வெளிச்சத்தில் அவனது கண்களில் ஆழ்ந்த பரிசீலனை வெளிப்படுகிறது.

“நாராயணத் தேவா! பழைய விஷயத்தை நினைவு கூர்ந்து பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் உனது தாய்—கங்கை நாச்சியாரை இதே திருமலை நாயக்கர் மனதாரக் காதலித்துத் தூது அனுப்பினுர். அப்போது சேது நாட்டை யாண்ட கூத்தன் சேதுபதி— உன்னை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்ட இப்போதைய சேதுபதி கடையத்தேவரின் தந்தையார்—அறவே மறுத்துவிட்டார். அந்த மயக்கம் மறையவில்லை என்பதை எடுத்துக்காட்டவே தமது இளைய புத்திரிக்கு திருமலைநாயக்கர் கங்கை நாச்சியார் என்ற பெயரை ஞாபகார்த்தமாக வைத்திருக்கிருர். அவ்வாறு இருக்க இந்த உடன்பாட்டுக்கு ஒப்பவா செய்வார்? அப்படி ஒப்புக்கொண்டால், அது மதுரைவாழ் மீனுட்சியம்மையின் அருள்தான்.”

மனம் குமைந்து நண்பனை நோக்குகிருன் நாராயணத் தேவன்.

அப்போது—

வெகுதொலைவில் பெண்களின் அலறல் குரல்கள் காற்றில் மிதந்து வந்து காதுகளில் ஊசிகளாய்த் தைக்கின்றன. அந்தக் குரல்களை மீறி ஒரு தீனமான குரல் ஏதேதோ சொற்களைச் சிந்துவது மாதிரி கேட்கிறது.

இருவரும் உற்றுக் கவனித்து ஒன்றும் புரியாமல் விழிக்கின்றனர்.

“வேலு! பெண்களின் அபயக் குரல். அங்கு ஏதோ நடக்கிறது. எழுந்திரு.”

வேலுதுரை பொருள் புதைந்த புன்முறுவல் பூக்கிருன். “தேவையா?”

"பெண்மையை வணங்குவது மறவர் குலம், நீ வந்தாலும் வராவிட்டாலும் நான் புறப்படுகிறேன்."

இளைய சேதுபதி நாராயணத்தேவன் ஒரு வேகச் சுழிப்புடன் எழுந்து குதிரை இருக்கும் இடம் நாடி விரைகிறான். சூழ்ந்திருந்த வீரர்களும் ஓடிவர—

தனது நீலப்புரவியை அவிழ்த்துக்கொண்ட நாராயணத் தேவன், "என்னுடன் பத்து வீரர்கள் வந்தால் போதும். தேவையானபோது நீங்கள் அனைவருமே வரலாம்." என்று கூறி புரவி மீது தாவி ஏறி, பெண்களின் அபயக் குரல் கேட்கும் திசை நாடி காற்றென விரைகிறான். தொடர்ந்து பத்து வீரர்கள்.

'தேவையா?' என்று கேட்டானே யொழிய மனம் கேட்குமா? தானும் பின் தொடர்ந்து புரவி சகிதமாய் விரைந்தான் வேலுதுரை.

அவர்கள் தங்கியிருந்த இடத்துக்குக் கிழக்கே ஒரு காவத தொலைவில் ஐந்து பெண்கள் சில மனித அரக்கர்களிடம் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நன்றாகவே இருட்டிவிட்ட நேரம்.

ஒருவன் தீப்பந்தம் ஏற்றுகிறான்.

சுற்றிலும் பயங்கர வனாந்திரம்.

அன்றைக்கு நாக பஞ்சமி.

மதுரை நாயக்க மன்னர் திருமலை பூபதியின் செல்வக் குமரி கங்கை நாச்சியார், நாகபஞ்சமியில் பிறந்ததால் அன்றைக்கு மட்டும் மதுரைத் தலைநகரைத் தள்ளியிருக்கும் நாகப்புற்றுக் கோயிலுக்குச் சென்று முட்டை பால் ஊற்றுவது வழக்கம். அந்த வழக்கத்தை நிறைவேற்ற வழிபாட்டுக்கு வந்திருந்தாள் கங்கை நாச்சி. உடன் நான்கே தோழிகள். மற்றபடி இருபது நாயக்க வீரர்கள் புடைசூழ வந்திருந்தார்கள்,

மறவர்ச் சீமைக்கும் மதுரைக்கும் எப்போதுமே பகைமை நிறைந்த மனக்கசப்பு. போயும் போயும் ஒரு ஆந்திர இனத்தைச் சார்ந்த நாயக்க மன்னனுக்கு அடங்கி இருப்பதா என்கிற நியாயமான—சுயமரியாதையுள்ள எண்ண எழுச்சி அது. அதன் காரணமாக மறவர் நாட்டு ஒற்றர்கள் எப்போதும் மதுரைத் தலைநகரைச் சூழ்ந்து நடப்பனவற்றை அறிவதில் கண்ணுங்கருத்துமாய்ச் செயல் பட்டு வந்தனர். இது காலஞ் சென்ற கூத்தன் சேதுபதி காலத்திலிருந்தே ஆரம்பமாகி இருந்து வந்தது. சமயம் கிடைத்தால் மதுரையை மீட்கவும் அவர்கள் ஆயத்தமாக இருந்தார்கள். மேலும் வடக்கிலிருந்து வந்த இஸ்லாமிய பாதிப்பால் வேறு தமிழர்கள் ஐயுற்றுக் கிடந்தனர். எந்த நேரத்தில் திருமலைப் பூபதி காட்டிக் கொடுப்பாரோ என்கிற தன்மான உணர்வுடன் கூடிய ஐயம் அது.

இப்படி ஒரு நாகபஞ்சமி நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட மறவர்ச் சீமையின் ஒற்றர் தலைவன் மலையப்பன் அன்றைக்கு எப்படியும் நாயக்க இளவரசி கங்கை நாச்சியாரைக் கடத்திச் சென்று பழி வாங்குவது மட்டுமல்லாது, பல நாட்களாக மடைபோட்டிருந்த உணர்ச்சிக்கும் ஒரு பரிகாரம் தேட முனைந்தான்.

தோழிகள், உடன் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் தோழர்களுக்கு.

சின்னஞ்சிறு கோயில்.

கனத்து ஓங்கி வளர்ந்த வேப்ப மரம். அதனடியில் இரண்டாள் உயரத்துக்குப் புற்று. அதனடியில் ஏழு கன்னி மார்களின் சிலைகள்.

கோயிலினுள்...

கங்கை நாச்சி புற்றுக்கு முட்டை பாலூற்றிக் கொண் டிருக்கிறாள். உடன் தோழிகள் உதவிக் கொண்டிருக் கிறார்கள்,

கோயிலுக்கு வெளியே...

கொஞ்சம் தொலேவில் ஒரு முத்துப் பல்லக்கு. ஒரு சாதாரணப் பல்லக்கு. அவற்றுக்கருகே பல்லக்குத் தூக்கிகள் குத்தங்கால் போட்டமர்ந்து காணப்பட்டனர்.

வெகு தொலேவில் காவலுக்காக வந்த வீரர்கள் ஒய்வு கண்டிருந்தனர்.

மறைந்து மறைந்து வந்த மலேயப்பனும் அவனது நண்பர்களும் இந்த நாயக்க வீரர்களேப் பின்புறமாக வந்து ஒருவர்க்கு இருவரென அமுக்கிப் பிடித்து வாய் பொத்திச் சத்தம் வர விடாமல் தாக்கி, கொண்டு வந்த கயிற்ருல் கட்டிப் போட்டு விட்டார்கள்.

அடுத்துப் பல்லக்குத் தூக்கிகள்—வழி என்ன?

மலேயப்பன் மலேபிடுங்கியாயிற்றே! ஒருவனிடம் சென்று காதுகளில் ஏதோ உபதேசிக்கிருன். அவனும் விரைந்து ஓடி வந்து பல்லக்குத் தூக்கிகளிடம், "உங்களேக் கூப்பிடருங்க! கள்ளு கிடைச்சிருக்கு. இளவரசியம்மா வருவதற்குள் ரெண்டு மொந்தை அடிச்சிட்டு வந்துடலாம்" என்ருன்.

ஆ! அந்த நேரத்துக்குக் கள் எவ்வளவு இதமாக இருக்கும்.

"இளவரசிக்குத் தெரிந்துவிட்டால்"

ஒருவன் சந்தேகக் குரல் எழுப்புகிருன்.

"இளவரசியம்மா வாயையா மோந்து பார்க்கப் போருங்க? நம்ம கங்கை நாச்சியாரம்மா ரொம்ப நல்லவங்க. அப்படியே தெரிஞ்சாலும் கண்டுக்க மாட்டாங்க. சீக்கிரம் வாங்க!"

பல்லக்குத் தூக்கிகள் பறந்தனர்,

பாவம் அவர்கள்!

நாக வழிபாட்டை முடித்துக் கொண்டு கங்கை நாச்சி வெளியே வந்தாள். பல்லக்குத் தூக்கிகள் எழுந்து நின்று வணங்குகிறுர்கள். வீரர்கள் குதிரைகளில் ஆரோகணிக்க ஆயத்தமாக இருக்கிறுர்கள்.

வானம் மெல்ல இருட்டிக் கொண்டு வருகிறது.

நாயக்க இளவரசியும், பிரதான தோழி ராஜலட்சுமி யும் முத்துப் பல்லக்கில்.

ஏனைய மூன்று தோழிகள் சாதாரணப் பல்லக்கில்.

பல்லக்குகள் புறப்பட்டன.

முதலில் மேற்கு நோக்கிச் செல்வது போல பாவனை செய்து, இருட்டுக் கவிந்ததும் தென்மேற்கில் பல்லக்குகள் வழி மாறிச் சென்றன.

பயங்கர அந்த வனந்திரப் பகுதியில் அவர்களுக்கென்று அமைத்துக் கொண்ட குடிசைகள். அங்கு சென்றதும் பல்லக்குகள் இறக்கப்பட்டன.

தோழிகளின் எலும்பில் சூடேறுகிறது.

"இளவரசியாரே! இறங்கலாமே!"

மலையப்பனின் கரகரத்த கொடூரமான குரல்.

சற்று யோசித்துக் கூர்ந்து கவனிக்கிறுள். ஏதோ சதி நடந்திருக்கிறது.

"ஏனிங்கே நிறுத்த வேண்டும்?"

"அடி சீ! இறங்குடீ!"

என்று கூறிப் பாய்ந்த மலையப்பன், இளவரசி கங்கை நாச்சியின் கரம் பற்றி வெளியே தரதரவென்றிழுக்க...

உடன் இருந்த ஏனையவர்கள் தோழிகள் மீது பாய...

ஒரே கூச்சலும் குழப்பமும் வனந்திரத்தைக் கலக்கின.

மரங்களில் அப்போதுதான் ஒய்வு கொண்ட பறவைகள் கூட, 'அட, மனிதப் பாவிகளா' என்று கூறிப் படபடத்து வெளியேறின.

தொலைவில் ஆந்தையொன்று குரல் கொடுத்தது.

தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டன.

மலையப்பன் இளவரசி கங்கை நாச்சியைத் துடிக்கத் துடிக்கக் குடிசைக்குள் இழுத்துச் செல்கிறான்.

அந்த வனாந்திரமே அதிர்ச்சி கொள்கிற மாதிரி பெண் களின் அவலக் குரல்கள்.

இதில் பரிதாபத்துக்குரிய காட்சி...

தோழிப் பெண்களை நீ முந்தி நான் முந்தி என்று இழுத்து இழுபறி கோலம் செய்கிற காட்சி...

இரு தோழிகளுக்கு அந்த இழுபறி வேகத்தில் உடைகள் கூட அவிழ்ந்து...

ஆயினும் அதிலும் ஒரு வேடிக்கை இருந்தது.

'நீ முந்தி நான் முந்தி' என்ற போராட்டத்தின் விளை வால் ஒற்று, வீரர்கள் அவர்களுக்குள் அவர்களே அடித்துக் கொள்கிறார்கள். இதனால் தோழிகள் கற்புக்கு இன்னமும் பாதகம் ஏற்படவில்லை. அந்த அடிதடியே அவர்களுக்கு ஒரு பாதுகாவலாக இருந்தது.

குடிசையினுள்—

நாயக்க இளவரசி கங்கை நாச்சியார், தற்பாதுகாப்புக் காகக் கொண்டு வந்த குத்துவாள் இடுப்பிலிருந்ததால், அதனை எடுத்துக் கொண்டாள்.

''என்னிடம் நெருங்காதே! என்னிடம் நெருங்காதே!'

அவளது சொற்களில் அக்கினி, கண்களில் ஜுவாலை.

அப்படியும் மலையப்பன் தந்திரமாக ஒரு வழி வகுத்து ''டேய், நீ போடா!'' என்று பின்புறமாக யாரோ வருவ தாகப் பாசாங்கு செய்து கூச்சலிட..,

கங்கை நாச்சி திரும்பிக் கவனிக்க...

ஒரே பாய்ச்சலாக அவள்மீது பாய்ந்த மலையப்பன், அவளது கையிலிருந்த குத்துவாளைத் தட்டிவிட்டான்.

அது பரிதாபமாகத் தரையில் வீழ்ந்து 'ணங்'கெனாலி எழுப்பியது!

வெறி கொண்ட தீக்கண்களில் விரசத்தை நுழைத்துக் கொண்ட மலையப்பன், வேகச்சுழிப்புடன் கங்கை நாச்சியின் மேலாடையைத் தொட—

அடுத்த கணம் தனது பெண்மைக்குள்ளும் அரசகுல ஆண்மை புதைந்திருப்பதை எடுத்துக் காட்டுவதுபோல, 'பளீர்' என்று பலத்தை வலக்கரத்தில் இறக்கி அறைய—

கண்களில் மின்னல் பறக்க மலைத்துச் சிலைத்து மறு கணம் தனது உணர்வுக்கு வந்த மலையப்பன் கண்களில் வெறி கொண்ட காமம் தறிகெட்டு வெளிப்பட்டது.

2

தங்கள் கற்பு அநியாயமாகப் பறிபோகி விடுமோ என்கிற அவதிப் பதைப்பில் பெண்கள் அவலக் குரலெழுப்பி மானத்துடன் போராடிக் கொண்டிருந்த அந்த இருட்டு வேளையில்...

நல்ல வேளையாகத் தீப்பந்தங்களின் வெளிச்சம் உதவ...

நாராயணத்தேவனின் குதிரை நாகாஸ்திரமாகப்பாய...

உடன் பத்து குதிரை வீரர்கள் பக்க பலமாய்த் தொடர...

அதுவரை மன்மதலீலையை அரக்கத் தனமாக அரங் கேற்றிக் கொண்டிருந்த சேதுநாட்டு ஒற்றர்கள், ஏதோ

கட்டிப் போட்டு விட்டு வந்த நாயக்க வீரர்கள் தாம் எவ்வாறோ கட்டவிழ்த்துப் பின் தொடர்ந்திருக்கிறார்கள் என்றரண்டு கவனிக்கிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட தோழிகள், அரக்கத் தனமான அவர்களின் பிடிகளிலிருந்து மூச்சுப் பதற விடுபட்டு ஒதுங்கி ஓடினர்.

புரவியின் சேணத்தைப் பலங்கொண்ட மட்டும் இழுத்து நிறுத்த முயல்கிறான் நாராயணத்தேவன். வந்த வாயு வேகத்தைத் தெரிவிப்பது போல அந்த நீலக்குதிரையும் வானதிரக் கனைத்து முன்னங்கால்களை உயர்த்தி வாயில் விலாழி தள்ள நின்று தடுமாறி மீண்டும் நிலைக்கு வருகிறது. ஏனையக் குதிரைகள் நிற்க முடியாமல் சுற்றிச் சுற்றி வருகின்றன.

நீலப்புரவி சகிதமாய் வந்தவனை உற்று நோக்குகிறார்கள் சேதுநாட்டு ஒற்றர்கள்.

யாரவன்?

யார் இந்த வீரர்கள்? பார்த்தால் கட்டிப் போட்டு வந்த நாயக்க வீரர்கள் மாதிரி தென்படவில்லையே...

அப்போது குடிசைக்குள் 'வீல்' என்ற கூக்குரல்—

அடுத்த கணம்—

நீலப்புரவியின் விலாவில் இரண்டு கால்கள் உதைக்க...

நாகாஸ்திரம் குடிசைப்படலைப் பிய்த்துக் கொண்டு உள்ளேயே நுழைந்து விட்டது.

அந்த எதிர்பாராத நுழைவைக் கண்ட மலையப்பன் முதலில் மருண்டாலும் அடுத்து கொஞ்சமும் தாமதியாமல் வாளை யுருவிக் கொண்டான்.

இதற்குள் பலாத்கார யுத்தத்திலிருந்து மீண்ட கங்கை நாச்சி, ஓடோடிச் சென்று மேலாடையை எடுத்துப் போர்த்திக் கொண்டு நிற்கிறாள். நிற்க முடியவில்லை, உடல்

முழுவதும் ஒரே உதறல். அவளது கரங்கள் குதிரைமீது அமர்ந்து நெருப்புக் கோளமாய்க் காட்சி தரும் வீரனைக் கூப்புகின்றன. கண்களில் மருட்சி நிறைந்த படபடப்பு. ஓ...கண்களா அவை? கவிதை நய ஒளிகள்!

அந்த ஒருகணக் கவனிப்பில்—

அயர்ந்துபோன நிலையில் ஆளாகி விட்ட நாராயணத் தேவனை நோக்கி வாளை வீசினான் மலையப்பன்.

தனது தலைவனுக்கு வருகிற ஆபத்தை யுணர்ந்த குதிரை 'ஓ'வென்று கனைத்து முன்னங்கால்களைத் தூக்கி சிலிர்த்து உதைக்க—

மலையப்பன் மண் சுவரோரமாய்ப் போய் விழுந்தான். விழுந்த அடுத்த கணம் வாளைத் தூக்கிக் கொண்டு பாயவும் செய்தான்.

"மலையப்பா!"

குடிசையே புயற்காற்றில் பிய்த்துக் கொண்டு பறப்பது போன்ற நாராயணத் தேவனின் பெருங்குரல்.

தனது பெயரைச் சொல்லியழைக்கவே பெரிதாக அரண்டு போனான் ஒற்றர் தலைவன் மலையப்பன்.

யார் இந்தப் புதியவன்?

தனது பெயரைச் சொல்லி அழைக்கிறானே?'

தன்னை நன்கு அறிந்தவனாகத்தானிருக்கவேண்டும்.

பலே, நாராயண தேவன்! புனைவடிவம் மிக மிகக் கச்சிதம்...

வெளியில் அதுவரை கேட்ட வாட் போர்ச் சத்தம் நிற்கிறது. கோபக் கொந்தளிப்பாய்ச் சொற்கள் பொறி பறக்கின்றன. வேலுதுரையின் குரல் அது.

புரவியை விட்டுக் கீழே இறங்கிய நாராயணத்தேவன், "முட்டாள்! உன்னை ஒற்றறிய அனுப்பினார்களா? ஊர்ப்

பெண்களைத் தூக்கி வந்து கற்பழிப்புக் காட்சி நடத்த பணித்தார்களா? மறவர் சீமைக்கே மாசு தேடி விட்ட மடையன்!'' என்றான்.

மலையப்பனின் கோபம் மண்டையைத் தாக்கியது.

உள்ளே எரிந்து கொண்டிருந்த தீப்பந்தம் எண்ணெய் தீர்ந்ததால் அடங்கிக் கொண்டிருந்தது.

அடக்க வந்த ஆசையைத் தடுக்க வந்ததோடல்லாது ஆணவமாகவும் இந்தப் புதியவன் பேசுகிறானே என்று எண்ணுகையில் தீப்பந்தம் மலையப்பன் கண்களில் எண்ணெய் வார்த்து எரியத் தொடங்கியது.

''நீ யார்? என்னைப் பார்த்து முட்டாள் என்கிறாய்! மடையன் என்கிறாய்! யாரடா நீ?''

மலையப்பன் இவ்வாறு விளித்த அடுத்தகணம்—

சரேலென்று உள்ளே பாய்ந்த வேலுதுரை, மலையப்பன் முகத்தில் ஓங்கி ஒரு குத்து விட்டான்.

''வேலு அண்ணே!'' என்றலறிய மலையப்பன் குத்து வேகம் தாங்காது குனிய....

குனிந்த முதுகில், இரு கரங்களையும் மேலே தூக்கி ஓங்கி மறுமுறை குத்தினான், வேலுதுரை.

''அம்மா?'' என்றலறிய வண்ணம் கீழே சாய்ந்தான் மலையப்பன். மீண்டும் ஓர் உதை.

''வேலு அண்ணு! விட்டுடுங்க, என்னை ஒண்ணும் செய்யாதிங்க!'' என்று கதறினான் மலையப்பன்.

ஒ...தங்களுக்குப் பாதுகாப்பு கிடைத்துவிட்டது என்கிற மகிழ்ச்சியில் நடுக்கம் நீங்கி, விழிமலர்த்தி கவனிக்கிறாள் கங்கை நாச்சி. அந்த அழகுத் திருமேனியை முதன்முறையாகக் கவனிக்கிறான் வேலுதுரை. அவளும் அவனுக்குக் கரம் கூப்பி நன்றி தெரிவிக்கிறாள்.

யார் இவள்?

''ஏண்டா! மறவர் சீமையில் பிறந்தவனு நீ? இல்லே மறவனுக்குத் தான் பிறந்தாயா? மதுரையில் ஒற்றறிய அனுப்பினுல் இது என்னடா அசிங்கத்தனம்? இதைத்தான் இங்கே தினமும் செய்கிறீர்களா?''

''இல்லிங்க வேலு அண்ணே? சத்தியமா இல்லே! நம்ம மறவருங்களைப் பத்தி திருமலே நாயக்கர் பூபதி மதியாத் தனமா பேசியிருக்கிருர். நாங்க கேள்விப்பட்டோம். பழி வாங்க இந்தக் காரியம் செய்தோம்''

''இதுக்காக வீடுவீடாப் புகுந்து பெண்களேக் கொள்ளே யடித்துக் கொண்டுவரச் சொல்கிறதா?''

''சாமிசத்தியமா நாங்க அப்படி நினேச்சது கூடக் கிடையாது. இவ திருமலேபூபதியின் குமாரி. அதனுலத் தான் கோயிலுக்கு வந்திருந்தப்ப தந்திரமா கடத்திக் கிட்டு வந்துட்டோம்!''

திருமலேபூபதியின் குமாரி...

நாராயணத் தேவன் கவனிக்கிருன்.

அவனேத் தொடர்ந்து வேலுதுரை கவனிக்கிருன்.

திருமலேபூபதியின் குமாரி...

''பெயர்?''

நாராயணத் தேவனின் குரலில் கனத்த கம்பீரம் தெரிகிறது.

'நீயார் என்னேக் கேட்க?' என்பது மாதிரி பார்க்கிருன் மலேயப்பன்.

''கேட்பது காதில் விழவில்லே?''

வேலுதுரையின் அதட்டல்.

''இவன் யாரு என்னேக்கேட்க வேலு அண்ணே!''

சொல்லி முடித்த மறுகணம் பளீர் என மின்னல் பூக்க அறை விழுந்தது. அறைந்த அதே தனது தாடியையும், கனத்த மீசையையும் தேஜோமயமான அரும்பு மீசையுடன் கூடிய டு நாராயணத் தேவன் காட்ட...

அடுத்தகணம்...

அந்தக் குடிசைக்குள் இன்னொரு புயல் புகுந்ததுபோல அதிர்ச்சி காணக் கத்துகிறுன் மலேயப்பன்.

''இளேய சேதுராஜா!''

உடம்பே வெட்டுண்டது போலத் துடிப்புக் கண்ட மலேயப்பன், துள்ளி நெட்டங்கமாகத் தரையில் விழுந்து நாராயணத் தேவனின் கால்களேப் பற்றிக் கொண்டான்.

''என்னே மன்னிச்சிடுங்க சின்ன ராஜா! என்னே மன்னிச்சுடுங்க சின்ன ராஜா!''

''எழுந்திரு!''

இன்னும் நாராயணத்தேவனின் குரலில் சினம் அமைதி பெறவில்லே.

கங்கைநாச்சி, நாராயணத் தேவனேக் கவனிக்கிறுள்.

ஓ...சேது நாட்டின் இளவரசர், ரகுநாத சேதுபதியா? நாராயணத் தேவ சேதுபதியா?

ரகுநாதசேதுபதி சற்று வயது மிக்கவர் என்று கேள்விப் பட்டிருக்கிறேும்.

இவர் நாராயணத்தேவ சேதுபதியோ?

கங்கை நாச்சி வியக்க வியக்க நோக்குகிறுள்.

இவர்களது அன்னேயார் பெயரைத் தானே அப்பா தனக்கு வைத்திருக்கிறுர்.

கங்கை நாச்சியைக் கவனித்த நாராயணத்தேவன், ''நாயக்க இளவரசியே! இந்த மடையர்கள் தாங்கள் என்ன

என்பது தங்களுக்கே புரியாததால் தவறு
-டார்கள். இவர்களுக்காக எங்கள் மறவர்சீமைச்
மன்னிப்பு கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்றான்.

வாயில்லை' என்று சொல்லவும் மேலும் ஏதோ
லவும் தான் கங்கை நாச்சி வாய்திறந்தாள். அவளால்
ச முடியவில்லை. மாறாக புன்முறுவல் பூத்துத் தலை
ுனிந்து கொண்டாள்.

''உன் பெயர்?''

நாராயணத்தேவன் கேட்கிறான்.

குனிந்த தலை நிமிராது சொன்னாள்: ''உங்கள் தாயின் பெயர்.''

ஆயிரம் மின்னல்கள் தாக்கியது போன்ற பிரமையுடன் மலைத்துப் போனான் நாராயணத்தேவன்.

வேலுதுரையோ, ''கங்கை நாச்சியார்!'' என்று மனத்துள் முனகிக் கொள்கிறான்.

வெகு நேரத்துக்கு வெகு நேரமாகப் பதில் வராததா, குனிந்த தலையை நிமிர்ந்து நோக்குகிறாள் கங்கை நாச்சி.

ஓ...கங்கைநாச்சி...

நாராயணத்தேவன் மனத்தில் மந்திரமுனகல்.

என்ன அழகு; கொள்ளையழகு!

வடுக குலத்துக்கே அழகு வரப் பிரசாதம் என்று கேள்விப்பட்டது எத்துணைக்கு உண்மை!

தூரிகை தொடாத வண்ண ஓவியம்! வானத்தைத் தொட்டுப் பார்க்காத முழுநிலவு! முற்றுமாய்க் கண்மூடி மோனத் தவமிருந்து, கற்பனையில் சுற்றிச் சுற்றி வந்தாலும் சொற்களுக்குக் கட்டுப்படாத சுந்தரத்திருமேனி!

ஓ...கங்கைநாச்சி...

நெஞ்சில் தடம்பதித்து நினைவுகளைக் கொண்டு, என் பிரியமானவளே! நித்தம் ந புரண்டாய்; நேரில் காணத் தூண்டிவிட்டாய்; சுவாசத்துடன் நேர்முகமாய் நிற்கின்றாய்.

ஓ...கங்கைநாச்சி...

ஏன் இவர் இவ்வாறு மலைத்துச் சிலைத்துக் கவ வேண்டும்?

புரியவில்லை கங்கைநாச்சிக்கு.

"நான் ஒன்றும் தவறு செய்யவில்லையே?" கங்கை நாச்சியின் நாவில் பொடி நடுக்கம்.

நாராயணத்தேவன் நாவு அசைகிறது.

"நான்தான் தவறு செய்து, இல்லை நாங்கள்தாம் தவறு செய்து விட்டோம். நல்ல காரியத்தை நாடி வருகிற போது எங்கள் ஒற்று வீரர்கள், அதனைச் சிதறடித்து விட்டார்கள்- அரண்மனையில் சந்திப்பேன் என்று நினைத் தேன். அடிவயிறு புண்படுகிற நிலையில் அர்த்தமற்ற இடத்தில் சந்தித்து விட்டேன்! கங்கைநாச்சி! எங்களை மன்னிக்கிறாயோ இல்லையோ! என்னை மன்னிப்பாயா?"

"பெரிய வார்த்தைகள்! மறவர் மண்ணென்றால் மருளுமே தமிழகம்! நீங்களா மன்னிப்புக் கேட்பது? இது என் விதி."

"அந்த விதியை நான் வாழ்த்துகிறேன். ஆனால் அது இவ்வாறு சந்திக்க வைத்திருக்கக் கூடாது."

என்று கூறிய நாராயணத்தேவன், ஆத்திரம் பொங்கி எழ, வாளை ஓங்கிமலையப்பன் வயிற்றில் செருகி இழுத்தான்.

'ஓ'வென்ற அலறலுடன் தரையில் சாய்ந்தான் மலையப்பன்.

"கங்கைநாச்சியின் பேரில் இவன் கரம் பட்டுவிட்டது. மானபங்கம் செய்ததற்கு இவனுக்கு மரண தண்டனை."

-மயத்தில்—

.ல தூரத்தில் பல நூறு குதிரைகள் ஓடி வருகிற ..ச் சத்தங்கள்.

,! திருமலை நாயக்க பூபதிக்குச் செய்தி தெரிந்து களை ஏவி இருக்கிறார்.

''கங்கை நாச்சி! உனது வீரர்கள் உன்னையும் உன் தோழிகளையும் விட்டுச் செல்லலாமா? இட்டுச் செல்ல லாமா?''

யோசிக்கிறாள் கங்கை நாச்சி.

சில கணங்கள்.

விட்டுச் சென்றாலும் ஒன்றுதான்; இட்டுச் சென்றாலும் ஒன்று'தான். தனித்து யோசித்து ஒரு முடிவுக்கு வருவோம்.

''இட்டுச் செல்லுங்கள்!''

மகிழ்ச்சி! ஒ...ஒப்புக் கொண்ட பெருத்த மகிழ்ச்சி!

அடுத்த கணமே பல்லக்குகளைப் போட்டுவிட்டு, அனைத்துக் குதிரைகளும் வாயுவேகம் மனோவேகமாய்ப் பறந்தன.

சற்றைக்கெல்லாம் நாயக்க வீரர்கள் அவ்விடத்தை அடைந்து பல்லக்குகளைக் கண்டதும் குதிரைகளை நிறுத்தி விட்டு ஆராய்கிறார்கள்.

குதிரையை விட்டிறங்கிய குமாரமுத்து நாயக்கர்— திருமலை நாயக்கரின் இளவல்—குடிசைக்குள் ஓடோடிச் சென்று கவனிக்கிறார்.

அங்கே மங்கலான தீப்பந்த ஒளியில் ஒருவன் பிணமாகி இருப்பதைக் கவனிக்கிறார். யாரிவன்?

காலால் உருட்ட...

இலேசான சத்தம்.

உயிர் இருக்கிறது.

தீப்பந்தத்தைப் பிடுங்கி வந்து அருகே கவனிக்கிறார்.

மலையப்பன் கண் திறக்கிறான்,

தட்டுத்தடுமாறி பேசுகிறான்:

''சின்னதுரையா! இளையராணி கங்கை நாச்சி இளைய சேதுபதி நாராயணத்தேவர் கடத்திச் சென்று கிறார்! என்னை அவர்கள்...''

பேச முடியவில்லை. தன்னை அகாரணமாகக் கொலை செய்த நாராயணத்தேவனைப் பழிவாங்க ஆண்டவன் இப்படியொரு சந்தர்ப்பத்தைத் தேடித் தந்துவிட்டான் என்கிற எதிர்பாராத மகிழ்ச்சியுடன் மலையப்பன் உயிர் பிரிந்து விட்டது.

'சேதுபதி!' என்கிற மூர்க்கத்தனமான மன இரைச்சலுடன் வாளையுருவிக் கொண்டு எழுந்தார், மதுரை மக்களால் சின்னதுரை என்றழைக்கப் பெறும் குமாரமுத்து நாயக்கர்.

3

ஏறத்தாழ ஐந்து நாழிகைப் போது வரை அந்தப் புரவிகள் தெற்கு நோக்கிக் காற்றைக் கிழித்துக் கொண்டு பாய்ந்து விரைந்து கொண்டிருக்கின்றன. அவ்வாறு செல்லுகையில் பிரதான பாதையில் செல்ல வேண்டும் என்கிற நியதியை மறந்து, அந்தக் குளம்படிகள் விரட்டுகிற திசை நோக்கிக் கல்லென்றும் முள்ளென்றும் பாராது நாலு கால் பாய்ச்சலில் செல்லுகிற அந்த வேகத்தைக் கண்டு...

அந்த வனாந்திரப் பிரதேசத்து மிருகங்கள்கூடப் பயந்து அருண்டு மருண்டு நிலைமோதி ஒளிந்து கவனிக்கின்றன. மரங்களில் அமைதியாக அமர்ந்து நிம்மதி வாழ்க்கை

ள்ளினங்கள் வயிற்றெரிச்சலுடன் அலேமோதி மரம் தாவித் தாவி அமைதி பெறுகின்றன.

டாக் டொக்' கென்ற அந்தக் குளம்புச் சத்தங்கள் த்தையே நிலேகுலேயச் செய்கின்றன.

'ஓ...என்ன புண்ணியம் செய்தேன்' என்று அந்தப் புரவி கிழ்ந்து கொள்கிறது. அதன் முதுகில் புஷ்பமனேய மென்மையான பாவை மட்டுமா அமர்ந்திருக்கிருள்? அவள் மதுரைமா நாயக்க பூபதியின் காவிய அழகுமிக்க இளவரசி யாயிற்றே!

புரவியின் முன்பக்கம் கங்கைநாச்சி யமர்ந்து காணப் பட்டாளே யொழிய, அவளது முழுத்தேகமும் 'நாராயணத் தேவனுடைய மார்பகத்தையல்லவோ தஞ்சமடைந்திருக் கி...

...ங்கும் ஒரே கும்மிருட்டு, வளர்பிறை காலமாதலால் வந்த நிலவு வரவு செலவு பார்த்து வானத்துக்குள் புகுந்து கொண்டது.

நாராயணத் தேவனுடைய இருகரங்களும் சேணங்களே பற்றிக் குதிரையைச் செலுத்துகிறபோது, அந்த முஷ்டிகள் அவ்வப்போது கங்கைநாச்சியின் மார்பகங்களில் படத்தான் செய்தன. அந்தத் தொடுவுணர்வு நாராயணத்தேவனுக்கு அவ்வளவாகப் பாதிப்பை ஏற்படுத்தவில்லே. அவனது நோக்கம், யாரும் காணுத ஒரு மலேப்பிரதேசம் நாடிச் சென்று இரவைக்கழிக்க வேண்டுமென்பதில் இருந்தது. ஆனுல் கங்கை நாச்சியைப் பாதிக்கச் செய்தது.

எதிர்காற்று வேறு மூச்சைத் திணறடித்ததால் முகத்தை நாராயண தேவன் வீர மார்பகத்துப் பக்கம் திரும்பிச் சமாளிக்க முயன்று கொண்டிருந்தாள் கங்கை நாச்சி. குதிரைச் சவாரி இளம்வயதில் பழக்கப்பட்டதாறு லும் இம்மாதிரி வேகமான எதிர்காற்று மோத, பயங்கர

இருட்டில் வனாந்திரத்தில் பயணிப்பது இதுதானே முதல் தடவை! அதுவும் இவ்வாறான அச்சத்தை விளைவிக்கக் கூடிய சூழ்நிலையில் ஏன் இவ்வாறு துணிந்து புறப்பட வேண்டும்.

அது குறித்து யோசிக்கிறாள்.

பேசாமல் அங்கே இருந்திருந்தால் மதுரை வீரர்களுடன் சகல மரியாதையோடு அரண்மனையை அடைந்திருக்கலாம் அல்லவா?

வருகிறவர்கள் மதுரைவீரர்கள்தாம் என்று எவ்வாறு திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியும்? நாகப்புற்றுக் கோயிலில் மறவ ஒற்றர்கள் பால் அகப்பட்டுக் கொண்டது போல ஏற்கெனவே மதுரைமீது கருவிக் கொண்டிருக்கும் மைசூர் வீரர்களிடம் அகப்பட்டுக் கொண்டிருந்தால்?

ஏதோ மதுரை வீரர்கள் தாம் வருகிறார்கள் என்று நம்பி நாராயணத் தேவரும் தமது வீரர்களுடன் போய் விடப் போகிறார். அதன் பிறகு வந்தவர்கள் மைசூர்க்காரர்களாகவோ அல்லது கேரளத்து வீரர்களாகவோ இருந்து விட்டால்?

மலையப்பனிடம் சிக்கி மானம் தப்பியது. தப்பச் செய்தவர் பண்பு மிக்க நாராயணத்தேவன், அங்கே இப்படி ஒருவர் முளைப்பார் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இவற்றுக்கு அப்பாலும் ஓர் உள் மறைவான காரணம் இழையோடிக்கொண்டிருந்ததையும் அவளது உள்மனம் உணரத்தான் செய்கிறது. அது...

நாராயணத்தேவன் யார் என்பது தெரிந்தது. தெரிந்த பிறகு அவனிடம் கண்ட பண்பு, பிறகு அவனது எண்ணம், இவை எல்லாவற்றுக்கும் மீறிய அவனது மறவர் குல வீரம், மகோன்னதமான அழகுத் தோற்றம் தன்னைத் தீண்டியவனைத் தண்டித்த காதல் மனம்.

காதலுக்கு எத்தனையோ காரணங்கள் உண்டு.

கங்கைநாச்சி உண்மையிலேயே அந்த இருநாழிகைப் போதில் கற்பைக் காத்த ஒரே காரணம் மட்டுமல்லாது, நாராயணத்தேவன் யார் என்கிற பல காரணங்களும் சேர்ந்து அவளைக் காதல் வயப்படுத்தி விட்டன.

வேலூரைத் தாண்டிச் சென்று ஒரு வடுகனுக்கு வாழ்க்கைப்பட்டு ஒரு தாரண வாழ்க்கை வாழ்வதைவிட புகழ்பெற்ற மற ர்குடி இளவரசனை மணாளனாக ஏன் தேர்ந்தெடுக்கக்கூடாது என்கிற எண்ணம் ஏற்கெனவே இருந்ததன் வினைப்பயன்தான் அவளை மயங்கச் செய்தது; ‘இட்டுச் செல்லுங்கள்’ என்றியம்பச் செய்தது; அவ்வாறு சொல்லுகிறபோது ஏற்பட்ட கிளுகிளுப்பில் ஆழப்புதைந்து ரசனையில் மூழ்கச் செய்தது.

ஒரு மலையடிவாரமாகப் பார்த்து புரவியின் சேணத்தை இழுத்து நிறுத்தினான் நாராயணத்தேவன். குதிரையும் சூழ்நிலையுணர்ந்து தன்னையடக்க முடியாமல் அடக்கி மெலிதாகக் கனைத்துக் கொள்ளவும் செய்தது. வாயில் நிரம்ப நுரை தள்ளியது.

ஏனைய குதிரைகள் புறம்போக்குகளைப் போலச் சற்றுக் கூச்சல் போடத்தான் செய்தன. அவ்வாறு கூச்சலின்றி வீரர்கள் அடக்கினர்.

நாராயணத் தேவன் புரவியை விட்டிறங்கினான். பிறகு மெல்லக் கைத் தாங்கலாக கங்கைநாச்சியைப் பற்றிக் கீழே இறங்கினான். ஆ! அப்போது அவனுக்கு ஏற்பட்ட ரசனை.

இனிய ஒரு தெலுங்குக் கவிதையைப் படிப்பது போன்ற ரசனை.

குதிரையை விட்டிறங்கிய வேலு துரை வேகமாக நண்பனை நாடி வந்தான். இனி பயமில்லை என்பது அவனுக்கு நன்றாகவே தெரியவந்தது.

“இளைய சேதுபதி! அடுத்து என்ன செய்வதாக உத்தேசம்? நாம் வந்த காரியம் வேறு. நடந்தது வேறு. இது

எந்த அளவுக்கு என்ன திசை திருப்பம் காணச் செய்யப் போகிறதோ எனக்குப் புலனாகவில்லை.''

வேலுதுரை பேச்சை இழுத்தான்.

தன்னுள் பொருட்செறிவுடன் சிரித்துக் கொண்ட நாராயணத்தேவன், ''வேலு! நான் கங்கைநாச்சியாரின் மகன். அதிகம் விளக்கத் தேவையில்லை என்று நினைக்கிறேன். பொழுது விடிந்ததும் நீயே நாயக்க இளவரசியை திருமலைப் பூபதியிடம் கொண்டு போய். சேர்க்கிறாய். அதுகுறித்து நான் காலையில் விளக்குகிறேன். இப்போதைக்கு நீஇவர்களை மறைமுகமான இடத்தில் பாதுகாப்பாக வை. இந்தத் தோழிப் பெண்களுக்கு நீ காவல்நிற்கிறாய். ஒருகால் மதுரை வீரர்கள் இங்கேயும் வந்து விடுவார்களேயானால்...''

''நீங்கள் இருவரும் வெளிவராம லிருந்தால் போதும். நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் சென்று ஓய்வு கொள்ளலாம்.''

வேலுதுரை விடைபெற்றுச் செல்கையில், நாராயணத் தேவன் என்ன நினைத்துக்கொண்டானோ, ''வேலு!'' என்றழைத்தான்.

வேலுவும் திரும்பிப்பார்க்கிறான்.

''இப்படி அருகில் வா!''

வேலுதுரை அருகில் வந்தான்.

''கங்கை நாச்சி! இவன் எனது உயிர்நண்பன், என்னுடம்பில் ஈ மொய்த்தால் அவனுடம்பில் உணர்வு ஏற்படும்.''

நாராயணத் தேவன் இவ்வாறு கூறியதும் வேலுதுரை சிரித்துக் கொண்டான்.

தொலைவில் குதிரைகள் நெடுந்தூரப் பயண வலியால் காலையுதறிக் கனைத்து கொண்டிருந்தன. சிலர் புற்களைக்

கொத்தி வந்து போட்டுக் கொண்டிருந்தார்கள். இரண்டொரு தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டிருந்தன.

"நாயக்க இளவரசி! நானும் ஒரு உண்மையைச் சொல்வேன். சேது நாட்டு இளவரசர் உங்களை மனத்தளவில் காதலித்து உங்கள் அழகைப் பரிசீலனைச் செய்ய வந்தார். ஆனால் பரிசீலனை இப்படி வஞந்திரத்தில் தேர்வு செய்து பிரச்னைக்குரியதாக்கி விட்டது. எதுவும் உங்கள் கையில் தானிருக்கிறது."

கங்கை நாச்சி மெல்லச் சிரித்துக்கொள்கிறாள்.

நண்பன் பகிரங்கமாய் போட்டு உடைத்து விட்டது நாராயணத் தேவனுக்கு ஓர் ஆறுதலாகவுமிருந்தது.

வேலுதுரை விடை பெற்றுச் சென்றான்.

நாராயணத்தேவனும் கங்கை நாச்சியும் மலையடிவாரம் சென்று ஓர் மறைவான இடம் நாடி அமர்ந்து ஒய்வு கண்டனர்.

தூக்கம் வருமா? தூங்கத்தான் முடியுமா?

சற்றைக்கெல்லாம் ஒரு மறவவீரன் அங்கே கிடைத்த மாம்பழம், கொய்யாப்பழங்களைக் கொண்டு வந்தான். இன்னொரு விரன், ஈச்சங்கன்றைத் தோண்டியெடுத்து அதன் அடிப்பகுதியைப் பிளந்து நடுவில் இருக்கும் இனிப்பான ஈச்சஞ்சோற்றைக் கொண்டு வந்தான். ஒருவன் குப்பியொன்றில் நீர்மொண்டு வந்து கொடுத்தான்.

அவர்கள் சென்றதும் இருவரும் ஏதோ பசிக்குப் பனம் பழம் என்ற முறையில் ருசி பார்த்தனர். அவர்களது கண்ணுக்குரிய பசி அழகைப் பருகியது. செவிகளுக்குரிய பசி குரலைப் பருகியது. நாசிகளுக்குரிய பசி மறவர் மணத்தையும் நாயக்க வாசனையையும் தொலைவிலிருந்து முகர்ந்து கொள்கின்றன. அவற்றுக்குக் கீழே இருக்கும் அங்கங்களின் பசியைப் பற்றி...

நினைக்கையில் நாராயணத் தேவன் சிரித்துக் கொண்டான்.

அவள் அண்ணாந்து நோக்கினாள்.

'ஏன் சிரிக்க வேண்டும்?' என்பது மாதிரியான நோக்கு அது.

அவன் மெல்ல மெல்ல விளக்க—

அவள் முறுவலித்துத் தலை குனிகிறாள்.

ஓ...அந்தச்-சிரிப்பில் முந்திரிப் பழச்சாராயம் வெட்கி தலைகுனிய வேண்டும். அவ்வளவு போதைமிக்க சிரிப் ஆந்திரர்களுக்கே உரிய அபரிமிதமான போதை...

காற்று 'சோ' வென்று வீசிக் கொண்டிருக்கிறது. அந் தனிமை இருவரையும் என்னென்னமோ கோணங்க சிந்திக்கச் செய்தாலும் ,யார் யார் எவ்விதமாகத் தங் அடக்கிக் கொள்கிறார்கள் என்பது புரியாமல் அ காற்றும் அவர்களுள் புகுந்து பலபாகங்களில் வியர் துளிகளைப் பகைத்து வெற்றி கண்டு இதம் அளி கொண்டிருக்கிறது.

நான்கு கண்கள் மட்டும் பேசிக் கொள்கின்றன யொழிய வாய்கள் ஊமைத் தவமியற்றுகின்றன.

நாராயணத் தேவனே அந்த ஊமைத் தவத்தை கலைக்கிறான்:

''கங்கைநாச்சி, துணிந்து இட்டுச் செல்லுங்கள் என்றாயே! நாளை உனது தந்தையார் மூலம் ஏதேனும் ஏற்பட்டால்...''

''முதலில் நான் உங்களை மனம் திறந்து ஒன்றைக் கேட்கட்டுமா?''

''கேள்''

''சத்தியமாகப் பதில் சொல்ல வேண்டும்.''

''சத்தியமாக பதில் சொல்கிறேன்.''

''நீங்கள் என்னைக் காதலிக்கிறீர்களா?''

''உன் விஷயத்தைச் சொல்!''

''நான் காதல் கொள்ளவில்லையானால் இப்படி 'இட்டுச் செல்லுங்கள்' என்கிற வார்த்தைகளில் ஆயிரம் அர்த்தங்களைப் புதைத்து இருக்க மாட்டேன். எனது கற்பு பறிபோயிருந்தால் நான் இளவரசியாவது? அல்லது நீங்களே பகைமை 'புணர்வுடன் முரட்டுத்தனமாக என்னிடம் நடந்திருந்தால் ான் என்ன செய்திருக்க முடியும்? என்னைக் காப்பாற்றிய தாடு நீங்கள் என்னைக் காண வந்திருப்பதாகவும், கண்ட 'றகு என்னை மணக்க வேண்டப் போவதாகவும் சொல்லக் ட்டும், நான் உங்களைப் புறக்கணிக்க முடியுமா? மேலும் 'னுள்ளும் நீண்ட கனவுகள் உண்டு. வடுக குலத்துக்கு ழ்க்கைப் படுவதைவிட ஒரு தமிழ்க் குலத்துக்கு ாக்கைப்பட எண்ணியதுண்டு. அதுவும் இப்போதைய பில் உயர்ந்து காணப்படுபவர்கள் சேதுபதிகள். நான் ட கனவு இவ்வளவு எளிதில் இவ்வாறு ஏற்பட்டது ா வணங்கும் மதுரை மீனாட்சியின் அருள்தான் ாபேன்.''

அயர்ந்து போனான் நாராயணத்தேவன். ஓ... இவள் தல் நிஜமானது.

''ஏன் வாய் திறவாமலிருக்கிறீர்கள்?''

''நான் உன்னை அந்த மதுரை மீனாட்சியறியப் பரிபூரணமாக காதலிக்கிறேன் கங்கைநாச்சி! இது சத்தியம்!''

கங்கை நாச்சியின் வலக்கரத்தைத் தொட்டுத் தூக்கித் தனது வலக்கரத்தைப் புதைக்கிறான் நாராயணத் தேவன்.

அப்போது—

ஆ! என்ன மெய்ச்சிலிர்ப்பு; எத்தனை வியர்வைத் துளிகள்...

காற்று ஆனந்தமாக அவர்களைத் தழுவியது,

கங்கைநாச்சி துணிந்து ஓர் ஆசையை வெளியிடுகிறாள்—

''இளைய சேதிபதி! சத்தியத்தின் அச்சாரமாக ஒரு...''

''ஒரு...''

அவள்முகம் சிவந்து அவனைநோக்கி அருகில்வருகிறாள்...

''முத்தம்?''

இமைகள் 'ஆம்' என்கின்றன. அத்தப் படபடப்பில் ஒரு மது மயக்கப் போதை...

''கங்கைநாச்சி! நீ ஒரு ராஜகுமாரி! நமது காதல் இந்த ஓரிரவில் அபூர்வமாகப் பூத்தது- பூர்வ ஜன்மச் சொந்தம் என்று நினைக்கிறேன். இல்லையென்றால் நான் நினைத்தது இவ்வாறு நிறைந்திருக்காது. ஆனால் பிரச்னைக்குரிய முறையில் இந்தச் சந்திப்பு நிகழ்ந்து விட்டது, நீ என்னைக் காதலிக்கிறாய்; நான் உன்னைக் காதலிக்கிறேன். இதில் இனி மாற்றமோ ஏமாற்றமோ இருக்கக் காரணமே இல்லை. ஆனாலும் ஒன்றை மறந்துவிடக் கூடாது. நாளை உனது தந்தை திருமலைப் பூபதி இந்தச் சேர்க்கையை வெறுத்து மறுப்பாரேயானால் நீ இன்னொரு ராஜகுமாரனுக்கு வாழ்க்கைப்பட நேரிடும். ஒரு ராஜபுத்திரியைக் களங்கப் படுத்திய பாவம் எனது சேது நாட்டுக்கு வரக்கூடாது. நீ என்னிடம் களங்கப்பட்டு இன்னொருவனுடன் வாழ்கிற தோஷம் என்றால் ஏற்பட்டுவிடக் கூடாது. இது தேவையா?''

''பேசி முடித்தாய் விட்டதா?''

வீரக் கண்கள் வியந்து நோக்குகின்றன.

ஏதோ கங்கைநாச்சி சொல்லப் போகிறாள்...

"மறவர்க்குமரா! நான் வடுக ரத்தத்தில் பிறந்தவள் தான். ஆனுல் தமிழ் மண்ணில் பிறந்தவள். காதலை யாக மாக வளர்த்துக் காவியப் பிரசன்னங்கள் கண்ட நாட்டில் பிறந்தவள். ஒன்று நமது காநல் ஈடேற வேண்டும் இல்லை..."

"ம்ம்! சொல் கங்கைநாச்சி!"

"இதற்கு மேல் எனக்குச் சொல்லத் தெரியவில்லை. செயலில் காட்ட வேண்டும். என் மனத்தில் சேதுநாட்டுக் குமாரர் நாராயணத் தேவரைத் தவிர வேறு எந்த உருவத்துக்கும் இடம் கிடையாது. இது உங்கள் அன்னை கங்கைநாச்சியார் தேவி மீது ஆணை!"

கங்கைநாச்சி இவ்வாறு கூறிமுடித்த அடுத்த கணம்...

நான்கு அதரங்கள் ஓரதரமாய் மாறி...

சங்கமித்துச் சரண் புகுந்து சகலமும் மறந்து...

அந்த இரவு போனது தெரியாமல்...

பொழுது பொன்ஞய்ப் புலர்ந்து கொண்டிருக்கிறது.

4

இருள் இழையிழையாகப் பிரிந்து கொண்டிருக்கும் விடிந்தும் விடியாத காலைப்போது கணவிழித்துக் கொண்டி ருக்கிறது.

இரவு வந்த பல்லக்குகளில் திருமலை நாயக்கப்பூபதியின் திருக்குமாரத்தி கங்கை நாச்சியையும் அவளது தோழி மார் களையும் அமர்த்தித் தக்க பாதுகாவலுடன் வழிகூட்டுகிருன் சேது குமாரன் நாராயணத்தேவன்.

அந்தப்பயணத்துக்குத் தலைமைதாங்கிச்செல்ல நண்பன் வேலுதுரை புரவியின் மீது ஆரோகணித்துத் தயாராக இருக்கிறான். ஏனைய மறவவீரர்கள் சேதுகுமாரன் உத்தரவுக்குக் காத்திருப்பவர்கள் போன்று புரவிகள் சகிதமாய் நிற்கின்றனர். இரவு முழுவதும் ஓய்வெடுத்த தென்பு ஒவ்வொரு புரவிகளும் 'இசுக் இசுக்' கென்று மூச்சு விடுவதிலிருந்து தெரிகிறது.

பல்லக்கில் அமர்ந்த கங்கைநாச்சி எவ்வளவு நேரம் தான் அந்த நாராயணப் பேரழகையும் மறக்குடி வீரச் சொரூபத்தையும் இமை கொட்டாது நோக்குவாள்?

அவளது பார்வைக் கடைவாயிலில் இரண்டுபனிமுத்துக்கள் இறங்கவும் முடியாமல் வெடிக்கவும் முடியாமல் ஏங்கிக் காணப்படுகின்றன.

ஆ! இரவு. இந்த ஆண்மை நிறைந்த அரிய நெஞ்சு சொன்ன வார்த்தைகள்...

பேராண்மைமிக்க சொன்மலர்கள்.

''கங்கைநாச்சி! புறப்பட வேண்டியது தானே?''

அவளது தயக்கத்தைக் கண்டு மெல்ல வினவுகிறான் நாராயணத் தேவன்.

அவள் தனது சுண்டுவிரலால் கண்களில் துளிர்த்த நீர் மொட்டுகளைக் களைந்து கவனிக்கிறாள்.

''இன்றைக்கே அப்பாவைப் பார்க்க வருவீர்களல்லவா?''

அவளது குரல் மெல்லிய பூங்காற்றாய்த் தழதழக்கிறது.

''நான் வந்ததே அதற்காகத் தானே, கங்கைநாச்சி! கசப்பான திருப்பம் நிகழுமானால்...''

''நானே உங்களுக்கு ரகசிய ஆணையிடுவேன். 'என்னைச் சிறையெடுத்துச் செல்லுங்கள்!' என்று. அதுவரை நானும் போராடுவேன்!''

அவள் காதொடு வாய் புதைத்து காற்றுடன் சொல் புதைத்துச் சொல்லுகிருள்.

அவன் புன்முறுவல் பூக்கிருன்.

அவளும் அதில் ஓர் ஆறுதலுடன் பகிர்ந்து கொள்கிருள்.

உத்தரவு பிறக்கிறது.

வீரர்கள் புரவிகளில் ஏறியமருகிருர்கள்.

பயணம் மதுரை அரண்மனை நாடிப் புறப்பட்டது.

நாராயணத்தேவன் நின்ற இடத்திலிருந்தே கவனிக்கிருன்.

கங்கைநாச்சியோ உருவம் தெரிகிற வரைக்கும் பல்லக்கிலிருந்து எட்டி எட்டிப் பார்த்த வண்ணமிருந்தாள்.

கிழக்கு முகத்தில் ஆதவனும் எட்டிப் பார்க்கத் தொடங்கினுன்.

மா தமிழ் வளர்த்த கூடல் மாநகராம் மாடமதுரை மாநகரம் மணிப்பேழைப் பேரொளியாய் மணக்க மணக்க விடிந்து கொண்டிருக்கிறது.

பூபாளப் புறநீர்மை, புள்ளினங்கள் குரலில் பூபாலத்தை விழிக்கச் செய்து வருகை புரிந்த பூரண ஜோதியின் வாழ்த்தாய் ஒலிக்கிறது.

மதுரையில் பிறந்த மாதவமக்கள் கண்விழித்துக் கடமையில் மூழ்குகிருர்கள்.

நாயக்க மன்னர்களில் நாயகமாய் விளங்கிய மதுரை மன்னர் திருமலைநாயக்க பூபதியின் அரண்மனை, ரகசியமாய்ச் சலசலப்பு கண்டு அலைமோதுகிறது.

இரவெல்லாம் அந்த அரண்மனை எங்கே துயின்றது?

இளவரசி கங்கைநாச்சியாரைக் காணவில்லை என்கிற துக்கம் நிறைந்த கண்ணீர்ச் செய்தி, நாயக்கமன்னர் திருமலைப் பூபதியைப் படாதபாடு படுத்திவிட்டது. தமது தம்பி சின்னதுரை குமாரமுத்து நாயக்கர் கொண்டு வந்த செய்தி அவரது பற்களை நறநறக்கச் செய்தது. 'ஓ... நாராயணத் தேவா! இப்படியா வஞ்சம் தீர்த்துக் கொள்வது?'

பொழுது விடுகிறபோது இளவரசியார் வந்து விட்டார்கள் என்கிற செய்திதான் அப்படி ஒரு ரகசிய சலசலப்பை யுண்டு பண்ணியது. இது வெளியில் தெரியக்கூடிய விஷயமா?

தமது ஆஜானபாகுவான உருவத்தைச் சுமந்து கொண்டு அந்தப்புரத்திலிருந்து ஓடோடி வந்தார் மன்னர் திருமலை நாயக்கர்.

அரிய பெரிய கலைத்திறத்தால் கட்டிமுடித்த அந்த அகன்ற அரண்மனையின் மகாலில் அமர்ந்து காணப்பட்டாள் கங்கைநாச்சி. அவளுக்குப் பின்புறமாக தோழிமார்கள் நின்றிருந்தார்கள். எதிரே கம்பீரமாக அமர்ந்து காணப் பட்டான் வேலுதுரை. மற்றபடி அரண்மனையைச் சார்ந் தவர்கள் தொலைவில் நின்றிருந்தனர்.

வேகமாக மகாலுள் நுழைந்த மன்னர் திருமலை நாயக்கரைக் கண்டதும் அனைவரும் எழுந்து வணங்கு கிறார்கள்.

வேலுதுரையும் எழுந்து நின்று தலைவணங்குகிறான். 'ஓ... பெரு மலையெனப் பேசப்படும் திருமலைப் பூபதி இவரோ?' என்று வியக்கிறான்.

கங்கை நாச்சியை வைத்த கண் வாங்காது நோக்கு கிறார் திருமலை நாயக்கர்.

மகள் 'கோ' வென்று அழுவாள்: தனது கற்பு பறி போனது குறித்து மாளாது துயர்கொண்டு புலம்புவாள்

என்றெல்லாம் எதிர்பார்த்த திருமலை நாயக்கருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. ஆ! இவள் முகப்பிரகாசமுடன் முறுவலித்து நோக்குகிறாளே! ஏதும் நடைபெறாது போலவும், எங்கோ பயணம் கண்டு திரும்பியவள் மாதிரியும், கண்கள் படபடக்கக் காணப்படுகிறாளே...

கங்கைநாச்சியே அந்தப் பேரமைதியைக் கலைக்க நாவசைக்கிறாள்:

"அப்பகாரு! இவர் வேலுதுரை. சேதுநாட்டு இளவரசர் நாராயணத் தேவருடைய நண்பர்" என்று சுந்தரத் தெலுங்கில் ஆரம்பித்த கங்கைநாச்சி இரவு நடந்ததை விளக்குகிறாள். அதில் ஒரு திருத்தம் செய்தாள். தன்னை வழி மடக்கித் தந்திரமாக இட்டுச் சென்றவர்கள் மறவ ஒற்றர்கள் என்பதற்கு மாறாக, மைசூர் உடையாரின் ஒற்றர்கள் என்று திரித்துப் பொய்யுரைத்தாள். மறக்குடிக்கு அவள் களங்கம் தேடச் சம்மதிக்கவில்லை. வாழப் போகும் மண்ணை அவள் மதித்துப் பொய் சொன்னாள்.

அனைத்தையும் கேட்டுக் கொண்டு வந்த திருமலை நாயக்க பூபதி, "இதை என்னை நம்பச் சொல்கிறாயா?" என்று கேட்கத்தான் வாய் திறந்தார். அதற்குள் நாரா யணத்தேவன் ஏதோ தூது காரணமாக வந்திருக்கிறான் என்று சொல்லக் கேட்கவே, அதையும் முடித்து ஒரு தீர்மானத்துக்கு வரலாம் என்று அமைதியாய் இருந்தார்.

அவரது தீட்சண்யம் நிறைந்த கண்கள் வேலுதுரையை நோக்கின.

"உன் இளவரசன் எங்கே இருக்கிறான்?"

'அன்' விகுதி வேலுதுரையைச் சீண்டிவிடவே, அவன் மௌனமாய் நோக்கி, "மதுரைபூபதி! எங்கள் இளவரசர் வயதில் சிறியவராக இருக்கலாம். ஆனால் வீரம் மணக்கும் சேதுநாட்டின் இளவல்! அவன் இவன் என்று பேசுவது பூபதியின் குரோத நெஞ்சைக் குத்திக் காட்டுகிறது. அவர்

உதவியில்லை யென்ருல், உங்கள் மகளை நீங்கள் பார்த்திருக்க முடியாது.''

திருமலைநாயக்கரின் கண்களில் மீண்டும் எரிச்சல் கவிகிறது.

''நல்லது தம்பி! சபையில் பேசிக்கொள்ளலாம். நீங்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் கவனிப்பார். நீ போகலாம்.''

சீ! கொஞ்சம்கூட நன்றியறிதலின்றி நாயக்கர் பேசிவிட்டாரே என்கிற அசூயையுடன் வெளியேறினுன் வேலுதுரை. இது கங்கை நாச்சிக்கும் புரிந்தது.

''அப்பா! நீங்கள் நடந்து கொண்டது கொஞ்சம் கூட நன்ருக இல்லை. நன்றி சொல்லத்தான் நாவுக்கு நாணம், நயமாகப் பேசியிருக்கலாம் அல்லவா?''

''அதனை நியாயசாலாவில் நீ பார்க்கலாம்.''

திருமலை நாயக்கர் இவ்வாறு கூறிக்கொண்டிருந்த போது இரண்டாவது பட்டத்தரசி இளைய நாயக்க மாதேவி * தொலியம்மாள் உள்ளே நுழைந்தாள். தனது மகளைக் கண்டதும் அவளது உடல் பூரித்துப்போயிற்று. ''கங்கா!'' என்றழைத்த வண்ணம் அணைத்து உச்சி மோந்தாள்.

---

* THOLIAMMAL:- Madurai the temple city.
By-J. P. Lasrado shenoy

ஆங்கிலத்தில் Tholiammai என்றிருக்கிறது. இப்பெயரை தோளியம்மை என்றும் தோழியம்மை என்றும் எழுதுகிருர்கள். இது தவறு. தொலியம்மை என்கிற உச்சரிப்பே சரியானது. தொலி என்ருல் பழமை - முன் என்று பொருள். 'தொலிஜன்மமு' என்று தியாகய்யர் பாடியது காண்க. தொலியம்மா, தாய்க்கு மூத்த புதல்வியாக இருக்கவேண்டும். எனவே முன் புதல்வி என்பதால் தொலியம்மா என்று பெயரிட்டனர்.

அங்கிருக்க விரும்பாத திருமலே நாயக்க மன்னர் அவ்விடத்தை விட்டகன்ருர். அவ்விதம் அகன்று செல்லுகையில் உடன் சென்ற தோழிகளுள் பிரதான தோழியான ராஜலட்சுமியைக் கண் சமிக்ஞையால் அழைப்பு விடுத்து அகன்ருர்.

விசாரித்துப் பார்த்ததில், கங்கை நாச்சி என்ன கூறிஞளோ, எவ்வாறு ஒரு பொய்த் திருத்தத்துடன் கூறிஞளோ அவ்வாறே ராஜலட்சுமியும் சொன்ஞள்.

பளீர்...

கன்னத்தில் விழுந்த அறை.

ராஜலட்சுமி பொறி கலங்கிப் போஞள்.

''நீ சொல்வது அனைத்தும் நிஜமா''

தொண்டை அடைத்துப் போன ராஜலட்சுமி நடு நடுங்கி ''நிஜம் பிரபோ!'' என்ருள்.

''இரவு முழுவதும் கங்கை நாச்சி உங்களுடன் தான் இருந்தாளா?''

திரு திருவென்று விழிக்கிருள் ராஜலட்சுமி.

அடுத்த கன்னத்தில் ஒரு பளீர்...

''சேது நாட்டு இளவரசர் பாதுகாவலில் இருந்தார்கள்..''

''நீங்கள்?''

''தனியான பாதுகாப்பில் இருந்தோம்''

''ஏன்?''

''தெரியாது.''

''போ!''

விட்டால் போதுமென்று கன்னங்களைத் தடவிக் கொண்டு ஓட்டம் பிடித்தாள் ராஜலட்சுமி.

திருமலை நாயக்கர் நெஞ்சு கனன்று கொண்டிருந்தது.

எப்போதும் பெரும்பாலான விசாரணைகளை மாலை வேளையில் அந்த மகாலில்-நியாய சாலாவில்-ஆஸ்தான மண்டபத்தில் தீப்பந்தம் சகிதமாக வைத்துக் கொள்வது வழக்கம். இது மானப் பிரச்னைக்குரியதால் தனிப்பட்ட முறையில் நாராயணத்தேவனை வரவழைத்து, வந்ததன் நோக்கமறிந்து, பிறகு நேற்றிரவு நடந்த விவகாரங்கள் குறித்துப் பேச ஏற்பாடு செய்தார் மன்னர் திருமலை நாயக்க பூபதி.

அந்த ரகசிய ஏற்பாட்டின்படி மகாலில் அதிமுக்கிய மானவர்களை மட்டுமே வரவழைத்திருந்தார், நாயக்க மன்னர்.

மகாலில் மாவீரப் பெருமகனும் மதுரையின் மகா சேனாதிபதியும் பிராமணோத்தமருமான, தளவாய் ராமப் பய்யர் தமது பெருமைமிக்க ஆசனத்தில் அமர்ந்து காணப் பட்டார்.

பேரமைச்சரும் சாஸ்திரோக்தருமான நீலகண்ட தீட்சிதர் இன்னொருபுறம் பேராசனத்தில் வீற்றிருந்தார். ஸ்தானிகர்கள் எழுவர் மட்டுமே எழுந்தருளியிருந்தனர்.

மற்றபடி அருமைத்தம்பி குமாரமுத்து நாயக்கரும், புதல்வன் முத்து வீரப்ப நாய்க்கனும் அரியாசனத்துக்குப் பக்கத்தில் அடக்கமுடன் அமர்ந்திருந்தனர்.

''மதுராபுரி அரசர், நாயக்கர் குலநாயகம், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருமலை சவுரிநாயினு அய்யலுகாரு* வருகிறார், பராக்!''

கட்டியக்குரல் எழுந்தது.

தேகம் முழுவதும் பொன்னும் நவமணிகளும் பூத்துக் குலுங்க அரசாபரணம் தரித்து, அமர்க்களமான பாகைக்

---

* திருமலை நாயக்கருடைய முழுப்பெயர்.

கிரீடம் அணிந்து வருகை தருகிறார் நாயக்கமன்னர் திருமலை நாயக்க பூபதி.

அனைவரும் எழுந்து வணங்கிறார்கள்.

மேலே அரசாணி மாடத்தில் நாயக்கருடைய பட்ட மகிஷிகளான பெரிய நாயக்கமாதேவி ருத்ராபதியம் மாளும், இளைய நாயக்கமாதேவி தொலியம்மாலும் தங்களுக்கே உரிய பொன்னாசனங்களில் அமர்ந்து காணப் படுகிறார்கள். பக்கத்தே கங்கை நாச்சி. ஏனைய நூற்றுத் தொண்ணூற்றெட்டு மனைவிமார்கள் பின்புறத்தே ரத்தினக் கம்பளமிட்டு அமர்ந்து கவனிக்கிறார்கள்.

பொன்னாலான சிம்மாசனத்தில் அமருகிறார் திருமலை நாயக்கமன்னர்.

ஏனையவர்களும் அமருகிறார்கள்.

சற்றைக்கெல்லாம் சேதுநாட்டு இளவரசன் நாரா யணத் தேவனையும் அவனது உயிர்த்தோழன் வேலுதுரை யையும் அழைத்து வருகிறார்கள்.

வந்தவர்கள் வணங்கி நிற்கிறார்கள்.

நாராயணத்தேவனைக் கூர்ந்து கவனித்துப் பரிசீலிக் கிறார் திருமலை நாயக்க பூபதி.

ஓ...இவன்தான் நாராயணத்தேவனா?

மறவர்க் குடியின் ராஜரிகமான மிடுக்கு அவனது தோற்றத்திலிருக்கக் கண்டு ஒரு கணம் வியந்து போகிறார்.

ஆனால் நாயக்க மன்னருடைய தம்பி குமாரமுத்து நாயக்கரோ மீசை துடிக்க நோக்குகிறார். இரவு மலையப்பன் கூறிய கசப்பான செய்தி காதுகளில் ஒலிக்கிறது.

நாராயணத்தேவனின் கண்கள் மகாலை வலம் வருகின்றன. ஆ! இது என்ன அரண்மனையா? சொர்க்கபுரிச் கட்டிடமா?

நான்கு பெயர்கள் சூழ்ந்து தங்கள் கரங்களால் அணைத்தாலும் காணாத கனத்த தூண்கள். எப்பேர்ப்பட்ட விசித்திர வேலைபாடுகளுடன் கூடிய மகால்! சேதுநாடே வியந்துபோற்றிப் புகழும் மகாலை அவன் கண் கொள்ளாக் காட்சியாகக் கவனிக்கிறான்.

ஆனால் குறிப்பிட்ட சிலர் மட்டுமே அமர்ந்து தனது வருகைக்குக் காத்திருக்கக் காரணம்? இது என்ன ரகசியச் சந்திப்பா?

ஓ...கங்கை நாச்சி விவகாரம் அடங்கியிருப்பதன் எதிரொலியாய் இந்த ஆஸ்தான மண்டபம் இவ்வாறு காட்சியளிக்கிறதோ?

இதோ அமர்ந்திருப்பவர்களில் யார் தளவாய் ராமப் பய்யர்?

பெயர் கேட்ட மாத்திரத்தில் கருவிலிருக்கும் குழந்தையும் கைகூப்பி வணங்கும் வீரத்துக்குரிய அந்தப் பிராமணத் திருமகன் யார்?

''நாராயணத்தேவா! வந்த காரியம் பற்றிப்பேசாது வாய்மூடி, கண்களுக்கு மட்டும் வேலைதந்தால் எப்படி?''

கனத்த கம்பீரமான திருமலை நாயக்க மன்னரின் குரல். பேச்சில் நல்ல தமிழ் நடமாட்டம், ஆறு தலைமுறைகளாக மதுரையை ஆளும் மரபாயிற்றே!

நாயக்க மன்னருடைய குரல் கேட்டு நோக்குகிறான் நாராயணத்தேவன்.

நண்பன் வேலுதுரை சொன்னது நினைவுக்கு வருகிறது. மரியாதை இல்லை.

அமரலாம் என்று சொல்ல வாயில்லை. வந்த காரியத்தைக் கேட்கிறாரே மதுரைமன்னர். அமருவதற்கு வேறு இருக்கைகள் கூட அங்கில்லை, நிற்கவைத்தே பேசி

அவமானப்படுத்த எண்ணிவிட்டாரா நாயக்க பூபதி? இது தான் இவர்களது பண்பா?

எங்கே அந்தக் கங்கை நாச்சி? உடன் இருந்து போராடுவேன் என்ருளே!

கண்கள் அண்ணுந்து கவனிக்கின்றன.

அட, நாராயணத்தேவா? அம்பிகாபதிக்கு விதி சதி செய்ததுபோல உனக்கும் வேறு விதமாகச் செய்து அண்ணுந்து கவனிக்கச் செய்கிறதோ?

பொற்றேரனைய தலையலங்காரம் புறப்பட்ட போல கங்கை நாச்சியின் பூரண ஒளிமுகத்தை அவனது கண்கள் கவனிக்கின்றன.

கங்கை நாச்சி இதழ்களால் புன்னகை பூத்து வரவேற்கிருள். இக்காட்சியைப் பட்டத்தரசிகள் கவனிக் கிருர்கள்.

ஆனுல் நாராயணத்தேவன்—

கண்களால் முறுவலித்து துணேகோருகிருன். அத்துடன் 'உனது தந்தை தரும் மரியாதையைப் பார்த்தாயா?' என்றும் அந்தக்கண்கள் வினவுகின்றன.

''எங்கே கவனம் நாராயணத்தேவா?''

மீண்டும் திருமலை நாயக்க பூபதியின் கம்பீரமான குரல்.

''எனது கவனம் இந்த மண்டபத்தில் மரியாதை எங்கே இருக்கிறது என்பதைத் தேடுகிறது.'' என்று தைரியமாகச் சொன்ன நாராயணத்தேவன், தன்னுடன் வந்த நண்பன் வேலுதுரையை கவனித்து ஏதோ சமிக்ஞையால் சொல்ல, வேலுதுரையும் அந்தச் சமிக்ஞையைப் புரிந்து கொண்டு மதுரைமன்னர் எதிரில் பிள்ளை விளையாட்டு மாதிரி முட்டி

போட்டு முதுகை ஆசனமாகக் காட்ட, அந்த மனிதா சனத்தின் பேரில், கம்பீரமாக அமர்ந்து கொண்ட நாராயணத்தேவன், கையிலிருந்த திருமுகக் காகிதத்தை நீட்டினான்.

அந்த மண்டபமே கோபத்தில் எரியத் தொடங்கியது.

5

சேதுநாட்டு இளவல் நாராயணத் தேவனின் அந்தப் பிள்ளை விளையாட்டு, மதுரை மன்னர் திருமலை நாயக்கரின் கண்களில் நெருப்பை அள்ளிக் கொட்டி விட்டது.

என்ன திமிர் இவனுக்கு?

நாராயணத்தேவன் கம்பீரமாகச் சிரிக்கிறான்....

தளவாய் ராமப்பய்யருக்கோ அங்கம் முழுவதும் துடிப்புக் காண்கிறது.

வயதில் முதிர்ந்த பிரதான மந்திரி பார் நீலகண்ட தீட்சிதருக்கு வியப்பு. ஏதோ நடக்கக் கூடாதது நடக்கவிருக்கிறது. மேலும் வலிமை பெற்ற மறவர் நாடு சேதுபதியாளும் சீமை. அந்த நாட்டைப் பகைத்து ஏதும் செய்ய முடியாது. இதனையுணர்ந்து நிலைமையைச் சமாளிக்கச் சிந்திக்கிறார்.

திருமலை நாயக்கருடைய தம்பி குமாரமுத்து நாயக்கருக்கோ, உத்தரவு வாராதா; வெட்டி அங்கேயே வீழ்த்தி விடலாமே! என்பது போன்ற துடிப்பு....

''என்ன திமிர் இவனுக்கு? என்று யோசிக்கிறீர்களா நாயக்க மன்னரே! இன்னும் எங்கள்-குறிப்பாக மறவர்க் குடியாகிய எங்கள் உடம்பில் தமிழ் ரத்தம் ஓடுகிறது. அதில் கொஞ்சமும் களங்கமில்லை. களப்பிரனுக்கும், பல்லவனுக்கும், ஆந்திரனுக்கும் காட்டிக் கொடுத்த தமிழ் மக்கள்,

காஞ்சிமுதல் மதுரை வரையிலும், இருக்கலாம். அந்தப் பொறுக்கித் தமிழர்கள், புண்ணுக்குத் தமிழர்கள், கண்டவன் ரத்தத்துக்கு முந்தானை விரித்த கழிசடைகளுக்குப் பிறந்த தமிழர்கள் உதயமானதால்தான் தமிழ் சரித்திரம் களங்கப் பட்டிருக்கிறது. எங்கள் மறவர் நாட்டில் இன்னும் துரோகம் பயிராகவில்லை. வீரமும் மானமும் காதலனும் காதலியுமாக கைகோர்த்து உலவுகின்றன. எனவேதான் எங்கள் மண்ணின் மானம் போகாதவாறு இந்த மனிதா சனத்தையுண்டு பண்ணி மரியாதை தேடிக் கொண்டேன், நாயக்கமரபு இவ்வளவு மரியாதை கெட்ட மரபா?''

''நாராயணத்தேவா?''

அந்த மகாலின் தூண்களே சாய்ந்து விழுகிற மாதிரி இரைந்து கத்துகிறார் தளவாய் ராமப்பய்யர்.

''அடியேன் தங்களை யார் என்று அறிந்து கொள்ள லாமா?''

மிக்கவும் பணிவுடன்தான் கேட்கிறான் நாராயணத் தேவன்.

பிரதான மந்திரியார் நீலகண்ட தீட்சிதர் பதில் சொல்கி றார்.'' எங்கள் தளவாய்!''

''தாங்கள்?''

''பிரதான மந்திரி!''

''வணங்குகிறேன் சாஸ்திரோத்தமரே? எங்கள் தளவாய் என்று சொல்ல வேண்டாம். நம் தளவாய் என்று சொல்லுங்கள்!''

என்று கூறிய நாராயணதேவன் எழுந்துசென்று அவரது பாதங்களைத் தொட்டு வணங்குகிறான்.

''நான் வணங்குவது நாயக்க' தளபதியை அல்ல; பிராமணமரபில் பிறந்த ஒரு மாபெரும் வீரபுருஷனை,

இந்தத் தமிழகம் கண்ட ஒரு நல்ல தமிழனை வணங்குகிறேன்; நல்ல வீரத்தை வணங்குகிறேன்.''

சொற்களில் சூட்டோடு சுவையிருந்ததைக் கண்டு வியந்து போனார் நீலகண்ட தீட்சிதர்.

''யாரங்கே'' எவ்வளவு நேரம் தான் அந்த முதுகு தாங்கும்? ஓர் ஆசனத்தைக் கொண்டு வந்து போடுங்கள்!''

நீலகண்ட தீட்சதரின் இந்த ஆணை நாயக்க மன்னரைத் தொட்டு உலுப்பியது.

''வேண்டாம் பிரதானியாரே!''

''நாயக்கபூபதி! தயவு செய்து....''

தளவாய் ராமப்பய்யர் குறுக்கிட்டார். ''வேண்டாம்! இவனைச் சிறையில் வைத்துச் செய்தி கேட்போம்!''

தளவாய் ராமப்பய்யர் இவ்வாறு கூறிய அடுத்த கணம்—

புயலனைய வேகச் சுழிப்புடன் எழுந்து கொண்ட நாராயணத்தேவன் ''சிறையில் வைத்துச் செய்தி? செய்த குற்றம்?'' என்று நீட்டி முழக்குகிறான்

வேலுதுரையும் எழுந்து கொண்டான்.

. அவனது வலக்கரம் வாள் பிடிப்பில் இருந்தது. எந்த நேரத்தில் எதுவும் நிகழலாம் என்கிற எச்சரிக்கை அதில் எதிரொலித்தது.

''இப்படிப் பிள்ளை விளையாட்டு மாதிரி செய்ததே குற்றம்'' என்றார் தளவாய் ராமப்பய்யர்.

கூர்ந்து, ஓர் அசுரனையைப் பார்ப்பது போலப்பார்த்த நாராயணத்தேவன், ''தளவாய் அவர்களே! உங்களை வணங்கியதற்காக நாணப்படுகிறேன். ஏதோ விதிவசத்தால் நாயக்கருக்குத் தொண்டு செய்கிறீர்கள் என்று தான் நினைத்

தேன். நீங்களும் நான் முன்னம் கூறிய தமிழர்களுக்கு ஒப்பானவரே!'' என்று கூறிய அடுத்தகணம்.... .

''நாராயணத்தேவா !''

அதே இரைச்சல் தூண்கள் நடுங்குகின்றன.

''உஸ்! சத்தம் போடாதீர்கள்! மறவன் உயிருக்கு அஞ்சான். கேவலம் இந்த இரண்டு உயிர்களைப் பறிக்கலாம். மறவர் தேசம் திரண்டு வருமானால் மதுரையில் கோயில் ஒன்றே மிஞ்சும். யோசித்து முடிவெடுங்கள்''

எரிமலை நிச்சயம் வெடிக்கும் என்று உறுதியாகத் தெரிந்து கொண்ட நீலகண்ட தீட்சிதர். ''நாராயணத் தேவா! அமைதி! தமிழகம் போற்றும் நாயக்க பூபதியின் நியாயசாலாவை ரொம்பவும் அவமதிக்கிறாய்'' என்றார்.

''நான்? நெஞ்சில் கைவைத்துச் சொல்லுங்கள் பிர தானியாரே! நீங்கள் சாங்கியம், யோகம், நியாயம், வை சேஷியம், பூர்வமீமாம்சை, உத்தரமீமாம்சை என்கிற ஆறு தரிசனங்களையுணர்ந்த பிராமணோத்தமர்! காணபத் தியம், கௌரம், கௌமாரம், வைணவம் சாக்தம் சைவம் முதலிய ஆறுமாதங்களையுணர்ந்த பிராமணோத்தமர். வேதங் களின் மகேஸ்வர சூத்திரமுணர்ந்தவர்* பஹு சுருத நிலையி லிருந்து நெஞ்சில் கைவைத்துச் சொல்லுங்கள். நானா அவ மதித்தேன்? நான் ஒரு தூதுவனாக இருந்தால் கூட தூதனை மதித்து ஆசனம் தரவேண்டும். நான் சேது நாட்டின் இள வரசன். ஓரிருக்கை கூட இங்கில்லாமல் செய்து வரவேற்ற தன் நோக்கமென்ன? என்னை அவமதிக்க வேண்டும் என்ற நோக்கம் தானே? நான் என்ன குற்றம் செய்தேனென்று இவ்வாறு அவமதிக்கிறீர்கள்?''

மூச்சுவிட நேரமில்லாத அளவுக்கு சரமாரியாக அடுக்கிப் பேசி நிறுத்திப் பெருமூச்செறிகிறான் நாராயணத் தேவன்.

---

* வடமொழியில் வல்லுநர்.

குமாரமுத்து நாயக்கர் குமுறலுடன் பதில் சொல்கிருர்.

"சிறப்புக்குரிய நாயக்க இளவரசியை நீ சிறையெடுத்தது!"

ஒருகணம் அதிர்ந்து நோக்குகிருன் நாராயணத் தேவன்.

"நாயக்க இளவரசியை நான் சிறையெடுத்தேனு...? நான் சிறையெடுத்தேனு?"

"ஆம்.' நீதான் சிறையெடுத்தாய். உன்னே எதிர்க்க வந்த ஒருவனே ஜடாயுவை வெட்டி எறிவது போலக் குத்தி வீழ்த்தியிருக்கிருய். அவனது கடைசி மூச்சில் அவனே சொல்ல நானே கேட்டேன்."

'ஓ...மலேயப்பன் திரித்துவிட்ட கூற்ரு இது?'

அவன் அலட்சியமாகச் சிரித்துக் கொள்ளுகிருன்.

"நாயக்க இளவரசியை இங்கு அழைத்து விசாரிக்கலாமே!"

"தேவையில்லே."

"இது நியாயசாலா வல்ல, அநியாய சாலா!"

திருமலே நாயக்கர் கொதிப்புக் கண்டு குறுக்கிடுகிருர்...

"நீ மேலும் அவமதிக்கிருய்..."

"உங்கள் மகளே நான் சிறை எடுத்தால் கொண்டு வந்து விடவேண்டிய நிர்பந்தம்? நேரே எங்கள் சீமைக்குக் கொண்டு போயிருக்கலாமே!"

"மதுரைப் படை பலத்துக்குப் பயந்து இளவரசியைக் கொண்டு வந்து விட்டிருக்கிருய்!" என்று இடை புகுந்தார் தளவாய் ராமப்பய்யர்,

'ஓகோ!' வென்று நகைக்கிறுன் நாராயணத்தேவன்.

''தளவாய்! நீங்கள் நல்ல வீரர், ஆனுல் மோசமான விவேகி! அப்படிப் பயந்திருந்தால் எவனுவது சிறை யெடுப்பானு? அப்படியே சிறையெடுத்தவளே அனுபவிக் காமல் விடுவானு? அனுபவித்தபிறகு கொண்டு வந்து சேர்ப்பானு? சேர்த்துவிட்டு முன்னிலேயில் வந்து நிற்பானு? நின்று, மான உணர்வுடன் போராடுவானு? போராடி, நடப்பது என்னவென்று கவனிக்க நிமிர்ந்து பேசுவானு?''

நெருப்புப் பொறி பறக்கப் பேசிய நாராயணத்தேவன் மீது வன்மம் கணத்துக்குக் கணம் கூடிக்கொண்டே இருந்தது.

இவன் இளவரசியைத் தீண்டவில்லே என்கிறுனே...

அவை சில கணங்கள் அமைதியில் ஆழ்ந்து போனது.

தளவாய் ராமப்பய்யரின் ரத்தம் சூடேறி உலேயாகக் கொதிக்கிறது.

நாயக்க மன்னர் திருமலேநாயக்கர் கேட்டார்: ''நீ மதுரை இளவரசியைச் சிறையெடுக்க வரவில்லே?''

''சத்தியமாக வரவில்லே. உங்கள் மண்டைச் சளி நோயைத் தீர்த்த சோமசுந்தரேஸ்வரர் மீது ஆணே! மீனுட்சியம்மன்மீது ஆணே! நான் அந்த எண்ணத்தோடு வரவில்லே. சேது நாட்டுக்கும் மதுரைக்கும் ஒரு பாலமாக இருக்கச் செய்தி சுமந்து வந்தேன். வழியில் இளவரசிக்கு ஏற்பட்ட இந்த ஆபத்தை எனது வாள்முனே காப்பாற் றியது. வேண்டுமானுல் கங்கை நாச்சியாரை அழைத்து விசாரியுங்கள். விசாரணே என்பது ஒருதலேப்பட்சமாக இருக்கக்கூடாது. அதனுல்தான் நான் நியாயசாலாவை இகழ்ந்தேன். அதற்காக வேண்டுமானுல் மன்னிப்பு கோருகிறேன்.''

மீண்டும் சில கணங்கள் அந்த மண்டபம் அமைதி யில் ஆழ்ந்தது.

அதுவரை மௌனமாக இருந்த நீலகண்ட தீட்சிதர், ''சேதுகுமரா! வந்த காரியம் பற்றிப் பேசலாம். எந்தப் பாலத்தை நோக்கி இங்கே வருகை தந்திருக்கிறாய்? அந்தத் திருமுகக் காகிதத்தை இப்படிக் கொடு!'' என்றார்.

மனத்தில் பல்வேறுபட்ட குமுறல்களுடன் நோக்கிய நாராயணத்தேவன், ''மன்னிப்புக் கேட்டும் எனக்கு ஓர் இருக்கை தர மனமில்லாதவர்களுடன் பாலமாக நிற்க எண்ணிய இந்த தூதுச் செய்தி தேவையில்லை.'' என்று கூறிக் கையிலிருந்த திருமுகக் காகிதச் சுருளைப் பிரித்து எடுத்துத் துண்டு துண்டாகக் கிழித்து எறிந்தான்.

திருமலைநாயக்க பூபதியின் கண்களில் அவமான ரேகை படர்ந்து ஆத்திரத்தை வேரூன்றச் செய்தது. ஆயினும் அவருக்குப் பிராதன மந்திரிபால் மிக்க மரியாதையுண்டு. அவர் ஒரு பல்கலைக்கழகம். எனவே வாளாயிருந்து விட்டார்.

செய்தியைக் கிழித்து எறிந்த நாராயணத்தேவன், ''நாயக்க மரபின் மரியாதைக்கு நன்றி. நன்றி சொல்ல வேண்டியவர்கள் நீங்கள். ஆயினும் நான் சொல்கிறேன். எங்கள் மண்ணில் நாய்கள் அதிகம் கிடையாது. வருகிறோம் பூபதி!'' என்று கூறிப் புறப்படுகிறபோது—

வேலுதுரை என்ன எண்ணினரோ, ''இளைய சேதுபதி! கொஞ்சம் நில்லுங்கள். வந்தோம், அனுபவித்து விட்டோம். செய்தியை நானே வாய்மூலம் சொல்லு கிறேன். என்னதான் எதிருணர்வு என்பதைத் தெரிந்து கொண்டுதான் செல்வோமே! ஏதும் நடந்துவிட முடியாது. உங்கள் மாமா சேதுபதி சடையத் தேவரும் அண்ணார் ரகுநாத இளைய சேதுபதியும், தந்தையார் மாவீர வன்னியத் தேவரும் இருக்கிறவரை உங்கள் உயிரை யாரும் பிரித்துவிட முடியாது.'' என்று கூறியவன், மன்னர் திருமலை நாயக்க பூபதியைப் நோக்கி, ''நாயக்க

பெருமானே! வணங்குகிறேன். எனது நண்பர்—சேது இளவரசர் நாராயணத் தேவருக்குத் தங்கள் திருக் குமாரத்தி கங்கை நாச்சியார் அவர்களைக் கொடுத்து உறவு ஒப்பந்தம் செய்து கொள்ள எங்கள் சேதுபதி மகா ராஜா அவர்கள் திருமுகம் அனுப்ப உத்தேசித்தார். எனது நண்பர்தான். தாமே தூது வர முனைந்தார். காரணம், மணக்கப் போகிற இளவரசியாரை நேர்முகமாகச் சந்திக்க ஆசைப்பட்டார். ஆண்டவன் வேற்று ரூபத்தில் சந்திக்க வைத்துவிட்டான். இதுதான் செய்தி. முடிவு உங்க ளுடையது'' என்றான். அவனது குரலில் பணிவு தெரிந்தது.

ஆனால் திருமலைநாயக்க பூபதி—

ஆத்திரம் பொங்கி வழியும் ஆணவச் சிரிப்பொலி எழுப்பி, ''இவனுக்கு என் மகளா?'' என்றார்.

அப்போதும் வேலுதுரை அடக்கமாகவே கேட்டான். ''இவனுக்கா என்றால்? என்ன குறைச்சல்? மறவர் சீமையின் மங்கா விளக்கு கங்கை நாச்சியார் பெற்றெடுத்த செல்வனுக்கு என்ன குறைச்சல்?''

கங்கை நாச்சியார் என்றதும் பழைய நினைவுகள் தூண்டப்பட்டன மாதிரி உணருகிறார் திருமலை நாயக்கர். அவ்வாறு தூண்டவேண்டும் என்றுதானே வேலுதுரையும் அந்தப் பெயரை இழுத்தான்.

''ஒரு சாதாரண கங்கை நாச்சியார் குமாரன் எங்கே? ஓர் அசாதாரண திருமலை நாயக்கன் குமாரி எங்கே? எனது அரண்மனையின் தோழிப் பெண்ணை மணக்கக்கூட உங்க ளுக்கு யோக்கியதை இல்லை.''

திருமலை நாயக்க மன்னர் இவ்விதம் ஆணவமாகக் கூறி முடித்த அடுத்த கணம்...

வெகுண்டெழுந்தான் நாராயணத்தேவன் ''நாயக்க மன்னா! இப்போது சொல்கிறேன். இவ்வளவு ஆணவ

மாகப் பேசி எங்களை அவமதித்து விட்டதால் சவாலாகச் சொல்லுகிறேன். சபதமாகச் சொல்லுகிறேன். உங்கள் மகளை நான் எப்படியும் சிறையெடுத்தே தீருவேன். இது அன்னை மீனாட்சியின் மீது ஆணை.''

என்று கூறி புறப்படுகிறபோது—

''எங்கே போகிறீர்கள்? சிறையா எடுக்கப் போகிறாய்? யாரங்கே! இந்த இரண்டு சைத்தான்களையும் சிறையில் தள்ளி இரட்டைப் பூட்டுப் போடுங்கள்!'' என்று ஓங்கிக் கர்ஜிக்கிறார் மதுரைநாட்டு மாவீரத் தளவாய் ராமப் பய்யர்.

அந்தக் கர்ஜனைக்குரல் கேட்ட அடுத்த கணம்...

''அப்பகாரு!'' என்ற அலறல் சத்தம் அரசாணி மாடத்திலிருந்து கேட்டது.

அலறி மயங்கி வீழ்ந்தவள் மதுரை இளவரசி கங்கை நாச்சியார்.

6

அன்றைக்கு முழுவதுமாகப் படுத்த படுக்கையில் மலராய்க் காணப் பட்டாள் மதுரைநாயக்க சி கங்கைநாச்சியார்.

ளது பெரிய தாயார் பெரிய நாயக்கமாதேவி பதியம்மாளும் பெற்றெடுத்த இளைய நாயக்கமா தொலியம்மாளும் பக்கத்திலிருந்துஎவ்வளவு எடுத்துக் றியும் கொஞ்சமும் சட்டை செய்ததாகக் காணோம். ஙிதாபிமானம் அற்றவர்கள மத்தியில் நாம் பிறந்துவிட் டாமே என்று எண்ணித்தன்னுள் நாணி நொந்து கொண் ாள் கங்கைநாச்சி.

பெரிய நாயக்கமாதேவிக்குப் பெண் குழந்தை இல்லாத தால் கங்கைநாச்சியின் பேரில் அதிகப்படியான அன்பும் ஆசையும் இருந்தன. தனது குமரன் முத்துவீரப்பன் பேரில் எவ்வளவு பற்றும் பாசமும் இருக்கின்றனவோ அவ்வளவுக்கு கங்கை நாச்சியின் மீதும் இருந்தன.

ஆனல் பெற்றெடுத்த தொலியம்மாள், திருமலை நாயக்கரை போலவே பிடிவாதமான—மூர்க்கமான குணம் படைத்தவள். தமிழர்கள்பால் அவளுக்கு அளவுக்கு மீறிய வெறுப்புண்டு. இந்தத் தமிழகம் முழுவதுமே தெலுங்கு தேசமாய் விடக்கூடாதா என்று அற்பமான கற்பனையும் கனவும் காணுகிறவள். மொழிப்பற்றின் காரணமாக இனவெறி கொண்டவள். திருமலைநாயக்கர் தமிழகத்தில் பல நல்ல அபிவிருத்திகள் செய்வதை விரும்பாதவள்.

வடுக இனத்தவன் ஆள்கிறுன் என்கிற கசப்பான எண்ணம் தமிழர்களுக்கு ஏற்படக்கூடாது; மேலும் தனது ராஜ்யகனவை வேலூரைத் தாண்டி வைத்துக் கொள்ள முடியாது என்பதைத் தெளிவாக உணர்ந்தே மன்னர் திருமலை நாயக்கர் தமிழகத்தை அபிவிருத்தி செய்ய முனைந் தார்.

தொலியம்மாளும் ஒருதினம் படுக்கைமந்திரம் ...மி உச்சக்கட்டத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தபோது டாள்: "பிரபோ! தமிழ்நாட்டை வடுகதேசம் தெலுங்குதேசம் என்று பிரகடனப் படுத்திய பிறகு இந்தக் கோயில் அபிவிருத்திகள், குள அபிவி... இப்படியான மகால் ஆகியவற்றைச் செய்திரு... இப்போதும் மீறிவிடவில்லை. தமிழர்கள் முட்டா... எருமைமாடுகள். லஞ்சம் கொடுத்தால் மனைவியை... காட்டிக் கொடுத்து விடுவார்கள். இவர்களை அடக்... ஆளத் தெரியவில்லை. தெலுங்குதேசம் என்று பிரகடன... படுத்திப் பாருங்களேன்! ஒவ்வொருவர் கையிலு... தெலுங்கு புத்தகம் இருக்கும். தெலுங்கைப் படிக்...

தொடங்கிவிடுவார்கள். நாமும் நெல்லூர், தெனலி, விஜய நகரம் போன்ற இடங்களிலிருந்து நிறைய நம்மவர்களை இறக்குமதி செய்துவிட வேண்டும். என்ன சொல்லு கிறீர்கள்?''

திருமலைநாயக்க மன்னரின் தொப்பையே வெடியுண்டு விடும் போலிருந்தது. ஆ! எத்தனை பெரிய வெடிகுண்டைத் தூக்கிப் போடுகிருள் இந்தத் தொலியம்மா!

அவரது உடல் குபீரென்று வியர்த்ததால் உச்சகட்டம் மிச்ச கட்டமாகி, அது துச்ச கட்டத்தில் முடிந்தது.

''தொலி! நீ தமிழர்களைத் தவருக எடை போட்டு விட்டாய்! நன்றியுள்ளவர்கள், பண்பு மிக்கவர்கள், நாணயமுடையவர்கள்; பக்தி நெறி கொண்ட மொழிப் பித்தர்கள், உயிரைக் கொடுக்கவும் செய்வர், உயிரைப் பறிக்கவும் செய்வர். உதாரணத்துக்கு ஒன்று சொல்வேன். அச்சுதப்ப நாயக்க மன்னரின் அந்தப்புரத்தில் திருமலாம்பாள், மூர்த்தியம்மாள் உட்பட மகிஷிகள் எழுபது பேர்கள். வைப்பு மனைவியர்களோ முந்நூறுபேர்கள் அந்தப்புரமே நாற்றமடித்த சரித்திரம் நீயறிவாய். நமது வடுகர்கள் அரச மனைவிகள் என்றும் பாராமல் பக்தி விசுவாசமின்றி பலரும் பலவிதமாக நடந்துகொண்ட செய்தியையும் கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கே எனதுஅந்தப்புரத்தில் நூற்றுத் தொண்ணூற்றெட்டு வைப்பு மனைவிகள் ஒருத்தியிடமாவது ஒரு தமிழ்ச் சேவகன் பண்பு குறைவாக நடந்து கொள்ள வேண்டுமே! திருமலைநாயக்கன் என்கிற கம்பீரமான பயத்தால் அந்தப்புரத்தில் இந்த மகளிர் அடங்கி ஒடுங்கி இருந்தாலும், சந்தர்ப்பம் கிடைத்தால் என்னுமோ? அப்படி ஒரு சந்தர்ப்பத்தை யுண்டு பண்ணுமலிருப்பவர்கள் தமிழர்கள்! ராஜ விசுவாசிகள்! இந்தத் தமிழர் ண்பாட்டை நோக்கிப் பணிபுரியும் வடுக சேவகர்கள் துங்கி இருக்கிருர்கள். இல்லையென்ருல் ஏமாந்தால்

உன்னையே கப்ளீகரம் செய்து விடுவார்கள். வேலூர் தயாநி ஸ்ரீரங்கன் ஆளுகையில் கண்ட அசிங்கங்கள்தானே இவை; எனவே இன்னொருமுறை இவ்வாறு தமிழர்களைத் தரக் குறைவாகப் பேசாதே!''

தொலியம்மாளுக்கு வெறுப்புக் கண்டது. மேலாடையை இழுத்துப் போர்த்திக்கொண்டு வேகமாக வெளியேறி விட்டாள். போகட்டுமே!

இருநூறு பெயர்கள் இருக்கிற போதே இந்தத் சண்டித் தனம் என்றால், இவள் ஒருத்தியே மட்டும் இருந்தால் எத் தனை கிராக்கி செய்து கொள்வாள்?

திருமலை நாயக்கர் இருப்பவர்களுள் மிகவும் இளமையும் எழிலும் வாய்ந்த தமிழ்ப் பெண்ணான பானுமதியை நாடிச் சென்றார்.

இந்தத் தொலியம்மாளுக்கு முற்றும் மாறுபட்டவள் பெரிய நாயக்கமாதேவி ருத்ராபதியம்மாள். தமிழை அந்த அம்மையார் விரும்பிப்படித்து அதன் இலக்கிய வளங்களைக் கண்டு வியந்தவள் ஓ...தெலுங்கில் நாராயணப் பட்டர் எழுதிய இராமயணக் கதைக்கு முன்பு என்ன அப்படி இலக் கிய வளமிருக்கிறது என்று துணிந்து பேசுகிறவள்...

மறவர் நாட்டு சேதுபதியின் தங்கை சிறையிலிருக்கும் நாராயணத்தேவனின் அன்னை கங்கை நாச்சியாரை, ஒரு காலத்தில் திருமலை நாயக்கர் மனமார விரும்பினார். அது நிறைவேறாது போகவே அந்த ஞாபகார்த்தமாகத் தமக்குப் பிறந்த மகளுக்கு அந்தப் பெயரை இடுகிற போதுதொலியம் மாள் எவ்வளவு எதிர்ப்பு தெரிவித்து இருக்கிறாள். பெரிய நாயக்கமாதேவி ருத்ராபதியம்மாள் தலையிட்டு இதனை, தீர்க்க வேண்டியதாயிருந்தது. அப்போதும் கங்கை என்கி அளவோடு இருக்கட்டும், இதுஎன்னநாச்சியார்; பொல்லா நாச்சியார் என்று வெறுப்புடன் சொற்களைவீசினாள் தொ யம்மாள்.

மிகுந்த வைணவப்பற்றுடையவரான திருமலே நாயக்க ்னர், ''தொலி! நாச்சியார் என்ற சொல் சேதுநாட்டி ருந்து வந்ததாக எண்ண வேண்டாம். ஸ்ரீவில்லிபுத்தூரில் டி கொண்டிருக்கும் ஆண்டாளையும் நாச்சியார் என்று ான் அழைக்கிறோம்'' என்றுமேற்கோள் காட்டிச்சமாளிக்க வண்டியிருந்து. சொல்லப் போனல் திருமலேநாயக்க மன்ன டைய தமிழகச் சேவைக்கே மூல காரணமாக நின்றவள் பரிய நாயக்கமாதேவி ருத்ராபதியம்மாள்தான்.

அருமை மகள் கங்கைநாச்சியின் நிலேமையைக் கேள் ப்பட்டு அந்தப்புரம் நாடி வருகை தந்தார் திருமலே யக்க மன்னர்.

மெத்தென்ற பஞ்சணேயில் மேனி நுடங்கப்படுத்திருந்த ிதையனேய கவின்மகளே நோக்குகிறுர்.

எங்கோ வெறித்து கண்களில் மாலேமாலேயாக நீர் ியக் காணப்பட்டாள் கங்கைநாச்சி.

பருத்த உடம்பைக் கட்டிலின் விளிம்பில் அமர்த்திய ருமலே நாயக்க மன்னர், மெல்ல மகளேத் தொட்டு கங்கா!''...என்றுர்.

பதில் இல்லே.

மெல்லத் தலேயைத் திருப்பித் தந்தையாரை நோக்கு றுள் கங்கை நாச்சி.

'சரியான நீலி!' என்று மனத்துள் வைதுகொள்ளுகிறுள் தொலியம்மாள்.

ருத்ராபதியம்மாளோ, மிகவும் அன்புடன் தனது தானேயால் கங்கை நாச்சியின் கண்களேத் துடைக் ்.

''கங்கா! உன் கண்ணீருக்கான காரணம் புரிகிறது. ாராயணத் தேவன் கர்வியாக நடந்து கொண்டான்.

நீதிசாலாவை அவமதித்தான். எனவே அதற்குரிய தண்டனையை அவன் அனுபவித்துத்தான் தீரவேண்டும்.''

எங்கிருந்துதான் அந்த வேகம் கங்கை நாச்சி வந்ததோ? ஒரு நாகத்தின் படவிரிப்பு வேகம்போலநெளிந் சீறி எழுந்த கங்கை நாச்சி, ''உங்களுக்கெல்லாம் மனிதா மானம் இருக்கிறதா?'' என்று கேட்டாளே ஒரு கேள்வி.

திருமலை நாயக்க மன்னர் பெரிதாக அதிர்ந்து போனு.

'என்ன கேள்வி கேட்டுவிட்டாள் இவள்?' என் பெரிய நாயக்க மாதேவியும் கூட தன்னுள் எண்ணி வியந் கொள்கிறாள்.

''நான் கேட்டது சுருக்கென்று தைக்கிறதல்லவா? இ அவர் என்னை எவ்வாறெல்லாம் மரியாதையுடன் காப்ப றினர் என்பது எனக்கே தெரியும். பகைவனுடை மகள்தானே என்று எனது கற்பைப் பறித்திருந்த இப்போது அவரை அடைத்திருக்கும் சிறைச் சாலை களங்கத்தைத் தீர்த்து இருக்கும்? தர்ம சாலா நடத்தினீர்கள்? ஏதோ ரகசியக்கூட்டம் மாதிரி சிலர். ஒ மறவர்க்குடிமகனுக்கு அளிக்க வேண்டிய நியாயமா மரியாதையை நீங்கள் அளிக்கமறந்தபோதுஎதிரியிடமிருந் எவ்வாறு நாம் மரியாதையை எதிர்பார்க்க முடியும்? அ கேட்ட நியாயமான கேள்விகளுக்கு உங்களால் பதி சொல்ல முடியவில்லை சிறையிலடைத்தது. என்ன நியாய அதுவும் இரட்டைப் பூட்டுக்கள்''

''நமது தளவாய் ராமப்பய்யரின் சித்தம் அதுவா இருக்கிறதேம்மா!''

''என்ன தளவாய்? பொல்லாத தளவாய்? பேசா சிம்மாசனத்தை விட்டு நீங்கள் இறங்கி அவரை அம விட வேண்டியது தானே?''

''கங்கா!''

கொதித்துப் போனார் திருமலை நாயக்கமன்னர்.

"கங்கா! உனக்கு இருந்தாலும் இவ்வளவு கொழுப்பாக க்கு நீளக் கூடாது!" என்று குறுக்கிட்டாள் தொலியம் ாள்.

இப்போதுதான் ருத்ராபதியம்மாளின் தலையீடு தவைப்பட்டது.

"அவள் நியாயத்தைச் சொல்கிருள். இந்த நேரத்தில் றவர்க் குடிப் பகை நமக்குத் தேவைதானு என்று சொல் ாமல் சொல்லுகிருள் கங்கைநாச்சி" என்ருள் பெரிய ்யக்கமாதேவி ருத்ராபதியம்மாள்.

திருமலை நாயக்கரின் பெருத்த கண்கள், சர்வ வல்லமை பாருந்திய பெரிய மாதேவியை நோக்குகின்றன, 'நீயுமா நவி! இந்த நேரத்தில்?' என்று அவை கேட்டு அலமரு ்றன.

"பிரபோ! பேசாமல் நாராயணத்தேவனை விடுதலை சய்யுங்கள்"

ருத்ராபதியம்மாள் துணிவுடன் இவ்வாறு சொல்ல, 'டுத்து தொலியம்மாள் குறுக்கிட்டாள். "அது கூடாது. டுதலை செய்தாலும் சேதுநாட்டு யுத்தமிருக்கிறது. விடு லை செய்யாவிட்டாலும் சேது நாட்டு யுத்தமிருக்கிறது. ருகிற யுத்தம் வரட்டும். இவர்கள் சிறையிருப்பதால் ாபமும்கூட. இவர்களைச் சிறையிலடைத்தே சேதுபதியைச் ாமாதான உடன்படிக்கைக்கு உடன்படச் செய்யலாம். அவசரப்பட்டு விடுதலை செய்தாலும் மிஞ்சுவது ஆபத்து நான்!"

பலவிதங்களில் தொலியம்மாள் பேச்சு மிகுந்த நியாய ாகப்பட்டது. ஏன்? பெரிய நாயக்கமாதேவி ருத்ராபதியம் மாளுக்கும் அது நியாயமாகவே தெரிந்தது.

—ஆனுல் இப்படிச் செய்தால் என்ன?

"பிரபோ! தங்கை அவசரப்படுகிருள். நீங்கள் தளவாய் பச்சைக் கேட்டு அவசரப்பட்டு விட்டீர்கள். சேதுநாட்டு

சடையத்தேவர் நல்ல எண்ணங் கொண்டு திருமண உட பாட்டுக்குத் தூது அனுப்பி வைத்தார். நமக்கிருக்(ஒரே ஜன்மப் பகைவர்கள் சேதுபதிகள். இந்த ம உறவின் மூலம் அமைதிக்கு ஆரத்தி எடுக்கும் அற்ட சம்பந்தம் கிட்டியிருக்கும். அவசரப்பட்டு விட்டீர்கள்.''

ருத்ராபதியம்மாள் இவ்வாறு கூறிய அடுத்த கணம்—

தொலியம்மாள் கருநாகம் போன்று சீறினாள்.

''போயும் போயும் மறவனுக்கா? எனது மகள் வ(ரத்தம்.''

''எப்படி நிரூபிப்பாய் அம்மா?''

துணிவோடுதான் கேட்டாள் கங்கைநாச்சி. அடுத் 'பளீர்' என்று ஓர் அறை கன்னத்தில் விழுந்தது. தொலி மாள்தான் அறைந்தாள்.

கன்னத்தைத் தடவிக் கொண்டே எரித்து விடுப போலக் கவனிக்கிறாள் கங்கைநாச்சி. அடுத்தது கொ(மும் தாமதியாமல் தனது வலக்கரத்துப் பொன்வளைய இடக்கரத்தால் அழுத்தி உடைத்து எடுத்து, அதன் து டால் இடக்கரத்துச்சதையைக் கீறினாள். ரத்தம் பீறிட்ட

''கங்கா!'' என்று அலறி விட்டாள் ருத்ராபதியம்மா

''பொறுங்கள் பெரியம்மா! இதோ இந்த ரத்தத்தி வடுகரத்தம், தமிழ் ரத்தம் என்று எழுதியிருக்கிறதா என் நிரூபிக்கட்டும் என்ற அர்த்தத்தில் தான் நான் அவ்வா கேட்டேன் இப்போதும் கேட்கிறேன். சொல்லுங்கள்.''

தொலியம்மாள் சற்று தலைநிமிர்ந்து தீர்க்கமாக கூறினாள்: ''நீ எந்தவிதக் காரணம் கொண்டும் சே நாட்டில் தலையைக் கொடுக்க நான் சம்மதிக்க மாட்டேன் இது சத்தியம்.''

தொலியம்மாள் அவ்விடத்தை விட்டகன்று வேகமா நடந்து செல்வதை ஆறு கண்கள் அலைமோதி கவ கின்றன.

இரு தினங்களாகவே அரண்மனை களையிழந்து காணப் பட்டது.

சேதுநாட்டு இளவல் நாராயணத் தேவனைச் சிறைப் படுத்தி வைத்திருக்கும் செய்தியை மதுரையில் பரவ விடாது மிகவும் கவனமாகப் பார்த்துக் கொள்வதில் ஒற்றர் களை நேமித்து இருந்தார் மன்னர் திருமலைநாயக்கர். அவரது சிந்தனை இந்த இரு தினங்களாக குழப்பமோ குழப்பம் கண்டிருந்தது. எந்த விதத்தில் பார்த்தாலும் நாராயணத்தேவனை விடுதலை செய்வதென்பது ஏற்புடைத் தாகத் தெரியவில்லை. இது விஷயத்தில் இளைய நாயக்க மாதேவி தொலியம்மாள் கூறியது அரசியல் ஞானமிக்க தாகத் தெரிந்தது.

திருமணச் சம்பந்தமாகப் பேச வந்ததை நிறைவேற்று வதானால் இதற்கு வேறு காரணங்களைச் சப்பைக் கட்டிச் சுமுகமாக்கி விடலாம். பெற்றவள் எதிர்க்கிறாளே! தீர்க்க மாக அது முடியாது என்று சத்தியமே செய்துவிட்ட பிறகு...

பெரிய நாயக்கமாதேவி ருத்ராபதியம்மாள் இது குறித்து எப்படிச் சிந்தித்தாலும் ஒரு நயமான முடிவுக்கு வர முடியவில்லை.

அப்போது அங்கு வந்து நின்றாள் கங்கைநாச்சி. அவளது தோற்றம் ஒரு சோகப்பதுமையைப் போலிருந்தது.

அறையில் விளக்குகள் பிரகாசமாக எரிந்து கொண் டிருந்தன.

மூன்றாம் யாமத்து மணியோசை கேட்கிறது..:

"ஏனம்மா கங்கைநாச்சி! தூங்கவில்லை?"

அவள் தூங்கி இரு தினமாகிறது என்பதை ருத்ராபதி யம்மாள் அறியாததா என்ன?

"நீங்கள் ஏன் பெரியம்மா தூங்கவில்லை?"

என்ன பதில் சொல்வாள் ருத்ராபதியம்மாள்? அவளுக்கு மகள்மீது கவலை, மகளுக்குக் காதலன் மீது கவலை.

''பெரியம்மா! உங்களை ஒன்று கேட்பேன். உடன் படுவீர்களா?''

''என்னம்மா?''

''உங்கள் விரலில் இருக்கும் லாஞ்சனை தேவை.''

''எதற்கு?''

''சிறைக் கோட்டத்துக்குச் சென்று திரும்பவேண்டும்.'

''இந்த இரவிலா?''

''இரவில் செல்லாமல் பகலிலா செல்ல முடியும்?''

''துணைக்கு யாரை அழைத்துக் கொண்டு போகிறாய்?'

இந்தக் கேள்வியிலிருந்து பெரியம்மாள் லாஞ்சனையைத் தரச் சம்மதித்து விட்டார்கள் என்பது புரிய வந்தது.

''பானுமதி சித்தியை.''

''அவள் நம்பிக்கைக்கு உரியவளல்ல.''

''என் காதலை ஆதரிக்கும் ஒரே ஜீவன் அதுதான்.''

''அப்படிச் சொல்லாதேம்மா! நானும்தான்'' என்று கூறிய ருத்ராபதியம்மாள். விரலில் இருந்த சங்கு சக்ரத்துக்கு இடையே மீன்சின்னம் பொறித்த முத்திரை மோதிரத்தை—லாஞ்சனையை—அவிழ்த்துக் கொடுத்தாள்; அவளது கண்களில் நீர்முத்துக்கள்.

''கங்கைநாச்சி! சர்வ ஜாக்கிரதையாகச் சென்று திரும்ப வேண்டும். கொஞ்சம் ஏமாந்தால்கூட அரண்மனையே திமிலோகப்பட்டு விடும், கவனம்.''

நன்றியறிதலோடு பெரிய அன்னையை நோக்கினாள் கங்கைநாச்சி.

7

அந்த அர்த்த ராத்திரியில் மதுரைநாயக்க இளவரசி கங்கைநாச்சி, தனது சின்னம்மாளான பானுமதியுடன் சிறைக் கோட்டத்துள் மிக்கவும் துணிவை வரவழைத்துக் கொண்டு நுழைகிருள்.

தான் செய்கிற செயல் எவ்வளவு ஆபத்தானது என்பது அவளுக்குத் தெரியாததல்ல. அத்துடன் அகப்பட்டு கொண்டால் பானுமதிக்குக் கிடைக்கிற தண்டனை பயங் கரத்திலும் பயங்கரம். நல்ல தமிழ் மகளான பானுமதி, இந்தக் காதலை ஆதரிக்கத் தனது உயிரைத் திரணமாக மதித்திருந்தாள். திருமலை நாயக்க பூபதியிடம் தான் சுகமான சுத்தமான இன்பம் நுகரமுடியவில்லை. அது தலைவிதி; ஒரு தமிழச்சியாகப் பிறந்ததால் கற்பைப் பேணிக் காக்க வேண்டியது கடமையாய்ப் போய்விட்டது. இந்த இளம் உள்ளங்களை இணைத்து வைத்து அவர்களாவது இன்ப புரியின் எழிலார்ந்த கோலாகலங்களை ரசிக்கட்டுமே என்று எண்ணி.மேற்கொண்ட தியாகம்தான் இது.

சிறைக் கோட்டத்தில் அவர்களுக்கு வழிகாட்ட ஒரே ஒரு சேவகன் மட்டுமே கண்களில் படுகிருன்.

இது என்ன வியப்பாக இருக்கிறது? எங்கே காவல் பலம்? எங்கே சிறைக் கோட்ட அதிகாரி? கங்கைநாச்சிக்குப் புரியாத விழிப்பை நெஞ்சுக்குத் திணிக்கிற சூழலாக அது தெரிகிறது.

உண்மையில் காவல் பலமாகவே இருந்தது. பெரிய நாயக்கமாதேவி ருத்ராபதியம்மாள் முன்கூட்டியே சிறைக் கோட்ட அதிகாரிக்கு ரகசியத் தகவலை அனுப்பி வைத் திருந்தாள். ஓர் ஈ. கொசுகூட அந்த இரவில் நுழையாத வாறு பலத்த காவல், கங்கைநாச்சியின் கண்களில் படாத வாறு ஏற்பாடாகி இருந்தது. ஏன்? சிறைக்கோட்ட

அதிகாரியும் கூட அந்தக் காட்சியில் தலை நீட்டாமல் இருந்து விட்டார். ஏதோ அவருக்கே தெரியாமல், தனது விரலில் இருக்கும் நாயக்கலாஞ்சனை துணை கொண்டு சிறையில் சந்தித்தோம் என்கிற நிறைவு இளவரசிக்கு இருக்கட்டும் என்கிற மாதிரியான ஏற்பாடு அது.

வழி நெடுக சிறைக்கோட்டம் வெறிச்சோடிக் கிடக்கிறது. அச்சத்தை யுண்டு பண்ணுகிற அளவுக்கு அமைதியோ அமைதி. தீப்பந்தங்கள்கூட எங்கோ ஒன்ருய் எரிந்து கொண்டிருக்கின்றன. வழிகாட்டியாக வந்த சேவகன் முன்னே செல்கிருன். அவர்களின் கரிய நிழல்கள், வெளிச்சக் குறைவால் பூதாகரமாகத் தோற்றம் தந்து சுவர்களில் படிந்து பயமுறுத்திக் கொண்டே தொடருகின்றன.

எங்கோ கோட்டான் அலறுகிற பயங்கரச் சத்தம் காற்றில் மிதந்து வருகிறது.

ஒரு கட்டத்துக்கு வந்ததும் வழிகாட்டிய சேவகன், எதிரே வரிசையாக இருந்த சிறையறைகளைச் சுட்டிக் காட்டி, "இளவரசி! அதோ ஐந்தாவது அறையில் மறவ நாட்டு இளவரசர், பக்கத்தே ஆருவது அறையில் அவருடைய நண்பர்" என்று கூறி ஒதுங்கிக் கொண்டான்.

ஒரு கணம் நின்று வரிசையாக இருந்த சிறைக்கூடத்தைக் கவனிக்கிருள் கங்கைநாச்சி.

அவரைப் பார்க்கப் போகிறோம்? எந்த முகத்தோடு பார்ப்பது? என்ன பேசுவது?

கங்கைநாச்சியாரின் தயக்கத்தை வேறுவிதமாக புரிந்து கொண்ட இளையராணி பானுமதி "கங்கா! நான் இங்கேயே நிற்கிறேன். நீபோய் பேசிவிட்டு வா. கூடியவரை பேசுவதை சுருக்கமாகப் பேசிவிட்டுவா. ஏன் இவ்வாறு சொல்லுகிறேன் என்ருல் மீண்டும் நாம் சிறைக்கூடம் நோக்கி வருகிற

மாதிரி நடந்து கொள்ளவேண்டும். இவ்வளவு அமைதியாகச் சிறைக்கூடம் இருக்கிறதென்ருல் ஏதோ ஓர் கடுமை நிறைந்த ரகசிய உத்திரவை யாரோ பிறப்பித்து செய்த ஏற்பாடு மாதிரி தெரிகிறது. யார் செய்யப் போகிருர்கள்? நமது நாயக்கமாதேவிதான். ஆகவே போய் ஓரளவு பேசி விட்டு, மிச்சத்தைப் பிறகு வைத்துக் கொள்ளலாம் என்கிற மாதிரி திரும்பி வந்துவிடவேண்டும்'' என்ருள். அவள் கூறிய தில் அர்த்தமும் இருந்தது; நியாயமும் இருந்தது.

கங்கைநாச்சி தனது காதலன் அடைபட்ட அறைநோக்கி நடக்கிருள். கால்கள் பின்னுகின்றன. அவற்றில் அச்சமும் இணைந்து பின்னுகின்றன.

அந்த வரிசையைப் பார்வையிட்டு செல்கிறபோது...

என்ன இது! ஒரு கைதிகூட சிறையறைகளில் காணோம்? வரிசைக்கு இவ்வாறே இருக்குமா?

ஒரு கைதிக்கும் இச்செய்தி தெரிந்துவிடக் கூடாது என்று சிறைக்கோட்டத்து அதிகாரி புத்தி சாதுரியமாகச் செய்த காரியம் இது. அந்த வரிசையில் இருந்த கைதிகளை வேற்றுப் புறமாக மாற்றி இருந்தார்.

ஐந்தாவது அறைவாசலில் சென்றதும் கால்கள் நிற்கின் றன. ஓசைவரக் கூடாது என்பதற்காக பானுமதியின் அபிப் பிராயத்தை ஏற்றுக் கால்களில் கொலுசு அணியாமல் வந்தி ருந்தாள்.

சிறையறையினுள்...

ஒருபக்கமாக இருந்த விசிப்பலகையில் அமர்ந்திருந்தான் சேதுநாட்டு இளவல் நாராயணத்தேவன்.

சற்றுநேரம் அவனை உற்றுக் கவனிக்கின்றன மலரனைய கண்கள்; அவற்றில் மருட்சி. மணித்துளிகள் வெடியுண்டு கன்னங்களில் மாலையாக வழிகின்றன.

ஓ...எதற்கு வந்தீர்கள்? என்ன அனுபவிக்கிறீர்கள்? மனம் தடுமாறுகிறது.

''இளையராஜா!''

தட்டுத்தடுமாறி அவளது உதடுகளின் சுந்தர அழைப்பு...

எங்கோ நினைவில் ஆழ்ந்திருந்த நாராயணத்தேவன். ஒரு பெண்ணின் குரல் காதுகளில் மோதவே, வியந்து விழிப்புடன் அண்ணாந்து கவனிக்கிறான்.

கங்கைநாச்சி...

துடிப்புடன் எழுந்து வந்த நாராயணத்தேவனை நோக்கிய கங்கைநாச்சி, கதி கலங்கிப் போய்விட்டாள்.

ஒ...ஏதோ கோபமுடன் கொதித்து விழப்போகிறான் என்றே அவள் குழம்பி மருண்டாள்.

ஆனால் அவ்விதம் ஏதும் நிகழ்ந்து விடவில்லை.

சிறைக்கம்பிகளைப் பற்றிய நாராயணதேவன், ''கங்கை நாச்சி! இந்த அர்த்த ராத்திரியில் ஏன் வந்தாய்'' என்று அன்புடன் கேட்டான். அவளது கண்களில் காதல் நீர்மணிகள் முத்தாகி உருண்டன.

கங்கைநாச்சி சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஏதோ காரசாரமாகப் பேசி, 'உன்னால் வந்த விளைவு' என்று ஒதுக்குவார் என்றுதான் எதிர்பார்த்தாள். ஆனால் அந்த நீர் முத்துக்கள்.

விசும்பியழத் தொடங்கிவிட்டாள், விழியழகுள்ளும் ஓர் இனிய மொழியழகுபடைத்த மோகனரூபி கங்கை நாச்சி.

''கங்கைநாச்சி! அழுது நேரத்தை வீணாக்காதே! நீ இரவில் இவ்வாறு வந்ததே தவறு. ஓர் அரசகுமாரி என்னால் இப்படிக் களங்கமாகக் கூடாது. என்று மீண்டும் சொல்லுகிறேன்.''

நிமிர்ந்து நோக்கிய கங்கை நாச்சி, "ஏன் களங்கப்படாமல் போய் விட்டோமே என்று இப்போது யோசிக்கிறேன் பிரபோ! அப்படி அடைந்திருந்தால் நியாய சாலாவில் தைரியமாக வந்து வாதாடியிருப்பேனு என்னமோ!" என்ருள்.

அயர்ந்துபோனுன் அருந்தமிழ்க் குடிமகன் நாராயணத் தேவன்.

"நீ வாதாடியிருந்தால் எனக்குப் பெருமை யிருந்திருக்காது. நீ சிறை நாடி வந்தாயே...அதுதான் நமது காதலுக்கு மிகவும் பெருமை தேடித் தந்திருக்கிறது. உனது தந்தை எதைமனத்தில் வைத்து இதைச் செய்தார் என்பதுதான் புரியவில்லை."

"அவர் மீது குற்றமில்லை. எல்லாம் அந்த தளவாய் ராமப்பய்யரால் வந்தவினை..."

'ராமப்பய்யனே! விரைவில் நான் உன்னைச்சந்திப்பேன்' மனம் சூளுரைத்துக் கொள்கிறது...

"போகட்டும் கங்கைநாச்சி! எந்தத் தைரியத்தில் இந்த ராத்திரியில் சிறை நாடி வந்தாய்?"

"எனது பெரியம்மாள் தைரியத்தில் பிரபோ!"

"பெரிய நாயக்கமாதேவியா?"

"ஆமாம்"

"அப்படியென்ருல் நமது காதல் நிச்சயம் ஈடேறும்."

"சத்தியமாக ஈடேறும்! என் சின்னம்மாளே துணைக்கு என்னுடன் வந்திருக்கிருர்கள்."

"அப்படியா!"

"ம்ம்!"

"நான் கூடச் சந்தேகப்பட்டேன். இருட்டியதும் இங்கிருக்கிற கைதிகளையெல்லாம் அழைத்துச் சென்று வேற்றி

டத்தில் அடைந்தார்கள். ஏன் இவ்வாறு இப்பகுதியைத் துப்புரவு செய்தார்கள் என்பது அப் போதைக்குப் புரியவில்லை. இப்போதுபுரிகிறது. போகட்டும், அடுத்த திட்டம் என்ன?''

சற்றே யோசித்த கங்கைநாச்சியார், ''நீங்கள் தான் சொல்ல வேண்டும்'' என்ருள்?

''நீ என்ன நினைக்கிருய்? • அதைச் சொல், கங்கை நாச்சி!''

''நீங்கள் எப்படியும் தப்பிவிட வேண்டும், நானும் உங்களுடன் சேது நாட்டுக்கு வந்து விடவேண்டும்.''

''நீயுமா?'

''ஆமாம் நீங்கள் சென்ற பிறகு இங்கு நான் ஒரு நாழிகையும் இருக்க முடியாது; இருக்கவும் கூடாது. நமது காதல் ஈடேற பலசோதனைகள் நிகழும். ஏன்? உங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணையா?''

ஆட்சேபணையாவது? பின் விளைவு பற்றி யோசிக்கிறேன்?''

''எப்படியும் யுத்தம் நிச்சயம், அது எந்த ரூபத்தில் ஏற்பட்டால் என்ன? என்று கூறிய கங்கைநாச்சி, தனது அறையில் பெற்றெடுத்த அன்னை தொலியம்மாளுடன் வாதித்ததைப் பிட்டுப்பிட்டு வைத்தாள். அந்தப்பிட்டு வைத்த வார்த்தைகள் நாராயணத்தேவனின் பிடரியை உலுப்பின.

யுத்தம், யுத்தம், யுத்தம்...

அமைதி தேடிப் புறப்பட்டுவந்தவன் யுத்த செய்தியைச் செவிசாய்க்கிருன்...

''கங்கைநாச்சி! எனக்கு நீ உதவி செய்ய வேண்டும்!''

''காத்திருக்கிறேன் பிரபோ!''

''இரண்டு கூரான சின்னஞ்சிறிய குத்துவாட்கள் தேவை!''

''இரண்டு குத்துவாளால் ஓராயிரம் பேரை மடியச் செய்யலாமே!''

''அது எனது வீரத்துக்கு! இதுஎனது ராஜதந்திரத்துக்கு. ரகசியமான இதனை உன்னிடம் கூடச் சொல்லக்கூடாது என்று நினைக்கிறேன். சிறையிலிருந்து தப்பிக்க வேண்டு மானால் நீ இந்த உதவியைச்செய்வாய். இன்றைக்கு ஐந்தாம் நாளிரவு நாம்—ஆமாம்; உன்னையும் சேர்த்துதான்—மதுரையிலிருந்து தப்பிச் செல்கிறோம். ஆனால் ஒருநிபந்தனை. நீ குத்துவாளை யாரிடம் ரகசியமாகக் கொடுத்து அனுப்பு கிறாயோ...நீ மட்டும் வரக் கூடாது. நீ அடிக்கடி வரத் தொடங்கினால் நமது திட்டம் அம்பலமாகி விடும். இன் றைக்கு ஐந்தாம் நாள் நள்ளிரவு இந்தச் சிறைக்கூடத்துப் பின்சுவருக்குப் பின்னால் இரு புரவிகளை ஏற்பாடு செய்து கொண்டு காத்திருக்கிறாய். நானும் வேலுவும் வந்து விடு கிறோம். என்ன யோசிக்கிறாய் கங்கைநாச்சி?''

''ஒன்றுமில்லை பிரபோ! சிறைச்சாவிகள் கோட்டத்தலை வரிடமிருந்தால்கூட ஒருவாறு செயல்படலாம். இந்தச் சாவி களில் ஒன்று தளவாய் ராமப்பய்யரிடமிருக்கின்றது. அது தான் யோசனை...''

ராமப்பய்யர்...

மனத்தின் பற்கள் மௌனமாய் நற நறக்கின்றன...

''அதுகுறித்து கவலை வேண்டாம், விரைவில் இரு குத்து வாட்களை ஏற்பாடு செய்.''

''பொழுது விடிவதற்குள் குத்துவாட்கள் உங்கள் கை யில் வந்து சேரும்! நேரமாகிறது. நான் புறப்படுகிறேன்.''

''கவலையில்லாமல் இரு கங்கைநாச்சி!''

''நீங்கள் கவலையில்லாமல் இருக்க வேண்டும். நிஜமாக இன்றைக்கு ஐந்தாம் நாள் நள்ளிரவு நாம் புறப்படுவது உறுதிதானே?''

''என்னை நீ காதலிப்பது உறுதியென்ருல் இதுவும் உறுதியானதே!''

கங்கை நாச்சியின் திராட்சைக் கண்கள் அசைகின்றன. இலேசான நீர் படர்வு. துடைத்துக்கொண்டு வலக்கரத்தைச் சிறைக்கம்பியுள் நீட்டுகிருள்...

அந்த நளினமான சுந்தரக் கரத்தைப்பற்றிய நாராயணத்தேவன் சுகானந்தமான முத்தத்தைப் பதிக்கிருன்...

'விசு' க் கென்ற தொடுணர்வு ஸ்பரிசம்...

வலக்கரத்து வழியாக ஏறி நெஞ்சுள் நுழைந்து பவழ வாயில் எட்டிப்பார்க்க...

கங்கை நாச்சி கண்கள் செருகி, மேனிசிலிர்க்க அனுபவிக்கிருள்...

இதைச் சிறைக்கம்பி வழியாக உதடுகளைக் குவித்துக் காட்டி அனுபவித்துத் தீர்த்து இருக்கலாமே...

நாகரிகம் தலை நீட்டுகிறது.

அருமைக்காதலனிடம் உத்தரவு பெற்று, அடுத்த அறையிலிருக்கும் வேலுதுரையைக் காணச் செல்கிருள் கங்கை நாச்சி.

வேலுதுரை, கங்கை நாச்சியை எதிர்பார்த்தே காத்திருந்தான்.

கங்கைநாச்சியைக் கண்டதும் ''வணக்கம்'' என்ருன்.

என்ன பேசுவாள் கங்கைநாச்சி?

அவளது கண்கள் பனிக்கின்றன.

''நீங்கள் பேசிக் கொண்டிருந்தது எனக்கும் கேட்டுக் கொண்டுதானிருந்தது. விடிவதற்குள் குத்துவாட்களை ஏற்பாடு செய்யுங்கள்.''

கங்கை நாச்சி அவனை நோக்கி கரம் கூப்புகிருள்.

''ஐயோ இளவரசி! என்ன காரியம் செய்கிறீர்கள்?''

''நான் கூப்பியது வேலுதுரைக்கல்ல! ராமாயண காலத்து லட்சுமணனுக்கு!''

''நீங்கள் விரும்பினால் என்னை லட்சுமணா என்றே அழைக்கலாம்.''

'மைத்துனரே என்று அழைப்பேன்!''

''மகிழ்ச்சி அண்ணி!''

அவள் சிரித்துக் கொள்கிறாள்.

அவனும் சிரித்து மகிழ்கிறான்.

கங்கைநாச்சி விடைபெற்றுக் கொண்டு காதலனை ஒரு முறை கண்ணாரக் கவனித்துப் பின்னர் அந்த வரிசையைத் தாண்டித் திரும்பும் வாசல் வழியாக நடந்து வருகிறாள். அந்த வாசலையும் கடந்து சின்னம்மாள் பானுமதி நின்றிருந்த இடத்துக்கு வந்து கவனிக்கிறாள். இங்கேதானே சின்னம்மாள் நின்று என்னை அனுப்பி வைத்தார்கள்? எங்கே சென்றார்கள்?

சுற்று முற்றும் கவனிக்கிறாள்.

சின்னம்மாள் பானுமதியையும் காணவில்லை. வழிகாட்டிய சேவகனையும் காணவில்லையே!

ஒரு மூலையாக எரிந்து கொண்டிருந்த அந்த ஒற்றைத் தீப்பந்தம் எண்ணெய் இல்லாமல் அழுது வடிந்தது. ஏதோ இளவரசி வருகிறாள் என்பதற்காக அந்த நேரத்தில் அதற்கு அப்படி ஒரு எரியோகம். இனிமேல் அதனை யார் கவனிக்கப் போகிறார்கள்?

தன்னை யாரும் கவனிப்பதற்கில்லையே என்கிற பயத்துடன் நடுநடுங்கிப் போனாள் கங்கைநாச்சி.

தீப்பந்தத்தின் ஒளி குறையக் குறைய அந்த கொஞ்ச நஞ்ச வெளிச்சமும் அடங்கி இருள் சூழத் தொடங்குகிறது.

கங்கைநாச்சிக்கு மேலும் பயம் உச்சியில் அமர்ந்து மருட்டுகிறது.

பானுமதி சின்னம்மாள் எங்கே போனுர்கள் என்பது தான் புரியாத மர்மமாக இருந்தது.

ஒரு வேளை அப்பகாருக்குத் தெரிந்து சிறை நோக்கி எவரையேனும் அனுப்பி வைத்திருப்பாரா? அல்லது தாமே வந்து எங்கேனும் மறைந்து நின்று கொண்டு பயமுறுத்து கிருரா?

சத்தம் போட்டு யாரையும் அழைக்க முடியாது. இந்தச் சேவகன் காத்திருக்க வேண்டாமா?

திகைத்து நின்ற கங்கை நாச்சியாரின் பின்புறமாக இருந்து யாரே தோளைத் தொட, அரண்டு மருண்டு போன கங்கைநாச்சி அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தாள்.

8

அரண்மனையின் அந்தப்புரம் சென்றும் கங்கை நாச்சியின் அதிர்ச்சி நீங்கவில்லை.

சே! பெரியம்மா சுத்தமோசம். இப்படியா பின்புறமாக வந்து குரல் கொடுக்காமல் தோளில் கை வைப்பார்கள்?

ஆமாம்; எதற்காக பானுமதி சின்னம்மாவை முதலில் அனுப்பிவைத்து, முடிவில் பெரியம்மாவே வந்து அழைத்துச் செல்ல வேண்டும்?

வழியில் கேட்க வாய்திறந்த போது 'உஸ்' என்று உதடுகளின் மீது விரல் வைத்து ஏதும் பேசவேண்டாம் என்பது போல சமிக்ஞையால் எச்சரிக்க வேண்டும்?

அந்தப் புரத்துக்கு வந்ததும் ஏதும் பேசாமல், இன்னும் ஒரு நாழிகைப் போதில்வந்து பேசுகிறேன் என்று மிகுந்த எச்

சரிக்கையுடன் மெல்லச் சொல்லி விட்டுச் சென்றிருக்கிறார்களே!

என்ன நடந்திருக்கும்?

அப்பாவுக்குத் தெரிந்து விட்டதா?

ஒன்றும் புரியாது விழித்துக் கொண்டிருந்த போது பெரிய நாயக்க மாதேவி ருத்ராபதியம்மாள் அறையினுள் பிரவேசித்தாள்.

"கங்கை நாச்சி! பெரிதாகப் பயந்து விட்டாய்; இல்லையா?"

கங்கை நாச்சியால் வாய் திறந்து பதில் சொல்ல முடியவில்லை. ஆமாம் என்பது போல தலையசைத்தாள். அவ்விதம் அப்பாவித்தனமாக அவள் தலையசைக்கிற போது அவளது அழகிய விழிகள் பரிதாபமாக இருந்தன.

மெல்லச் சிரித்துக் கொண்டே மகளின் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்ட ருத்திராபதியம்மை, "நீ பயந்தது நியாயமே! நான் கொஞ்சம் அயர்ந்திருந்தாலும் நீ சிறை நாடிச் சென்ற செய்தி உனது அப்பாவுக்கு எட்டியிருக்கும். நாயக்க ஒற்றர்கள் இப்போது கண்களில் விளக்கெண்ணெயை ஊற்றிக் கொண்டு நடமாடுகிறார்கள். நான் கூடுமான வரையில்—உனது அப்பாவை பேச்சால் தாலாட்டிக் கொண்டிருந்தேன். அப்போதுதான் ஒற்றன் ஒருவன் ஒரு முக்கிய செய்திக்காக வாசலில் காத்திருக்கிறான் என்றறிந்து நானே செய்தி கேட்டு வருவதாக வெளியேறினேன். அந்த ஒற்றன் நான் எதிர்பார்த்தபடி நீ சிறை நோக்கிச் செல்லக் கண்டதாகச் சொன்னான். எது நிகழக்கூடாது என்று எண்ணினேனோ அது நிகழ்ந்து விட்டது. நல்ல வேளையாக அந்த ஒற்றனுக்கு உனது சிற்றன்னை பானுமதியைத் தெரியாது. எனவே, அவன் உன்னுடன் ஒரு புதிய பெண்ணும் செல்வதாகக் கூறினான்." என்று கூறி முடித்துச் சில விநாடிகள் வரை மூச்சை இழுத்து விட்டாள்.

மேலும் செய்தியைப் பூரணமாக அறியும் பாவனையுடன், தனது தோகை இமைகளைப் படபடக்கச் செய்து கவனிக்கிறாள் கங்கை நாச்சி.

பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மை மீண்டும் பேச்சைத் தொடர்ந்தாள்.

"அந்த நேரம் பார்த்து எனக்கு ஓர் ஊகம் தோன்ற அதைக் கூறிச் சமாளித்து ஒற்றனையனுப்பி வைத்தேன்."

"என்ன கூறினீர்கள் பெரியம்மா?"

"வேண்டாம்; அது ரகசியமாகவே இருக்கட்டும். அந்த ஒற்றனுக்கு நான் எச்சரித்து அனுப்பிய ரகசியம் என்னோடே இருந்து விட்டுப் போகட்டும். அது உன் காதுகளில் விழுந்து, நீ தவறி வேறு யார் காதுகளிலாவது விழவைப்பாயானால் அது அவமானத்துக்குரியதாகிப் போய் விடும்."

'என்னிடம் கூடவா மறைக்கிறீர்கள் பெரியம்மா!' என்பது மாதிரி நோக்குகிறாள் கங்கைநாச்சி.

ருத்திராபதியம்மாளும், "வேண்டாம் என்றால் விட்டு விட வேண்டும்; உத்தேசமாகச் சொல்லுகிறேன் புரிந்து கொள். உன் அப்பாவுக்கு என்னையும் உன் தாயையும் நீக்கி எத்தனை வைப்பு மனைவிகள்?"

"நூற்று தொண்ணூற்றெட்டு"

"அவர்களில்...வேண்டாம் கங்கை நாச்சி! விட்டுவிடு."

"என்மீது உயிரையே வைத்திருக்கும் எனது பெரியம்மாவை நான் காட்டிக் கொடுத்து விடுவேனோ?"

"சரி, சரி; விளக்கமாகவே சொல்லுகிறேன். இந்த நூற்றித் தொண்ணூற்றெட்டில் ஒன்று நமது சிறையதிகாரிடம் தொடர்பிருப்பதாகக் கேள்விப்பட்டு இளவரசியும் அந்த நூற்றித் தொண்ணூற்றெட்டில் இன்னொன்றுமாக வேவு பார்க்கச் செல்கிறார்கள் என்று கூறினேன். ஒற்றன் நடுங்கிப் போனான். நான் அவனை எச்சரித்தேன். இது அந்தபுரவிஷயம்

எந்தக் காதுகளுக்கும் எட்டக் கூடாது. தவறி எவராவது இது குறித்துப் பேசினர்கள் என்று கேள்விப்பட்டால், அடுத்து வேறு குற்றத்தை உன் மீதே சாட்டிச் சிரச்சேதம் செய்ய முனைந்தாலும் முனைவேன் என்றதும், அந்த ஒற்றன் எனது கால்களைப் பற்றிக் கொண்டான். அதன் பிறகுதான் நான் உடனடியாக ஒரு தோழிப் பெண்ணையனுப்பி பானு மதியை அழைத்து வருமாறு செய்து இங்கே காவல் நிறுத்தி நானே சிறைக்கூடம் நாடிவந்தேன். நாளை ஒருகால் அப்பா வின் காதுகளில் இச்செய்தி எட்டினலும் நானே சிறைக் கூடம் நாடி வந்ததால் சந்தேகிக்க இடமே இருக்காது அல்லவா? அதன் பிறகு அதற்கான ஒருகதையை ஜோடிக்க எந்நேரம் பிடிக்கும்?''

தனது பெரியம்மாளைச் சேர்த்து அணைத்துக் கொண் டாள் கங்கை நாச்சி. ''பெரியம்மா என்றால் பெரியம்மா தான்!''

''அது சரி டீ, பெரியம்மா! நீ போய் என்னென்ன பேசினய்! ஒன்று விடாமல் சொல்ல வேண்டும். வித்தை கள்ளி மாதிரி ஏதேனும் மறைத்தாய் ... அப்புறம் நான் பெரியம்மாளாக இருக்க மாட்டேன்.''

''வேறு என்னவாக இருப்பீர்கள்?''

''பெரிய ராட்சஸியாய் விடுவேன்!''

''நிச்சயமாக நீங்கள் அப்படியாக மாட்டீர்கள். அது எனக்குத் தெரியும்?''

''அது எப்படித் தெரியும்?''

''உங்கள் வயிற்றில் பிறந்தவர் அண்ணன் முத்து வீரப்பன். அப்பாவுக்குப் பிறகு அரியணையில் அமரவேண்டும் என்று கனவுகளை விரிவுபடுத்திக் கொண்டு வருபவர் சிற்றப்பா குமாரமுத்து. ஒரு நாள் அப்பா இது குறித்துப் பேசிய போது, தனது மகன் என்றும் பாராமல், சிற்றப்பா தான் அரச பீடத்தில் அமர வேண்டும் என்று பெருந்தன்மை

யுடன் ஒப்புக் கொண்டீர்கள்! அப்பேர்பட்டவரா ராட்சஸி யாக மாறப் போகிறீர்கள்?''

''நியாயத்துக்கு நான் பெரியநாயக்க மாதேவி! அநியா யத்துக்கு நான் ரௌத்திராகாரமிக்க ருத்திரபதி! உனது சிற்றப்பா விஷயத்தில் நியாயமிருந்தது, ஒப்புக் கொண் டேன். எத்தனை வெற்றிகளைத் தேடிக் குவித்தார் அவர்!''

பெரியம்மாளின் நியாய உணர்வைக் கண்டு மெய் சிலிர்த்துப் போனாள் கங்கை நாச்சி.

ஒரு கணம் பெரியம்மாளை ஏறெடுத்து நோக்குகிறாள் கங்கைநாச்சி. பிறகு நடந்ததை வரிசைகட்டிப் பிட்டுவைக் கிறாள். அவ்வாறு விளக்கியதில் இரண்டு விஷயங்களைத் துப்புரவாக மறைத்து விட்டாள். இரண்டும் சொல்லத்தக்க செய்தியல்ல.

ஒன்று: நாராயணத் தேவன், தப்பியோடிச் செல்கிற போது தானும் உடன் வருவதாகக் கூறிய உறுதிமொழி.

இரண்டு: புறப்படுகிறபோது கையில் முத்தமிட்ட சம்பவம்.

பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மை மேலும் கிண்டினாள்: ''அவ்வளவேதான் நடந்ததா?''

''அவர் சிறைக்குள்ளிருக்கிறார். நான் வெளியில் இருக் கிறேன். வேறு என்ன நடந்திருக்க முடியும் பெரியம்மா!''

கங்கைநாச்சி எந்த வித தவறான எண்ணமுடனும் இத னைக் கூறிவிட்டாலும், அதனுள் அடங்கியிருக்கும் அர்த்தம் புரியாமல் சொன்ன பதில் அவளை இன்னமும் குழந்தை யாகவே காட்டி நிறுத்தியது.

இந்தக் குழந்தையை பாதுகாத்து அதன் ஆசையை நிறைவேற்றுவ து தனது கடமையாக எண்ணி பெருமூச்சு விடுகிறாள் பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மாள்.

சிறையில் நடந்த அனைத்துமே பெரியநாயக்க மாதேவி ருத்திராபதியம்மை அறிவாள். அவளைப் பொறுத்த வரை

தீப்பந்தத்துக்குள்ளும் ஓர் ஒற்றன் இருப்பானே! இல்லையென்றால் சிறைக்கூடத்தை அவ்வளவுக்கு துப்புரவாக்கி சந்திக்க ஏற்பாடு செய்திருக்க முடியுமா என்ன?

ஆனால் மகள் கங்கைநாச்சி ஏனிதை மறைத்துச் சொல்ல வேண்டும்?

கையில் முத்தமிட்ட செய்தி நாணத்துக் குரியது. உடன் புறப்பட்டு ஓடி விடுகிற செய்தி ஓர் அசம்பா விதமானது. என்பது புரியாமல் போனதென்ன?

ஆயினும் இது குறித்து மேலும் தூண்டிச் செய்தியை அறிந்து கொள்ள ருத்திராபதியம்மாள் விரும்பவில்லை.

''நல்லது, கங்கைநாச்சி! இரவு வெகு நேரமாய் விட்டது நீ தூங்கு. காலையில் பேசிக்கொள்வோம். நாராயணத் தேவன் கேட்ட குத்துவாள்களுக்காக நீ பிரயாசை எடுத்துச் கொள்ளவேண்டாம். நானே அதற்கு ஏற்பாடு செய்வேன். தப்பித்துச் சென்று விடட்டும் பிறகு, உனது காதலை நான் முழுமை பெறச் செய்ய முயற்சிப்பேன்!''

பெரிய நாயக்கமாதேவி தனது மகளைத் தட்டி ஆறுதல் கூறியவாறு வெளியில் புறப்பட்டுச் சென்றாள்.

'எங்கே தூக்கம் வரப்போகிறது?' என்று மனத்துள் முனகியவாறு படுக்கையில் சாய்ந்தாள் கங்கைநாச்சி.

மார்பகங்கள் சற்றே விம்மியிறங்கிப் பெருமூச்சு விடுகின்றன.

ஓ... இன்றைக்கு ஐந்தாம் நாள்...

நள்ளிரவில்...

நான் அவருடன் பயணமாகிறேன்...

ஆமாம்; பெரியம்மாவிடம் இது குறித்து மறைத்து விட்டோமே!...

விஷயம் தெரியவருகிற போது என்ன நினைத்துக் கொள்வார்கள்?

'வித்தை கள்ளி' என்று பெரியம்மாள் சொன்னது போல இந்த வித்தைகள்ளிக்கா உதவினோம்?' என்று நினைத்து விட்டாள்...

பின்னாளில் ஏதேனும் தாறுமாறாக நடைபெற்று விட்டால் துப்புரவாக உதவ மறுத்து விடுவார்களே...

நடந்த அனைத்தும் பெரியம்மாளுக்குத் தெரியாது என்பது என்ன நிச்சயம்?

வளையல்களின் இடுக்குகளிலும் ஒற்றர்களை வைத்துக் கொண்டு அப்பாவைக் கட்டிக் காத்து வருகிறவர்களாயிற்றே! பெரியம்மாவின் ராஜ தந்திரச் செயலால் தானே மைசூரானையும், திருவிதாங்கூரானையும் அடக்கி ஒடுக்கி வைத்திருக்க முடிகிறது?

தளவாய் ராமப்பய்யர் என்னதான் மாவீரரானாலும், அரசாங்கத்தை நடத்த ஆலோசனை வழங்குவது பெரியம்மா தானே!

நாம் தவறு செய்து விட்டோமா?

முத்தச் செய்தி மறைத்ததில் குற்றமில்லை.

இந்தப்பித்தச் செய்தியை மறைத்து விட்டதன் மூலம் ஏதேனும் உற்பாதங்கள் நிகழ்ந்து விட்டால்?...

எதற்காக மறைக்க வேண்டும்?

பெரியம்மாள் வேண்டாம் என்றா சொல்லி விடப் போகிறார்கள்?

நாளைய காலையில் எப்படியும் பெரியம்மாள் காதுகளில் இந்தச் செய்தியைப் போட்டு வைப்பதோடு, மறைத்ததற்காக மன்னிப்பும் கேட்க வேண்டும்.

மனத்தில் இவ்வாறான போராட்டங்களுடன் ஒருக்களித்துப் படுக்கிறாள் கங்கைநாச்சி. அப்போது மேலாடை விலகி மஞ்சத்தில் தவழுகிறது.

அவளது போதைமிக்க அழகு பாகங்கள், 'அடீ, கங்கை நாச்சி! காதலித்தாலும் சரியான வீரமாப் புருஷனைத்தான் காதலித்தாய்!' என்று விம்மி புடைத்துக் கும்மியடிப்பன போன்று குதூகலமாகக் காணப்பட்டன.

பெரிய நாயக்கமாதேவி ருத்திராபதி யம்மாள் நேராகத் தனது அறை நாடிச் சென்று ஓய்வு கொள்ளாமல், அந்தப்புரத்திருக்குப் பின்னுலிருக்கும் நந்தவனம் நாடிச் செல்வானேன்?

நந்தவனத்திலிருந்த ஓர் மறைவான இடம் நாடிச் செல்ல, அதுவரை காத்திருந்த நம்பிக்கைக்குப் பாத்திர மான ஒற்றன் மன்ஞருசாமி எதிர்பட்டு வணங்கி நிற்கிருன்.

''மன்ஞரு! நீ போய் உடனடியாக நமது பானுமதி தேவியாரை அழைத்து வருகிருய்! உனக்காகத் தோழிப் பெண் சுலோசஞ அந்தப்புர வாயிலில் காத்துக்கொண்டிருப் பாள். அவளிடம் செய்தியை அறிவித்து விட்டு நேரே நம் சிறையதிகாரியைப் பார்க்கிருய். அவரிடம் நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் சிறைக்கூடம் நாடி வருவதாகச் சொல். நீயும் அங்கேயே இரு. ஜாக்கிரதை. இரண்டு கூரிய குத்து வாட்களை ஏற்பாடு செய்துவை! எல்லாமே பரமரகசியமாக நடைபெற வேண்டும். இது கத்தி மேல் நடக்கிற காரியம் கொஞ்சம் தவறினுலும் கால் ஊனமாகிவிடும்'' என்று இனிய தெலுங்கில் கூற, மன்ஞருசாமியும் வணங்கி விடைப் பெற்று இருளோடு இருளாக மறைந்தான்.

இப்படியான செயலில் ஏன்தான் ஈடுபட்டோமோ என்றும் தன்னுள் நொந்து கொண்டாள் ருத்திரா பதியம்மாள்.

பாசத்தைக் கொட்டிச் சிறு வயது முதல் கங்கை நாச்சியாரை வளர்த்துவிட்ட தோஷம் இது! ஏதோ காதல் கொண்டாள் என்றளவோடு இந்தக் காதலை ஆதரிக்கப் போய், அது வேற்றுருவில் விசுவரூபம் எடுக்க, இவ்வாறு நந்த

வன இருட்டில் பதுங்கும்படியாகி விட்டதே என்று நொந்து கொண்டு பயனில்லே. முடிவு செய்துவிட்ட பிறகு அது எவ்வளவு மூர்க்கத்தனமாகத் தன்னே பாதித்தாலும் நிதான மாக கரை சேர்ப்பது ஒரு கடமையே போல எண்ணி, அது குறித்து மெல்லச் சமாதானமும் அடைந்து கொள்கிருள்.

ஓ... அதோ பானு வருகிருள்.

''பானு! இப்படி வா! நான் இங்கு இருக்கிறேன்!'' என்று குரல் கொடுத்தாள் பெரிய நாயக்க மாதேவி.

பெரிய தேவியின் குரல் கேட்டு மிகவும் பணிவுடன் அங்கு வந்து நிற்கிருள். பானுமதி.

''என்னக்கா, இந்த நேரத்தில் இப்படி?''

''அதுதான் விதி! தெரியாத்தனமாக கங்கை நாச்சியின் காதலே ஆதரிக்கப் போய், இப்படி விதியாக வந்து முடிந்திருக்கிறது! போகட்டும். மன்னர் என்ன செய்கிருர்?''

''சின்ன தேவியின் அறையில் தூங்குகிருர்.''

''நீ ஒருகாரியம் செய்ய வேண்டும். மன்னரை அறையை விட்டு வெளிவராமல் பார்த்துக் கொள். அப்படி ஏதேனும் செய்தி கேள்விப்பட்டு வெளியில் வந்தால், உனது மயக்கு விழிகளுக்கு அதிகப்படியாக வேலே தர மறந்து விடாதே. எவரேனும் தொலியம்மா அறையில் நுழைய முற்பட்டால், அவர்களேத் தடுத்து நிறுத்தி நான் வருகிறவரைக்கும் உனது பாது காவலில் வைத்திருப்பது தான் சாமர்த்தியம். மீறி யாராவது அடம் பிடித்தால் எனது கடுமையான உத்தரவு என்று சொல். புரிகிறதா?

''இது நமக்குத் தேவையாக்கா?''

''தேவை, தேவை யில்லே என்பது குறித்து ஆலோசிக்க இது நேரமில்லே. என்ன செய்வது? கங்கை நாச்சிக்காக எனது உயிர் போவதானுலும் நான் எதிலும் ஈடுபட்டு விடு

வேன். ஏன் மதுரையையே சீதனமாக சேதுபதி கேட்டாலும் கொடுத்து விடுவேன்.''

மலைத்துச் சிலைத்துப் போனாள் பானுமதி.

ஆ! பெற்ற வயிற்றுக்குக் கூட இந்த அக்கறையில்லை! சின்னதேவி தொலியம்மாள் மூர்க்க சுபாவத்துக்கும் பெரிய தேவியின் தீர்க்க சுபாவத்துக்கும் எத்தனை வித்தியாசம்!

''என்ன யோசிக்கிறாய்!''

''ஒன்றுமில்லையக்கா! நினைத்தால் பயமாக இருக்கிறது.''

''கோழைபோல மன்னர் ஏதாவது மருட்டியோ, மயக்கியோ, கேட்டால் உளறிக் கொட்டி விடப் போகிறாய்!''

''உயிரே போனாலும் கங்கை நாச்சிக்காக நீங்கள் எடுத்துக் கொண்ட இந்தப் பிரயாசைக்காக உறுதுணையாக இருப்பேன்.''

''சரி நேரமாகிறது புறப்படு.''

''நீங்கள்?''

''நான் செய்யப் போகிற காரியத்துக்காகத் தான் மன்னருக்குக் காவல் புரிய உன்னையனுப்புவது?''

''இந்த இரவிலா?''

''இரவில் படுக்கையறையில் தான் காரியம் இருக்கிறதென்பதில்லை. பரந்த உலகில் எத்தனையோ பதவிசான காரியங்களும் உண்டு, பதற்றமான காரியங்களும் உண்டு. நான் சிறைக் கூடம் நோக்கிச் செல்கிறேன்.''

''சிறைக் கூடம்?''

ஆமாம்; நாராயணத் தேவனை விடுவிக்க மார்க்கம் தேடச் செல்லுகிறேன். ராமப்பய்யர் இரட்டைப் பூட்டுப் போட்டு ஒரு பூட்டுசாவியைத் தன்னிடம் வைத்துக் கொண்டிருப்பதால் வேறு மார்க்கம் தேடச் செல்கிறேன். நீ ஜாக்கிரதையாக நான் சொன்னபடி நடந்து கொள்ளவேண்டும்.''

மனத்தைப் பிசைந்து கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்ருள் பானுமதி.

பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மாளோ, மனத்தைத் தேற்றிக் கொண்டு சிறைக் கூடம் நோக்கி நடந்தாள்.

9

மதுரையரசின் பெரிய மகாராணியார் மீண்டும் வருவானேன் என்கிற குழப்பமான கேள்விக்குறி சிறையதிகாரியின் நெஞ்சில் கொக்கியாய் எழுந்து அரற்றியது.

அன்றைக்கு யார் முகத்தில் விழித்தோமோ? இரவு தூங்கவே முடியவில்லை என்று உள்ளுக்குள் சபித்துக் கொண்டார். ஏதோ இரகசியம் இதன் மூலம் தெரிந்தாலும், அதனுடைய விஸ்வரூபம் பயங்கரமாகத் தோற்றம் கண்டது.

நாம் இதனை மீறி ஏதேனும் நடந்து கொள்வோமேயானுல் பெரிய மகாராணியின் கோபம் தனக்குச் சமாதி எழுப்பி விடும் என்பதையும் சிறையதிகாரி நன்கு உணர்ந்து வைத்திருந்தார்.

பெரிய இடத்து விவகாரம். பல விஷயங்களில் நாம் ஊமையாக நடித்து விட வேண்டியது தான்...

சற்றைக்கெல்லாம் சிறைக்கூடத்தில் ஒரு பரபரப்பு.

பெரிய மகாராணி ருத்திராபதியம்மையார். வந்திருக்கிருர் என்கிற செய்தி ரகசியமாகப் பரவுகிறது.

சிறைக் கோட்டத்து அதிகாரி எழுந்து சென்று வரவேற்கிருர்...

சிறைக்கோட்டத்துள் நுழைந்த பெரிய நாயக்கமாதேவி ருத்திராபதியம்மாள், தலையில் எப்போதும் இருக்கும் முக்காட்டைச் சற்று அதிகமாகவே போர்த்தியிருந்தாள்.

அவளது ராஜதந்திரமிக்க கண்கள் சுற்றிலும் நோக்கு கின்றன.

ஒருவரையும் காணோம். எல்லாம் சொல்லி வைத்தாற் போல நடைபெற்றிருக்கின்றன.

ஒரு பக்கமாக தனது நம்பிக்கைக்குரிய கையாளான மன்னருசாமி நின்று வணக்கம் செய்கிறான்...

தொலைவில் பயபக்தியுடன் நின்றிருந்த சிறைக் கோட்டத்து அதிகாரியை நோக்கிய பெரிய நாயக்கமாதேவி ருத்திராபதியம்மாள், "நான் உள்ளே சென்று திரும்புகிற வரையில் காவல் மிகக் கடுமையாக இருக்க வேண்டும். தவறி மன்னர் வந்து விட்டால், சிறைக் கோட்டத்து நமது பி புற வாயிலை தயாராகத் திறந்து வைத்துவிட்டு எனக்கு செய்தியறிவிக்க வேண்டும். மற்றொன்று, நரசிம்ம நாய கரே! இந்த ரகசியம், உங்களுக்கு மட்டுமே தெரியும். இ எந்த விதத்திலும் உங்கள் மனைவியின் செவிக்குள் கூட நுழையக் கூடாது. அவ்வாறு நுழையுமானால், மூக்கறுப்பது எப்படி நாயக்க மக்களுக்கு உரிய நாகரிகமோ, அவ்வாறே நாக்கறுப்பும் நடந்து முடிந்துவிடும். கவனமாக இருக்க வேண்டும்." என்றாள்.

அப்போது அவள் குரலில் ஒரு மகாராணிக்கு இருக்க வேண்டிய கம்பீரம் தெளிவாக இருந்தது.

அடுத்துத் தொலைவில் நின்றிருந்த மன்னரு சாமியை நோக்கிச் சமிக்ஞை செய்ய, அவனும் அதைப் புரிந்து கொண்டு, மகாராணி உள்ளே நுழைந்த போது பின் தொடர்ந்தான்.

தனக்கு இனி விமோசனமில்லை என்று அழுது வடிந்த அந்த ஒற்றைத் தீப்பந்தம், இப்போது கம்பீரமாக எரிந்து

கொண்டிருந்தது. சிலருக்குச் சிலசமயம் யோகம் அடிப்பது போல அதற்கு அந்த இரவு ஒளியோகம்!

முன் கூட்டியே மன்னுருசாமியின் மூலம் பெரிய மகாராணியார் வருகிற செய்தி சிறைக் கோட்டத்து அதிகாரி நரசிம்ம நாயக்கருக்கு தெரிந்திருந்ததால், மகாராணியார் வருவது சிறையிலிருக்கும் நாராயணத் தேவனை காணத் தான் என்பதை யூகத்தால் அறிந்து கொண்டு அவனிடம் இழையோட்டமாகச் செல்லி வைத்திருந்தார்.

''அநேகமாக பெரியமகாராணியார் உங்களைஇப்போது காண வரலாம்.''

இச்செய்தி கேட்ட கணமுதல் நாராயணத்தேவன் பர பரத்துப் போய் விட்டான்.

ஏன் நாயக்கமாதேவி தன்னைக் காண வரவேண்டும்? ரு வேளை கங்கை நாச்சியார் விஷயமாகப் பேச வருகிறுர் ளா? பின் என்ன பேசப் போகிறுர்கள் சிறையிலிருந்து டுவிக்கவா? ஒரு பூட்டுசாவிதான் அந்த ராட்சஸ பிரா ணன் ராமப்பய்யனிடம் இருக்கிறதே!
க

இந்த மதுரை நாயக்கக் குடும்பம் தான் ராமப்பய்ய னுக்கு எப்படி யெல்லாம் பயப் படுகிறது? எவ்வாறெல்லாம் அவனைத் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு ஆடுகிறது? சே! என்னதான் வெற்றிகளைக் குவித்தாலும் இப்படியா?

எனது தந்தையார் வன்னியத்தேவர் கூட சேது நாட்டுக்கு எத்தனையோ வெற்றிகளைக் குவித்திருக்கிறுர்! ஆயினும் பெரிய அம்மாளும் சேதுபதி மகாராஜாவுமான சடையத் தேவருடைய கண்ணசைவுதானே சேது நாட்டின் சட்டம்!

இங்கே?

திருமலை நாயக்கர்தான் என்ன செய்வார்?

எல்லாருமே உடன் பிறந்து கொல்லும் வியாதிகள். எனவே இந்த மாவீரத்தளபதி ராமப்பய்யனை நம்பி இருக்

கிறார். இல்லையென்றால் மதுரையை இந்நேரம் மைசூர்க் காரனோ, திருவிதாங்கூர்காரனோ விழுங்கி ஏப்பம்விட்டிருக்க மாட்டார்களா?

கால் கொலுசுவின் மெல்லிய ஓசை கட்டியமாகக் கேட்கிறது.

ஓ...மகாராணியார் வருகிறார்கள்.

தன்னைச் சரிபார்த்துக் கொண்டு எழுந்து நின்றிருந்தான் நாராயணத்தேவன்.

சிறைக்கம்பிகளுக்கு வெளியே மகாராணியார் ருத்திரா பதியம்மாள் நிற்கிறார்கள். உடன் யாரும் வரவில்லை.

''வணக்கம், மகாராணி! உங்கள் தரிசனத்தால் சேது குலம் பாக்கியமடைகிறது.''

பெரிய நாயக்கமாதேவி, அரும்பிய புன்னகையை அரும் பாடுபட்டு அடக்கிக் கொள்கிறாள்.

இந்தத் தமிழர்களே பேச்சில் வல்லவர்கள். சமயத்தில் கணக்குகளைச் சரியாகப் போடாமல் கோட்டை விட்டு விடுவதிலும் கெட்டிக் காரர்கள் என்று தன்னுள் நினைத்துப் பார்த்துக் கொள்கிறாள் பெரிய நாயக்கமாதேவி ருத்திரா பதியம்மாள்.

''நாராயணத்தேவா! ஒரு முக்கியப் பிரச்னை குறித்துத் தான் நானே வந்திருக்கிறேன். நீ சிறையிலிருப்பது எவ்வள வுக்கு சேது நாட்டுக்கு இழுக்கோ, அவ்வளவுக்கு நான் இந்த அர்த்தராத்திரியில் உன்னைத் தேடி இந்தச் சிறைக் கோட்டத்துள் நுழைந்தது இழுக்கு என்பதை நீயறியாம லிருக்க முடியாது.''

''அறிவேன் தாயே அறிவேன்.''

''தாயேவாவது? நான் உனக்கு மாமியாராக வரப் போகிறவள்!''

அயர்ந்து போனான் நாராயணத்தேவன்.

மாமியார் ஆயினும் அவன் தமிழ் வல்லான். வேறு விதமாகப் பதில் சொன்னான்:

"நீங்கள் எனது மாமியாராகப் போவது நான் செய்த பாக்கியம். ஆனால் நாட்டின் மகாராணி, அனைவருக்குமே தாய் மாதிரி. உங்கள் மருமகனுக்கும் நீங்கள் இந்த விஷயத்தில் தாய் மாதிரி தானே?"

'சபாஷ்!' என்று மனத்துள் பாராட்டிக் கொள்கிறாள் ருத்திராபதியம்மாள்.

"நாராயணத்தேவா! முதலாவதாக நான் கூறுவது... நீ சிறையிலிருக்கிறாய் என்கிற செய்தி முக்கியமான சிலரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. எனவே இக்கசப்பான செய்தி சேது நாட்டுக்கு எட்டியிருக்கக் காரணமில்லை. ஆனபடியால் நீ உங்கள் நாட்டுக்குச் சென்றாலும் இக்கசப்பான செய்தியைச் சொல்லக் கூடாது. உனது நண்பனுக்கும் எச்சரித்துவை! ஏனென்றால், நீ கங்கைநாச்சியைக் கசப்பின்றி கைபிடிக்க வேண்டுமானால் எனது இம்மாதிரியான நிபந்தனைகளுக்கு உட்பட்டே தீரவேண்டும்! இந்தக் காதல் வழக்கமாகக் கானல் நீராக வேண்டுமானால் என் பேச்சை நீ கேட்க வேண்டும் என்கிற அவசியமில்லை."

"ஐயய்யோ! எங்கள் காதலுக்கு இருக்கிற ஒரே ஆசீர்வாதம் நீங்கள். உங்கள் சொல்லின் எந்த ஒரு வார்த்தையையும் மீற மாட்டேன்."

ஓரளவு பெரிய மாதேவிக்கு நிறைவு கண்டது. மெல்லிய பெருமூச்சும் பறிந்தது.

"நான் ஒன்றைக் கேட்பேன். நீ மறைக்காமல் நடந்தது நடந்தவாறு சொல்ல வேண்டும். முடியுமா?"

"கேளுங்கள் மகாராணி!"

ருத்திராபதியம்மாள் சிரித்துக் கொள்கிறாள்.

அந்தக் சிரிப்பின் அர்த்தம் நாராயணத் தேவனுக்குப் புரிகிறது.

அவன் நகைச் சுவையாகச் சிரித்துக் கொண்டே சொன்ஞன்:

“நீங்கள் எனது மாமியாராகிறபோது நான் மகா ராணியரே என்றழைக்க மாட்டேன். அதுவரை...”

ருத்ராபதியம்மாளும் கையைக் காட்டி, “போதும்! அப்படியே அழைக்கலாம்! இப்போது சற்றுமுன் கங்கை நாச்சி வந்தாளே! என்ன பேசிஞள்? நீ என்ன பேசிஞய்? என்ன நடந்தது? என்பனவற்றைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்” என்ருள்.

சில கணங்கள் வரை விழித்த நாராயணத் தேவன், “நீங்கள் சந்தேகிக்கிற மாதிரி ஏதும் பேசவில்லை, ஏதும் நடந்து விடவில்லை மகாராணி!” என்ருன்.

“சந்தேகமா? அதுவும் உன்மீதா? என் மகளையாவது சந்தேகிப்பேனேயல்லாது உன்னைச் சத்தியமாகச் சந்தேகிக்க மாட்டேன். நடந்ததைச் சொல்!”

ஒரு கணம் தயங்கிப் பின்னர் விவரமாக அனைத்தையும் சொன்ஞன். ஏன்? கரத்தில் முத்தமிட்டதையும் கூச்ச நாச்ச மின்றி ஒரு கவிதைப் பாணியில் சொல்லி முடித்தான்.

கேட்கக் கேட்க ருத்திராபதியம்மைக்கு மகிழ்ச்சியாகவும் அதே நேரத்தில் நம்பிக்கையாகவும் இருந்தது.

ஆ! தனது மகள் கங்கைநாச்சி எவற்றையெல்லாம் மூடி மலறத்தாளோ அவற்றையெல்லாம் கொஞ்சமும் மறைவின்றி கூறிவிட்டானே! இவன் நம்பிக்கைக்குரியவனே! கங்கை நாச்சி இவனை நம்பியதில் தவறில்லை. இந்தக் காதலை ஈடேற்றியே தீர வேண்டும்.

மனத்துள் வலிவான சங்கல்பம்.

“நல்லது நாராயணத்தேவா! நீ தப்பிச் செல்வதில் எனக்கு எந்த விதமான ஆட்சேபணையுமில்லை. நானும்

அதற்கு உதவ முன் வந்திருக்கின்றேன். என்ன செய்ய? ஒரு பூட்டுச் சாவியை என்னால் எடுத்துவர முடியும். மறுபூட்டுச் சாவி தளவாயிடம் இருக்கிறது.''

என்று கூறிய ருத்திராபதியம்மாளின் கண்கள், பூட்டப் பட்டிருந்த இரண்டு கனத்த பூட்டுகளைக் கவனிக்கின்றன.

''ஆகவே! நீ கேட்ட இரண்டு குத்துவாள்களைக் கொண்டு வந்து இருக்கிறேன். சுவரிலுள்ள செங்கற்களைப் பெயர்த்து நுழையத்தானே இந்தக் குத்துவாள்?''

நாராயணத்தேவன் 'ஆம்' என்பது போலத் தலையசைத்து வைக்கிறான்.

''அத்துடன் அந்தக் குத்து வாட்கள் வழித்துணைக்கும் உதவும். இன்றைய ஐந்தாம் நாளிரவு, நீயும் உனது நண்பனுமாகச் சேர்ந்து பெயர்த்து நுழையப் போகும் சுவருக்குப் பின்னால் இரு குதிரைகள், இரண்டு போர்வாள்களுடன், எனது நம்பிக்கைக்குரிய ஒருவன் காத்திருப்பான். நீங்கள் தப்பிச் செல்லலாம். ஆனால் நீ குறிப்பிட்ட அல்லது எதிர் பார்க்கிற கங்கைநாச்சி இருக்க மாட்டாள்'' என்று கூறிய நாயக்க பெரிய மாதேவி ருத்திராபதியம்மாள், அவனைக் கூர்ந்து நோக்கிப் பரிசீலிக்கிறாள்.

நாராயணத்தேவன் முகத்தில் மகாராணி எதிர்பார்த்தது போல எந்தவித மாற்றமும் தெரியவில்லை.

''ஏன், கங்கைநாச்சி வரமாட்டாள், என்று நீ கேட்கவில்லையே, நாராயணத் தேவா?''

''கேட்க வேண்டிய அவசியமில்லை மகாராணி! இந்தத் திட்டத்தைக் கூறியவள் கங்கைநாச்சி. நான் அல்ல. எனக்கு இந்தத் திட்டம் பிடிக்கவில்லை. எனது சேதுநாட்டுப் புகழ் இதனால் மங்காது. ஒரு ராஜகுமாரன் இன்னொரு ராஜ குமாரத்தியைச் சிறையெடுப்பது சரித்திரப் பிரசித்தம். இதனால் கௌரவம் கூடும். ஆனால் மதுரையின் கௌரவம் குறையும். இது குறித்து நான் என்ன பேச முடியும்? உடன்

அழைத்துச் செல்லவில்லையானால், நமது காதல் இந்த ஜன்மத்தில் ஈடேருது என்று சத்தியம் வைக்கிருள் கங்கை நாச்சி. வேறு ஒருவனை மணக்க அவள் விரும்பவில்லையாம். ஒரு தமிழனை மணப்பதன்மூலம் மதுரை மக்களுக்கு மண மகிழ்ச்சி தரும் என்று நம்புகிருள். நான் என்ன செய்ய முடியும்?''

ஓ...எவ்வளவு நியாயமான மறக்குடிமகன் இவன்?

''சபாஷ் நாராயணத்தேவா! நீ என்னை நம்புகிரு யல்லவா?''

''என் தாயை நான் நம்பாதவனுகிறேன்.''

''மீனுட்சி அருள்பாலிப்பாள்! நல்லது. நான் கங்கை நாச்சியை கவனித்துக் கொள்கிறேன். நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். கூடிய வரை முயன்று, ஐந்தாம் நாளிரவு என்பதற்குப் பதிலாக நான்காம் நாளிரவே தப்பி யோட முயற்சி செய்! அது உனக்கும் நல்லது, கங்கை நாச்சிக்கும் நல்லது.''

சில கணங்கள் வரை ஏதோ யோசனையில் மூழ்கிய நாராயணத்தேவன் சொன்னுன்:

''நான்காம் நாள் தப்பியோடுவது சுலபமான காரியம் தான். நாங்கள் செங்கற்களைப் பெயர்க்க முயற்சிக்கிற போது, யாரும் வேவு பார்க்கப் போவதில்லை. உங்கள் ஆக்ஞை சிறைக்கோட்டத்தை எச்சரிக்கும். நானறிவேன். இதனுல் நான்காம் நாள் என்ன? இரண்டாம் நாளே கூடத் தப்பிச் சென்று விட முடியும். ஆனுல் சொன்னது ஒன்று; செய்தது ஒன்று என்று எண்ணி, என்னை கங்கைநாச்சி தவருக எடை போட மாட்டாளா?''

''அதற்கு நானுயிற்று. இவ்வாறு தவருக எண்ணுவதன் மூலம்தான் அவளது காதலை நான் எடைபோட வேண்டும். ஏதோ இளமை வேகம் அவளை உன்னுடன் ஓடிவிடும்படித் தூண்டியிருக்கிறது. அது சரியான இளமையாகாது.

சரியான காதலுமாகாது. நான் அவளை இன்னும் நன்ருகப் பதனிட வேண்டும். மேலும் மன்னரே இதனை ஆதரித்துச் சுமுகமாக ஏற்பாடு செய்வது போலக் கவனித்துக் கொண்டால் போர் பூசலின்றி மங்களமாக முடியும். மறவர் சீமைக்கும் மதுரைக்கும் ஒரு சுமுகமான உடன்பாடு ஏற்படும். உறவு முறை நீடிக்கும். ஆகவே நீ எது குறித்தும் கவலைப்படாமல் நான்காம் நாளிரவு புறப்பட்டுவிடு. பின்புறமாக உனது புறப்பாட்டுக்கான எல்லா ஏற்பாடுகளும் தயாராகக் காத்திருக்கும்.''

இப்போதுதான் நாராயணத் தேவன் முகத்தில் சில மாற்றங்கள் ரேகை கண்டு நெளிகின்றன. அந்த நெளியல்களிலிருந்து ஏதோ ஒரு தயக்கம் கோடிட்டுக் காட்டுவது புரிகிறது.

''நாராயணு! என்னை நம்பவில்லையா?''

''ஐய்யயோ! பரிபூரணமாக நம்புகிறேன். கங்கைநாச்சி என்னை ஒரு கயவனுக—சொன்ன சொல் காப்பாற்றத் தெரியாதவனுக—தப்பிக்கும் மார்க்கத்துக்கு உதவியதும் சொல்லிக் கொள்ளாமல் ஓடிய அதருமனுக எண்ணிவிடக் கூடாதே என்று தான் தயங்குகிறேன். ஒரு தடவை நான் அவளைப் பார்த்து...''

''இதுவரை நீ புத்திசாலித்தனமாகப் பேசினுயே என்று சந்தோஷப்பட்டேன். இப்போதுதான் யோசிக்காமல் பேசுகிருய்! அவளை நீ சந்தித்து இப்படிக்கூறினுல் மூலகாரணத்தை ஆராய்வாள். பிறகு என்னிடம் அவள் மனத்தாங்கல் கொள்வாள். தேவையா? அவள் தானே உன்னை அதருமனுக நினைப்பாள்? நான் அவ்வாறு நினைக்க மாட்டேனே? நீ அவளுடன் சென்ருல், வீணை யுத்தம்தான் மூளும். அதைத் தவிர்த்து ஒரு சுமுகமான உடன்படிக்கையில் நிகழ்வது நல்லது என்று நான் சொன்ன சமாதானம் உனக்கு உடன்பாடு இல்லையா? ஒருகால் அப்படியான—சுசப்பான சந்தர்ப்பம் நேர்ந்து விடுமேயாஞல் நானே கங்கைநாச்சியை உன்னுடன் அனுப்பிவிடுவேன் புரிகிறதா?'

‘‘நன்றாகப் புரிகிறது, மகாராணி! கங்கைநாச்சியின் மனம்...’’

‘‘வேதனைப் படாமல் பார்த்துக் கொள்வது என் பொறுப்பு.’’

பெரியநாயக்க மாதேவி ருத்திராபதியம்மாள் இவ்வாறு கூறிய அடுத்த கணம், நாராயணத்தேவன், தனது இருகரம் கூப்பி வணங்குகிறான். அது ‘நான் அவ்வண்ணமே ஏற்றுக் கொண்டேன்’ என்பதைக் காண்பித்தது.

‘‘அன்னை மீனாட்சி காப்பாற்றுவாள்!’’ என்று கூறி விடைபெற்று அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மாள்.

சற்றைக்கெல்லாம், மன்னாருசாமி அங்கே வந்து நின்று பணிவைத் தெரிவித்தான். அடுத்துத் தனது இடுப்பிலிருந்த இரண்டு குத்துவாள்களை எடுத்து ஒன்றை நீட்டினான்.

அதனைப் பெற்றுக் கொண்டான் நாராயணத்தேவன்.

‘‘சேதுயுவராஜா! இன்றைக்கு நான்காம் நாளிரவு நான் தான் பின்புறமாகக் குதிரைகளுடன் காத்திருப்பேன். முகத்தை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். வேறு யார் நின்றிருந்தாலும் எதிர்ப்பட்டுவிட வேண்டாம்’’ என்று மெல்லிய குரலில் அன்பாக எச்சரித்துவிட்டுப் பக்கச் சிறையறைக்குச் சென்று இன்னொரு குத்துவாளை (ஒரு துரையிடம் நீட்டினான். னை

பிறகு, மன்னாருசாமி இருவரிடமும் விடைபெற்றுள கொண்டு புறப்பட்டுச் சென்றான். ார்.

சிறைச் சுவரின் செங்கற்பதிப்பின் ஓரத்தில் பூசக்குமே காய்ந்துபோன மணற் கலவைகளைக் குத்துவாள’ வெளியேறும் மார்க்கத்துக்கு அப்போதே அவர் முனையத் தொடங்கி விட்டார்கள்.

அரண்மனைக்கு

திடுமென்று நாராயணத் தேவனுக்கு காண்பதென்பது ஏன் இப்படிச் செய்தால் என்ன?

''வேலு!'' என்று மெல்லக் குரல் கொடுக்கிறான் நாராயணத்தேவன்.

''என்ன, சேது குமாரா?''

''நீ, உனக்கும் எனக்குமிடையே இருக்கிற இந்த இலேசான தடுப்புச் சுவருக்குக் குறிவை! நான் எனது சிறையின் பின்புறச் சுவருக்குக் குறி வைக்கிறேன். நீ முதலில் இங்கு வந்துவிட்டால், பின்புறச் சுவர் சற்று கனம் அதிகமானதாக இருப்பதால் இருவருமாகச் சேர்த்து முயன்று காரியத்தை எளிதாக்கி விடலாம்'' என்று மெல்லக் கூறிய நாராயணத்தேவனுடைய ஆலோசனையும் சரியெனப் படவே, வேலுதுரையும் ஒப்புக் கொண்டான்.

அந்த இரவில் சுவரைக் கீறும் சத்தம் வெளியில் அவ்வளவாகக் கேட்கா வண்ணம் இருவரும் குத்துவாள் முனைக்கு வேலை தரத் தொடங்கினர்.

எப்படியும் குறித்தபடி தப்பிச் சென்று விடவேண்டும்.

10

சந்ம கதிரவன் வருகை கண்டு வைகறை வானம், வண்ணத் கிருப்,ரணம் கட்டி மேகப் புன்னகை பூக்கிறது.

ஆ

ெ கண் விழித்துக் காலைக் கடன்களை முடித்துக் கொண்ட மங்கை நாச்சி, முதல் வேலையாகப் பெரியம்மாளைக் கண்டு, நீ ஆறு மறைத்து விட்ட செய்தி கூறி எப்படியாவது அதைப்பைப் பெற்று விடவேண்டும் என்று துடித்துக் நிகழ்வது 'நந்தாள். கொஞ்சமும் மறைக்காமல் சொல்லி உனக்கு உபம். அதுவே நம்பிக்கைக்குரிய மகளுக்கு அழகு!

சுசப்பான சந்
கங்கைநாச்சியை ாதலால் அரண்மனை எப்போதும் போலக்
ருந்தது.

கங்கைநாச்சியின் பதைப்பை விட பானுமதியின் பதைப்பு சற்று அதிகமாகவே தெரிந்தது.

இரவு பெரிய மகாராணி ருத்திராபதியம்மாள் சிறைக் கோட்டம் நோக்கிச் சென்ற செய்தி கேட்டது முதல் அவளுக்குத் தூக்கம் எங்கே வந்தது? எங்கே ஏதேனும் பல வீனபட்டுச் செய்தி வெளியாகி, மன்னர் திருமலை பூபதியின் காதுகளுக்குச் சென்று விடுமோ என்கிற ஒரு பொறுப்பு நிறைந்த பயத்தால் பதைப்புக் கண்டிருந்தாள்.

தன்னை பற்றிய செய்தி பரவினுல் கூடக் கவலையில்லை. பானுமதி என்பவள் பத்தோடு பதினொன்று மாதிரி!

பெரிய மகாராணியார் அவ்வாறல்லவே!

நாயக்க ஆட்சியைத் தனது முந்தானையில் முடித்துக் கொண்டு காத்து வருகிறவள்! அப்பேர்ப்பட்ட உயர்ந்த நாயக்ககுலப் பெண் திலகம், சிறைக் கோட்டம் நோக்கிச் செல்வதும், கங்கைநாச்சியார் காதல் பற்றி முனைவதும், மறவர் நாட்டுப் பிள்ளையை விடுவிக்க எண்ணுவதும் எத்தனை பரபரப்புக்குரிய விஷயமாறைலும், எவ்வளவு அவமானத்துக்குரிய செய்தி! எனவேதான் முன்னம் பெரிய மகாராணியாரைப் பார்த்து நடந்தது என்னவென்று அறிகிற வரை உள் மனம் பதற்றத்துடன் அடித்துக் கொண்டிருந்தது.

அரண்மனையின் பிரதான கூடத்தில் என்றுமில்லாத ஒரு சலசலப்பு காணப்பட்டது. ஏதோ முக்கியப் பிரச்சினை முன்னிட்டு அங்கே பொழுது புலர்ந்ததுமே மாவீரத் தளவாய் ராமப்பய்யர் வருகைதந்து அமர்ந்து காணப்பட்டார்.

என்ன காரணம் என்பது குறித்து எவருக்குமே தெரியாது.

அந்தப்புரத்தில் இச்செய்தி எட்டுகிறது.

தளவாய் காலையிலும் மாலையிலும் அரண்மனைக்கு வந்து அவசர நிமித்தமாக மன்னரைக் காண்பதென்பது

இயல்பானது. எனவே தொலியம்மாள் உட்பட ஏனையவர்கள் இது குறித்து எந்தவிதப் பதற்றமும் கொள்ளவில்லை.

ஆனால் இச்செய்தி பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மாளுக்கு மிகுந்த பதற்றத்தைத் தந்து விட்டது. அன்றாடம் காணவருவது இயல்பேயானாலும், இரவு நடந்த விவகாரத்துக்கும், அதிகாலையில் தளவாய் ராமப்பய்யர் வருகைதந்திருக்கும் செய்திக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமோ என்று எண்ணிப் பார்க்கிறாள். அதன் காரணமாகவே இந்தப் படபடப்பு தென்பட்டது. அத்துடன் சற்றைக்கெல்லாம் அந்த அம்மாளைக் காண அவசர அவசரமாக அறையுள் நுழைந்தாள் பானுமதி.

பானுமதியைக் கண்டதும் பெரியமகாராணி ருத்திராபதியம்மாளுக்குத் தூக்கிவாரிப் போட்டு விட்டது.

இவள் ஏன் இத்தனை காலையில் அவசர அவசமாக அறையினுள் நுழைந்து கொண்டிருக்கிறாள்? தளவாய் ராமப்பய்யரின் வருகை குறித்து ஏதேனும் சொல்ல வந்தானோ? நாம் நினைத்தது போலவே, இரவு நடந்த விஷயம் தளவாய் ராமப்பய்யருக்கு தெரிந்த விட்டதோ?

''என்ன பானுமதி!''

''ஒன்றுமில்லையக்கா! அரண்மனையில் தளவாய் வந்து காத்துக் ரொண்டிருக்கிறாராம்.''

''நானும் தான் கேள்விப்பட்டேன். ஏன் வந்திருக்கிறார் என்கிற செய்தி உனக்கு ஏதேனும் தெரியுமா?''

''ஏன் வந்திருக்கிறார் என்ற செய்தியை உங்களிடம் அறியத்தானே அக்கா நான் ஓடோடி வந்தேன்! நமது செய்தி அவருக்கு ஏதேனும் எட்டியிருக்குமோ என்று பயப்படுகிறேன்!''

''ஓ... இவ்வளவு தானா?''

மெல்லப் பெரு மூச்சு விட்டுக் கொள்கிறாள் ருத்திராபதி தேவியார்.

தன்னுள்ளும் இவ்வாறான ஒரு பதற்றம் கரைபுரண்டு கொண்டிருக்கிறது என்பதை வெளியில் காட்டிக் கொள்ளாது போலியாக ஒரு புன்முறுவலை உதிர்க்கிறாள் பெரிய மகாராணி.

ஆனால், இவளுக்கும் ஒரு பதற்றம் கண்டிருக்கிறதே என்றெண்ணி மனத்தில் பாராட்டிக் கொண்டதோடு பெருமை கொள்ளவும் செய்கிறாள். அவ்வாறு தளவாய்க்கு தெரிந்து விட்டால் பானுமதியின் தலையொன்றும் உருண்டு விடப் விடப்போவதில்லை. நூற்று தொண்ணூறெட்டில் இவளும் ஒருத்தி! உருளக்கூடிய தலைகள் தனதும், மகள் கங்கைநாச்சி யாருடையதும்தாம்.

''என்னக்கா! மௌனமாக இருக்கிறீர்கள்?'' என்று மீண்டும் துளைக்கிறாள் பானுமதி.

''தளவாய் அரண்மனைக்கு அரசியல் காரணமாகக் காலையில் வருவது இயல்புதானே?''

''இயல்புதானே என்று இப்போது இருக்க முடியவில்லையக்கா! இரவு நடந்த செய்திக்கும் இதற்கும்....''

''உஸ்! வீணாக ஏன் பயப்படுகிறாய்? தளவாய்க்குத் தெரிந்து விட்டுப் போகட்டுமே! அதனால் என்ன தலையா போய்விடப் போகிறது? நானும் அங்குதான் போய்க்கொண்டிருக்கிறேன். நீ சென்று, உன்னை மாதிரி இச் பெய்தியால் கங்கைநாச்சியும் அலைமோதிக்'கொண்டிருப்பாள்! அவளைத் தேற்று. இதை நான் கவனித்துக் கொள்ளுகிறேன்.''

பானுமதிக்கு கொஞ்சம் நிம்மதி.

''அக்கா! இரவு எல்லாமே எந்தவிதத் தடங்கலும் இல்லாமல் முடிந்தனவல்லவா?''

பெரிய நாயக்க மாதேவியின் இதழ்களில் மீண்டும் புன்னகை. இவளுக்கு இருக்கிற அக்கறைதான் என்ன?

''எதுவும் தடங்கலின்றி நடந்தது. நீ ஜாக்கிரதையாக மன்னர் அறையைக் கண்காணித்தாய் அல்லவா?''

''கண்களில் இமைபோடாது கண்காணித்தேன்''

''பின் பயமென்ன? போய் கங்கை நாச்சியைத் தேற்று. இரவு நான் சிறைக்கோட்டம் சென்றதைத் தவறி உளறிக் கொட்டி விடப் போகிறுய்.''

''எதிலும் தவறமாட்டாள் இந்த பானுமதி.''

குரலில் தெரிந்த அழுத்தத்தில் பல அர்த்தங்கள் இருந்தன.

பானுமதி சொல்லிக் கொண்டு புறப்பட்டாள்.

விரைந்து அலங்காரங்களை முடித்துக் கொண்டு பெரிய நாயக்க மாதேவியும் அரண்மனை நாடி நடந்தாள்.

அரண்மனைக் கூடத்தில் மதுரைமன்னர் திருமலை நாயக்கர் வருகை புரிந்திருந்தார். அவருடன் பேரமைச்சர் நீலகண்ட தீட்சிதரும் அமர்ந்து காணப்பட்டார். அது ஒன்றும் அரசியல் ரகசியமிக்க கூட்டமில்லை என்பது இருக்கிற காவல் பலத்தை வைத்துப் புரிந்து கொண்ட வண்ணம் உள்ளே பிரவேசித்தாள் பெரியநாயக்க மாதேவி ருத்திராபதியம்மாள்.

பெரிய மகாராணியரைக் கண்டதும் அமைச்சர் நீலகண்ட தீட்சதரும், ராமப்பய்யரும் எழுந்து வணங்கி, மீண்டும் இருக்கைகளில் அமர்ந்தனர். அந்தச் செய்கைகளின் மூலம் நாம் அநாவசியமாக அதிர்ந்து போனேம்! இரவு நடந்த நிகழ்ச்சி குறித்த கூட்டமல்ல இது என்பது தெளிவாகப் புரிந்தது.

ஓ...எவ்வளவுக்குப் பயந்து போனேம்!

உள்ளுக்குள் நெட்ட நெடிய பெருமூச்சுப் பறிகிறது.

சின்ன நாயக்கமாதேவி தொலியம்மாள் இம்மாதிரியான அரசியல் காரியங்களில் தலையிடுவது கிடையாது.

அவளுக்கு இது புரியாதது மட்டுமல்ல; தேவையற்றதும் கூட! ஏதேனும் இந்தத் தமிழகத்துக்குச் செல்வத்தைக் கொட்டி நலங்கள் செய்கிறபோது தான் கூச்சல் போடு வாள். மற்றபடி அந்தப்புரத்துக்கு மட்டும் அவள் ஒரு வலு வான காரணகர்த்தா! அந்த விஷயத்தில் பெரியநாயக்க மாதேவி பலபடிகள் என்ன? பலகாவதங்கள் பின்னேதான்? படுக்கை அரசியலில் தொலியம்மாளே பெரியமகாராணி யார்! அவளுக்கு அடுத்தபடி பானுமதி.

மதுரைமன்னர் ஏதோ ஆரம்பித்து, அது குறித்து அமைச்சரும் தளவாயும் ஆலோசனையில் மூழ்கிக்கிடக்கிருர் கள் என்பது அங்கு நிலவிய அமைதியிலிருந்து புரிந்து கொண்டாள் ருத்திராபதிதேவியார்.

''என்ன நடந்ததென்று இப்படி ஆளுக்கொரு பக்கமுதம் ஆலோசனையில் மூழ்கிக் காணப்படுகிறீர்கள்?'' எ..னர் ஆரம்பித்தாள், பெரியநாயக்க மாதேவி ருத்தி யம்மாள்.

செய்கிருய்.
மன்னர் திருமலைநாயக்கரே பதில் சொன்ன்று நீ எதிர்

''ருத்திராபதி! நமது தளவாய் பிறந்த ஊர் குண்டு என்பது உனக்குத்தெரிந்ததே! அது என்ன குண்டு? ஒன்று கூத்தியார் கூண்டு என்றிருக்க ் அல்லது கூத்தியார் தொண்டு என்றிருக்க வே..ன(குண்டு என்ன? குண்டு!'' ச்னே

பெரியநாயக்கமாதேவி கலகலவென்று சிரித்துவிட்டாள்

திருமலைநாயக்கர் இப்படிச் சமயத்தில் நகைச்சுவையாக ஏதேனும் குண்டைத் தூக்கிப் போட்டுச் சிரிக்க வைத்து விடுவார்.

ராமப்பய்யர் முகம் கோணியது.

அமைச்சர் நீலகண்ட தீட்சிதர் அவ்வாறு சிரித்துவிட முடியுமா? அவர் சிரிப்பை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டார்,

‘‘இப்போது அதற்கென்ன பிரச்னே?’’ என்று பேச்சைத் தொடங்கினுள் ருத்திராதேவி.

‘‘ஒன்றுமில்லே. ஏதோ மீதி இடமெல்லாம் அசல் மனேவி குண்டு என்பது போலவும், இது என்னமோ, கூத்தியார் குண்டு என்பது போலவும் ஏனிருக்க வேண்டும்? பொதுவாக சதுர்வேதி மங்கலம் என்ற பெயரை வைத்து விடலாமே என்று நான் இட்ட ஆணேக்கு மறுப்புத் தெரிவிக்கிருர், நமது தளவாய்!’’

‘‘இதில் மறுப்பு தெரிவிக்க என்ன இருக்கிறது? அங்கே வாழ்பவர்களனேவரும் பிராமணர்கள். அதற்கு எப்படிக் கூத்தியார் குண்டு என்ற பெயர் எக்காரணம் பற்றி வந்ததோ, நாமறியோம். கேட்க அசிங்கமாக இருக்கிற தென்று பெயர் மாற்றியது சரியே! நான்கு வேதங்களே ...ங்கும் பிராமணர்கள் வாழும் ஊருக்குச் சதுர்வேதி ...லம் என்கிற பெயர் பொருத்தத்திலும் பொருத்தம்.’’*

நாயக்... ...ராணி·பேச்சுக்கு ஏதேனும் ஆட்சேபணேயுண்டா நீலகண்ட... ...ர!’’ என்ருர் திருமலேநாயக்க மன்னர்.

ஒன்றும் ... இருக்கிற ...ய் ராமப்பய்யரும், ‘‘ஆட்சேபிக்க முடியுமா? வண்ணம்ரானே! உங்கள் பேச்சையும் நான் தட்டிக்கழிக்க ருத்திரா! நான் மறுத்த பிரச்னேயே வேறு! நீங்கள் நகைச் ...காக இந்தப் பிரச்னேயை முன் வைத்து ஒரு கலகலப்பு ...படுத்திப் பின்னர் எனது பிரச்னேயைத் தொடங்க இருக்கிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்’’ என்ருர்.

‘‘அது என்ன உங்கள் பிரச்னே தளவாய் ஐயரே?’’ என்ருள் ருத்திராபதி தேவியார்.

இப்போது அதுவரை பேசாது இருந்த அமைச்சர் நீலகண்ட தீட்சிதர் எடுத்து விளக்கினுர்:

‘‘தேவியாரே! இந்தச் சதுர்வேதி மங்கலத்தில் நமது தளவாய் ஒரு சிவன் கோயில் கட்டியிருக்கிருர்.’’

---

* மதுரைக்கு அடுத்து ஏழுகல் தொலேவில் உள்ளது.

''தெரியும்.''

''அந்தக் கோயிலில் நமது மன்னர் பெருமாளின் திருவுருவச்சிலை வைக்க வேண்டும் என்று தளவாய் உத்தரவு கேட்கிறார். மன்னர் பெருமானே, அது தேவையில்லை; அந்தச் சிவன் கோயிலில் நமது தளவாய் திருவுருவச்சிலை யிருப்பதே சாலப் பொருத்தமென்று கூறுகிறார். இதுதான் பிரச்னை.''

''குழந்தைகள் விளையாட்டு மாதிரி இருக்கிறதே இந்தப் பிரச்னை. ஏதோ சேது நாட்டிலிருந்து யுத்தம் முளைத்திருக் கிறது; அதற்கு மன்னர் தலைமை தாங்குவதா? தளவாய் தலைமை தாங்குவதா? என்கிற மாதிரியான பிரச்னை இருக்கும் என்றல்லவோ நான் எதிர்பார்த்தேன்.''

பெரியநாயக்க மாதேவி ருத்திராபதியம்மாள் இவ்விதம் கூறி முடித்ததும், சற்றே கூர்ந்து நோக்குகிறார் மன்னர் திருமலைநாயக்கர்.

''தேவி! நீ ஒரு புதிய குண்டை உற்பத்தி செய்கிறாய். சேது நாட்டிலிருந்து யுத்தம் முளைக்கும் என்று நீ எதிர் பார்க்கிறாயா?''

''நிச்சயம் முளைக்கும்.''

''அது எப்படிச் சொல்லுகிறாய்?''

''இப்போது ஏன் இந்தப் பிரச்னை. சிலைப் பிரச்னை முடியட்டுமே.''
சில கணங்கள் அமைதி.

பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மாள் சமய முணர்ந்து ஓர் அரசியல் குண்டைத் தூக்கிப் போட்டது ஒரு ராஜ தந்திர மிக்க செயல் போலத் தென்படுகிறது.

ருத்திராபதிதேவியே மீண்டும் பேச்சை ஆரம்பிக்கிறார்:

''அமைச்சரே! இந்த பிரச்னைக்கு நீங்களே முடிவு கூறலாமே.''

''சொன்னேன் தேவியாரே. தளவாய் மறுக்கிறார்; அந்தக் கோயில் மன்னர் கூறியது போல தளவாய் உருவச் சிலையிருப்பதுதான் பொருத்தம். கோயிலைக் கட்டியவரல்லவா?''

''ஏன் மறுக்கிறார்?''

''அதுதானே புரியவில்லை.''

''தளவாய் ஐயரே! மறுப்பதன் காரணம்?''

தளவாய் பதில் சொன்னார்:

''வேறொன்றுமில்லை பெரிய மகாராணி. ராமப்பய்யர் தனது செருக்கைக் காட்ட இப்படிச் சிலை வைத்துக் கொண்டான் என்று மக்கள் பேசுவார்கள். முதலிலேயே இந்தப் பார்ப்பான்தான் திருமலைநாயக்க மன்னரைக் கெடுக்கிறான் என்று துவேஷிக்கிறார்கள். பார்ப்பானுக்கும் வீரமா என்று நையாண்டி செய்கிறார்கள்? வரவர பார்ப்பன துவேஷிகள் அதிகமாகவே பெருகி விட்டார்கள். ஏன்? பச்சையாகச் சொல்லுகிறேன். எனது வீரத்தைக் கண்டு, நான் எவனோ ஒரு வீர க்ஷத்திரியனுக்குப் பிறந்திருக்க வேண்டும் என்று சேது நாட்டு சடையக்கன் சொன்னானாம்! அதனால்தான் சேது நாட்டை எவ்வகையிலும் ஒரு கை பார்த்து விடுவது என்கிற வைராக்கியம் முளைத்திருக்கிறது!''

''ஓகோ! அதன் காரணமாகத்தான் பாவம் அந்த அப்பாவிப்பிள்ளை நாராயணத் தேவனைச் சிறையிலடைத்து இரட்டைப்பூட்டுப் போட்டிருக்கிறீர்களோ?''

பேச்சின் திசை மாறவே, தளவாய் ராமப்பய்யர் முகம் சுருங்குகிறது.

''ஏதோ கேட்க வேண்டும் போலத் தோன்றியது. கேட்டுவிட்டேன். பரவாயில்லை தளவாய் ஐயரே! மக்கள் எதுவும் பேசுவார்கள். நாயக்கர் வமிசத்தைப் பற்றி ஆரம்பத்தில் என்னென்ன பேசினார்கள்? இப்போது மட்டும் நமது மன்னரைப் பற்றிப் பேசாமலா இருக்கிறார்கள்? தமிழர்களை

ஏமாற்றி வடுக வமிசம் குடியேறி விட்டதுஎன்று பேசுகிருர்கள். இந்தத் தமிழர்களை யார் கோட்டைவிடச் சொன்னது? அதுபோலத்தான் உங்களையும் பேசுகிருர்கள். பேசுபவர்கள், பேசிக் கொண்டுதானிருப்பார்கள். எதுவும் பேசுவார்கள்; எதற்கும் பேசுவார்கள். பேசிக் கொண்டே இருக்கட்டும். நாம் காதுகளை இவற்றுக்கெல்லாம் பயன்படுத்தக் கூடாது. சிவன் கோயில் சிலை பற்றிய பிரச்னைக்கு நானே ஒரு நல்ல முடிவு கூறுவேன். கோயிலில் மன்னர் சிலையும் இருக்கட்டும்; உங்கள் சிலையும் இருக்கட்டும்* என்ன சொல்லுகிறீர்கள்!''

''நல்ல யோசனை; மிக நல்ல யோசனை'' என்று கூறி வரவேற்ருர் அமைச்சர் நீலகண்ட தீட்சிதர்.

மன்னர் திருமலைநாயக்கரும் வேறு வழியின்றி ஒப்புக் கொண்டார். மன்னரே ஒப்புக் கொண்ட பிறகு?

தளவாய் ராமப்பய்யரும் அரை மனத்துடன் ஒப்புக் கொண்டார்.

அந்த பிரச்னை அத்துடன் முடிந்து விடவே, திருமலை நாயக்க மன்னர், இப்போது வேறு பிரச்னை யொன்றைத் தூக்கிப் போட்டார்.

''தேவி! சேது நாட்டு யுத்தம் வரும் என்று சொன்ஞயே! எந்த யூகத்தின் அடிப்படையில் இவ்வாறு கூறிஞய்?''

பெரியநாயக்கமாதேவி ருத்திராபதியம்மாள், ''இதற்கு ஒரு யூகம் தேவையா? நமது தளவாய் ஐயரின் சொற்களே மெய்ப்பித்து விட்டனவே!'' என்று கூறி நிறுத்தித் தளவாய் ராமப்பய்யரைக் கூர்ந்து கவனித்துப் பரிசீலிக்கிருள்.

---

* அந்தக் கோயிலில் இருவர் சிலைகளும்வைக்கப்பட்டன.
'மதுரை நாயக்கர் வரலாறு'—
அ. கி. பரந்தாமஞர், M. A,

''நமது தளவாய் அவமாளத்தின் காரணமாக வெறி கொண்டு கூறினர்.''

''நீங்களும் உங்கள் மகளேக் காப்பாற்றி வந்ததை அவமானமாகக் கருதித்தானே நார்ராயணத்தேவனேச் சிறையில் வைத்திருக்கிறீர்கள்' ஒரு இளவரசனேச் சிறையில் வைத்தால், உங்களுக்கு ஏற்பட்ட அவமான வெறி அவர்களுக்கும் ஏற்படலாம்தானே? அதனுல்தான் என்னுல் யூகிக்க முடிந்தது.''

இப்போது தளவாய் ராமப்பய்யர், வெறி கொண்ட வேங்கை போலக் கர்ஜித்தார்: ''அப்படி யுத்தம் வந்தால் வரட்டும்! சேதுநாட்டையே தீக்கு இரையாக்குகிறேன்!'' இவ்வாறு சூளுரைத்து எழுந்து கொண்டார் தளவாய் ராமப்பய்யர்.

அவரது கண்களில் அக்கினி சுவாலேகள்.

இதற்கே இந்த அக்கினி சுவாலேகள் என்ருல்...

இன்றைக்கு மூன்ரும் நாள் காலே நாராயணத் தேவனும் வேலுதுரையும் தப்பிச் சென்ற செய்தி கிடைக்கிறபோது...

தளவாய் ராமப்பய்யர் எரிமலே ராமப்பய்யராக மாறப் போகிருர் என்று நிலேத்துப் பார்க்கிருள் மதுரை இளவரசி கங்கைநாச்சி.

அவளிடம் பெரியநாயக்க மாதேவி ருத்திராபதி யம்மாள், முன்னுளிரவு சிறை கோட்டம் சென்று திரும்பிய செய்தியையும் நடக்க போகிற செய்தியையும் கூறித் தேற்றி இருந்தாள்.

''நீ தான் முதலில் பொய் சொல்லி, பின்பு மனச்சாட்சி தாளாது உண்மையைக் கொட்டினுலும், நான் உனக்காக எதையும் உண்மையாக செய்வேனடி கங்கைநாச்சி.'' என்று ஆறுதல் அளித்திருந்தாள்.

“ஒரு கால் உனது காதல் நிறைவேருது என்று பரிபூரணமாகத் தெரிய வருமேயாஞல், நானே உன்னை ரகசியமாகச் சேதுநாடு நோக்கி அனுப்பி வைப்பேன்!” என்றும் வாக்குறுதி தந்திருந்தாள் பெரியநாயக்கமாதேவி.

பெரியம்மா மீது கங்கைநாச்சிக்குப் பெரிதான நம்பிக்கை இதழ் விரித்திருந்தது.

அதனுல்தான் எரிமலை ராமப்பய்யரை அவளால் எண்ணிப் பார்க்கவும் முடிந்தது.

11

வைகறை வானம் சூரியச் சித்திரம் வரைந்து கொண்டிருக்கிறது.

மதுரமாக விழித்தெழுகிறது மதுரை மாநகரம்.

விடிந்தும் விடியாததுமாக அரண்மனையில் அந்தச் செய்தி பரவி அலைமோதச் செய்கிறது.

சிறைக்கூடத்திலிருந்து மறவர் நாட்டு இளவல் நாரயணத்தேவனும், அவனது அருமை நண்பன் வேலுதுரை: தப்பிவிட்டார்கள்.

ஆ! எத்தனை துணிச்சலாகத் தப்பி விட்டார்கள்!

மன்னர் திருமலைநாயக்க பூபதி புரிந்து கொள்ள முடியாத விழிப்பு மேலீட்டால் அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருக்கிருர்.

மதுரை மாநகரின் எல்லைக்காவல் வீரர்களுக்கு உத்தரவுகள் பறக்கின்றன.

மதுரை இளவரசனும், திருமலை நாயக்கரின் புதல்வனுமான முத்து வீரப்ப நாயக்கன் முகம் சிவந்து பற்களை நற நறக்கிருன்.

இதில் ஏதோ சூது இருக்கிறது! பலம் பொருந்திய சிறைக்கூடத்திலிருந்து இந்த இருவர் தப்புவதாவது?

இதே துடிப்பும் எண்ணமும் மேலோங்கிக் கர்ஜிக்கிறார் திருமலை நாயக்கருடைய தம்பி குமாரமுத்து நாயக்கர்.

மதுரை நாயக்கர் குலத்தையே தமது நெஞ்சில் நன்றி யறிதலுடன் கட்டி காத்து வரும் மகாசேனாதிபதி தளவாய் ராமப்ப ஐயருக்குச் செய்தி எட்டுகிறது.

செய்தி கேட்ட அடுத்த கணம்...

'ஓ...' என்று கர்ஜித்து விடுகிறார்.

பிராமண குலத்தில் பிறந்தவரானாலும் யுத்தவெறி கொண்ட போர் வீரராயிற்றே! வீர ராட்சஸராயிற்றே!

அவர் கண்ட போர்க் களங்கள்தாம் எத்தனை, எத்தனை...

என்றாவது ஒருநாள் சேதுநாட்டு மறவர் குலத்தை அடக்கி மதுரையின் காலடியில் போட வேண்டும் என்கிற மன்மமான வஞ்சினம் அவருடைய நெஞ்சில் சிறு பொறி யாய்க் கனன்று கொண்டிருக்கிறதே!

தம்மை அந்த சடையத்தேவன், 'பார்ப்பானுக்கு ஒரு வீரமா?' என்று கேவலமாகப் பேசியதாக யாரோ ஒரு கங் காணி இவர் காதில் ஓதிவைக்க, அன்று முதல் (இரண்டாம்) சடையத்தேவனை ஒழித்து கட்டவல்லவோ அவர் எண்ணி வருகிறார்.

இதன் காரணமாக, மதுரை இளவரசியைச் சந்தர்ப்பம் நோக்கிக் காதலிக்க வந்த சேதுநாட்டு இளவல் — சடையத் தேவரின் தங்கைமகன் நாராயணத்தேவன், வசமாக அகப் பட்டுக் கொள்ளவே சிறையிலடைத்து மகிழ்ந்தார். அந்த நாராயணத்தேவன் தப்பி விட்டான்.

தப்பிக்கக் காரணமே இல்லை.

யாரோ உடனிருந்து உதவி இருக்க வேண்டும்! யார் அந்தப் பேர்வழி?

அவசர அவசரமாகக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு அரண்மனை நோக்கி விரைந்தார் தளவாய் ராமப்ப ஐயர்.

வைகறையின் ஞானக்கண் மலர்ந்து பத்து நாழிகைப் போதுக்குள் அரண்மனையில் விவரம் தெரிந்த அதிகாரிகள் குழுமி விட்டனர்.

தூது வந்த நாராயணத்தேவனையும் அவனது நண்பன் வேலுத்துரையையும் சிறையில் அடைத்தசெய்தியை மிகைப் படுத்தாமல் கட்டிக் காக்க முனைந்தவள் திருமலை நாயக்கரின் பெரிய தேவியும், நாயக்கர் ஆட்சியைத் தமது முந்தானையில் முடித்துப் பண்பாகக் கட்டிக் காப்பவளுமான ருத்ராபதியம்மாளாயிற்றே!

இச்செய்தி மறவர் நாட்டுக்கு எட்டினால் மதுரைக்கு நிச்சயம் பங்கம் ஏற்படும் என்று கணித்து, அது விஷயத்தில் மிகவும் கவனமாக இருப்பவள், மதுரையாட்சியின் சர்வ வல்லமை பொருந்திய பெரிய நாயக்க மாதேவியாயிற்றே!

ஏன்? நாராயணத்தேவனை ஒரு ராஜதந்திரம் கருதித் தானே ருத்ராபதியம்மாள் இரவோடு இரவாக முனைந்து விடுதலை செய்திருக்கிறாள்.

மதுரை மன்னர் திருமலை நாயக்கர் மலைப்புக் கண்ட வெறியுணர்வுடன் அமர்ந்து காணப்படுகிறார்.

எதிரே தளவாய் ராமப்ப ஐயரும், அமைச்சரும், ஆலோசகரும், சாஸ்த்ரோத்தமருமான நீலகண்ட தீட்சதரும் அமர்ந்திருக்கின்றனர்.

சிறைக்கூடத்திலிருந்து எவ்வாறு நாராயணத்தேவன் தப்பி இருக்கமுடியும் என்று பார்வையிட்டு ஆலோசனை தெரிவிக்கச் சென்றவர்களை எதிர்பார்த்து அவர்கள் காத்திருந்தனர்.

சிறையதிகாரி நரசிம்ம நாயக்கர் அது குறித்துப் பெரிதாகப்பயப்படவில்லே. அவருக்கு அனேத்துமே தெரியும். மூல காரணம் பெரிய நாயக்க மாதேவி ருத்ராபதியம்மாள். அவர்கள் தன்னேக் காப்பார்கள் என்கிற நம்பிக்கை.

சற்றைக்கெல்லாம் நரசிம்ம நாயக்கரும், சிறை நிபுணர்கள் இருவரும் அரண்மனேக்கு வருகை தந்தனர்.

அவர்கள் வந்ததும் வராததுமாக கர்ஜிக்கிருர் தளவாய் ராமப்ப ஐயர்.

"எப்படித் தப்பினுன் நாராயணத்தேவன்?"

அப்போது அங்கே ஏதும் புரியாத பாவனேயுடன் வருகை தந்தாள் பெரிய நாயக்க மாதேவி ருத்ராபதியம்மாள். அவளுடன் வருகை தந்தாள் சின்ன நாயக்க மாதேவி தொலியம்மாள்.

இருவரும் சற்று தொலேவில் இருந்த ஆசனங்களில் அமர்ந்தனர். இந்த நேரம் பார்த்து மதுரை இளவரசி கங்கை நாச்சி எங்கே வந்து விடப் போகிருளோ என்கிற பதைப்பு ருத்ராபதியம்மாளுக்கு இருந்தது. அவள் பொருட்டு ஏற்பட்ட களேபரம்தானே இது!

சிறைக் கோட்டத்துத் தலேமை அதிகாரி விளக்கினுர்.

"ஆராய்ந்து பார்த்ததில் சேதுநாட்டு இளவல் மிக்கவும் சாமார்த்தியமாகவும் ராஜதந்திரமாகவும் தப்பியிருக்கிருர்."

"நான் சேது நாட்டின் பிரதாபங்களே கேட்கவில்லே. எப்படித் தப்பினுன் என்றுதான் கேட்கிறேன்!"

மீண்டும் கர்ஜிக்கிருர் தளவாய் ராமப்ப ஐயர். அவர் முன் சேது நாட்டை புகழலாமா?

இவரது கர்ஜனேக்கு அனேவரும் பயந்தனர். பெரிய நாயக்க மாதேவி ருத்ராபதியம்மாளுக்கு எரிச்சலே மூட்டி

யது. என்னதான் இந்தத் தளவாய் பல வெற்றிகளைக் குவித்திருந்தாலும் இவ்வாறு மன்னர் முன் கர்ஜிக்கிற அளவுக்கு மமதை கூடாது.

போரில் பலர் மூக்கை அறுத்த இவரது மூக்கை அறுக்க வல்ல ஒரே ஆட்சி சேது நாட்டு ஆட்சி. ஆகவேதான் சேது நாட்டை எவ்வாறேனும் மதுரையுடன் நட்புக் கொள்ளச் செய்ய ருத்ராபதியம்மாள் எண்ணி கங்கை நாச்சியின் காதலுக்கு உறுதுணையாக நிற்க முனைந்தாள்.

சிறைக்கோட்ட அதிகாரி நரசிம்மநாயக்கர் விளக்கினார்.

"இருவருமே குத்து வாட்களைப் பயன்படுத்தி சிறைச் சுவரின் பிணைப்புச் சுதையைக் கீறிச் சுதைகளைத் தளர்த்தி, கற்களை அப்பாற்படுத்தி அதன் வழியாகப் புகுந்து தப்பி இருக்கிறார்கள்."

"இது முடிகிற காரியந்தானா?"

"முடிகிற காரியமல்ல வென்றாலும் அது அவர்களால் முடிந்திருக்கிறது, ஆராய்ந்து பார்த்ததில் அதுவும் மார்க்கமே என்று புலப்படுகிறது."

சில கணங்கள் அமைதி அவர்களனைவரையுமே ஆட்கொள்ளுகிறது.

தளவாய் ராமப்ப ஐயரின் மூளை அதிகமாகவே வேலை செய்கிறது.

"அவர்களிடம் குத்துவாள் இருக்கக் காரணம் இல்லையே! அவர்களைச் சிறையிலடைக்கிறபோது சோதித்து நிராயுதபாணிகளாத்தானே அடைத்தீர்கள்?"

நரசிம்ம நாயக்கர் கொஞ்சமும் தயங்கவில்லை. தயங்கினால் சந்தேகத்துக்கு விருந்து வைத்தது போலாய்விடும். எனவே அவர் பதில் சொன்னார்.

"சோதித்துத் தான் சிறையில் அடைத்தோம். ஆனால் யாரோ அவர்களுக்கு உதவியதாகத் தெரிகிறது.

இந்த 'யாரோ' என்ற சொல் பெரிய நாயக்க மாதேவிக்குச் 'சிவுக்' கென்று குத்தியது.

நரசிம்ம நாயக்கர் தாம் என்ன செய்வார்? தயங்காமல் பதில் சொல்லி விட்டார்.

"யார் அந்த யாரோ?" என்று கர்ஜிக்கிறார் தளவாய் ராமப்பய்யர்.

எல்லோரிடமும் தயக்கம்.

என்ன பதில் சொல்ல முடியும்?

மன்னர் திருமலை நாயக்கருக்கு மட்டும் தமது அருமந்த புதல்வி கங்கை நாச்சியின் மீது சந்தேகம் தாவுகிறது. காதல் வயப்பட்டவளாயிற்றே! அவள் ஏன் உதவி இருக்கக் கூடாது?

இதே சந்தேகம் தளவாய் ராமப்ப ஐயருக்கும் எழவே, "யாராக இருக்கும் என்று இலேசாகப் புரிந்தாலும் அதனை இப்போதைக்கு பேசுவதற்கில்லை" என்றார்.

பெரிய நாயக்கமாதேவி உடன் இடை புகுந்தார்.

"தளவாய்! நீங்கள் எங்கே குறி வைக்கிறீர்கள் என்று எனக்குப் புரிகிறது. அத்துமீறிய குறி அது! அவ்வாறெல்லாம் சந்தேகித்து அரண்மனையில் குழப்பம் வைக்க வேண்டாம். ஒரு கைதி தப்பினான் என்றால் ஆட்சிக்குட்பட்ட அதிகாரிகளான நீங்கள்தாம் பதில் சொல்ல வேண்டுமேயல்லாது, அநாவசியமாக சந்தேகத்தை அலைமோத விடக்கூடாது. அது அற்பமானதும் ஆகும். ஏன், சேது நாட்டு ஒற்றர்கள் நம்மிடையே இருக்கக்கூடாதா? அவர்கள் நமது அரண்மனையிலும் இருக்கலாம்; சிறையிலும் இருக்கலாம்; வீரர்களாகவும் இருக்கலாம் அல்லவா? அவ்வாறு யோசிப்பதைவிட்டு, நீங்கள் எங்கோ குறி வைக்கிறீர்கள்!"

சற்று நிமிர்ந்த வேகத்துடன் பேசிய ருத்ராபதியம்மாளைப் புரிந்து கொண்ட நோக்குடன் கவனிக்கிறார்

திருமலை நாயக்கர். அவரது வலக்கரம் தமது கனத்த மீசையை நீவிவிட்டுக் கொள்கிறது.

''ஒரு பேரதிகாரியாகிய எனக்கு எது குறித்தும் சந்தேகப்பட உரிமை இருக்கிறது'' என்றார் தளவாய் ராமப்பய்யர்.

''இந்த உரிமைகளை நீங்களாக எடுத்துக் கொள்வதற்காக நான் வருந்துகிறேன். ஒரு வேளை மன்னரிடம் இருந்து இந்த உரிமைகளை, உங்கள் சர்வ வல்லமைகளை காட்டி எடுத்துக் கொள்ளலாம். அதற்காக அரண்மனைப் பெண்டிர்களிடமும் எடுத்துக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கிறீர்களா?''

''பெரிய தேவி!''

பதறிப் போய் விட்டார் தளவாய் ராமப்ப ஐயர்.

''கவனம்! நீங்கள் எது குறித்து ஐயப்பட்டீர்களோ, அதுவும் இதுதான். விரைவில் சேது நாட்டுக்கும் மதுரைக்கும் யுத்தம் மூளப்போகிறது. அதுகுறித்து கவனம் செலுத்துவது தளவாய்க்கு அழகு!'' என்று கூறி முடித்த பெரிய நாயக்கமாதேவி ருத்ராபதியம்மாள் விருட்டென்று எழுந்து சென்று விட்டாள்.

ருத்ராபதியம்மாள் அவ்வாறு பேசியது மகா சாஸ்திர ஞானியான நீலகண்ட தீட்சிதருக்கு இதமாக இருந்தது. என்ன இருந்தாலும் இந்தத் தளவாய்க்கு இவ்வளவு அதிகார ஆணவம் கூடாது என்றே பட்டது.

தளவாய் ராமப்ப ஐயரின் முகம் சுருங்குவதைக் கவனித்த மன்னர் திருமலை நாயக்கருக்கு எவ்வாறு சமாதானம் கூறுவது என்றே புரிபடவில்லை.

தொலியம்மாளுக்கு கூட இது வேதனையாக இருந்தது.

என்ன இருந்தாலும் அக்காள் இப்படி ஈட்டியை எடுத்துக் குத்துவது போல பேசியிருக்க வேண்டாம்.

ஆனாலும் ஒரு விதத்தில் ஆறுதல். ராமப்ப ஐயர் இனி அரண்மனைப் பெண்டிர் விஷயத்தில் கவனமாக இருப்பார்.

"தளவாய்! ருத்ராபதி என்றைக்கும் இவ்வாறு பேசியது கிடையாது. நீங்கள் குறிப்பிட்ட விஷயம் அவளை பெரிதும் பாதிக்கச் செய்து விட்டது"

யாரை குறிப்பிட்டு பேசினார்கள்; எதற்காக அக்காள் இவ்வாறு கோபம் அடைந்திருக்க வேண்டும்?

சின்ன நாயக்க மாதேவியான தொலியம்மாளுக்கு இது புரியவில்லை. ஏன்? அமைச்சர் நீலகண்ட தீட்சிதருக்கும் புரியவில்லை.

"பிரபோ! யார் மீது சந்தேகித்து எழுந்த வாதம் இது?" என்று கேட்டாள் தொலியம்மாள்.

மதுரை நாயக்கர் திருமலை பூபதிக்கு இது அறத்துன்பமாக இருந்தது. எவ்வாறு சொல்வார்?

தளவாய் இப்போது மறைக்க விரும்பாமல் அவரே போட்டு உடைத்தார்:

"நாயக்காமாபூபதி! நான் இந்த நாயக்க குலத்துக்கு நன்றியுள்ள சொரூபமானதால் எதையும் மறைத்துப் பேசவோ, மூடி வைக்கவோ விரும்பவில்லை. மன்னிக்க வேண்டும். இந்தத் தப்பியோடிய விஷயம் அவ்வளவு எளிதாக நடந்திருக்கக்கூடிய விஷயமில்லை. அதுவும் கை விரல்களுக்குள் அடங்கிய நாட்களுக்குள் இப்படி குத்து வாட்களைக் கொண்டு கீறி, சுவர்க்கல்லை பெயர்த்து தப்பியோட நியாயமே இல்லை. குத்து வாளை ஒற்றர்கள் உதவியிருக்கலாம் என்பது பேச்சு வாதத்துக்கு சரியானதாக இருந்தாலும் நடைமுறைக்கு சரியானதாகப் படவில்லை. சிறைக்கோட்டத்துக்குள் ஒற்றர்கள் புகுவதா? அதுவும் இரகசியமாக பாதுகாத்து வந்த செய்தி — நர்ராயணத் தேவனைச் சிறையில் அடைத்த செய்தி. எனவே இந்த ஏற்பாடு அரண்மனையில்தான் நடந்திருக்க வேண்டும். குறிப்

பாக நமது இளவரசியார் கங்கைநாச்சியார் அந்த நாராயணத்தேவனை காதலிப்பதாக தெரிகிறது. தெரிகிறது என்ன? உண்மையும் அதுதான். எனவே இதுபற்றியதில் நான் அதிகமாகத் தலையிட்டு விவாதிக்க விரும்பவில்லை. சேது நாட்டு உறவு தேவை என்றால், இந்த ராமப்ப ஐயனை மறந்து விடலாம். நான் பதவியைத் துறக்கத் தயாராக இருக்கிறேன். எனது சேவை இந்த மதுரை ஆட்சிக்குத் தேவை என்றால், இந்தக் காதலை நான் ஆதரிக்கவில்லை. இதனால் எவ்வளவு பெரிய யுத்தம் மூண்டாலும் எதிர்த்துப் போரிட்டுச் சேது நாட்டை மதுரைக்காலடியில் சமர்ப்பிக்க சித்தமாக இருக்கிறேன். மறவர் குலத்தொடர்பு நமக்கு தேவையற்றது. அது மதுரை ஆட்சிக்கு ஒரு சுள்ளாணியாக முளைத்துவிடும்.''

தளவாய் ராமப்ப ஐயர் எழுந்து கொண்டார்.

கங்கைநாச்சி, மறவர் சீமையின் மைந்தனான நாராயணத்தேவனை காதலிக்கிறாள் என்கிற செய்தி தொலியம்மாளைப் பொருத்த வரை புதிது. தான் பெற்ற மகள் குறித்த செய்தியை அனைவரும் அறிந்திருக்க, தான் மட்டும் அறியாமல் இருக்கிறோம் என்கிற கேள்விக்குறி வேதனைக் குறியாக மாறியது. மேலும் தொலியம்மாளுக்கு இந்தத் தமிழர்கள் என்றாலே கசப்பான ஒன்று. தனது மகள் வடுகனுக்கு வாழ்க்கை படவேண்டும் என்று உறுதியாக எண்ணி வருபவள்.

அன்றொரு நாள் தனது மகள் கங்கைநாச்சி. இப்படி வடுகர் என்றும் தமிழர் என்றும் பிரச்னை எழுப்பிய போது ரத்த விளக்கம் கூறியது நினைவுக்கு வந்தது.

ஓ...இவள் வடுகனுக்கும் சிவந்த ரத்தம்தான்; தமிழனுக்கும் சிவந்த ரத்தம்தான் என்று கூறியது இதனை முன்னிட்டுத்தானோ?

எழுந்துவிட்ட தளவாய் ராமப்ப ஐயரை நோக்கிய சிறியநாயக்க மாதேவி தொலியம்மாள், ''தளவாய் ஐயரே!

நீங்கள் கூறிய கங்கை நாச்சியின் காதல் விவகாரம் உண்மைதானா?'' என்று கேட்டாள்.

''என்னை பொருத்த வரையில் உண்மை என்றறிகிறேன்.''

''இது என் உயிர் இருக்கிற வரை நடைபெறாது. கங்கை நாச்சி ஒரு வடுக ரத்தத்துக்கே மனைவி ஆக வேண்டியவள். தமிழ் ரத்தத்துக்கல்ல. எனவே நான் உங்கள் கட்சியை ஆதரிக்கிறேன்.''

''நன்றி மகாராணி!'' என்று கூறி விடை பெற்றார்.

அப்போது இரு கண்கள் இக்காட்சியை உன்னிப்பாக கவனித்தன.

அந்த கண்களுக்குரியவன் மன்னார்சாமி.

பெரிய நாயக்க மாதேவி ருத்ராபதியம்மாளின் நம்பிக்கைக்குரிய கையாள்; அரண்மனை வீரன்.

12

தளவாய் ராமப்ப ஐயரின் மாளிகை நெடுந்தோங்கி இருந்தது.

மதுரை நாயக்கர் குலத்து வரலாற்றுச் சிறப்பு மிக்க திருமலை நாயக்க மன்னரின் காவல் தெய்வமாயிற்றே ராமப்ப ஐயர்.

தளவாய் ராமப்ப ஐயர் இல்லை என்றால் இந்நேரம் மதுரை ஏது? மணக்க மணக்க விரிந்து கிடக்கும் கலைப் புகழ் ஏது?

இந்நேரம் கருநாடகத்தானை மைசூர் மன்னன் கைபட்டிருக்குமோ? அல்லது திருவாங்கூரனை கேரளத்தான் கெடுபிடிக்கு ஆளாகி இருக்குமோ?

ஆனாலும் இதுவரை சேதுபதி ராஜாக்கள் மதுரைக்கு தொல்லை தரவில்லை.

சேது நாட்டை ஆளும் இரண்டாம் சடையத்தேவர், வம்பு சண்டைக்குப் போகமாட்டார். வந்த சண்டையையும் விட மாட்டார். ஆயினும் மதுரை நாயக்கர் குலத்துக்குக் கப்பம் கட்டும் சிற்றரசனாக இதுவரை இருந்து வந்த சேதுபதிகளுக்குள் சற்றே வித்தியாசமாக தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டார். அதாவது இனி மதுரை நாயக்கர் குலத்துக்கு அடங்கி இருப்பதில்லை.

கப்பம் என்று கேட்டால் களத்தில் சந்திக்கத் தயார் என்பதே அந்தப் பிரகடனம்.

இதனை உத்தேசித்துத்தானே கங்கை நாச்சியை நாராயணத்தேவனுக்கு மணமுடிக்க விரும்பினார்.

ஒழுங்காகத் தூது அனுப்பவிருந்த அவரை நாராயணத் தேவனே முன்வந்து தூது செல்லத் தயாரானது விதி வசமோ? அன்றி விதியின் திருப்பு முனையோ?

எந்தக் கங்கைநாச்சியை நேருக்கு நேர் சந்தித்து அவளது அழகை ரசிக்க வந்தானோ, அதே கங்கை நாச்சியாரை விதி வசமாக சந்தித்துக் காதல் வயப்பட்டு, அதன் விளைவால் சிறைக் கோட்டத்துள் புக நேர்ந்தது.

இவர்களுடைய காதலை அறிந்து கொண்ட பெரிய நாயக்க மாதேவி மிக ரகசியமாகத் தலையிட்டு நாராயணத் தேவனையும் அவனுடன் வந்த அவன் நண்பன் வேலுத் தேவனையும் விடுவிக்கவில்லையென்றால்...

திருமலைநாயக்கருடைய சரித்திரமே தலை கீழாக புரண்டிருக்கும் என்பது அந்த ருத்ராபதியம்மாளின் கணிப்பு.

மாளிகையை அடைந்தது முதல் மனத்தைப் போட்டு பிசைந்து கொண்டவராய் உலவினார் தளவாய் ராமப்ப ஐயர்.

''என்ன ஒரு மாதிரியாக இருக்கேள்?'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்து நின்றுள் தளவாயின் அன்பு மனையாள்.

அந்த நேரம் பார்த்துதானு அவள் செய்தி விசாரிக்க வர வேண்டும்?

''போய் வேலையை பாரு! அரசியல் என்றிருந்தால் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும். பொம்மனுட்டிகள் அரசியலில் தலையிடுவது நல்லதல்ல. இது நாட்டுக்கு ஆபத்து. அரண்மனையிலும்இப்போது பொம்மனுட்டிகளின் தடபுடல் தர்பார் நடக்க ஆரம்பித்து இருக்கிறது. இது நாயக்கர் குலத்தை எங்கே கொண்டு போய்விடும் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீ போய் சமையல் வேலையைக் கவனி.''

பயங்கரமாக எரிந்து விழுகிறுர் தளவாய் ராமப்பஐயர்.

ஓ...அரண்மனையில் ஏதோ பெண்களால் ஏற்பட்ட அரசியல் பிரச்சினையின் காரணமாகத்தான் இவர் அக்கினி காபம் கொண்டு உலவுகிறுர் என்ற அளவில் விஷயத்தை ஒருவாறு யூகித்துக் கொண்ட ஐயரின் மனையாள் மடிசாறு சரசரக்க அடுக்களை நோக்கி நடந்தாள்.

அடுக்களையில் அவளுக்கு என்ன வேலை?

அங்கேதான் சமைப்பதற்கென்று ஒன்றுக்கு ஐவர் வேலை பார்க்கிறுர்களே!

மதுரை மாநகரின் காவல் பூதமான மகா சேனுபதியின் மாளிகையில் சேவகம் புரியவா ஆட்களுக்குப் பஞ்சம்?

ஆயினும் இல்லாள் கவனியாத இல்லம் இடுகாடு என்ற உண்மையை அறிந்தவள் தளவாயம்மாள்.

ஒவ்வொரு அடியிலும் ஒவ்வொரு கேள்விக்குறி எழுந்து நிற்க உலவிய தளவாய் ராமப்பய்யர், யாரோ வருவது கண்டு சற்றே நின்று கவனிக்கிறுர்.

வெளியே முத்துப் பல்லக்கு.

அமைச்சர் நீலகண்ட தீட்சிதர் வந்திறங்கி, உள்ளே நுழைந்து கொண்டிருந்தார்.

"வாரும் தீட்சதரே! என்ன திடீர் விஜயம்?" என்று கேட்டுக்கொண்டே வரவேற்கிறார் தளவாய் ராமப்பய்யர்.

உள்ளே வருகை புரிந்த அமைச்சர் நீலகண்ட தீட்சிதர் அருகில் இருந்த ஆசனமொன்றில் அமர்ந்தார்.

நீலகண்ட தீட்சிதர் வந்திருக்கிறார் என்ற செய்தி யறிந்து ஓடோடி வந்த தளவாய் சகதர்மிணி 'வாங்க, வாங்க!" என்று வரவேற்றாள். வெற்றிலை வாய் மண மணத்தது.

"தாகத்துக்கு என்ன சாப்பிடறேள்."

"சவுக்கியமாக இருக்கிறீர்களா?"

"சவுக்கியத்திற்கு என்னகுறைச்சல், பகவான் கருணை."

"சந்தோஷம். இப்ப எதுவும் வேண்டாம். புறப் படறச்சே சொல்றேன். ஒரு குவளை மோர் கொடுங்க போதும்."

நீலகண்ட தீட்சிதர் இவ்வாறு கூறியதைத் தொடர்ந்து ராமப்பய்யரும், ஏதோ முக்கிய விஷயமாகப் பேச வந்திருப் ·ணர்ந்து, "போய், இங்கே யாரையும் வரவிடாமல் . ததுக்க போதும்" என்றார் மனையாளிடம்.

அடுத்து —

வாயில் காவலனை அழைத்து கடுமையாக உத்தரவு பிறப்பித்தார்.

உண்மையிலும் ஒரு முக்கிய நோக்கம் பற்றியே பேச நீலகண்ட தீட்சிதர் வந்திருந்தார்.

"அமருங்கள் தளவாய்!" என்றார் நீலகண்டதீட்சிதர்.

தளவாயும் ஓரளவு படபடப்பு அடங்கி ஆசனத்தில் அமர்ந்தார்.

''தளவாய்! நான் பேச வந்தது உங்களுக்குப் புறம்பான விஷயமானாலும் தமிழர்கள் நன்மை கருதிப் பேச வந்திருக்கிறேன். நீங்கள் செய்த யுத்தங்களை இந்தத் தமிழகத்துக்குச் செய்ததாக நினைக்கிறேனேயன்றி, நாயக்கர் குல வளர்ச்சிக்காகச் செய்த சேவையாக என்றால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.''

நீலகண்ட தீட்சிதர் இவ்வாறு கூறிமுடித்ததும் மிகவும் வியந்து நோக்கினார் தளவாய் ராமப்பய்யர்.

''சொல்லுங்கள் தீட்சிதரே!''

''தளவாய்! நான் பிராமணனாகப் பேசவில்லை. ஓர் உன்னதத் தமிழனாகப் பேச வந்திருக்கிறேன். சிலர் பிராமணர் வேறு; தமிழர் வேறு என்று நினைக்கிறார்கள். அது அவர்களது அறியாமை என்று கூறி அவர்களை மன்னிப்போம். பிராமணர் என்பது ஒரு ஜாதியினர் என்பதாக நினையாத மடையர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். ஆனால் ஒரு பிரச்சனை அநியாயமாகத் தலை தூக்கியதை நீங்கள் அரண்மனையில் கவனித்து இருக்கலாமே!''

''என்ன பிரச்சனை தீட்சிதரே?''

''சிறிய நாயக்க மாதேவி சொன்ன சொற்கள். அவரது புதல்வி கங்கை நாச்சியை ஒரு வடுகனுக்குத் தாரை வார்த்து தந்தாலும் தருவார்களே யொழிய ஒரு தமிழனுக்கல்ல என்று நாத் தடிப்பாகச் சொன்ன வார்த்தைகள்.''

''அது அவர்கள் விருப்பம்.''

''அப்படி நீங்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆரம்பத்திலிருந்தே சிறிய மாதேவிக்கு தமிழர்கள் என்றால் ஒரே வெறுப்பு. அவர்கள் ஆளுவது தமிழகம்; உண்பது தஞ்சாவூர் அரிசி: இது புரியவில்லை, தளவாய்! இவர்கள் தமிழகத்தில் வந்து குடியேறி பலகாலம் ஆகியும் தெலுங்கு தேசப்பற்றில் சளைத்தவர்களாக இல்லை.''

''நமக்குத் தமிழ் தேசப்பற்று இல்லையா? அப்படித் தான்.''

''நாம் நமது வாசற்படியில் நின்று பற்றுக் கொள்கிறோம். அது நியாயம். ஆனால் சிறிய நாயக்க மாதேவியின் கொள்கை எந்த விதத்தில் நியாயம்? இந்தத் தமிழ் தேசம் பிற மொழியானுக்கு என்று அடிமையானதோ அன்றிலிருந்தே உருப்படாமல் வந்து கொண்டிருக்கிறது. நாமும் என்னதான் விசுவாசமாக நடந்து கொண்டாலும் தெலுங்கு அதிகாரிகளுக்கிருக்கிற கௌரவம் நமக்கு இல்லை. நமக்கில்லை என்று கூறியது தமிழர்களுக்கில்லை. நானும் நீங்களும் அரண்மனையின் கண்கள். எனவே மரியாதை இருக்கிறது. தளவாய்! ஒன்றை யோசனை செய்யுங்கள். நீங்கள் மறவர் நாடான சேது நாட்டைப் பகைத்துக் கொண்டு தான் ஆக வேண்டுமா?''

தளவாய் ராமப்பய்யருக்கு, சேது நாட்டுப் பேச்சை எடுக்கவே பச்சை மிளகாயைக் கிள்ளி நாக்கில் வைத்தது போல இருந்தது.

''சேது நாட்டுப் பேச்சு இங்கு வரக் காரணம் என்ன தீட்சிதரே?''

''எப்போது தமிழ் ரத்தத்தை கேவலமாகச் சிறிய மாதேவி பேசினார்களோ, நாம் கங்கை நாச்சியின் காதலை வளர விட்டால் என்ன?''

கூர்ந்து நோக்குகிறார் நீலகண்டதீட்சிதர்.

தளவாயும் மீசையை நீவி விட்டு, ''இல்லை! எப்படியும் சடையத்தேவன் மடியில் கை போடுவேன்!'' என்றார்.

நீலகண்ட தீட்சிதர் அரண்டு போனார்.

''தீட்சிதரே! நீங்கள் சொன்ன தமிழன் கொள்கையை ஆதரிக்கிறேன். ஆனால் சேதுபதிகள் விஷயத்தில் அல்ல; தளவாய் ராமப்பய்யரின் வைரிகள். இதே மதுரை

இளவரசி கங்கை நாச்சியார் வேறு தமிழ் வாலிபனைக் காதலித்து இருந்தால் அதற்காக எனது சர்வ வல்லமை களையும் பயன்படுத்தி முடித்துக் காட்ட முனைவேன். ஆனால் எனது பரம வைரியைக் காதலித்து விட்டாள். இந்தக் காதலுக்கு நானே பகைவன்!''

அதிர்ந்து போனார் அமைச்சர் நீலகண்ட தீட்சிதர்.

அது தளவாய்க்கும் புரிகிறது.

''தீட்சிதரே! சிறிய நாயக்க மாதேவி சொன்னதா லேயே நாம் நாயக்க குலத்தை நயக்குறைவாகப் பேசக் கூடாது; எடை போட்டு விடக்கூடாது. நமது மன்னர் திருமலை நாயக்கர் செய்த தொண்டுகளை நினைவில் கொள்ள-வேண்டும். இந்த மதுரையை அவர் கலைப் பூமியாக்கியிருக் கிறார். மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்கு அவர் செய்த சேவையை ஒருகணம் எண்ணிப் பாருங்கள். சிறிய நாயக்க மாதேவி ஒரு இனவெறி பிடித்தவர்கள் அதே நேரத்தில் பெரிய நாயக்கமாதேவி இந்தத் தமிழர்கள்பால் அக்கறை கொண்டு தமது அரசமா கணவரைத் தூண்டி சேவை செய்ய அனுமதித்து இருக்கிறார்.''

''உண்மை, நான் ஒப்புக் கொள்கிறேன். இந்தப் பரந்த தமிழ் சாம்ராஜ்யம், உலகிலேயே நாகரிகத் தொட்டிலாக விளங்கியது. சேர, சோழ, பாண்டியர்களால் சிறப்பிக்கப் பெற்றது. அந்தத் தமிழ் அரச ரத்தமே குன்றி எங்கோ போய்விட்டது? இப்போது பெயர் சொல்லக்கூட ஒருவருமில்லை. பாண்டிய வமிசத்தில் எங்கோ கிளைவிட்டு எப்படியோ ஒரு மரபு தலை தூக்கி இருக்கிறதென்றால் அது மறவர் மரபு. அந்த சேது நாட்டு மரபை அழித்துத்தான் ஆகவேண்டுமா?''

''நான் அழிக்க வேண்டும் என்று சொல்லவில்லையே! அடிபணியத்தானே சொல்லுகிறேன்!''

''மறவன் மறுக்கிறானே!''

"தளவாய் ராமப்பய்யரின் அதிகாரத்தின் கீழ் எவனும் தலைதூக்கிப் பேசக்கூடாது."

ஒருகணம், ஒரே ஒரு கணம்....

நீலகண்ட தீட்சிதர் என்ன நினைத்தாரோ, "சபாஷ் தளவாய்!" என்று ஓங்கிக் குரல் கொடுத்துப் பாராட்ட முனைந்தார்.

தளவாய் ராமப்பய்யருக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏன் இந்த திடீர் சபாஷ்?

"எனது சபாஷுக்கான காரணம் புரியவில்லையா தளவாய்? சின்ன நாயக்க மாதேவியின் போக்கு எனக்கு எரிச்சலூட்டுவதாக இருந்தாலும் பெரிய நாயக்க மாதேவியின் பண்பு நிறைந்த தமிழ்ச் சேவையைக் கண்டு நாம் மகிழத்தான் வேண்டும். நீங்கள் சேதுபதிகள் விஷயத்தில் நிஜமாகவே வன்மம் கொண்டிருக்கிறீர்களா? அல்லது நமது மன்னருக்காக வன்மம் கொண்டு இருக்கிறீர்களா? என்பதைப் பூரணமாக அறிந்துகொள்ளவே நான் இங்கு வந்தேன்; தலைகீழாக பேசிப் பார்த்தேன். உங்கள் இரும்பான நெஞ்சை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. எனவேதான் என்னையுமறியாது சபாஷ் கூறியது."

மகாராஜதந்திரியான நீலகண்ட தீட்சிதர் அற்புதமாக நடித்துத் தமது பெயரில் ஏற்பட இருந்த சந்தேகத் தூசை மிக லாவகமாகத் தட்டி விட்டுக் கொண்டார்.

உண்மையில் அவர் பேசியது அவருக்கு முழுக்க முழுக்க உடன்பாடானது. எங்கே இது வேற்று ரூபம் கொண்டு விடுமோ என்று அஞ்சி அதன் காரணமாக அவர் இவ்வாறு ஏட்டைத் திருப்ப நேர்ந்தது.

சீ! இந்த ராமப்பய்யனுக்குத் தமிழ்ப் பற்றே இல்லை! என்று மட்டும் உள்மனம் நொந்து கொண்டது.

இருக்கிற ஒரே தளிர் சேதுபதி வமிசம்! அதுவும் அழிவதா? என்கிற கழிவிரக்கம் அவரதுநெஞ்சில் இருந்தது.

திருமலை நாயக்க மன்னரின் அருமந்த புதல்வி கங்கை நாச்சியாரின் காதலை எப்படியும் நிறைவேற்றியே ஆக வேண்டும் என்கிற சபதம் நெஞ்சில் ஆணிவேராக இறங்கியது.

தளவாய் ராமப்பய்யர் அதிர்ச்சியும் ஆச்சரியமுமாக நோக்குகிறார்.

ஓ... நீலகண்டன் தன்னைச் சோதிக்கவே வந்திருக்கிறான்.

வீரம், அறிவு முன் என்ன செய்யும் என்பதற்கு இரு வருமே உதாரணப் புருஷர்களாய் அப்போதைக்கு விளங்கினர்.

நீலகண்ட தீட்சிதர் எழுந்து கொண்டார்.

''அம்மணி! மோர் கொண்டு வரலாமே!'' என்று குரல் கொடுக்கிறார்.

சற்றைக்கெல்லாம் தளவாய் மனைவி மோர் கொண்டு வர, தீட்சிதர் பெற்றுப் பருகி முடித்தார்.

''ஆத்துல எல்லாம் சவுக்கியமா இருக்காளா?'' என்றாள் தளவாய் மனையாள்.

''எல்லாம் சவுக்கியம்'' என்று கூறிய நீலகண்ட தீட்சதரோ அடுத்து கொஞ்சமும் தாமதியாமல் தளவாய் ராமப் பய்யரிடமிருந்து விடைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

வீதிவாசல் வரை சென்று வழிகூட்டிவிட்டுத் திரும் பினார் தளவாய் ராமப்பய்யர்.

13

சேதுநாட்டு இளவல் நாராயணத் தேவன் கோட்டத்தில் இருந்து தப்பிவிட்டான் என்ற கேட்டு பெரிதாக மகிழ்ந்து போனாள் கங்கை நாச்சி.

ஓ... பெரியம்மா சொன்னது போல வாக்கை நிறைவேற்றி விட்டார்கள். இது போலவே காதலையும் நிறைவேற்றி வைப்பார்கள் என்பதில் அவளுக்குப் பரிபூரண நம்பிக்கை இருக்கிறது.

ஆ! பெரியம்மா என்றால் பெரியம்மாதான்...

அந்த நேரம் பார்த்து அறையினுள் நுழைந்தாள் மெய் அன்னையும் சிறிய நாயக்கமா தேவியுமான தொலியம்மாள். அவளது கண்கள் சிவந்து காணப்பட்டன.

தொலியம்மாள் இவ்வாறு சினம் கொண்டு வருகிற போது, பானுமதி கண்டு விட்டாள்.

ஓ... ஏதோ நடைபெற்றிருக்க வேண்டும். எதற்காக அக்காள் இவ்வாறு "கங்கைநாச்சி எங்கிருக்கிறாள்?" என்று அதட்டலுடன் கேட்டுப் பெண்புலி போலச் சீறி நடக்க வேண்டும்?

பானுமதிக்குத்தான் தொலியம்மாளின் குணச்சித்திரம் அத்துபடியாயிற்றே! திருமலை நாயக்கரின் இருநூறு மனைவியர்களுள் ஒருத்தியான பானுமதிக்கு பள்ளியறையைப் பொருத்தமட்டில் தனியான செல்வாக்கு உண்டு என்பது அனைவரும் அறிந்த உண்மை. அழகின் பெட்டகமாக விளங்கிய தமிழச்சியாயிற்றே!

பானுமதி என்ன நடக்கிறது என்பதையறியாமலே மெல்ல தொலியம்மாளைப் பின் தொடர்ந்து வந்தாள்.

எதிர்பாராத விதமாக நுழைந்த அன்னையைக் கண்டு எழுந்து கொண்டாள் கங்கைநாச்சி.

இருக்கிற எ நாட்கள் என்னவோ போலிருந்த கங்கை அழிவதா? எ ன்றைக்கு மட்டும் ஏதோ இனிப்பு வழங்கும் நாள் கொண்டாட்டம் போலக் காணப் திருமனே.

நாச்சியாரிடு வேண்டும் இறங்கிய ங்காரமான தோரணையும், அமர்க்களமான பட்டு படுக்கையும், சமர்க்களத்தில் வெற்றிகண்ட சக்கர ஐவ்வாது மணக்க, அரண்மனைப் பிரவேசம் செய்கிற தளகெம்பீரம்...

நோக்குகி .. நாராயணத்தேவன் சிறையிலிருந்து தப்பி விட் ஓ... என்கிற நல்ல செய்தி இவளை இப்படியெல்லாம் வீடிக் கொண்டிருக்கிறதோ?

வருடே விளங் ''என்னம்மா, திடீரென்று இங்கு வந்திருக்கிறீர்கள்?'' ஏறு வினவினுள் கங்கைநாச்சி.

தனது மகளேயானுலும், தகாத காதல் கொண்டவள் என்றெண்ணியதால் நெஞ்சில் கனன்ற நெருப்பு கண்களில் வெளிப்பட்டுக் கக்கியது.

போயும், போயும் தமிழ் அரசனையா இவள் காதலித்து விட்டாள்?

''என்ன திமிர் இருந்தால் சிறையிலிருந்த நாராயணத் தேவனையும் அவனுடைய நண்பனையும் தப்பிக்கச் செய்து இருப்பாய்?'' என்று படபடத்துக் கேட்டாள் சின்னப் பட்டத்து ராணியான தொலியம்மாள்.

ஒருகணம் உள்ளுக்குள் அயர்ந்தும் அதிர்ந்தும் போனுள் கங்கைநாச்சி. ஆயினும் வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

''என்னம்மா சொல்லுகிறீர்கள்?''

''சுரக்காய்க்கு உப்புமில்லை, சாரமும் இல்லை என்று சொல்லுகிறேன். அதாவது நீ காதலித்த சுரைக்காய்க்கு!''

மேலும் அயர்வும் அதிர்ச்சியும்...

ஆயினும், இப்போது நன்றாகவே சமாளிக்க வேண்டும் என்று உறுதி பூணுகிறாள். பெரியம்மாள் குறித்து பேச்சே வரக்கூடாது என்றும் எண்ணிப்பார்த்துக் கொள்கிறாள்.

''நான் காதலித்தேனா? என்னம்மா இது? நாராயணத் தேவனை தப்பிக்கச் செய்தேன் என்கிறீர்கள். காதல் என் கிறீர்கள். பைத்தியம் எதுவும் இல்லையே உங்களுக்கு?''

நெருப்பு மேலும் கனன்றது.

''ஏண்டி! என்னைப் பார்த்தா பைத்தியம் என்கிறாய்?''

''பின் என்ன? சிறைக்கூடம் எந்தத் திசையிலிருக் கிறது என்பதுகூட சரிவரத்தெரியாது. நான் தப்பிக்கச்செய் தேன் என்கிறீர்கள். ஏதோ என்னைக் காப்பாற்றி என்னிடம் பண்புடன் நடந்து கொண்டவர் நாராயணத்தேவன் என்ப தால் பரிந்து பேசியது வாஸ்தவந்தான். அதற்காக வரிந்து கட்டிக் கொண்டு என் மீது காதல் போர்வையைப் போர்த்துவது ஒரு தாய்க்கு அழகல்ல.''

''என்னையா எதிர்த்துப் பேசுகிறாய்?''

''மவுனம் சாதித்து ஒப்புக் கொள்ளச் சொல்லு கிறீர்களா?''

''வாய் அதிகம்தான்!''

''நீங்கள் வார்த்தைகளை அதிகமாகக் கொட்டு கிறீர்களே!''

''எனக்கு எல்லாமே தெரியும்.''

''நீங்கள் தெரிந்து வைத்திருப்பது ஒரு கட்டுக்கதை.''

''இதுவே உண்மையானால்?''

''யார் சொன்னது?''

''தளவாய் ராமய்யர்!''

கலகலவென்று சிரித்தாள் கங்கைநாச்சி,

''என்னடி சிரிப்பு?''

''ராமய்யரா? அவருக்கு ஏற்கனவே சேதுநாடு என்றால் எட்டிக் கசப்பு. இப்படி ஒரு கதை திரிக்கிறாரா? கற்பனை செய்து பார்க்கிறாரா? அவருடைய உத்தியோகத்தை யுத்தக் களத்தில் மட்டும் வைத்துக்கொள்ளச் சொல்லுங்கள் அம்மா! எனது வாழ்க்கைக் களத்துள் நுழைய வேண்டாம் என்று எச்சரியுங்கள். ஒருகால் நீங்கள் எச்சரிக்கத் தவறினால் நான் எச்சரிக்க நேரிடும்.''

மகளின் இந்த சுத்தியலால் அடிப்பது போன்ற பேச்சைக் கேட்டு, நெற்றிப் பொறியில் கலக்கம் கண்டாள் சிறிய நாயக்க மாதேவி தொலியம்மாள்.

''இவ்வளவும் உனக்கு யார் பேசக் கற்றுக் கொடுத்தார்கள்?''

''நான் என்ன அரைமுடி கட்டிக் கொண்டிருக்கும் ஆறுவயசு சிறுமியா?''

அப்போது 'க்ளுக்' கென்று சிரிப்பொலி கேட்டுத் திரும்பி பார்த்தாள் இளைய பட்டத்தரசி தொலியம்மாள்.

அங்கே—

பானுமதி நின்றுகொண்டிருந்தாள்.

கங்கைநாச்சியின் நகைச்சுவை பேச்சைக் கேட்டு தன்னை மறந்து சிரித்துவிட்டாள் பானுமதி.

ஆ!

தொலியம்மாளின் கண்களைப் பார்க்க வேண்டுமே!

இரு நெருப்புத் துண்டங்களாகவே தெரிந்தன.

''நீ எங்கே இங்கு வந்தாய்?''

''கங்கைநாச்சி வரச்சொன்னாள். எதுக்கு வரச்சொன்னாள் என்பதைக் கேட்டுச் செல்ல வந்தேன். நீங்கள் இங்கே

இருந்தீர்கள். கங்கைநாச்சி அரைமுடி என்று கூறவே சிரிப்பு வந்து விட்டது. மற்றபடி தவருக நான் சிரிக்கவில்லை அக்கா!''

பானுமதி உண்மையிலும் பயந்தே காணப்பட்டாள்.

தொலியம்மாள். என்ருல் அந்ததப்புரமே நடுங்குமே! பானுமதி எம்மாத்திரம்?

ஓ... இந்த கங்கைநாச்சியின் காதலுக்கு இவளும் ஒரு தூண்டுகோலாக இருக்கிருளோ! தமிழச்சி ஒரு தமிழ் அரச குமாரனை மணமுடிக்கத் தீர்மானிக்கிருளோ? சிறையிலிருந்து நாராயணத்தேவன் தப்பிச் செல்ல இவளும் உடந்தையாக இருந்திருப்பாளோ?

அந்தச் சில கணப்போதில் சிறிய நாயக்க மாதேவியான தொலியம்மாளுக்கு இவ்வாறெல்லாம் கற்பனை ஓடியது.

பானுமதியை இம்முறை பார்த்த பார்வையில் வித்தியாசம் இருந்தது.

''அவளுக்குக் காதலிக்க கற்றுகொடுத்தது நீ தானே?'' என்று அனல் பறக்க கேட்டாள் தொலியம்மாள்.

பானுமதி ஒரு கணம் பயந்தாலும் மறுகணம் துணிவை வரவழைத்துக் கொண்டு பதில் சொன்ஞள்:

''எனக்கே காதலிக்க தெரியாதே! நான்கு சுவருக்குள் இருந்தேன். இப்போது நான்கு தூண்களுக்கு மத்தியில் இருக்கிறேன்!''

எத்தனையோ அர்த்தங்கள் இந்தப் பதிலில் அடங்கிக் காணப்பட்டன.

''ஓகோ!'' என்ருள் தொலியம்மாள்.

அந்த 'ஓகோ'வில் எத்தனையோ பதில்களும் அடங்கிக் காணப்பட்டன. அவளது கண்கள் கங்கை நாச்சி பக்கம் திரும்பின.

"ஏம்மா என்னைப் பார்க்கிறீர்கள்? காதலிக்கத் தெரியாத அளவுக்கு மௌடீகமாக வளர்ந்துவிட்ட என்னைப் பானுமதி சித்தி அநியாயமாகக் கெடுத்து விட்டார்களே என்று பார்க்கிறீர்களா? நீங்களும் தளவாயும் நான் சேது நாட்டு இளவலைக் காதலிக்கிறேன் என்று கூறியே அந்தக் காதலுக்கு யக்ஞம் வார்த்துச் சூடுபிடிக்கச் செய்து விடுவீர்கள் போலிருக்கிறது!"

"கங்கை நாச்சி!"

"எதற்கம்மா கோபம்! இன்னும் கொஞ்சம் நேரம் போனால் பானுமதி சித்திதான் நாராயணத்தேவனை விடுவிக்கக் காரணம் என்று கூறி தண்டனை வாங்கிக் கொடுத்து விடுவீர்கள் என்று நினைக்கிறேன்."

"கங்கை நாச்சி!"

தொலியம்மாளின் கோபம் கணத்துக்குக் கணம் அதிகரிக்கவே, அங்கிருப்பது எவ்வழியிலும் ஆபத்து என்றுணர்ந்த பானுமதி புறப்பட்டுச் செல்ல "பானுமதி" என்று கர்ஜித்தாள் தொலியம்மாள்.

"என்னக்கா!"

"எங்கே போகிறாய்?"

"இங்கிருப்பது எனக்கு அவ்வளவு உசிதமாகத் தெரியவில்லை."

"ஜாக்கிரதை; என்னை உனக்குத் தெரியுமல்லவா!"

"நன்றாகத்தெரியும் அக்கா! சர்வ வல்லமை பொருந்திய பட்டத்தரசி என்பது மிக நன்றாகத் தெரியும். ஆனால் நான் அந்தப்புரப் பதுமையே ஆனாலும் தமிழ்ப்பதுமை. இது மற்றவர்களுக்கு நன்மை செய்யுமே தவிர தீங்கை எண்ணிக் கூடப் பார்க்காது என்பது மிக மிக நன்றாகத் தெரியும். வருகிறேன் அக்கா!"

பானுமதி விருட்டென்று அவ்விடத்தை விட்டு அகன்று விட்டாள்.

"ஏதோ சூது நடக்கிறது!" என்றுள் தொலியம்மாள்.

"நீங்கள் அநியாயமாகக் கற்பனை செய்து கொண்டிருக்கிறீர்கள் அம்மா! தளவாய் உங்களை நன்றுகவே குழப்பி விட்டார். ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நான் தொலியம்மாள் வயிற்றில் பிறந்தது உண்மை. திருமலை நாயக்க மன்னரின் ரத்தத்தில் பிறந்தவள் என்பது அதைவிட உண்மை. ஒரு காலத்தில் எனது தந்தை, சேது நாட்டு அரசர் இரண்டாம் சடையத்தேவரின் தங்கையும், நாராயணத்தேவனின் தாயுமான கங்கை நாச்சியார், இளமையாக இருந்தபோது அந்த அழகை கேள்விப்பட்டு ஒருதலையாகக் காதலித்தார். மணக்க ஆசைப்பட்டபோது, அப்போதிருந்த சேதுநாட்டு அரசர் கூத்தன் சேதுபதி மறுத்துவிட்டார். அந்தக் கூத்தன் சேதுபதியின் அருமந்த புதல்வியான கங்கை நாச்சியார் பெயரையே ஞாபகார்த்தமாக எனது தந்தை எனக்கிட்டிருப்பது மிகப் பேருண்மை."

அயர்ந்து போகிறுள் தொலியம்மாள்.

"ஏம்மா! நீங்கள் ஏன் இப்படிக் கற்பனை செய்து பார்க்கக் கூடாது? அப்பா ஒருதலையாகக் காதலித்த கங்கை நாச்சியாரின் திருமகன் நாராயணத்தேவன். அந்த விசுவாசத்தின் காரணமாக அப்பாவே அவரை ஏன் மறைமுகமாக விடுதலை செய்திருக்கக் கூடாது?"

ஒருகணம் பளிச்சென்று எங்கோ ஞாபகம் செல்லுகிறது தொலியம்மாளுக்கு! ஏனிப்படி இருக்கக் கூடாது?

ஆயினும் சமாளிக்கிறுள்.

"அப்படி இருந்தால் நாராயணத்தேவனிடமே உன்னை மணமுடிக்க அனுப்பிய தூதுவை நிராகரித்து அவனையே சிறையில் தள்ளியிருக்க மாட்டார். தூதுவை ஒப்புக் கொண்டிருப்பார்."

"ஏன்? உங்களுக்குப் பயந்து இக்காரியத்தைச் செய்திருக்கக்கூடாது? நீங்கள் தான் தெலுங்கு ரத்தத்தை விசுவாசிக்கிறீர்களே!"

சிறிது நேரம் மௌனமாக இருந்த தொலியம்மாள், ''ரொம்பவும் மீறிப் போய் விட்டாய்! உனது பெரியம்மாவின் செல்லம் உன்னைத் தலைவிரித்தாடச் செய்கிறது'' என்றாள்.

''தயவு செய்து பெரியம்மாளை இங்கு இழுக்க வேண்டாம். நீங்கள் தாய்; திருமலைப்பூபதி என் தந்தை. ஆனால் பெரியம்மாள் என் தெய்வம்!''

கங்கைநாச்சி அதற்கு மேல் தாயிடம் வாதாட விரும்பாது நேரே அறையினுள் சென்று மறைந்து விட்டாள்.

கோபம் தணியாது கொந்தளிப்புடன் நின்று கவனிக்கலானாள் சிறிய நாயக்கமாதேவி தொலியம்மாள்.

மூன்று தினங்கள் வரை இருந்த அந்தக் களேபரம் அடங்கியது.

மன்னர் திருமலை நாயக்கருக்கு மட்டும் ஒரு சந்தேகம் உறுத்திக் கொண்டே இருந்தது. சிறையிலடைத்த செய்தியை நிச்சயம் நாராயணத்தேவன் தனது அம்மானும், அரசனுமான சடையத்தேவனிடம் சொல்லப் போகிறான். அடுத்து யுத்தம் மூளப்போகிறது.

தளவாய் ராமப்பய்யரும் அதற்கு ஆயத்தமாக இருந்தார்.

ஆனால் பெரிய நாயக்க மாதேவியான ருத்ராபதியம்மாள் மட்டும் அமைதியாக இருந்தாள். நாராயணத் தேவனை விடுதலை செய்கிறபோது கேட்டுக் கொண்ட வாக்குறுதி நினைவுக்கு வந்தது.

சிறையிலடைபட்ட செய்தியை யாரிடமும் சொல்லக் கூடாது என்பது.

நாராயணத்தேவன் தனது காதல் பொருட்டு நிச்சயம் சொல்லமாட்டான். யுத்தம் மூளக் காரணமே இல்லை என்று மனத்துள் சமாதானம் செய்து கொண்டாள்.

ஓ...இவர்கள் காதலை நாம் ஏன் வளர்க்க வேண்டும் என்று முதலில் சிந்தித்த சிந்தனையை எண்ணிப் பார்க்கிருள் ருத்திராபதியம்மாள். நாராயணத்தேவனுடைய நேர்மை பிடித்திருந்தது என்பது ஒரு புறமாஞலும் செல்லமாக வளர்த்த கங்கைநாச்சி மனத்தைப் பறி கொடுத்துவிட்டாள் அதனை எப்படியும் முழுமை பெறச் செய்ய வேண்டும்.

பெரியம்மாள் கொடுத்த தைரியத்தில் கங்கைநாச்சியும் இல்லாத கனவுகளைக் கண்டு கொண்டிருப்பாள். இதனைக் கலைப்பது நல்லதல்ல. எதுவரினும் நாராயணத்தேவனுக்கே கங்கைநாச்சி என்று முடிவு செய்து கொண்டாள் ருத்திராதிபதியம்மாள்.

இந்த ரகசியம் யாவும் தெரிந்த பானுமதி ஏதேனும் உளறிக் கொட்டிவிடக் கூடாதே என்கிற அச்சமும் இருந்தது. சீ! அவளுக்கும் கங்கை நாச்சி மீது நம்மைவிட அதிகமான பற்று இருக்கிறது. ஒரு தமிழ் மகனுக்கு அவளைத் தாரை வார்ப்பதில் அவளுக்கும் பரிபூரண சம்மதம்தான் என்று பெருமூச்சு விட்டுக் கொண்டாள். பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மாள் நினைத்துப் பார்த்ததுபோல கங்கை நாச்சியும் நாராயணக் கனவு கண்டு கொண்டிருந்தாள்.

ஆ! அன்றிரவு மலைப்பகுதியில் அவர்தான் நாராயணத் தேவன் என்று நாமும் அறியவில்லை. நான்தான் கங்கை நாச்சி என்று அவரும் அறியவில்லை. தன்னை மணக்க தானே தூது வர, தெய்வ சங்கல்பமாகச் சந்திப்பு ஏற்பட அதுவே அவரை சிறைவரை கொண்டு சென்று விட்டது.

பெரியம்மாள் உதவி இராவிட்டால்...

வலக்கையின் புறப்பக்கமாக முத்தம் கொடுத்துக் கொள்கிருள்.

இந்த இடத்தில்தானே அவர் முத்தம் கொடுத்தார்!

இனிப்பது போல ஒரு பிரமை...

மெய்மறந்து மேனிசிலிர்க்க கண்களை மூடிக்கற்பனை செய்து பார்க்கிறாள்...

அந்த இளமை நிறைந்த வீரத்தோற்றமும், பொலிவு நிறைந்த முக விலாசமும், கனிவு நிறைந்த பார்வையும், கற்கண்டு உதடும்...

ஓ...நாராயணத்தேவா...

14

சேது நாட்டையடைந்த நாராயணத்தேவன் இரு தினங்கள் வரை அமைதியாக ஓய்வெடுத்துக் கொண்டான்.

மதுரைக்கு சென்ற திருமணத் தூது குறித்து எவ்வளவு குடைந்து கேட்டும் சரியான பதில் தரவில்லை.

ஏதோ நடந்திருக்கிறது என்பது மட்டும் சேதுபதியான தளவாய் சடையத்தேவருக்குப் புரிந்தது.

உடன்சென்று திரும்பிய வேலுதுரையும்கூட நடந்ததை விவரிக்கவில்லை. விவரிக்கக் கூடாது என்பது மதுரை மகாராணியார் ருத்திராபதி தேவியாரின் வாக்குறுதி யாயிற்றே! மீறலாமா?

திருமணத் தூது சுமுகமாக நிறைவேறவில்லை என்றும், வடுக ரத்தம் மறவர் ரத்தத்துடன் சம்பந்தம் வைத்துக் கொள்ளாது என்கிற அளவில் மட்டும் சேது நாட்டு இளவல் நாராயணத்தேவன் சொல்லியிருந்தான். இதனையே உடனி ருந்து ஒத்து ஊதினான் நண்பன் வேலுத்துரை.

இதற்கிடையில் சேது நாடான மறவர்ச் சீமையில் ஒரு சிறு குழப்பம் பொறியாய் எழுந்து நெருப்பாகப் பரவியது.

அது—

முன்னம் சேதுநாட்டை ஆண்டவர் காலம் சென்ற கூத்தன் சேதுபதி.

சேதுநாட்டுக்கு அவர் தமது தந்தையாரான முதலாம் சடையத்தேவருடனிருந்து மிகப்பெரிய தொண்டாற்றி யிருக்கிறார்.

அதன் பிறகு அவர் ஏறத்தாழ பதினான்கு ஆண்டுகளே ஆட்சி புரிகிறபோது, சிறியதாய் இருந்த ராமேஸ்வரம் கோவிலைப் பெரியதாகவிஸ்தரித்துப் புனருத்தாரணம்செய்த பெருமைக்கு ஆளானார். அவரது காலத்திற்குப் பிறகே ஆட்சிக்கு வந்தார் அவருடைய வீரமைந்தன் இரண்டாம் சடையத்தேவர்.

போரில் முன்னின்று வீர சாகசம் புரிந்ததாலும், தகப்பனார் காலத்தில் போர்த்தளபதியாக இருந்ததாலும் இவருக்கும் 'தளவாய்' விருது பொருந்துவதாயிற்று. அப்பேர்ப்பட்ட சேதுபதிக்கு ஆண்டவன் புத்திர சந்தான மளிக்கவில்லை. இரண்டு பட்டத்தரசிகள் இருந்தும் இது வரை ஏற்படாத புத்திர சந்தானம் இனிமேலா ஏற்படப் போகிறது என்று உறுதி பூண்டு, தமது உடன் பிறந்த தங்கையான கங்கை நாச்சிக்குப் பிறந்த இரண்டு மகன் களில் மூத்தவனான ரகுநாதனை வாரிசு உரிமையாக்க எண்ணி, அதுகுறித்து செயல்படவும் முனைந்தார்.

ரகுநாதனின் தம்பிதான் நாராயணத்தேவன்.

இதற்கிடையில்—

இந்த இரண்டாம் சடையத்தேவரின் தந்தையான கூத்தன் சேதுபதிக்கு அந்நாளில் ஒரு வைப்பாட்டி இருந் தாள். அவளுக்கும் ஒரு மகன் பிறந்திருந்தான். அவன் தான் தம்பித் தேவன்.

அரண்மனையில் அவனுக்கு அவ்வளவாகச் செல்வாக் கில்லாவிட்டாலும் அவனுக்கான சில ஏற்பாடுகளை கூத்தன் சேதுபதி காலத்திலேயே செய்து முடித்து விலக்கி வைத்திருந் தார்கள்.

இப்போது—

அண்ணனான சடையத்தேவர், மகப்பேறில்லாததால் நியாயப்படி அரசுரிமையைப் பிற்காலத்தில் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ரகசியப் போர்க்கொடி தூக்கி வந்தான்.

இது சடையத்தேவருக்குத் தெரிய வரவே, வைப்பாட்டி மகன் அரசுரிமை கோருவது என்ன நியாயம் என்கிற நினைவில், தமது தங்கை கங்கை நாச்சியாரின் மூத்த புதல்வனை வாரிசாக்கிப் பிரகடனப் படுத்தும் நாளையும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நேரத்தில் மதுரை நாயக்க மன்னரான திருமலை பூபதியின் பகை கூடாது என்றெண்ணித்தான், திருமண உறவு கோரி தூது அனுப்பியது. அந்தத் தூது தளவாய் ராமய்யரால் முறிந்தது, எதிர்பாராதது.

தந்தையாரின் வைப்பாட்டிப் புதல்வனான தம்பித் தேவனின் கொட்டத்தை எவ்வாறு அடக்குவது?

சடையத்தேவருக்குப் பெருத்த கேள்விக்குறி. ஆயினும் தமது மருமகனான—நாட்டின் சேனாதிபதியான—தங்கை கங்கை நாச்சியாரின் கணவரான வன்னியத்தேவரிடம் முழுப் பொறுப்பை ஒப்படைக்கிறார்.

அடுத்தவாரம் ரகுநாதனை சுவீகாரம் எடுத்துப் பிரகடனப்படுத்த போகிறார்.

நாட்டில் யார் குழப்பம் செய்தாலும் வெட்டி வீழ்த்து மாறு கடுமையான ஆணை பிறக்கிறது.

தம்பித்தேவன் செய்வதென்னவென்று புரியாது, மதுரை திருமலை நாயக்கரிடம் தஞ்சம் புகுந்து, காலில் விழுந்து சேது நாட்டின் பாதிப் பகுதியையாவது பெற்றுத் தர மன்றாடப் புறப்பட்டு விட்டான்.

குறித்த நாளில், நாராயணத்தேவனுடைய அண்ணன் ரகுநாதன்தான் அடுத்த வாரிசு என்கிற பிரகடனம் சேது நாடு முழுவதும் ஒலிக்கத் தொடங்கியது.

இந்த மாபெரும் நிகழ்ச்சி முடியட்டும் என்று காத்திருந்த நாராயணத்தேவன், அடுத்து தனது காதலி— மதுரை இளவரசி கங்கைநாச்சி குறித்து ஆலோசிக்கத் தொடங்குகிறுன்.

சேதுபதியரண்மனைக்குத் தெற்கே இருந்த நந்தவனத்துள் நாராயணத்தேவனும் நண்பன் வேலுதுரையும் நுழைந்தனர்.

மாலைக்கதிரவன் மலையமாருதம் பாடிக் கொண்டிருக்கிறுன்.

“வேலு! மதுரையில் இன்ஞெரு குழப்பம் இப்போது நடந்து கொண்டிருக்கும். அது மதுரை நோக்கிச் சென்றிருக்கும் தம்பித்தேவருடைய குழப்பம். இதனைச் சாக்காய் கொண்டு ராமப்பய்யனும் குதிக்கலாம் அல்லவா?” என்றுன் நாராயணத்தேவன்.

வேலுதுரை பதில் ஏதும் சொல்லாது நடந்து கொண்டே இருந்தான்.

“என்ன வேலு! நான் பேசியதற்கு கருத்தைத் தெரிவிக்காமல் நீ நடந்து வந்து கொண்டிருந்தால்?”

“சேது குமாரா! எனது ஞாபகம் முழுவதும் மதுரை பெரிய நாச்சியார் ருத்திரபதியம்மாள் மீது இருக்கிறது. வாக்குறுதி வழங்கியவர்கள் அவர்கள். ஆனுல் இதுவரை எந்தச் செய்தியும் வரவில்லை. அவர்களும் ஒரு நாடகமாடி விட்டார்களோ என்று ஐயப்படுகிறேன்.”

ஒரு கணம் நின்று ஆலோசிக்கிறுன் நாராயணத் தேவன்.

“சி, சி! அவ்வாறு இருக்காது. நம்மை ஏன் சிறையிலிருந்து விடுதலை செய்ய வேண்டும்?”

“அநியாயமாக மறவர் பகையைச் சம்பாதிக்கக் கூடாது என்றும் எண்ணியிருக்கலாம் அல்லவா?”

சற்று மருண்டு நிதானமாகவே சிந்தித்தான் நாராயணத்தேவன்.

ஓ... அவ்வாறு இருக்குமா?

அவ்வாறு இருக்குமாயின் கங்கைநாச்சியை மறப்பதா?

"ஒரு கால் அவ்வாறு இருக்குமாயின்?" என்று இழுத்தான் நாராயணத்தேவன்.

"அதுதான் எனக்கும் புரியவில்லை."

"இது புரியவில்லையா? பேசாமல் கங்கைநாச்சியைச் சிறையெடுக்க வேண்டியதுதான்."

"சேது குமாரா!"

"அந்த அளவுக்கு நான் துணிந்து விடுவேன்!"

"எண்ணித் துணிக கருமம்.'

"எப்போதோ எண்ணித் துணிந்துவிட்ட விஷயம் இது. வேலு! நான் இதுகுறித்து மாமாவிடமே பேச எண்ணியிருக்கிறேன்."

"ஐயய்யோ! அரசரிடமா? கூடவே கூடாது. பேசாமல் உங்கள் அன்னையாரைக் கலந்து அவர்கள் மூலம் தந்தையார் வன்னியத்தேவருக்குச் சென்று அவர் மூலம் அரசர்க்குத் தெரிவது சிலாக்கியமானதாகும்."

"நல்ல யோசனை. நானும் ஒரு யோசனை சொல்வேன். நீயும் ஒப்புக்கொள்ளவேண்டும். என்னால் கங்கைநாச்சியைப் பாராது இனியும் இருக்க முடியாது. ஆகவே நீ இன்றிரவே மதுரைக்குப் புறப்படுகிறாய்."

"மதுரைக்கா? நானா? எதற்காக சேதுகுமாரா?"

"நீ மதுரை சென்று எப்படியாவது உயிரைப் பணயம் வைத்தாவது பெரிய நாயக்கமாதேவியாரைச் சந்திக்கிறாய். அடுத்து கங்கைநாச்சியையும் சந்திக்கிறாய். அங்கிருந்து கொண்டே தகவல் அனுப்புகிறாய். நான் புறப்படுகிறேன்."

''சிறையெடுக்கவா?''

''தேவையானுல் அது நடந்தே தீரும்.''

''இங்கே எதிர்ப்பு ஏற்பட்டால்?''

''நான் அம்மாவைச் சரிகட்டிக் கொள்கிறேன். அம்மா மறுத்தாலும் யார் மறுத்தாலும் இந்தச் சிறையெடுப்பு நடந்தே தீரும்.''

நந்தவனத்துப் பூங்காற்று நாராயணத்தேவனேத் தழுவி முத்தமிடுவது போலிருக்கிறது.

இருவரும் அரண்மனே நோக்கிப் புறப்பட்டனர்.

''வேலு! தக்க வீரர்களுடன் இன்றே புறப்படுகிருய்; போகும் வழியில் ஆஞ்சநேயர் கோயில் தென்படும். அங்கே கற்பூரம் ஏற்றி வணங்கிச்செல்!'' என்ருன் நாராயணத் தேவன்.

அதன் அர்த்தம் புரிகிறது. மதுரை நினேவுக்கு வருகிறது. அவன் சிரித்துக்கொண்டான்.

இருள் நன்ருகவே கவிந்து இருந்தது.

சேதுநாட்டு அரண்மனேக்கு ஒட்டிஞற்போல இருந்தது அந்த மாளிகை.

அது தங்கைக்காக சீதனமாகத் தந்த மாளிகை. அந் நாளேயில் சிலர் அதனே சீதனமாளிகை என்றும் கூறுவர்.

நாராயணத்தேவன் மாளிகையில் நுழைகிற போது அப்பா வன்னியத்தேவர் அங்கில்லே. ஒரு சின்ன ஆறுதல்.

அண்ணன் ரகுநாதன் இப்போது அரண்மனேயின் சுவீகாரப் புத்திரன். இனிமேல் அவனது வாசஸ்தலம் அரண்மனே.

இது நல்ல நேரம். இப்போதே அம்மாவிடம், மதுரை இளவரசி கங்கை நாச்சியைப் பற்றிய பேச்சை ஆரம்பிக்க

வேண்டியதுதான் என்று முடிவு செய்து கொண்டு மேன் மாடம் நோக்கி நடந்தான்.

கீழே பணியாட்கள் இருந்தனர்.

அப்போதுதான் மாலைப்பூஜையை முடித்திருந்த அன்னை கங்கைநாச்சியார், மாணிக்கவாசகப் பெருமானின் திருவாசகத்தை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தார். திருவாசகத்துக்கு மிஞ்சி ஒருவாசகமேது?

''அம்மா!''

குமாரனின் குரல்.

ஓலைச்சுவடியை விரல் இடுக்கில் பிடித்துக் கொண்டே அண்ணாந்து கவனிக்கிறாள் கங்கைநாச்சியார்.

அருகில் வந்த நாராயணத்தேவன் கீழே விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளத்தில் பதவிசாக அமருகிறான்.

''என்னடா நாராயணா?''

அவன் தயங்குகிறான்.

''என்ன ஒரு மாதிரியாக இருக்கிறாய்? அண்ணனுக்குக் கிடைத்த சுவீகாரம் மாதிரி உனக்கு எங்காவது கிடைக்கக்கூடாது என்று தயங்குகிறாயா?''

''ஐயோ, அம்மா! எனக்கு அந்த பொறாமையே கிடையாது. அண்ணன் இந்த சேது நாட்டை ஆளுவது, நானே ஆண்டு கொண்டிருப்பதுபோல. சேதுநாட்டு ராஜ மகுடம் அண்ணன் பாலிருந்தால் என்ன? என்னிடம் இருந்தால் என்ன?''

''பின் ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? அடிக்கடி ஒரு தயக்கத்துடன் நடமாடிக் கொண்டிருக்கிறாய்? நானும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.''

நாராயணத்தேவன் ஏதும் பதில் கூறவில்லை. இதுவரை ஏற்படாத ஒரு நினைவு அவனது நெஞ்சில் நிழலாகப் படிகிறது.

தனது அன்னை கங்கை நாச்சியாரின் அழகையும் மதுரை இளவரசி கங்கை நாச்சியின் அழகையும் ஒப்பு நோக்கி எண்ணிப் பார்க்கிறான்.

மறவர் குடிக்கே உரித்தான திரண்ட தேகமும், விலை மதிக்க முடியாத கறுப்பு முத்தைப் போன்ற நிறமும் பிரகாசமான வீரமுகமும் அன்னையின் தோற்றத்தையே கம்பீரமாக்குகின்றன...

மதுரை இளவரசி கங்கை நாச்சியோ வடுக குலத்துக்குரிய சிவந்த மேனியும், செங்கமல முகமும் சீரிய தோற்றமும்...

ஓ...எப்படிப் பார்த்தாலும் தோற்றமும் முகமும் ஒரே சாயலாக...

நிற வேறுபாட்டை நீக்கிப் பார்க்கிறபோது...

ஆ! இப்படி இருக்குமா?

திருமலை நாயக்கர் தமது அன்னையை நெஞ்சில் நிறுத்தி இருந்த காரணத்தினால் ஏற்பட்ட பாதிப்பு அல்லது பிரதி பலிப்பாக இருக்குமோ?

சே!

ஒரு மகன் நினைத்துப் பார்க்கக் கூடிய எண்ணமா இது?

ஒரு கணம் நாணப்பட்டு மறுகணம் இதில் என்ன தவறு? நடந்த விஷயம்தானே என்று நினைத்து தேற்றிக் கொள்ளவும் செய்கிறான்.

அன்னை மீது என்ன தவறு?

திருமலை நாயக்கன் என்கிற ஒரு மன்னன் மதுரையை ஆளுகிறான் என்கிற செய்தி மட்டுமே அறிவாளேயொழிய வேறு என்ன அறிந்தாள்?

திருமலை நாயக்கன்தானே அன்னையை ஒரு காலத்தில் ஒரு தலையாக நெஞ்சில் இறுத்திக் காதலித்துப் பார்த்தார். அது நடைபெறாமல் போகவே அதே எண்ணத்தில் மூழ்கி

யிருந்திருக்கிறார், திருமலை நாயக்க மன்னர்! அப்போது ஒரு பெண் மகவு சிறிய நாயக்க மாதேவி தொலியம்மாளுக்கு பிறக்கவே அந்தப் பெண் மகவுக்கு ஒருதலைக் காதல் நினைவாக கங்கை நாச்சி என்ற பெயரைச் சூட்டி இருக்கிறார்...

இப்போது விதி அந்த கங்கை நாச்சியை என்னுடன் பிணைத்து வேடிக்கை பார்க்கிறது...

இது இருதலைக் காதலானாலும் இறுதி என்னாகுமோ? அந்த விதிக்கே வெளிச்சம்!

''என்னடா நாராயணா? வெகு நேரம் பிரமித்து கவனிக்கிறாய்?''

அன்னை கங்கை நாச்சியார் குரல் கேட்டு தனது சுய நினைவுக்கு வருகிறான் நாராயணத்தேவன்.

''ஒன்றுமில்லையம்மா! நினைவு மதுரைக்கு போய் விட்டது.''

''மதுரைக்கா?''

''அம்மா! இது வரை நான் யாரிடமும் சரியான பதிலைக் கூறவில்லை. இப்போது உங்களிடம் மனம் திறக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.''

மகன் ஏதோ கூறப்போகிறான் என்றறிந்து செவி மடல்களை நன்றாகத் திறந்து கொள்கிறாள் அன்னை கங்கை நாச்சியார்.

''என்ன சூழ்நிலை நாராயணா?''

''மதுரை இளவரசி கங்கை நாச்சியை நான் பார்த்தேன்!''

''பார்த்தாயா? எப்படி இருக்கிறாள்?''

''பார்த்தேன்; பேசினேன்; பழகினேன்!''

அதிர்ந்து போனாள் அன்னை கங்கை நாச்சியார்.

''நிறத்தில் வேறுபாடு இருக்கிறதேயொழிய மற்றப்படி தோற்றத்தில் ஓரளவு ஒற்றுமை அம்மா!''

''நீ எப்படி அவளை சந்தித்தாய்?''

''அது ஒரு விசித்திரமான கதையம்மா! அவளை மணக்க நானே தூது செல்கிற போது, நமது ஒற்றர்களும் அவர் களது தலைவனுமான மலையப்பனும், கோயிலுக்கு வந்த மதுரை இளவரசியை கடத்தி வந்து ஒரு காட்டில் பதுக்கி வைத்து, பகையுணர்வின் காரணமாக மானபங்கம் செய்ய விருந்தார்கள். நல்ல வேளையாக நான் அங்கு சென்று விடவே காப்பாற்ற நேர்ந்தது.''

''முருகா!''

''முருகன்தான் காப்பாற்றினுன் அம்மா! பிறகு நாங் களிருவரும் அந்தக் காட்டில் தனித்து பொழுது விடிகிற வரை இருந்தோம். அப்போதுதான் அவளது குணநலன் களை தெரிந்து கொள்ள நேரிட்டது. ஒரு நெருப்பாகவே அவள் நடந்து கொண்டாள். எங்களிருவரிடையே அந்த ஓரிரவு ஓராயிரம் இரவுகளை சந்தித்த பழக்கத்துக்கு ஆளாக்கி விட்டது. மறுநாள் காலையில் நண்பன் வேலுத் துரையின் மூலமாக அவளைப் பத்திரமாக அரண்மனையில் சேர்த்தேன். ஆனுல் நடந்தது...?''

''என்ன நடந்தது நாராயணு?''

அன்னையின் கேள்வியில் பதற்றம் தெரிந்தது.

''நான்தான் கடத்திச் சென்றேன் என்கிற சந்தேகம் ஏற்பட்டு மன்னரும் தளவாய் ராமப்பய்யரும் என்னை அவமான படுத்தி விட்டார்கள். நாங்கள் சென்ற காரியம் இப்படி ஆகிவிட்டதே என்று எண்ணி திரும்பி விட்டோம்.''

நாராயணத்தேவன் அம்மட்டே கூறி நிறுத்திவிட்டான். அதன் காரணமாக அவர்களை தளவாய்ராமப் பய்யர் சிறை யில் அடைத்ததையும், மதுரை இளவரசி கங்கை நாச்சி, தனது பெரியம்மாளிடம் முறையிட்டதையும், சிறைக்கு வந்து சந்தித்ததையும், பிறகு பெரிய நாயக்க மாதேவியே சிறைக்கு வந்து விடுவிக்க முயன்றதையும் மறைத்து

விட்டான். சொல்லக்கூடாது என்பது பெரிய நாயக்க மாதேவியின் சத்திய வாக்காயிற்றே!

பிரமித்து போய் விட்டாள் அன்னை கங்கை நாச்சியார். இவ்வளவு நடந்து இருக்கிறதா?

''கங்கை நாச்சி உண்மையில் உன்னை நேசிக்கிருளா, மகனே?''

''நான் புறப்படுகிறபோது என்னுடன் தொடர்ந்து வரவும் தயாராக இருந்தாள்.''

''அப்படியா?''

''மன்னருக்குகூட ஒரு சிறு அபிப்பிராயம் இருந்தது. சேது நாட்டோடு தொடர்பு வைத்துக் கொள்ளலாமா என்கிற அபிப்பிராயம்தான். தளவாய்•ராமப்பய்யன்தான் பிடிவாதமாக இருந்து விட்டான். சிறிய நாயக்க மாதேவிக்கு தமிழர்கள் என்ருல் எட்டிக் கசப்பு.''

''ஓகோ! பெரிய நாயக்கமாதேவி?''

சற்றே தயங்கினுன் நாராயணத்தேவன். பிறகு சொன் ஞன்: ''பெரிய நாயக்க மாதேவியின் அன்புக்கு பாத்திர மான மகள் கங்கை நாச்சி. எனவே மணத் தொடர்பில் அவர்களுக்கு பூரண சம்மதம் என்று தோன்றுகிறது.''

''அது எப்படி உன்ஞல் சொல்ல முடியும்?''

''எல்லாமே கங்கை நாச்சி சொன்னதுதான்!''

''நாஞ?''

அவன் சிரித்துவிட்டான்.

''மதுரை இளவரசி அம்மா!''

''அதானே கேட்டேன!''

அன்னையே சிரித்து விட்டாள்.

''அம்மா! மதுரை மன்னர் ஒரு காலத்தில் உங்களை மணக்க இருந்ததும், அதன் ஞாபகமாகத் தமது மகளுக்கு

உங்கள் பெயரை இட்டதும் மதுரை இளவரசி கங்கைநாச்சி சொன்னாள். இப்போது விதியின் விருப்பம் போல இப்படி ஒரு தொடர்பு ஏற்படவே, ஏன் மதுரை கங்கை நாச்சி. மறவர் குல கங்கை நாச்சியாரின் மகனை மணக்கக் கூடாது என்கிற அபிப்பிராயம் ஓரளவு மன்னருக்கும், பேரளவு பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மாளுக்கும் ஏற் பட்டது. ஆனால் தளவாய்ராமப்பய்யன் பிடிக்கும் பிடிவாத மான சண்டித்தனத்தைக் கண்டு மதுரை அரண்மனையே பயப்படுகிறது.''

நாராயணத் தேவன் இவ்வாறு சொல்லி முடித்ததும், அதுவரை அங்கு வந்து நடப்பதை மறைவிலிருந்து கவனித்த சேதுபதி தளவாய் சடையத்தேவர், ''இதன் மூலம் ராமப் பய்யனை அடக்கி, அவனது கொட்டத்தை ஒடுக்க வேண்டு மென்றிருந்தால் நடக்கட்டும்.'' என்று கூறிக் கொண்டே உள்ளே நுழைந்தார். அவருடன் வன்னியத்தேவரும் இருந்தார்.

எதிர்பாராத இவர்கள் வருகையைக் கண்டு ஒருகணம் அதிர்ந்து போனான் நாராயணத்தேவன்.

அன்னையும் மகனும் எழுந்து நின்று மரியாதை செய் தனர்.

சேதுபதி சொற்களின் மூலம் ஒருவாறு தேற்றம் கண்டான் நாராயணத்தேவன்.

''நாராயணத் தேவா! நீ சொல்லி வந்தவை யாவும் உண்மையா?''

அவன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தலை யசைத்தான்.

''அவ்வாறானால் மீண்டும் தூது அனுப்பிப் பார்ப்போம். இம்முறையும் மறுக்க நேரிட்டால்...''

சேதுபதி சடையத்தேவர் சொல்லி முடிக்குமுன் சேது நாட்டின் சேனாதிபதியும் நாராயணத்தேவனின் தந்தையு

மான வன்னியத்தேவர் இடைமறித்துக் குறிக்கிட்டுச் சொன்னார்: "நிச்சயமாக மறுக்க நேரிடும். காரணம், நமது காளான் தம்பித்தேவன் வேறு மதுரை நோக்கிச் சென்றிருக்கிறார். ராமப்பய்யனுக்கு இது ஒரு தருணமாகத் தோன்றும். இதை வைத்தே...வம்புக்கு இழுக்கலாமா என்று யோசிக்கிற போது நமது தூது இரண்டாம் முறையாகச் சென்றால் அவமானப்பட்டுத்தான் திரும்பவேண்டும்."

தந்தையாரின் இந்தப் பதிலைத் தொடர்ந்து நாராயணத் தேவன் பேசினான்: "அதற்கு அவசியமே இல்லையப்பா! இந்நேரம் நண்பன் வேலுதுரை தக்க துணைவர்களுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டிருப்பான். அங்குசென்று கங்கை நாச்சியைச் சந்தித்து விவரம் கேட்டு அனுப்பச் சொல்லி யிருக்கிறேன். சுமுகமாக முடியட்டும். இல்லையென்றால்..."

"இல்லையென்றால்?"

"கங்கை நாச்சியைச் சிறையெடுப்பதாக முடிவு செய்திருக்கிறேன்."

அன்னையும் தந்தையும் அரண்டு போய் கவனிக்கிறார்கள்.

ஆனால் சேதுபதி சடையத்தேவர்?

"சபாஷ்!" என்று பாராட்டி நாராயணத்தேவனை தட்டிக்கொடுத்தார். "நீ நிஜமானமறவனடா நாராயணத் தேவா!"

அம்மானின் இந்தப் பாராட்டு உச்சிகுளிரச் செய்தது நாராயணத்தேவனுக்கு.

தளவாய் சடையத்தேவர் மேலும் உச்சிக்குளிர சில வார்த்தைகளைத் தூவினார்: "நீயும் இன்றிரவே புறப்பட்டு மதுரைக்குச் செல்கிறாய். வேலுதுரையுடன் சில வீரர்களை யும் ஒற்றர்களையும் கொண்டு செல்கிறாய். அங்கே வந்திருக் கும் தம்பித்தேவன் நிலைமை என்ன என்பதை அறிகிறாய். உடன்பாடு சரியில்லையானால் மதுரை இளவரசியான அந்த

கங்கை நாச்சியைச் சிறையெடுத்து வந்து இந்தக் கங்கை நாச்சியாருக்கு மருமகளாக்குகிறாய். இதன் மூலம் ஒரு மகா யுத்தமே மூளுமானால். மறவர் வலிமையை வடுகன் உணர்ந்து கொள்ளட்டும். அத்துடன் அந்த வீர பிராமண னும் புரிந்து கொள்ளட்டும்.''

வீர உணர்ச்சியுடன் கர்ஜித்தார் அம்மான் சடையத் தேவர். . மேலும் குளிர்ந்து போனான் சேது இளவல் நாராயணத்தேவன்.

15

தம்பித்தேவன் வருகை, வானத்தில் செல்லும் சனியனை ஏணி வைத்து இறக்கி வீட்டுக்குள் விஜயம் செய்யவிட்டது போன்ற உணர்வுடன் தவிதவிக்கலானாள் நாயக்க ஆட்சி யின் சர்வ வல்லமையுடைய பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மாள்.

இந்த இருதினங்களாகவே அரண்மனைக்குள் ஒரே வாதப் போராட்டமாகவே இருந்து வந்தது. இந்தப் போராட்டத்தின் எதிரொலியாய் ஒன்று மட்டும் நிச்சய மாகப் புரிந்தது. அதுதளவாய் ராமப்பய்யன் கரம்வைத்துக் கொல்லும் நாகம்!

தம்பித் தேவனுக்கு உதவவேண்டும்: சேதுநாட்டை இரண்டாகப் பிளந்தாவது ஒரு பகுதியைத் தம்பித் துரைக்கு அளித்தே தீரவேண்டும் என்று பிடிவாதம் பிடித் தார் தளவாய் ராமப்பய்யர்.

மதுரை மன்னர் திருமலை நாயக்கர் எவ்வளவு எடுத்துக் கூறியும் கேட்க வில்லை.

மறவர்ப்பகை பொல்லாத பகை; அது நாட்டுக்குக் கேடுவிளைவிப்பதாகும்; இருக்கும் தமிழர்களையும் பகைத்துக் கொள்வதாகும் என்று பெரிய நாயக்க மாதேவியான ருத்திராபதியம்மாள் வாதாட, அதனை ஏற்று திருமலை

நாயக்கர் மேலும் வாதாட ராமப்பய்யர் கேட்க வேண்டுமே! உஹூம்!

*"சேதுக்கரை தனிலே சென்றவர்கள் மீண்டதில்லை; வாளுக்கிரையிட மறவன் வலுக்காரன்; துப்பாக்கி மெத்த உண்டாம், தோலா மறவனுக்கு: மறவர்கள் வடுகர் என்றால் சற்றும் மதியார், என்று திருமலை நாயக்கர் எவ்வளவோ எடுத்துக்கூறினார். "வேண்டாம் காண் ராமய்யனே, வீரியத்தை விட்டுவிடு," என்றும் கூறிப்பார்த்தார்.

"எந்தன் வாள் திறத்தை இனிப்பாரும் மன்னவனே!" என்று சூளுரைக்கிறான் ராமப்பய்யன். "அரக்கர் குலத்தை அனுமார் அறுத்ததுபோல், மறக்குலத்தை நானும் மாய்த்துக் கருவறுப்பேன்!"

பக்கத்திலிருந்த அமைச்சர் நீலகண்ட தீட்சிதரும், மற்றும் ஸ்தானிகர்கள் எழுவரும், ஏதோ உற்பாதம் நடக்கப் போகிறது என்றளவில் வாளாயிருந்தனர்.

மேலும் இதுவரை கப்பம் கட்டிவந்த சேது நாடு, சடையத்தேவர் ஆட்சிக்கு வந்த பிறகு அடியோடு நிறுத்தி விட்டது ஒரு காரணமாக அமைந்து விட்டது. தளவாய் ராமப்பய்யரின் கர்ஜனைக்கு முன், அனந்த குண சதாசிவப் பட்டரோ, புருஷதேவ முதலியாரோ, பெரியதேவ முதலியாரோ, பாண்டியநாட்டு முதலியாரோ, கேசவதீட்சிதரோ பூவணநாத பண்டாரத்தாரோ, நாயக்க குருவான பெத்தவ ராய தீட்சித சுவாமிகளோ தலையிட்டு எதுவும் கூறமுடியாத நிலை ஏற்பட்டு விட்டது.

முடிவில்...

தம்பித் தேவன் விஷயத்தில் சேதுநாடு மறுபரிசீலனை பண்ணியே தீர வேண்டும் என்றும் அவ்வாறு மறுபரிசீலனை செய்யாவிட்டால் யுத்தம் மூளுவது உறுதி என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் திர்மானத்தால் அரண்மனையே அவலத்தில் ஆழ்ந்தது.

---

*ராமப்பய்யன் அம்மானை.

இளவரசி கங்கை நாச்சி சொல்லவொண்ணுத் துயரில் ஆழ்ந்து போனுள்.

தனது காதலுக்கு இத்துடன் பெரிய முற்றுப்புள்ளியே விழுந்துவிட்டது என்று தீர்க்கமாக உணர்ந்தாள்.

அந்தப் புரத்து மேன்மாட தனியறையில் கண்ணீரும் கம்பலேயுமாக அமர்ந்து காணப்பட்ட செல்லத்துக்குரிய குமாரத்தி கங்கை நாச்சியை கவனிக்கிருள் பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மாள்.

மனம் ஏதோ உணர்த்துகிறது.

கங்கைநாச்சி தன்னுள் ஒரு மரண முடிவைத் தீர்மானித் துக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லே. உயிரைப் போக்கிக் கொள்ள இவள் முயற்சிப்பதைவிட, உயிருக்குயி ராக நேசிக்கும் நாராயணத்தேவனுடன் இவளே அனுப்பி ஞல் என்ன?

''கங்கைநாச்சி''

குரல் கேட்டுத்திரும்பிப் பார்த்த கங்கைநாச்சி, எழுந்து விரைந்து வந்து பெரியம்மாளேச் சேர்த்து அணேத்துக் கொண்டு 'கோ' வென்று,விம்மியழத் தொடங்கி விட்டாள்.

''அழாதேடீ! நீ ஏன் அழுகிருய் என்பது எனக்குப் புரி யாமலில்லே. என்ன செய்ய? விதி ராமப்பய்யன் உருவில் விளேயாடுகிறது. அதற்கும் ஒரு முடிவு உண்டு.''

''அதற்கு ஒரு முடிவு வருவதற்குள், நான் சத்தியமாக ஒரு முடிவைத் தேடிக்கொள்வேன். என் சாவிலாவது இந்தப்போர் நிற்கட்டும்.''

''அது எப்படி முடியும். உன் சாவுக்கும் இந்தப் போருக் கும் சம்பந்தமே இல்லே. இந்தப்போர் எப்படியும் நடந்தே தீரும்.''

கங்கைநாச்சி, தனது பெரிய அம்மாளே உதடுகள் துடிக்கக் கவனிக்கிருள்.

''அதற்கு ஒரு முடிவு உண்டு என்று நான் கூறியது, போரைக் குறித்துச் சொல்லவில்லை. உன் காதலைக் குறித்துச் சொன்னேன். நாராயணத்தேவன் மதுரையில்தான் இருக்கிறான்.''

ஏதோ தேனமுது காதில் பாய்ந்தது நெஞ்சுள் இறங்கி இனிப்பது போன்ற பிரமை.

''என்னடீ, அப்படிப் பார்க்கிறாய்? நிஜமாகத்தான். அவன் நேற்றே வந்து விட்டான். என்னையும் பார்த்தாய் விட்டது.''

மேலும் மேலும் இமைகள் படபடக்க ஆச்சரியத்துடன் கவனிக்கிறாள் கங்கைநாச்சி.

''பெரியம்மா! நான் அவரைப் பார்க்க முடியுமா?''

வார்த்தைகள் தடுமாறுகின்றன.

''நிச்சயம் பார்க்கப் போகிறாய்! இன்றிரவே பார்க்கப் போகிறாய்!''

''பெரியம்மா?''

''தைரியமாக இரு! இரவு பத்து நாழிகை கழித்து சின்னம்மா பானுமதி இங்கே வருவாள். அவளுடன் நீ புறப் படுகிறாய். எல்லாவித ஏற்பாடுகளையும் நான் கவனித்திருக் கிறேன். ஒரு வேளை அவன் உன்னை அழைத்தால், தயங்கா மல் நீ சேதுநாடு நோக்கிச் சென்றுவிடலாம்.''

''பெரியம்மா!''

பயந்தே போனாள் கங்கைநாச்சி.

''பயப்படாதே! நான் உண்மையாகத்தான் சொல்லு கிறேன். அதற்கான ஆயத்தமுடன் நீ புறப்பட வேண்டும். சொல்ல வேண்டியதை நிறையவே நாராயணத்தேவனிடம் சொல்லியிருக்கிறேன். அவன் கடத்திச் சென்றதாக நாளை பகிரங்கமாகவே திருமுகம் அனுப்பி வைக்கச் சொல்லி இருக்கிறேன். நடக்கிற யுத்தம் நடக்கப் போகிறது. மறவர்

நாட்டு வைப்பாட்டிக்குமாரன் தம்பித்துரைக்காக திருமலை நாயக்கர் யோசிக்காமல் போர் திரட்டினார் என்ற அவலச் சொல்லை விட, மகளைச் சிறையெடுத்த சேதுநாட்டுடன் யுத்தம் கொண்டார் என்கிற நற்பெயரை நிலைநாட்டவே நான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன்! ஒன்றுமட்டும் நினைவிலிருக்கட்டும். நான்தான் உங்கள் காதலுக்கு உடந்தையாக இருந்தேன் என்கிற செய்தியை எக்காரணம் முன்னிட்டும் யாரிடமும் சொல்லி வைக்காதே! இதே உத்திரவை நாராயணத்தேவனுக்கும் இட்டிருக்கிறேன்! யுத்தத்தின் முடிவுக்குப் பிறகு நான் ஆலோசனையை அனுப்பி வைக்கிறேன்! கங்கைநாச்சி! யுத்தம் மறவர்பக்கம் ஜெயத்தைக் கொடுக்க வேண்டும் என்று உனக்காகப் பிரார்த்தனை செய்கிறேன்!''

பெரிய நாயக்க மாதேவியின் கண்களில் நீர் மாலைமாலையாக வழிகிறது.

''பெரியம்மா! பெரியம்மா!''

கங்கைநாச்சி விசும்பி விசும்பி அழுகிறாள்.

''கண்ணீருடன் புறப்படாதே மகளே! ஆனந்தக் களிப்புடன் புறப்படு.''

''பெரியம்மா! நாராயணத்தேவர் கடத்திச் சென்றதாக திருமுகம் அனுப்புவது அவமானமல்லவா? அதைவிட நானே மனமுவந்து சென்றேன் என்று நானே எழுதியனுப்புவது நல்லதல்லவா? யுத்தம் மூளப்போவது நிச்சயம். எப்படி மூண்டால் என்ன?''

''இதுவும் நல்ல யோசனை தான். அவ்வாறே செய் கங்கைநாச்சி! ஒரு விண்ணப்பம்! ஒருகால் உனது அப்பாவே யுத்தத்துக்குத் தலைமை தாங்கி வந்தால், அவரது உயிருக்கு நாராயணத்தேவன்தான் உத்தரவாதம் என்பதைக் கூற மறவாதே!''

''எப்படியம்மா மறக்க முடியும்?''

"நல்லது. நேரமாகிறது. நான் வருகிறேன். மிக்கவும் ரகசியமாக நீ செயல்பட வேண்டும். கொஞ்சம் ஏமாந்தாலும் காரியம் முழுக்கவும் கெட்டு விடும்!"

கண்கள் படபடக்க ஏற்கிறாள் கங்கைநாச்சி.

"பெரியம்மா! கூடவே எனது நம்பிக்கைக்குரிய தோழி ராஜலட்சுமியையும் அழைத்துச் செல்லட்டுமா?"

"அதையும் நான் ஏற்பாடு செய்து இருக்கிறேன். பக்கபலத்தையும் ஏற்பாடு செய்திருக்கிறேன். பயமின்றி போய், வெற்றிவாகை சூடிய பிறகு உனது கழுத்தில் மண மாலை சூடிக் கொள்ள வேண்டும்! அப்போது நானே உன் தந்தையைச் சம்மதிக்கச் செய்து அழைத்து வருவேன். அது வரை நீ திருமலை நாயக்கர் திருப்புதல்வியாகவே நடந்து கொள்ள வேண்டும். புரியும் என்று நம்புகிறேன். மறவர் வெற்றியை வைத்துத்தான் இங்குள்ளோர் மனங்களைச்சம்ம திக்கும்படி செய்ய முடியும். யுத்தத்தைப் பார்த்து நடத்தச்சொல்! ராமப்பய்யன் யுத்தராட்சஸன்!"

தலையசைக்கிறாள் கங்கைநாச்சி.

"நான் மீண்டும் சந்திப்பேன் கங்கைநாச்சி!"

கங்கைநாச்சி கண்ணீர் வைகையாகப் பெருகப் பெரியம்மாள் ருத்திராபதி தேவியின் கால்களில் விழுந்து பணிந்து ஆசீர்வாதம் பெறுகிறாள்.

16

இரவு, தனது பத்தாவது நாழிகையில் கால் பதித்து நடந்து கொண்டிருக்கிறது.

மதுரை மன்னர் திருமலை நாயக்கருக்குரிய இருநூறு மனைவிமார்களுள் ஒருத்தியும், தமிழைப் போல அழகு வாய்ந்த தமிழச்சியுமான பானுமதியின் வருகைக்குப்பிறகு கங்கைநாச்சி புறப்பட ஆயத்தமானாள்.

தன்னை அவள் சாதாரண குடிமகளைப் போலவே அலங் கரித்துக் கொண்டாள். பெரும்பாலான நகைகளைக் கழற்றி வைத்து விட்டாள், கண்களில் மட்டும் நீர் முட்டிக் கொண்டிருந்தது.

ஆயினும் பெரியம்மாள் சொன்ன சொற்கள் நினைவுக்கு வருகின்றன.

''கண்ணிருடன் புறப்படாதே!''

அரண்மனையை விட்டு நந்தவனப் பகுதிக்கு வருகிற போது, அங்கே தயாராக இருந்த தோழிப் பெண் ராஜ லட்சுமி கலந்து கொண்டாள்.

பெரியதேவி ருத்திராபதியம்மாளின் நம்பிக்கைக்குப் பாத்திரமான வீர ஒற்றன் மண்ணூர்சாமியின் கண்கள் ஆங்காங்கே பாதுகாவலுடன் பளிச்சிடுகின்றன.

நந்தவனத்து மேற்கு மூலையில் இடிந்து கிடந்த சின்ன மதிலை மூவரும் கடந்து சென்று நடக்கிறார்கள்.

இன்னமும் அரண்மனையின் வெளிச்சம் நிழல்களையுண்டு பண்ணிக் கொண்டிருந்தது.

அந்த வெளிச்சம் தங்களைக் காட்டிக் கொடுக்கா வண்ணம் கூடியவரையில் இருள்படிந்த இடமாகப் பார்த்து சத்தம் எழும்பாமல் மூவரும் செல்கிறார்கள்.

அவர்களை மற்றவர் கண்டுவிடாத அளவுக்குக் கையில் குத்துவாளுடன் மறைவிலிருந்துகண்காணிக்கிறான் மண்ணூர் சாமி. மன்னர் திருமலை நாயக்கரை நீக்கி ஏனைய எவர் வெளிப்பட்டாலும் ஒரே குத்து.

ருத்திராபதி தேவியாரின் கடுமையான உத்தரவு.

மண்ணூர்சாமிதான் கண்காணிக்கிறான் என்பதில்லை. அவனுக்குப் பின்னால் பலகண்கள் கூர்தீட்டிக் கவனிக் கின்றன.

குறிப்பிட்ட ஓரிடத்துக்கு வந்ததும் பானுமதியின் கால்கள் தயங்கி நிற்கின்றன. அந்தக்கால்களுக்கு அதுவரை செல்லத் தான் உத்தரவு.

இருளின் பயங்கர ஆட்சியில் சுவர்க்கோழிகளின் சத்தம் அச்சத்தைத் தருகிறது.

பானுமதியின் கண்களில் நீர்த்திவலைகள்...

கங்கைநாச்சியோ பிரிவாற்றாமை தாளாது தயங்கிக் கண்ணீருடன் நிற்க...

பானுமதி, 'நேரமாகிறது புறப்படு' என்பதுபோல கண்களால் கூற...

ராஜலட்சுமி, துணிந்து கங்கைநாச்சியின் கரம்பற்றி விரைந்து அழைத்துச் செல்கிறாள். தாமதமாகிற ஒவ்வொரு நாழியும் ஆபத்துக்குரியது...

பானுமதி அடுத்து கொஞ்சமும் தயங்காமல் அந்தப்புரம் நோக்கி விரைகிறாள். அவள் சந்தேகத்திற்கு ஆளாகி விடக் கூடாதல்லவா?

அவளைக் கண்காணிக்க சில துணைக் கண்கள்...

ஆ! பெரிய நாயக்கமாதேவி ருத்திராபதியம்மாள் ஒரு பெண் சாணக்கியர்! இல்லையென்றால் அரசியல் அதிகாரங் களைக் கையில் வைத்துக் கொண்டு திருமலை நாயக்க மன்ன

ருக்கு முதுகு எலும்பாக இருந்து வல்லமைகளை பிர யோகிப்பாளா?

ஏறத்தாழ அரண்மனையிலிருந்து அரை காத தொலைவு சென்ற பிறகு அங்கே ஒரு பாழ்மண்டபம். ஒரு காலத்தில் அது எவரோ ஒரு பாண்டிய சேனாதிபதி இறந்து. அவனுக் காக கட்டிய நடுகல் மண்டபம். அதன்சரிவில் நாராயணத் தேவனும், வேலுதுரையும் காத்திருந்தனர்.

தொலைவில் ஒரு ரதமும் சில குதிரைகளும் இருப்பது நன்றாகவே தெரிந்தது.

மயிரிழையான செய்தி வெளிப்பட்டாலும் போதும்...

கூண்டோடு கைலாசம். காதல் என்பது மரணத்தைப் பணயம் வைத்து ஆடும் ஒருவித காலதேவ சதுரங்கம் தானே!

மண்டபத்தண்டையில் வந்ததும் கங்கை நாச்சியும் ராஜலட்சுமியும் நின்று கவனிக்கிறார்கள். இங்கே தானே அவர்கள் இருப்பதாகச் சொன்னார்கள் என்று சுற்றும் முற்றும் கவனிக்கிறாள் ராஜலட்சுமி.

வேறு சமயமாக இருந்தால், நாராயணத்தேவன் பயம் காட்ட கூச்சலெழுப்பியிருப்பான்; அல்லது வேறு சேட்டை யின் மூலம் பயமுறுத்தியிருப்பான். இப்போதைய நிலைமை அதுவல்ல. காரணம் கரணம் தப்பினால் மரணம்.

எனவே மெல்ல அருகே ஊர்ந்து வந்து, ‘‘கங்கை நாச்சி!’’ என்று அடித்தொண்டையில் மெல்லிய சத்தத் துடன் அழைக்கிறான் நாராயணத்தேவன்.

செவிசாய்த்த கங்கை நாச்சி மெல்லக் குனிந்து பார்க் கிறாள் தரையில் நாராயணத்தேவன் ஊர்ந்த நிலையில்...

ஆ! நாராயணத்தேவன்...

மீண்டும் சந்தித்து அந்த வீணையை மீட்டுவோமா என்று ஏங்கித் தவித்த ஏந்தல்...

அப்படியே அணைத்து...

சே! சூழ்நிலையே வேறு...

"கங்கை நாச்சி நிற்க வேண்டாம். உட்கார்ந்து கொள்ளுங்கள்."

அவர்கள் உட்கார்ந்து கொண்டார்கள்.

சே! இந்த தோழிப் பெண் வேறு வந்து விட்டாளா?

இல்லையென்றால் புறப்படுகிறபோதே முத்த அச்சாரம் கொடுத்துப் புறப்பட்டிருக்கலாம்.

ஆ! சிறையில் அவன் கை நீட்ட...

அவள் முத்தமிட....

அந்த நினைவு நாவில் இனிக்கச் செய்கிறது...

சரி, சந்தர்ப்பமா கிடைக்காமல் போகப் போகிறது?

"கங்கை நாச்சி! கொஞ்சம் தூரம் வரை நாம் ஊர்ந்தே செல்ல வேண்டும். ஏனென்றால் பொட்டல்காடு. அதோ தெரியும் தென்னந்தோப்பில் ரதம் காத்திருக்கிறது. கொஞ்சம் விரைவாக ஊர்ந்து வர வேண்டும்."

மூவரும் ஊர்ந்து சென்றனர்.

ஒரு சரிவைத் தாண்டுகிறபோது அங்கே படுத்திருந்த வேலுதுரையும் ஊர்ந்து வரத் தொடங்க...

கங்கைநாச்சி கவனிக்கிறாள்...

வேலுதுரை அந்தச் சந்தர்ப்பத்திலும் "வணக்கம் அண்ணி!" என்று மெல்லக்கூற...

கங்கைநாச்சி தன்னுள் சிரித்துக் கொள்ள...

நாராயணத்தேவனும் சிரித்தவாறு முன்னே ஊர்ந்து சென்று கொண்டிருந்தான்.

சற்றைக்கெல்லாம் அவர்கள் நால்வரும் தென்னந் தோப்பை அடைந்தனர்.

சுறு சுறு என்று வீரர்கள் வெளிப்பட்டு அவரவர் புரவியில் ஆரோகணிக்கிறார்கள்.

கங்கைநாச்சியை அழைத்துக்கொண்டு ரதம் நாடி செல்கிறான் நாராயணத்தேவன்.

தொடர்ந்து ராஜலட்சுமியும் விரைகிறாள்.

அப்போது—

தென்னந்தோப்பின் ஒரு பக்கமாக ஒரு குள்ளநரி சலசலக்க—

அந்தச் சலசலப்பைத் தொடர்ந்து வேலுதுரை விரைந்து ஓட—

உண்மையிலும் அந்தக் குள்ள நரி, அங்கே ஒரு மதுரை ஒற்றன் மறைந்து கவனித்து நகரத் தொடங்கியப் பதட்டத்தின் காரணமாக அது சலசலக்கச் செய்து ஓடியது. அந்தச் சலசலப்பே காட்டிக் கொடுத்து விட்டதே என்று பயந்து ஒற்றன் பக்கத்திலிருந்த குதிரைமீது ஒரே தாவாகத் தாவிப் பறக்க முயல—

உடனே ஒரு குதிரை வீரன் பின் தொடர எத்தனிக்கிறபோது, வேண்டாம் என்று கைகாட்டி நிறுத்திய வேலுதுரை, இடுப்பிலிருந்த வளைதடியை எடுத்துக் குறிபார்த்து வீசுகிறான்.

குதிரையினும் வேகமாய்ப் பாய்ந்த அந்த வளைதடி, குதிரையின் முன்னங்கால்களை வளைத்துத் தடுக்க—

குதிரையின் கால்கள் பின்னிய காரணத்தால் பெருத்த கனைப்பொலியுடன் தரையில் சாய்ந்து விழ—

மேலே இருந்த வீரன் தூக்கி எறிந்த காரணத்தால் சாலையில் உருள—

இதற்குள் குதிரையில் பாய்ந்து வேகமாய்ச் .சென்ற வேலுதுரை, அந்த வீரனைத் தனது வாளுக்கு இரையாக்கி விட்டுத் திரும்பினான்.

முதல்பலி; நல்ல சகுனம் என்றே அவனுக்குத் தோன்றியது.

தனது நண்பனின் வீர சாகசத்தைக்கண்டு சிரிக்கிறான் நாராயணத்தேவன்.

கங்கைநாச்சியோ அதிர்ச்சியால் வியந்து போனாள்.

மறவர்க்கே உரிய வளைதடி பற்றி அவள் நிறைய கேள்விப்பட்டிருக்கிறாள். அதனை நேருக்குநேர் கண்டதில் அவளுக்கு அதிர்ச்சியும் ஆச்சரியமும் ஏற்பட்டன.

அனைவரும் புறப்பட்டனர்.

முன்னும் பின்னுமாக மறவ வீரர்கள். நடுவே ரதம். ரதத்தைத் தொடர்ந்து வேலுதுரை குதிரையில் விரைந்து வந்து கொண்டிருக்கிறான்.

ரதத்தில் கங்கைநாச்சியும் அவளது தோழிப் பெண் ராஜலட்சுமியும். ரதத்தைச் சாரத்தியம் செய்கிறவன் நாராயணத்தேவன்.

ஆ! என்ன அற்புதமான ரதம்! அதனை உதவிய பெரிய நாயக்கமாதேவி ருத்திராபதியம்மாளை நெஞ்சார வாழ்த்திக் கொண்டான். அதற்காக மட்டுமா?

அவர்கள் உதவியது கொஞ்சமா நஞ்சமா? முடிவில் கங்கை நாச்சியை தாரை வார்த்து விட்டார்களே!

கங்கைநாச்சியின் நெஞ்சில் மட்டும் ஏதோ ஒன்று புளி போட்டுக் கரைத்தது.

தொடக்கத்திலிருந்த துணிவு இப்போது பலவீனப் பட்டது. எத்தனை துணிவாக தாய், தந்தை, அரண்மனை அனைத்தும் துறந்து விட்டுப் புறப்பட்டு விட்டோம்! இதற்குப் பெயர் காதல் என்பதா? பெண் என்பதா?

என்றைக்கிருந்தாலும் பெண்ணாகப் பிறந்தவள் பிறந் தகத்தை விட்டுப் புகுந்தகத்துக்குப் புறப்பட வேண்டிய வள்தானே! தனது புறப்பாடு இவ்வாறாக இருக்கிறது

என்றெண்ணி அந்தப் பயணத்தின்போது தன்னை தேற்றிக் கொள்கிறாள் கங்கை நாச்சி.

உடன் ராஜலட்சுமி வருவது ஓர் ஆறுதலாகவே இருந்தது. ஏதோ அந்தப்புரத்திலிருப்பது போன்ற ஓர் உணர்வு.

அவர்கள் குறுக்குவழியில் புகுந்து மதுரையின் எல்லையைக் கடந்துவிட்டார்கள். இனி அவர்களுக்கு எந்தவித பயமும் இல்லை. அப்படியே வந்தாலும் அவர்களது வீரசாகத்துக்குமுன் யாரும் எதிர்த்துப் போராடமுடியாது.

கீழ்வானத்தில் அக்கினி ரதம் புறப்பட்டுவிட்டது.

மதுரை அரண்மனையே அல்லோலகல்லோலப்பட்டது.

அதற்குள் செய்தி தீயாகப்பரவி அரண்மனையையே எரித்தது.

"எங்கே அந்தப் பிரதான தோழிப்பெண் ராஜலட்சுமி?"

கர்ஜிக்கிறார் மன்னர் திருமலை நாயக்கப்பூபதி.

சற்றைக்கெல்லாம் கிடைத்த பதில்: "அவளையும் காணவில்லை."

என்ன நடந்தது?

எங்கே போயிருப்பார்கள்?

அந்தப்புரத்திலிருந்து அழுகை குரல்கள்.

பெற்றெடுத்த சின்ன நாயக்க மாதேவி தொலியம்மாள் கோவென்று அழுகிறாள்.

பெரிய,நாயக்க மாதேவி ருத்ராபதியம்மாளோ, தெரிந்திருந்தும் பிரிவாற்றுமையால் கலங்கிய தொலியம்மாளுக்கு சமாதானம் சொல்லுகிறாள்.

"பொறு! என்ன நடந்ததென்றே தெரியவில்லையே!"

தொலைவில் பானுமதி.

வயிற்றில் புளிபோட்டு கரைக்கிறது. தெரிய நியாய மில்லை. ஆனாலும் உள் மனம் வதைக்கிறது.

இதற்குள் கேள்விப்பட்டு ஓடோடி விரைந்து வந்து விட்டார் மதுரைப்படைகளின் சர்வவல்லமை பொருந்திய மாவீரத் தளவாய் ராமப்பய்யர்.

அவர் அனைவரையும் கேள்வி கேட்டு அதட்டுகிறார்.

அனைவருடைய கண்களிலும் மருட்சி, வியர்த்துக் கொட்டும் உடல் நடுக்கம்.

எங்கே? எப்படி பதில் வரும்?

அந்தச் சமயத்தில்தான் சரியான செய்தி அரண்மனைக் குள் நுழைந்து கொண்டிருந்தது.

அரண்மனைக்காவலன் அந்தத் திருமுகத்தைக் கொண்டு வந்து கொடுத்தான்.

"என்ன இது?"

"பிரபோ! ஒரு கல்லில் கட்டி இதனை யாரோ எறிந் தார்கள். எறிந்தவர்கள் யார் என்று கவனிப்பதற்குள் ஆளைக் காணவில்லை. எனவே இதனை உங்கள் திருமுன் கொண்டு வந்தேன்."

அவன் அசல் தெலுங்கில் இவ்வாறு கூறி நிறுத்தினான்.

திருமுகத்தைப் பிரித்துப் படிக்கிறார் திருமலை நாயக்க மன்னர்.

கங்கை நாச்சியோ இக்கடிதத்தை மட்டும் தமிழில் எழுதியிருக்கிறாள்.

மதுரை நாயக்க மன்னர் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ திருமலை நாயக்க பூபதி அவர்கள்.

அப்பகாரு! வந்தனம்.

நான் எந்த வடுக ரத்தத்தில் சங்கமமாவேன்! தேடிப் பார்த்தால் எனது தந்தைக்கு நிகரான வடுக அரசு எனக்

கிருப்பதாகத் தெரியவில்லை. எனவே மறவர்க்குடி சம்பந்தம் நமக்கு மகிழ்ச்சிக்குரியது.

நான் சேது இளவல் நாராயணத்தேவரைக் காதலிப்பது சத்தியமான உண்மை. என்னை ஓரளவு பாதுகாத்து —என்னைத்தீண்டாமல் பாதுகாத்துஉங்களிடம் ஒப்படைத்த அவரது பெருந்தன்மையை முதலில் காதலித்தேன். பின்னர் தான் அவரை நீங்கள் சிறையிலடைத்ததும் அந்த மாவீரர் பால் இரக்கம் கொண்டேன். அந்த இரக்கமே காதலாக மலர்ந்தது.

மறவர் நாட்டு தம்பித்தேவர் எப்போது அரண்மனையுள் நுழைந்தாரோ, அப்போதே மதுரை ஆட்சியில் ஆமை புகுந்து விட்டதாக எண்ணி விட்டேன். வீணாக ஒரு தம்பித் தேவருக்காகப் போர் முழங்குவதை விட, எனது காதலுக் காக அந்த வீரமுரசம் கொட்டட்டுமே என்ற சிறப்பான எண்ணத்துடன் நான் சேது இளவல் நாராயணத்தேவருடன் புறப்பட்டு விட்டேன். சத்தியமாக அவர் என்னைக் கடத்திச் செல்லவில்லை. நாளுக மனமுவந்து அவரைப் பின்பற்றி சென்று விட்டேன்.

ஏன்?

எப்படியும் என் காதல் நிறைவேறப் போவதில்லை. மதுரை யுத்தத்துக்குப் பிறகு, மறவர்க்குடி என்னை மணக்கப் பைத்தியமா?

எனவேதான்.

நாராயணத்தேவர் இங்கு எங்கே வந்தார் என்று நினைக்கிறீர்களா?

நான் வரவழைத்தேன். நானே அவருடன் சென்று விட்டேன்.

எங்களை வாழவிடுவதானால் இந்த யுத்தம் வேண்டாம். சம்பந்திகளாகிச் சமாதானமாக வாழலாம். யுத்தம் மூண்டு தான் ஆக வேண்டுமானால் விதிபோல்! ஆனால் ஒன்று...

எங்கள் காதலை நீங்கள் பிரிக்க முயன்றீர்களேயானால்...
எனது உயிரை உடலிலிருந்து பிரிப்பதாகும்.

கங்கை நாச்சி

படித்து முடித்த திருமலை நாயக்கருக்கு ஆத்திரம், ஆவேசம், துடிப்பு...

இவைகளுக்கிடையே கண்களில் நீர்த்திவலைகள்.

கடிதத்தை தளவாய் ராமப்பய்யரிடம் நீட்டுகிறார் மன்னர் திருமலை நாயக்கர்.

படித்து முடித்த தளவாய் ராமப்பய்யர். கொஞ்சமும் தயங்காமல் மன்னரிடம் உத்தரவு பெறவேண்டுமே என்றும் கருதாமல், ''கொட்டட்டும் போர்முரசம்!'' என்று ஓங்கி கர்ஜிக்கிறார்.

ஆ! இது என்ன கர்ஜனை உத்தரவு...

தமது சம்மதம் தேவையில்லையா என்றும் ஒருகணம் திருமலை நாயக்கர் எண்ணிப்பார்க்கிறார்.

ஓ... இது ஒரு சந்தர்ப்பமாக அமைந்து விட்டது. எங்கே களைக்கருதி யுத்தம் வேண்டாம் என்று மன்னர் தடுத்து விடுவாரோ என்று அஞ்சி முந்திக்கொண்ட ராஜதந்தரம்...

இனியும் புத்தி சொல்லிப் பார்ப்போம்...

மறவர் குடியை பகைத்துக் கொள்வது அரவக்குடியைப் பகைத்துக் கொள்வதற்கு ஒப்பாகும் என்கிற கருத்துக்கு திருமலை நாயக்கர் இன்னமும் ஆலோசிக்கிறார்.

மகள் எழுதிய கடிதத்தை எண்ணிப் பார்க்கிறார்.

ஆயினும் மகள் செய்தது எந்த வழியிலும் அறமாகாது. இது கண்டிக்க—தண்டிக்கப்பட வேண்டியது. என்ன செய்வது?

ஒன்றும் செய்ய முடியவில்லை.

தளவாய் ராமப்பய்யரின் பிடிவாதமே மேலோங்கி யிருந்தது.

இது—

தம்பித்தேவருக்கு மகிழ்ச்சியை அளித்தது.

ஏனையவருக்கு மருட்சி அளித்தது.

போர்முரசம் முழங்கத் தொடங்கியது!

17

வழி நெடுக எங்குமே அவர்கள் தங்கவில்லை.

பொழுது விடிந்து இத்தனை நே ...யும் காலைக்கடனை முடிக்காமல் இப்படி அசுரவேகத்தில் ரதத்தைச் செலுத்து கிறுரே இந்த நாராயணத்தேவர்...

இதோ வந்துவிட்டது, இதோ வந்துவிட்டதென்று எவ் வளவு தூரம்தான் சென்று கொண்டிருப்பது?

ரதத்தின் பின்புறமாக இருந்த திரைச்சீலையை நீக்கி, பின்னே வந்து கொண்டிருந்த வேலுத்துரையை அழைத் தாள்.

குதிரையை வேகமாக ஓட்டி அருகே வந்த வேலுதுரை, ''என்ன அண்ணி?'' என்று குறும்பாக வினவுகிருன்.

கங்கை நாக்சியுள்ளத்தில் ஒரு குட்டிப் புன்னகை.

''இன்னும் எவ்வளவு தூரம்தான் செல்லவேண்டும்? காலைக்கடன் என்று ஒன்று இருக்கிறதல்லவா?''

இது நாராயணத்தேவன் காதுகளில் விழுந்துவிட்டது.

அவன் ஒரு முறை திரும்பி கங்கை நாச்சியைக் கவனித் தான்,

பிறகு குதிரைகளை இன்னும் வேகமாக விரட்டிக் கொண்டே "இதோ நெருங்கி விட்டது கங்கைநாச்சி! நாமிருப்பதே சேதுநாட்டு எல்லைக்குள். இங்கே இறங்கினுல் மற்ற கவனிப்புக்கு ஆளாக நேரிடும். இன்னும்ஐந்தே காதத் தொலைவுதான். அரண்மனைக்குச் சென்றதும் சகல சௌக் கியங்களுடன் காரியங்களைப் பொறுமையாக ஆற்றலாம். உனக்குத் துணைபுரிய பல பணியாட்கள் அங்கே உண்டு" என்ருன்.

எதிர்காற்று வேகமாக வீசியதால், சொற்கள் தெளி வாக அந்த வேகத்திலும் கேட்டன.

தொலைவில் சேது நாட்டு அரண்மனையின் கூம்பு தெரிந் தது. அதன் உச்சியில் ஆஞ்சநேயப் பெருமானின் உருவம் தாங்கிய கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது.

சேது நாட்டின் மறவர்குல அரண்மனை, மதுரை மாதிரி பிரம்மாண்டமான முறையில் இல்லாவிட்டாலும் ஒரு சிற்ற ரசுக்குரிய சிறப்புடன் அது விளங்கியது.

மதுரை இளவரசி விஜயத்துக்குப் பிறகு அந்த அரண் மனையே களைகட்டியது போன்ற ஒருபிரகாசம் எங்கிருந்தோ ஒளிர்வது போல ஒரு பிரமை.

சேதுபதி சடையத் தேவர் வைத்த கண் வாங்காது கவனித்து, அந்த உருவம்—கங்கை நாச்சியின் உருவம் நெஞ்சில் சித்திரமாகப் படிந்து விட்டது.

ஓ...என்ன அழகாய் இருக்கிருள்!

தமது தங்கை கங்கை நாச்சியின் ஞாபகார்த்தமான வளாயிற்றே இந்த மதுரை கங்கைநாச்சி!

கேள்விப்பட்டு தங்கை கங்கை நாச்சியாரும், மருமான் வன்னியத்தேவரும் ஓடோடி வந்தனர்.

அப்போதுதான் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, தன்னை ஓரளவு அலங்கரித்துக்கொண்டு வெளிப்பட்டாள் மதுரை இளவரசி கங்கைநாச்சி,

தொடர்ந்து வந்த தோழிப்பெண் ராஜலட்சுமி தொலே வில் நின்று கொண்டாள். அவளுக்கு அந்த அரண்மனே பிடிக்கவில்லே. சமுத்திரத்தில் தவழ்ந்தவள்; காவிரிக்கரை யில் உலவுவது போல் தெரிந்தது. ஆயினும் காவிரியே புனிதமானது என்ற மேலோங்கிய நினைவுடன் பூரித்துக் கொண்டாள் மதுரை இளவரசி கங்கைநாச்சி.

வருகை புரிந்த வன்னியத்தேவரையும், மறவர்குல கங்கைநாச்சியாரையும் அறிமுகம் செய்து வைக்கிருள் சேது நாட்டின் முதல்ராணி.

காலில் விழுந்து பணிந்து எழுகிருள் மதுரை இளவரசி கங்கைநாச்சி, அது மிகவும் அவர்களுக்குப் பிடித்தது. வன்னி யத்தேவர் மகிழ்ந்து போனுர்.

தொலேவிலிருந்து இக்காட்சியைக் கவனித்துக் கொண் டிருக்கிறுன் நாராயணத்தேவன்.

மதுரை இளவரசி கங்கைநாச்சி, மறவர்குல கங்கை நாச்சியாரை—மாமியாரைக் கவனிக்கிருள்.

ஆ! என்ன அற்புதமான பெண்மைக்குரிய தோற்றம்.

அப்பா, இவரைக் காணுமலேயே காதலித்தார். கண்டிருந்தால் தன்னே நாராயணத்தேவர் சிறையெடுத்தது போலச் சிறையெடுத்து இருப்பார்.

"என்னம்மா அப்படிப் பார்க்கிருய்? ஒரே பெயரில் இரண்டு உருவங்கள் அதுவும் மாமியார் மருமகளான விந்தையைக் குறித்து ஆச்சரியப்படுகிருய்?"

'ஆமாம்' என்பது போலத் தலேயசைத்த மதுரை இளவரசி கங்கை நாச்சி, தனது மீன்விழிகள் படபடக்கக் கவனித்துச் சிரிக்கிருள். ஆயினும் ஒரு பயம் தலேதூக்கி இருப்பதை அவர்களால் உணர முடிகிறது.

சேதுபதி சடையத்தேவர் சொன்னுர்.

"மதுரை மகளே! பயப்பட வேண்டாம். எங்கள் சேது நாட்டின் வீரத்தை வடுகர் அறிய நீ ஓர் அற்புதமான

சந்தர்ப்பத்தையுண்டு பண்ணியிருக்கிறுய். கேவலம் ஒரு தம்பித்தேவனுக்காக மதுரை படையெடுத்தது என்கிற சரித்திரத்தை மாற்ற நீ ஒரு புனித பயணம் செய்து இருக்கிறுய். ஒன்று உங்கள் காதல் வளரும், இல்லே மதுரை அழியும்.''

''வேண்டாம்'' என்ற மட்டில் பதில் சொன்ன மதுரை இளவரசி கங்கை நாச்சி, தொடர்ந்தாள்: ''மதுரை அழிய வேண்டாம். கண்ணகியால் அழிந்தது போதும். இந்தக் கங்கைநாச்சியால் வேறு அழிய வேண்டாம். எனது தந்தைக்காக இதனே நான் கூறவில்லே. பண்டு தமிழ் வளர்த்த மதுரை பார் புகழப் பாண்டியப் பேரரசர்கள் வாழ்ந்த மதுரை! அது அழிந்து படுவதைவிட எங்கள் காதல்—''

மதுரை கங்கை நாச்சி முடிப்பதற்குள், மறவர் கங்கை நாச்சியார் இடைமறித்து, ''கங்கைநாச்சி!'' என்று பதறிஞள். ''மேல் கொண்டு எதையும் சொல்லாதேம்மா! உங்கள் காதலும் வாழட்டும், மதுரையும் வாழட்டும்.''

இரண்டு கங்கை நாச்சிகளின் கண்களிலும் பெருமிதமான நீர்த்திவலேகள்.

சேதுபதி சடையத்தேவர் ஓர் அற்புதமான திருக்காட்சியைக் கண்டது போல மகிழ்ந்து கொள்கிறுர்.

அச்சமயம் சேதுநாட்டின் சுவீகாரப்புத்திரனும், வருங்கால சேதுபதியும், நாராயணத்தேவனின் உடன் பிறந்த அண்ணனுமான ரகுநாதன் வந்து கொண்டிருந்தான். அவனுடன் அவனுடைய மனேயாளும் வந்தாள்.

சடையத்தேவர் அறிமுகம் செய்து வைக்க, மதுரை இளவரசி கங்கைநாச்சி கரம் கூப்பி வணங்கியதோடு நின்றுள்.

காலில் விழுந்து பணிவாள் என்றுதான் அனேவரும் எதிர்ப்பார்த்தனர். அவள் அவ்விதம் செய்யவில்லே. அது ஒரு பேரரசனின் புத்திரிக்குரிய கம்பீரத்தைக் காட்டியது. பணிய வேண்டியவர்களுக்குப் பணிந்தாள். அனேவருக்குமே

பணிந்தால் காதல் கேவலமாகிறது. வாழ்வு அசிங்கப்பட்டுப் போகிறது. இது அனைவருக்கும் ட வில்லை. இதனால் மதுரை இளவரசி கங்கைநாச்சியாரவர் பெருமை கூடியதேயொழிய குறையவில்லை.

அன்று மாலை—

அந்த சின்னஞ்சிறிய சேது நாட்டைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள் மதுரை இளவரசி கங்கைநாச்சி. அவளுடன் தோழி ராஜலட்சுமி புறப் பட்டாள்.

இருவரையும் முத்துக்களால் வேயப்பட்ட புலிமுகப் பல்லக்குச் சுமந்து சென்றது.

ஒரு பேராச்சரியம் என்னவென்றால், சேது நாட்டு இளவல் நாராயணத்தேவன், மதுரை இளவரசியைக் காதல் காரணமாகக் கடத்தி வந்திருக்கிறான் என்கிற செய்தி அரண்மனையிலேயே பலருக்குத் தெரியாது. தெரிய நியாய மில்லை. அத்தனை பாதுகாப்பாக அந்தச் செய்தி குறிப்பிட்ட வர்களிடையே மட்டும் இருந்து வந்தது. ஆகவே அந்தச் சிறிய சேது நாட்டில் செய்தி பரவவில்லை.

அரண்மனைப் பெண்டிர் யாரோ செல்கிறார்கள் என்றே நகர மாந்தர்கள் எண்ணி வேடிக்கைப் பார்த்தனர்.

வேறு எந்த வீரர்களும் பாதுகாப்புக்கென உடன் செல்லவில்லை. பல்லக்குக்குப் பின்னே நாராயணத்தேவனும் அவனுடைய ஆருயிர் நண்பன் வேலுதுரையும் புரவிகளில் ஆரோகணித்துச் சென்று கொண்டிருந்தனர்.

அப்படி ஒன்றும் மாப்புகழ் பெற்ற மாநகரான மதுரை யைப் போலில்லாவிட்டாலும், சேது நாடு அதன் அளவில் செம்மையாகவும் வீர செருக்குடனும் காணப்பட்டது.

கிழக்கே தெரிந்த ஒரு வனாந்திரப்பகுதி பார்க்க மிகவும் அழகாகவும் ரசனை மிக்கதாகவும் தெரிந்தது.

சந்தர்ப்பமாக விநோதமான பாறைக் கூட்டம். சற்று இறங்கி தம்பித்தேறுதலடைய நாராயணத்தேவனுடன் உரையாடி சரித்தின்ன என்ற நினைப்புடன் பல்லக்கை நிறுத்த சொன் கிருய் மதுரை இளவரசி கங்கைநாச்சி.
அழி
பல்லக்கு இறக்கப்பட்டது.

கங்கை நாச்சியும் ராஜலட்சுமியும் இறங்கி அந்த வனந்திர பகுதியை ரசித்தனர்.

புரவி சகிதமாக அங்கு வந்து சேர்ந்த நாராயணத் தேவனும் வேலுத்துரையும் புரவியிலேயே அமர்ந்து காணப் பட்டனர்.

கங்கைநாச்சி அவனை கனிந்து நோக்குகிருள். 'ஏன் குதிரைமீதே அமர்ந்திருக்க வேண்டும்? இறங்கி வரக் கூடாதா?' என்பதுபோல கவனிக்கிருள்.

நாராயணத்தேவனும் அந்த நயன பாஷையைப் புரிந்து கொண்டு புரவியில் இருந்து இறங்கினுன்.

நண்பனை நோக்கி ''வேலு! நீ அரண்மனைக்கு செல். நான் உனது அண்ணியை பத்திரமாக அழைத்து வருகிறேன்'' என்ருன்.

புரிந்து கொண்ட வேலுத்துரையும், ஒரு மாதிரியான பார்வையுடன் விடை பெற்றுச் சென்ருன்.

ராஜலட்சுமி விஷயம் புரிந்து கொண்டு பல்லக்குப் பக்க மாகவே நின்று கொண்டாள்.

பல்லக்குத் தூக்கிகள், இது குறித்து ஏதும் நினைத்துக் கொள்ளவில்லை. யாரோ இளவரசருக்கு முறைப் பெண். சேது நாட்டைச் சுற்றி பார்க்க வந்திருக்க வேண்டும். ஏதோ தனியாக பேச ஒதுங்குகிருர்கள் என்றளவில் எண்ணிக்கொண்டு தொலைவில் சென்று அமர்ந்து கொண்டனர்.

கங்கை நாச்சியும் நாராயணத்தேவனும் ஒரு பாறை யின் பக்கமாக நடந்தனர்.

மாலைக்காற்று மந்த காசமாக வீசியது.

அந்தக் காற்றிலும் ஒரு வீரமிடுக்கு இருந்தது. பிறவர் நாட்டைத் தழுவுகிற மதம் போலும்.

காலாரச் சுற்றி நடந்தனர். வழியில் மதுரையில் பெரிய நாயக்க மாதேவி இந்தக் காதலுக்காக எடுத்துக் கொண்ட பிரயாசைகள் குறித்து பேசினர். அடுத்து யுத்தம் மூளுமா? அமைதி நிலவுமா என்கிற கேள்விக்குறி பற்றி விமர்சித்து கொண்டனர்.

ஒரு செங்குத்தான பாறைக்கு மறைவில் இருவரும் அமர்ந்து கொண்டனர்.

மேலை வாயிலில் சூரியன் குங்குமமாகச் சிவந்து கொண் டிருந்தான். சிற்சில இடங்களில் நீலக்கீறலால் வரைந்த கோலங்கள்.

''கங்கை நாச்சி! யுத்தம் இப்போதைக்கு மூளாது என் கிறாயே! எது குறித்து நீ இவ்வாறு சொல்லுகிறாய்?'' என்றான் நாராயணத்தேவன்.

''ஒரு யூகம்தான். நான் எழுதிய திருமுகம் அப்பாவை சிந்திக்கச் செய்திருக்கலாமே என்றுதான்.''

''சிந்திக்கச் செய்திருக்கும்; இல்லையென்றால் பெரிய நாயக்க மாதேவி சிந்திக்கச் செய்திருப்பார்கள். ஆனால் தளவாய் ராமப்பய்யன் சிந்திக்கவே நேரம் தந்திருக்க மாட்டானே என்றுதான் யோசிக்கிறேன்.''

''அப்படிப் போர் மூண்டால் யாரால் தடுக்கமுடியும்?''

சில கணங்கள் அமைதி அவர்களைத் தழுவியது.

''பிரபோ! நான் உங்களுக்கென்று பிறந்து விட்டவள். இனி நீங்கள் எப்படிப் பாவித்தாலும் நான் உடன்பட வேண்டிய கடமைக்குரியவள். ஆனாலும் ஒன்றைச் சொல் வேன். இந்த பூசலுக்கான காரணம் ஒரு நிலையடைகிறவரை நாம் ஒருவரையொருவர் காத்துக் கொள்ள வேண்டும்.''

அவளது நீலநயனங்கள் படபடக்கச் செய்கின்றன.

வீரக் கண்கள் சிரிக்கின்றன.

“கங்கை நாச்சி! என்னைப் பார்த்தா இப்படிச் சொல்கிறாய்?”

“நான் உங்களைப் பரிபூரணமாக அறிவேன். ஆயினும் ஒரு கடமை போன்று நினைத்துச் சொன்னேன்!”

“இதை நானே சொல்ல இருந்தேன். நீ முந்திக் கொண்டாய்!”

பெருமையான பூரிப்புடன் கன்னங்களில் குழி விழுகிறது கங்கைநாச்சிக்கு. அவள் அவனை கூர்ந்தும் பரிசீலித்தும் நோக்குகிறாள்.

அந்த நோக்கலில் பலவித பாவனைகள்.

“உனக்குச் சேது நாடு பிடிக்கிறதா?”

“எனக்கு நீங்கள் பிடித்து விட்டதால் இந்த சேது நாடு பிடிக்கிறது. சம்பந்தப்பட்ட அனைவரும் பிடிக்கிறார்கள். சேதுநாட்டு புல்பூண்டு, புழுபூச்சி அனைத்துமே பிடிக்கின்றன.

என்றெல்லாம் அந்த கவிதை கண்கள் வார்த்தைகளைப் புதுவிதமான ஜாலங்களுடன் காட்டுகின்றன.

என்ன நினைத்தாளோ...

சரேலென்று பாய்ந்து நாராயணத்தேவனைச் சேர்த்து அணைத்துக் கொண்டாள். இறுகப்பற்றி இதழோடு இதழ் பொருத்தி...

நெடு நேரம் நீங்கவில்லை.

அவளது மனம்... “இதில் தவறில்லை; இதில்தவறில்லை. கரத்திற்கு முத்தமிட்டு மகிழ்கிற போது கனி இதழ்கள் மகிழ்ந்தால் என்ன” என்று கேட்டுக் கொள்கிறது.

அப்போது...

யுத்த அறிவிப்பு முரசம் பயங்கரமாக ஒலிக்கத் தொடங்குகிறது.

18

சேது நாட்டுச் செவிகளில் யுத்தத்தின் காரணமென்ன வென்பது நன்ருகவே நுழைந்து விடுகிறது.

ஓ... மதுரை இளவரசி கங்கைநாச்சியை, நமது நாராயணத்தேவன் காதலிக்க, அதனைத் திருமலை நாயக்க மன்னர் மறுக்க, சமயம் நோக்கிச் சிறையெடுத்து வந்து விட்டார் என்று அவர்கள் மகிழ்ந்து கொண்டார்களே யொழிய கசந்து கொள்ளவில்லை.

மேலும் தம்பித்தேவன் மதுரை நோக்கிச் சென்றிருக் கும் செய்தி அவர்களறிந்ததே!

இந்த யுத்தத்தின் மூலம் மதுரைக்கும் சேதுநாட்டுக் கும் ஒரு நிரந்தர பாலம் அமையட்டும் என்று எண்ணி மறவர்கள் தோள் தட்டிக் கொண்டார்கள். போர் என்ருல் அவர்களுக்குப் பூஞ்சோலையாயிற்றே!

மதுரையிலிருந்து நாயக்கப் படைகள் புறப்பட்டு விட்டன என்கிற செய்தி வந்த நேர முதற்கொண்டு சேது நாட்டு சேனைத் தலைவரான வன்னியத்தேர் - நாராயணத் தேவனின் தந்தை—படைகளைத் திரட்டுவதில் பம்பரமாக சுழன்று வந்தார். அவருக்குத் துணையாகப் போகலூர்க் கோட்டைத் தலைவனும் சடையத்தேவரின் நண்பனுமான குமரன் அழகன் ஓடோடி வந்து துணைபுரிந்தான். மற்றும் குமாரர்களான ரகுநாதனும், நாராயணத்தேவனும் ஓய்வு உறக்கமின்றி படைகளைச் சேமிப்பதில் ஊக்கம் காட்டினர்.

மதுரை இளவரசி கங்கைநாச்சியோ மருண்டு காணப்பட்டாள்.

அவளது மனம் கணத்துக்குக் கணம் மீனுட்சியம்மனைப் பிரார்த்தனை செய்து கொண்டது.

மறுநாள் விடிந்து பகற்போதுவரை நாராயணத் தேவனைக் காணமுடியவில்லை. அவன் போர்ப் படைகளைச் சீர்படுத்தும் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

அன்று மாலை ஒரு தடவை அரண்மனைக்கு விஜயம் செய்து கங்கைநாச்சியைக் காண விழைகிறபோது, அவள் தனது மாளிகையில் இருப்பதாகச் செய்தி வந்தது.

நேரே தனது மாளிகைக்குச் சென்று கங்கைநாச்சியைச் சந்தித்தான். மாளிகையில் அப்பா வன்னியத்தேவர் நிச்சயம் இருக்கமாட்டார். அவர், குமரன் அழகனுடன் தங்களுக்கு உதவும் பாளையக்காரர்களைச் சேகரிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை அறிந்திருந்தான்.

மாளிகையின் மேன்மாடத்தில் மதுரை இளவரசி கங்கைநாச்சி தனியாகத்தானிருந்தாள். கீழே தோழிப் பெண் ராஜலட்சுமி அம்மாவுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்.

காதலனைக் கண்டதும் எழுந்து நின்றுகொண்டாள் கங்கைநாச்சி.

“நான் வருகிறபோதே யுத்தத்தையும் உடன் கொண்டு விட்டேனல்லவா?” என்றாள் கங்கைநாச்சி. குரல் கரகரத்தது.

நாராயணத்தேவன் அர்த்தமுள்ள புன்முறுவல் பூத்தான்.

“கங்கைநாச்சி! இது எதிர்பார்த்தது தானே! ஏதோ புதியதாக வருத்தப்படுகிறாயே! நீ வராமலிருந்தாலும் இந்த யுத்தம் மூண்டுதானே இருக்கும்!”

அவள் மவுனமாகத் தலை குனிந்து கொள்கிறாள்.

இருவரும் வெளி முற்றத்துக்குச் சென்று அமர்ந்து கொண்டார்கள்.

“மதுரையிலிருந்து படைகள் புறப்பட்டு விட்டனவா?” என்று கேட்டாள் கங்கைநாச்சி.

"அது இந்நேரம் பாதிவழி வந்திருக்கும். தளவாய் ராமப்பய்யன் வெறி கொண்ட வேங்கை போல் வந்து கொண்டிருக்கிறுனும்!" என்முன்.

"அப்பாவும் புறப்பட்டு வருகிறுரா?"

"அப்படி ஏதும் செய்தி இல்லே."

சில கணங்கள் மௌனம்.

நாராயணத்தேவன் சொன்னுன்:

"ஒன்றை மட்டும் கேள்விப்பட்டேன். எவ்வழியிலும் உன்னேயும் என்னேயும் சிறை பிடித்து வர வேண்டும் என்பது மதுரை மன்னரின் கட்டளே. என்னேச் சிறையிலடைத்து உன்னே வேடிக்கைப் பார்க்கவிடப் போகிறுராம்!"

"அதுமட்டும் முடியாத காரியம். வேண்டுமாளுல் இருவரையும் சிறையில் தள்ளட்டும். நான் சம்மதிப்பேன்!"

கங்கைநாச்சியின் கண்கள் கலங்கிவிட்டன.

அதற்குள் ராஜலட்சுமி மாடிக்கு விரைந்து வந்தாள்.

ஏதோ அவசரம்.

வந்தவள், "அரண்மனேக்கு நீங்கள் அவசரமாகப் புறப்பட வேண்டுமாம்" என்முள்.

"நிங்கள் என்முல்! கங்கை நாச்சியையுமா?" என்று கேட்டான் நாராயணத்தேவன்.

ராஜலட்சுமியும் சிரித்துக் கொண்டே, 'உங்களேமட்டும் தான்" என்முள்.

நாராயணத்தேவன் எழுந்து கொண்டான்.

"கங்கைநாச்சி! இது போர்க் காலம். அடிக்கடி என்னேச் சந்திக்க முடியவில்லேயே என்று கவலே கொள்ளக் கூடாது. முடிகிறபோது நான் உன்னே அவ்வப்போது சந்தித்துக் கொண்டே இருப்பேன்!" என்றுகூறி வேகமாக வெளி யேறினுன்.

மகன் வேகமாகச் செல்வதைக் கண்டு அன்னை கங்கை நாச்சியார் மனத்துள் கொற்றவை பிராட்டியாரை வழி பட்டுக் கொண்டாள். அடுத்து அவர்களுக்கே உரிய ராமேஸ் வரமூர்த்தியைத் தொழுது கொண்டாள்.

மூன்றும் நாள்.—

சேதுநாடே போர்க்கோலம் பூண்டுவிட்டது.

வன்னியத்தேவருக்கு ஒரு கருத்து உதயமாகி அதனைச் சேதுபதியிடம் வைக்கிறார்.

"மைத்துனரே! இந்தப் போர்க்காலத்தில் மதுரை இள வரசி இங்கிருப்பது எனக்குச் சிலாக்கியமாகத் தெரியவில்லை. நமது ராமேஸ்வர அரண்மனைக்கு அனுப்பி வைத்து விட லாம் என்று நினைக்கிறேன்!"

சிலகணங்கள் யோசிக்கிறார் சேதுபதி தளவாய் சடையத் தேவர்.

"யார்யாரை அனுப்புவதாக உத்தேசம்!"

"அரண்மனை பெண்டிர் அனைவரையுமே!"

"நல்ல ஆலோசனை."

"அத்துடன் இன்னொரு விண்ணப்பம்."

"சொல்லுங்கள் மருகரே!"

"நீங்களும் அங்கு சென்று அமைதியாக இருக்கலாம்."

"நானா? ஏன்? நான் போர்க்களம் புகுவது உங்களுக்குப் பிடிக்கவில்லையா?"

"ஐயய்யோ! நான் அப்படி எண்ணிச் சொல்லவில்லை. மதுரையையடக்க நான் ஒருவன் போதும் நீங்கள் எதற் காக என்றுதான்."

"இல்லை. மனத்தில் எதையோ வைத்துக் கொண்டு பேசுகிறீர்கள். ஆயினும் அது நன்மையை உத்தேசித்தே என்கிற நம்பிக்கையும் எனக்கிருக்கிறது. நல்லது, நானும்

செல்கிறேன். பயணத்துக்கான ஏற்பாடுகளை கவனிக்கலாம் அநுசரி மருகரே! இப்போது மதுரைப்படைகள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது.''

வண்டியூரிலிருந்து புறப்பட்டு, திருப்பூவணம் வழியாக மானுமதுரையை அடைந்து முகாமிட்டிருப்பதாகச் செய்தி.''

''யார் யார் அவர்களுடன் சேர்ந்திருக்கிறார்கள்?''

''எழுபத்திரண்டு பாளையக்காரர்களும் சேர்ந்திருப்பதாகச் செய்தி. அதாவது படை உதவி செய்திருக்கிறார்கள்.''

''முருக்கநாட்டு மூவரையனும் கீழ்முகத்துத் தும்பிச்சி நாயக்கனும் படை அனுப்பி இருக்கிறார்களா?''

''அனுப்பி இருக்கிறார்கள்.''

''மூங்கிலணைப் பூசாலி?''

''ம்!''

''மருதப்பதேவன்?''

''ம்!''

''துரோகி! நாயக்கர்களுக்கு நாயக்கப்பாளையக்காரன் உதவலாம். இவனுமா உதவுகிறான்!''

''திருநெல்வேலி மணவாள ராஜாவும், முசேகானும், மகமுதுசாயுபும், படேகான் கிலிசும் உதவி செய்திருக்கிறார்கள்?''

''அப்படியா? நீங்கள் நானில்லாமல்...''

''கவலை வேண்டாம். ஒரு மறவனுக்கு நாலு வடுக நாயக்கன் சமம்! நீங்கள் அமைதியாகப் புறப்பட்டுச் செல்லலாம்.''

அப்போது—

தளவாய் ராமப்பய்யனிடமிருந்து தூது வந்திருப்பதாகச் செய்தி வந்தது.

வருமாறு உத்தரவு பிறப்பிக்கிறார் சேதுபதி சடையத் தேவர்.

மதுரைத் தூதுவர்களை அழைத்து வந்தார்கள்.

''என்ன செய்தி?'' என்று கம்பீரமாகக் கேட்கிறார் சேதுபதி சடையத்தேவர்.

மதுரைத் தூதுக்குத் தலைமை தாங்கி வந்தவன் சொன்னான்:

''சேதுபதி ராஜாவுக்கு வணக்கம். எங்கள் மேன்மைமிகு தளவாய் செய்தி அறிவிக்கச் சொன்னார். உடனடியாகச் சேதுநாட்டை இரண்டாகப் பிரித்து ஒன்று சேதுநாட்டு மதிப்புக்குரிய தம்பித் தேவருக்கு அளிக்கவேண்டுமாம். அடுத்து எங்கள் இளவரசியை தக்க மரியாதையுடன் அனுப்பி வைக்க வேண்டுமாம்!''

கடகடத்துப் பேரொலி எழுப்பிச் சிரிக்கிறார் சேதுபதி சடையத்தேவர்.

''உங்கள் தளவாய்க்கு மூளை கிடையாதா? இளவரசியை அனுப்பி வைக்கவேண்டும் என்று கூறியது நியாயம். சேது நாட்டை இரண்டாகப் பிரிக்குமாறு அதிகாரம் செய்ய இவர் யார்?''

சில கணங்கள் மவுனம்.

சேதுபதி சடையத்தேவர் ஏதோ யோசித்து ''நீங்கள் போகலாம்'' என்று உத்தரவு பணிக்கிறார்.

மதுரை தூதுவர்கள் சென்றதும், ''மருகரே! இவர்களைப் போகவிட வேண்டாம். தளவாய் ராமப்பய்யன் தூதுவர்களை மதிப்பதில்லை. ஆகவே நாம் ஒரு தூது அனுப்புவோம். அந்த தூது திரும்பிய பிறகு இவர்களை அனுப்பி வைக்கலாம்.''

''யாரை அனுப்புவது?''

''குமரன் அழகனை அனுப்பி வையுங்கள். தம்பித் தேவனுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. எனவே

நாட்டைப் பிரிக்க உத்தரவிட ராமப்பய்யனுக்கு அதிகார மில்லை என்று சொல்லச் சொல்லுங்கள். அடுத்து மதுரை இளவரசியை அனுப்பி வைக்கச் சம்மதிக்கிறோம் என்றும், அவ்வாறு அனுப்பிவைப்பதானால் அந்த காதலர்களை தம்பதி களாய் அனுப்ப முடியும் என்று சொல்லச் சொல்லுங்கள். பதில் வந்தபிறகு நான் ராமேஸ்வரப் பயணத்தை வைத்துக் கொள்கிறேன்''

சேது நாட்டு சேனைத்தலைவர் வன்னியத்தேவர் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

மானாமதுரையே மருண்டு துடிக்கிற அளவுக்கு மதுரை நாயக்கப் படைகள் சூழ்ந்து கிடந்தன.

சுற்றுப்புறங்களில் இருந்த பல கிராமங்களைக் கடந்து படைகள், ஏதோ சமுத்திரம் கொந்தளித்து ஒரு பரந்த பிர தேசத்தை ஆட்கொண்டது போல இந்தச் சேனா சமுத்திரம் காணப்பட்டது.

தளவாய் ராமப்பய்யன் செருக்குடன் காணப்பட்டார். இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் என்கிற செருக்கு அது.

மானாமதுரையிலிருந்த ஒரு பெருந்தனக்காரர் மாளிகை யில் தளவாய் ராமப்பய்யர் ஓய்வு கண்டார். சேதுநாட்டிற் குச் சென்ற தூது திரும்பியதும் மேற்கொண்டு படை நடத்த உத்தேசித்துக் கொண்டிருந்தார்.

நேற்றிரவு சிலபல கசப்பான செய்திகள் வந்து தளவாய் ராமப்பய்யரை வெகுண்டெழச் செய்தது. ஆயினும் இப்போதைக்குச் சிறுபடைத் தளபதிகளிடம் தகராறு வேண்டாம் என்று வாளா இருந்துவிட்டார். யார் எவ என்பதை மட்டும், நெஞ்சில் எழுதிவைத்துக் கொண்டார். மதுரை சென்றதும் அவர்களுக்கான தண்டனை காத்துக் கிடந்தது.

அவர்கள் செய்த கசப்பான நிகழ்ச்சிகள்...

சுற்றுவட்டத்திலிருந்த சில அழகிய பெண்களை இவர்கள் கடத்தி வந்து நாசம் செய்தார்கள் என்பது. இப்படி நாசம் செய்தவர்களில் பெரும்பாலும் திருமணமானவர்கள். அவர்களுடைய கணவன்மார்களை சித்திரவதை செய்ததாகவும் செய்தி. இது தகாத முறை. ஆயினும் நடந்து விட்டது.

போர்க்காலங்களில் இவ்வாறு தண்டு இறக்கியபோது நடைபெறுவது இயல்பே! இது அவரவர் ஆட்சியின் பண்பாட்டைப் பொறுத்தது.

அப்போதுதான் தளவாய் ராமப்பய்யர் பகல் போஜனத்தை அறுசுவையுடன் உண்டு முடித்துத் தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்தார்.

வீரன் ஒருவன் செய்தி கொண்டு வந்தான்: "சேது. நாட்டிலிருந்து தூது!"

ஓ...தூதா?

சென்ற தூதுவர்கள் என்னவானார்கள்!

"வரச்சொல்!"

தூதுக்குத் தலைமை தாங்கி வந்தவன் குமரன் அழகன்.

வயதானாலும் பெயருக்கேற்ப குமரனாகவும் அழகனாகவுமிருந்தான்.

குமரன் அழகன் வணங்கவில்லை. வந்தவுடன் நின்றான். விபரம் சொன்னான்:

"எங்கள் நாட்டை இரண்டாகப் பிரிக்க உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று மறவர் குல மன்னர் கேட்கச் சொன்னார். அத்துடன் மதுரை இளவரசியை அனுப்பி வைக்கிறாராம்! தனியாகவல்ல; தம்பதிகளாய். சம்மதம் என்றால் நாள் குறித்து அனுப்புகிறாராம். மதுரை மன்னர் வந்து ஆசீர்வதித்து அழைத்துச் செல்லச் சொன்னார்!"

ஆரம்பத்தில் குமரன் அழகன் வணங்காதது மிள காயைக் கிள்ளி வைத்தது போல இருந்து. இப்போது மிளகாயையே அரைத்து அபிஷேகம் செய்தது போன்ற எரிச்சல் ஏற்பட்டது.

''என்ன திமிர் இந்த சேதுபதியானுக்கு!''

''தளவாய் என்ன திமிர் உங்களுக்கு? என் எதிரிலேயே எங்கள் மன்னரைத் தரக் குறைவாகப் பேசுகிறீர்கள்!''

கோபம் உச்சியில் குந்தியது.

''நீ இப்போது என் எதிரில் இருக்கிறாய்! உருப்படியாக சேது நாட்டுக்குப் போக வேண்டாம்?''

''எங்கள் மன்னர் இதையறிந்துதான் உங்கள் தூது வர்களை அங்கே நிறுத்தி வைத்திருப்பது. எனக்கு ஏதேனும் நேர்ந்தால் அங்கே அவர்கள் உயிருடன் தோலுரித்து அனுப்பிவைக்கப் படுவார்கள்!''

தளவாய் ராமப்பய்யர் பேயாக மாறினார்: ''யாரிடம் பேசுகிறாய் என்பதை மறந்து பேசுகிறாய்! போ, போய் உன் மன்னனிடம் சொல்! சடையத்தேவன் குடும்பத்தையே வானுலகுக்கு அனுப்பி, சடையத்தேவன் மனைவிமார்களின் தாலிகளை அறுத்து எங்கள் கோட்டை வாசலில் தொங்க விடவில்லையென்றால் நான் ஜாதிப் பார்ப்பனன் அல்ல என்று சொல்!''

''நானும் ஒன்றைக் கூறுகிறேன்! நீங்கள் எங்கள் மறவர் நாட்டை மிதித்ததும் உங்களை வென்று உங்கள் குடுமியை அறுத்து அங்கே தேங்காய் குடுமியைக்கட்டி அடித்துத் துரத்தவில்லையென்றால் நான் ஜாதி மறவன் அல்ல!''

அடுத்த கணமே ''டேய் சின்னப் பயலே!'' என்கிற கர்ஜனை.

குமரன் அழகன் தனது வீரர்களுடன் வேகமாகப் புறப்பட்டு விட்டான்.

''படைகள் புறப்படலாம்!'' என்கிற கடுமையான உத்தரவு பயங்கரமாகப் பிறந்தது.

19

சேதுநாட்டுப் படைகள் திரண்டன என்பதைவிட சேது நாடே திரண்டது என்பதுதான் உண்மை.

தமது மருமகனும் சேதுசேனைத் தலைவருமான வன்னியத்தேவரிடம் படை அணிவகுப்பு குறித்துச் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லிவிட்டுக் குடும்பத்துடன் ரா்மேஸ்வரத்திவு மாளிகை நோக்கிப் பயணப்பட்டுவிட்டார் சடையத்தேவர்.

சேதுப்படைகளில் பல கிளை மரபினரும் வந்து சேர்ந்து கொண்டிருந்தாலும் குறிப்பாக கொண்டையங் கோட்டைத் தலைவரும், செம்பிநாட்டுத் தலைவரும், மங்கல நாட்டுத் தலைவரும் வந்து கலந்து கொண்டனர்.

படை முறைகளைப் பற்றி வன்னியத்தேவர் குமரன் அழகனிடம் விரிவாகச் சொல்லியிருந்தார்.

மறவர் குடிப்படைகள் சூரியோதயத்தில் புறப்பட்டன. காடந்தக் குடி, காவனூர் வழியாகச் சென்றது.

போரில் வல்லவரான வன்னியத்தேவர் அருமையான திட்டம் வகுத்திருந்தார்.

படைகளை நான்கு பிரிவாகப் பிரித்தார்.

ஒன்றைப் புதுக்குடிக்கோட்டைக்கு அனுப்பி வைத்தார்.

இன்னொன்றை குமரன் அழகனுடைய போகலூர்க் கோட்டைக்கு அனுப்பி வைத்தார்.

மற்றொன்றை இளையான்குடிக் கோட்டைக்கு அனுப்பி வைத்தார்.

நான்காம் பிரிவைத் தம்முடன் வைத்துக் கொண்டு அரியணிபுரக் கோட்டைக்குப் போய்ச் சேர்ந்தார்.

இச் செய்தி மதுரைப்படை மகாசேனாதிபதி தளவாய் ராமப்பய்யர் செவிகளுக்கு எட்டுகிறது.

அடுத்த கணமே மதுரைப் படைகள் மானுமதுரையை விட்டுக் கிளம்பி அரியணிபுரத்துக்கு விரைந்தன.

அரியணிபுரக் கோட்டை முற்றுகை ஆரம்பமானது.

அன்றைய போர் — முதல் நாள் யுத்தம் மிகவும் தீவிர மாக நடந்தது.

மதுரை தளவாய் ராமப்பய்யன் வாளையுருவி மந்திர மாகச் சுழற்றிப் போர் புரிந்தார்.

சேதுநாட்டுச் சேனைத் தலைவர் வன்னியத்தேவரோ 'உனக்கு நான் சளைக்கவில்லை' என்பதுபோலப் போரிட்டார்

எங்கும் அவல ஒலிகள்.

ஏதோ இரண்டு புயல்கள் மோதுவன போல அரியணி புரமே அமர்க்களப்பட்டது.

வாள் ஒலிகளுடன் துப்பாக்கிச் சத்தங்கள் வேறு. அது மறவர் படைகளிடமிருந்து எழுந்தனவாகும்.

அந்நாளில் போர்த்துகீசியர் கீழக்கரைப்பகுதியில் இறக்குமதியாகித் தங்கி இருந்ததால் சமயம் நேருகிறபோது பேரம்பேசிப் பெற்ற துப்பாக்கிகளாகும்.

இதனுல் மதுரைப் படைகள் அரண்டு போயின.

அன்றைய போரில் மதுரைப் படைகளுக்குப் பெருத்த சேதம்.

மாலை மறைந்து இரவு பூத்தது.

தளவாய் ராமப்பய்யர் கொந்தளிப்பு கண்டு உலவுகிருர்.

ஆரம்ப தினமன்றே இத்தனை பெரிய சேதமா?

காரணம் அறிய, தமது மருமகனும், மதுரைப்படைத் தலைவர்களுள் ஒருவருமான கொண்டப்பய்யரை அழைத்து காரணம் வினவுகிருர்.

வெளிப்பட்ட காரணம்—

வெடிப்பட்ட துப்பாக்கி...

அதற்கு வழி தேடவேண்டும்.

மறுநாள் போருக்கான திட்டங்களை விவரிக்கிறார் தளவாய் ராமப்பய்யர். அத்துடன் கீழக்கரைப் பகுதிகளில் தங்கியிருந்த போர்த்துகீசிய துப்பாக்கி உதவிகளுக்குத் தூண்டில் போட முனைகிறார். இந்தப் போர் நல்லமுறையில் முடிந்தும் போர்த்துகீசியருக்கான எல்லா ஆவணங்களையும் மதுரை நாயக்க வமிசம் கவனிக்கும் என்று வாக்குறுதி தரச் செய்கிறார்.

இது இவ்வாறு இருக்க—

இதே நேரத்தில் மறவர்குல வீரத் திலகமான வன்னித் தேவரும் யுத்த திட்டங்களை விவரித்து ஆணையிடுகிறார்.

நாளைய காலைப் போரில்—

அரியணிப்புரக் கோட்டையின் மேற்கு வாயிலுக்கு வீரன் கருத்த உடையான் தலைமையில் ஒரு பகுதி படையை அனுப்ப ஆணையிடுகிறார். வடக்கு வாயிலுக்கு வீரன் வீமனை தலைமை தாங்கச் செய்கிறார். பெத்தையுடையான் எனும் பெருவீரனை தெற்கு வாயிலுக்கு ஏவுகிறார். கிழக்கு வாயிலுக்கு மாவீரன் நத்ததேவனை அனுப்பக் கட்டளையிடுகிறார்.

கோட்டையின் உச்சியிலிருந்து வில்லுருண்டைகளையும் துப்பாக்கிக்கு இணையான கருவிகள்) எரியும்புகளையும் மதுரைப் படைகளை நோக்கி வீச ஆணையிடுகிறார்.

அடுத்த நாள் போர் அதாகதமாக நடந்தது.

'நாடு கலக்கி' என்னும் புரவியில் ஆரோகணித்து ஓர் அசுரனைப் போலச் சூறாவளி வேகம் கொண்டு போர் புரிந்தார் வன்னியத்தேவர்.

மறுபுறம் நாராயணத்தேவன் நரசிம்ம அவதாரம் பூண்டு மதுரைப்படை வீரர்களைக் கிழித்து எறிந்தான்.

சுவீகாரப் புதல்வன் ரகுநாதன் இன்னொருபுறம் நின்று மதுரைப்படைகளைச் சம்காரம் செய்தான்.

ஆ! இது மறவர் யுத்தமா? அல்லது குருஷேத்திரமா? என்று வியக்கச் செய்தது.

இந்தப் போரிலும் மதுரைப் படைக்குப் பெருத்த சேதம்.

தளவாய் ராமப்பய்யன் பேயாகக் கதறுகிறார்.

தமது படைபலத்துக்கு முன்னால் மறவர் படைகள் மிகவும் சாதாரணமாயினும் சேதம் மதுரைப்படைகளுக்கு என்று தெரியவருகிறபோது, இவர்கள் என்ன வீரப்பயிற்சி பெற்றார்கள் ஒன்று உடன் துணை புரியவந்த பாளையப்படைத் தலைவர்களைத் தாறுமாறாக ஏசுகிறார்.

இதுவரை ஐயாயிரம் மதுரைப்படை வீரர்கள் அதோ கதியான பிறகு, இனியும் இவ்வாறு நேரலாமா என்று எரிந்து விழுகிறார் தளவாய் ராமப்பய்யர்.

மூன்றும் நாள் போரிலும் மோசம் போயினர். மதுரைப் படையினர்.

இனியும் அரியணிபுரக் கோட்டையைத் தாக்குவதில் கால விரையமும் வீரவிரையமும் செய்வதைவிட அந்த குமரன் அழகனை பழிவாங்க அவனது போகலூர் கோட்டையை தாக்க மதுரைப் படைகளை இரவோடு இரவாக நடத்திச் சென்றார் தளவாய் ராமப்பய்யர்.

குமரன் அழகன் எத்தனை திமிராக பேசினான். முதல் காரியமாக அவனை தண்டித்து பழிவாங்க வேண்டும். அதன் மூலம் ஏனையோருக்கு ஓர் அச்சத்தை எழுப்பி, இந்த அச்சமே பலவீனத்துக்கு வழி கோலட்டும் என்கிற ஒருவித ராஜதந்திரத்துடன் படைகளை வேகமாக நடத்திச் செல்கிறார் தளவாய் ராமப்பய்யர்.

இதற்கிடையில் போர்த்துகீசியர் படைகளையும் துப்பாக்கி போன்ற கருவிகளையும் விலை பேச ஆட்களை ரகசியமாக அனுப்பி வைத்திருந்தார் தளவாய் ராமப்பய்யர்.

மதுரைப்படைகள் போகலூர் கோட்டையை நோக்கிச் செல்லும் ரகசியம் அறிந்த மறவர்குல சேனாதிபதி வன்னியத் தேவர் அனைவரையும் அழைத்துக் கொண்டு புயலென விரைகிறார்.

போகலூர்க் கோட்டை வீழ்ச்சியடைவது எந்தவிதத்திலும் சிலாக்கியமாகாது. அது குமரன் அழகனுக்குரிய கேந்திரப் பீடம்.

பொழுது விடிவதற்குள் இரு படைகளும் போகலூரை அடைந்து விட்டன.

இதற்குள் போகலூர் கோட்டைக்குள் இருந்த மறவர்கள் கேள்விப்பட்டு ஆயுதங்களைத் தாங்கிப் புறப்பட்டு விட்டார்கள்.

போரா அது?

பயங்கர மோதல்.

தளவாய் ராமப்பய்யன் அந்நாளைய சொப்பன பயங்கரன் என்பதை நிரூபிக்கிற வண்ணம் தமது பிரதாபங்களை மெய்ப்பிக்கிறார்.

வன்னியத்தேவரும் சளைக்கவில்லை. மதுரைப்படைகளை பஸ்பமாக்கி விடுவது போன்று யுத்த சாகசம் புரிகிறார்.

இருதரப்பிலும் சேதம் ஏற்பட்ட வண்ணம் இருக்கிறது.

இச்சமயம் காடந்தங்குடியில் இருந்து மறவர் படைகள் வேறு கலந்து கொள்ளவே சேது நாட்டு வீரர்கள் உற்சாகத்துடன் போர் புரிகிறார்கள்.

மதுரைப்படைகள் பெருத்த சேதத்துள்ளாகின்றன.

அதனாலென்ன?

மேலும் படைகள் என்றால் வந்து குவியுமே!

தளவாயின் மருமகனும் உபதளவாயுமான கொண்டயப்பன், எதிரிகளை குலைசாய வீழ்த்துகிறான்.

நாராயணத்தேவன் நரசிம்ம அவதாரம் பூண்டு வாளைச் சுழற்றுகிறான். அவனுக்குதவியாக அவனது அண்ணன்—வருங்கால சேதுபதி வாளை ஏந்தி எதிரிகளை சம்கார ஆயுதமாக வீசுகிறான்.

மதுரைப்படைகளுடன் கலந்து கொண்ட பாளையக்காரர்களான விருப்பாச்சி நாயக்கனும் காமாட்சி நாயக்கனும் தொண்டம நாயக்கனும் வெங்கம நாயக்கனும் போகலூர்ப் போர்க்களத்தில் வீர சொர்க்கம் அடைகிறார்கள். இதனால் பாளையப்படைகள் சிதறுண்டு சின்னாபின்னமாயின.

மதுரைப் படைகள் போகலூரில் எதிர்பார்த்த வெற்றி காணாமல் சிதறுண்டு போயின.

முற்றுகை நீடித்தது.

இதற்கிடையில் மறவர் நாடு, யுத்தம் காரணமாக உணவு தட்டுப்பாடு காண உற்சாகம் சிதைந்து பயந்தது.

மதுரைப் படைகளுக்கோ அவ்வப்போது தட்டுப்பாடு தெரியாவண்ணம் உதவிகள் வந்து குவிகின்றன.

இல்லையென்றால் மறவர் நாட்டுக்குள்ளேயே கொள்ளை, கொலை!

முற்றுகையை நீடிக்கச் செய்த மறவர் சேனாதிபதி வன்னியத்தேவர் யாருக்கும் தெரியாவண்ணம் ராமேஸ்வரம் புறப்படுகிறார். அதற்குமுன் தமது இரு குமாரர்களையும் அழைத்து எச்சரிக்கிறார்.

"நான் சொல்கிற ரகசியம் பாதுகாக்க வேண்டிய ஒன்று. இரு தினங்களில் திரும்பி விடுகிறேன். நமது சேதுபதியவர்களைக் கலந்து ஆலோசிக்க வேண்டிய கட்டத்தில் நாமிருக்கிறோம். கவனமாக மதுரைப் படையின் முற்றுகையை நீடிக்கவிடுங்கள்."

வன்னியத்தேவர் இரவோடு இரவாகப் புறப்படுகிறார்.

மறுநாள் சூரியன் இரு படைகளையும் வாழ்த்தியவாறு கிழக்கு வானை எட்டிப்பார்க்கிறான்.

இந்த முற்றுகையை எவ்வாறு முறியடிப்பது என்று பலத்த ஆலோசனையில் தளவாய் ராமப்பய்யர் மூழ்கி இருந்த போதுதான் எப்படியோ செய்தி வெளிப்பட்டு விட்டது. வன்னியத்தேவர் ராமேஸ்வரம் நோக்கிப் பயணமாகி இருக்கிறார்.

போதுமே!

தலைவனில்லாத இந்தக் கூட்டத்தைத் தருணம் பார்த்து முறியடித்து விடலாமே!

போர் இப்போது மும்முரமாக மூள்கிறது.

மறவர் குல வீரத் தலைவர்களுடன் ரகுநாதனும் நாராயண தேவனும் மோதோ மோதென்று மோதியும்...

யுத்தக் களத்தில் வன்னியத்தேவரைக் காணாத மறவர் படைகள் மருண்டு கலங்கிப் போயின.

எங்கே வன்னியத்தேவர்?

போரில் வீர சொர்க்கம் அடைந்து விட்டாரா?

இதனை மறைத்துப் போரிடுகிறார்களா?

மறவர் படையின் பலவீனத்தால் போகலூர் கோட்டை வீழ்த்தப்பட்டது!

ஐயோ! முதல் தோல்வி...

அடுத்து...

அரியணிபுரக்கோட்டை வீழ்ந்து விட்டது.

வன்னியத்தேவர் இல்லாத குறை மட்டுமேயல்லாது உணவுத் தட்டுப்பாடும் அவர்களை வலுவிழக்கச் செய்தது.

அடுத்து அத்திப்புத்தக் கோட்டை.

தளவாய் ராமப்பய்யரின் உற்சாகத்திற்கு அளவே இல்லை.

இனி பயமில்லை.

எப்போது இந்த கோட்டைகள் மதுரை வசமாயினவோ, இனி சேதுநாட்டை வசமாக்குவது பெரிதல்ல.

ஆயினும்...

சடையத் தேவனைச் சிறைபிடித்து விட்டால் யாவும் சரணாகதிதான்.

இப்போதுதான் தெரிகிறது.

சடையத்தேவன் குடும்பத்துடன் ராமேஸ்வரத்தில் இருக்கிறான். மதுரை இளவரசி கங்கைநாச்சியும் அங்குதான் இருக்கிறாள்.

ஒரு கணமும் தாமதியாது, மதுரைப்படைகளை ராமேஸ்வரம் நோக்கி விரைந்து அழைத்துச் செல்கிறார் தளவாய் ராமப்பய்யர்.

மாலைக்குள் மதுரைப்படைகள் பாம்பன் ஆற்றங்கரையை அடைந்தன. அங்கே கூடாரமடித்துக் கொண்டு தருணத்தை எதிர்பார்த்தன.

ராமேஸ்வரத்திலிருந்த சேதுபதி சடையத்தேவர் இதனைக் கேள்விப்பட்டு இனியும் வாளாயிருக்க விரும்பாமல், போர் முகத்துக்குத் தலைமை தாங்கப் புறப்பட்டார்.

ராமேஸ்வர மாளிகையில் இருந்த மதுரை இளவரசி கங்கைநாச்சி கண்ணீருடன் கவனிக்கிறாள்.

ஆ! மதுரைப் படைகள் வென்றுவிட்டால், தனது வாழ்வு மரணச் சொப்பனம் காண வேண்டியதுதான் என்று உள்ளுக்குள் தீர்மானித்து கொண்டாள். அவளை மறவர் குல அன்னை கங்கைநாச்சியார் எவ்வளவோ தேற்றினாள். நிச்சயம் ஒரு தீங்கும் ஏற்படாது என்று உறுதியளிக்கிற வகையில் ஆறுதல் சொன்னாள்.

என்ன ஆறுதல் சொல்லியும் மதுரை இளவரசி கங்கை நாச்சிக்கு ஒரு தீர்க்கமான சமாதானம் ஏற்படவில்லை. அது ஏற்பட சாத்தியமும் இல்லை.

சேதுநாட்டில் சில கோட்டைகள் வீழ்ந்துபட்டன.

தளவாய் ராமப்பய்யர் யுத்தகள காலன். எப்படியோ ராமேஸ்வரத்தில் தங்கியிருக்கிற செய்தியை மோப்பம் பிடித்து வந்து பாம்பனுற்றில் முகாம் கொண்டிருக்கிருர்.

நாளைய போரில் சேதுபதியே வாளை ஏந்தி இறங்குகிருர்.

தளவாய் ராமப்பய்யருக்கு நிகரான பெருவீரர் சடையத்தேவர்.

நாளைய யுத்தத்தை வைத்துதான் எதையும் எடை போட முடியும் என்கிற முடிவுக்கு வருகிருள் மதுரை இளவரசி கங்கைநாச்சி.

இதற்கிடையில்...

ஒரு தடவை, ஒரே ஒரு தடவை நாராயணத்தேவனைக் காணமாட்டோமா என்கிற ஏக்கம் அவளது மார்பகங்களை விம்மிப் புடைக்கச் செய்கிறது.

நெஞ்சுள் எத்தனையோ வீக்கங்கள்...

கனவுகளில் பல கீறல்கள்...

20

சூரியோதயத்தில் ராமேஸ்வரம் சுப்ரபாதம் பாடுகிறது...

வன்னியத்தேவர் அந்தத் திருக்கோயிலுக்கு எழுந்தருளுகிருர். ஸ்ரீராமபிரான் பூஜித்த அந்தச் சிவபெருமானை வன்னியத்தேவர் கண்ணீர் மல்கப் பூஜிக்கிருர்.

இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு சேதுபதி சடையத்தேவர் போர்வாளை ஏந்தி புரவிமீது ஆரோகணித்து யுத்தகளம் புகுந்து விட்டார்.

பாம்பனுறே ரத்த வெள்ளம் கரைபுரளுகிற அளவுக்குப் போர் நிகழ்ந்தது.

எங்கும் வாளொலிகள் என்றுமில்லாத சத்தமிட்டன.

மறவர்கள் மார் நிமிர்ந்து போரிடுகிருர்கள். தங்கள் தலைவனை போர்களத்தில் இறங்கிவிட்ட பிறகு புதிய உற்சாகம் மோலோங்கியது.

மதுரைப்படைகளும் வெறி கொண்டு போரிடுகின்றன.

தளவாய் ராமப்பய்யர் சடையத்தேவரே போர்க்களம் புகுந்துவிட்டது கண்டு மேலும் வேங்கையென சீறிப் போரிடுகிருர்.

எவ்வழியிலும் சடையத்தேவரைத் தீர்த்துக் கட்டுவது என்கிற மும்முரத்துடன் போரிடுகிருர். ஏதாவது குறுக்கு வழியில் சந்தர்ப்பம் கிடைக்குமா என்றும் எதிர்பார்த்துச் சாகசம் புரிகிருர்.

ஒரு கட்டத்தில் அவருக்கு என்ன யோசனை தோன்றியதோ...

புரவியைப் பின்நோக்கித் தளர்த்துகிருர்.

போர்க்களத்தில் ஓர் ஒதுக்குப்புறமான இடமாகப் பார்த்து புரவியை நிறுத்தி, ஒரு நாயக்க வீரனை அழைக்கிருர்.

தொலைவில் கூலிப் படைக்கு ஒப்பான பட்டாணியர்ப் படைத்தலைவனை அழைத்து வருமாறு உத்தரவிடுகிருர்.

சற்றைக்கெல்லாம் பட்டாணியத் தலைவன் அருகில் வந்து புரவி சகிதமாக நிற்கிருன்; வணங்குகிருன்.

''பட்டாணியத் தலைவனே! போர் நடந்து கொண்டிருக்கட்டும். நீ என்ன செய்கிருய் தெரியுமா? மிகவும்

சாதுரியமாகப் போர் புரிவதுபோல அதோ இருக்கும் சேதுபதி சடையத்தேவரைத் தந்திரமாக வெட்டி வீழ்த்திட வேண்டும். இதனால் உனது உயிருக்கு ஆபத்து வந்தாலும் கச்சிதமாக செய்து முடிக்கிறாய், புறப்படு!''

பட்டாணியத் தலைவனும் புரவியைத் திருப்பி அதன் விலாவில் ஓங்கி உதைத்துச் சேணத்தைத் தளர்த்துகிறான்.

புரவியும் போர்க் களத்துள் நாலு கால் பாய்ச்சலில் ஓடுகிறது.

பட்டாணியத் தலைவன் வாளையுருவிக் கொண்டு பல சந்தர்ப்பங்களை எதிர்பார்க்கிறான்.

சேதுபதி சடையத்தேவர் வாள் சுழற்சி கண்டு அருகில் நெருங்கவே அஞ்சுகிறான்.

தனது உயிர் போவது குறித்து அந்தப் பட்டாணியத் தலைவன் அஞ்சவில்லை. அதற்கு முன் சடையத் தேவருடைய உயிர் பிரிய வேண்டும் என்பதில் அவன் குறிக்கோளாய் எதிர்பார்க்கிறான். அவனது உயிருக்கு எத்தனையோ பொற் குவியலை வீட்டுக்கு அனுப்ப தளவாய் ராமப்பய்யர் இருக்கிறாரே?

ஆ! சரியான சந்தர்ப்பம்.

பட்டாணியத் தலைவன் வாளை வீசிக் கொண்டு சேதுபதி சடையத்தேவர் மீது பாய—

சடையத் தேவர் இட வெட்டாக வெட்டி எதிர்ப்பை முறியடித்துத் திரும்ப வேண்டி புரவியின் சேணத்தை இழுக்க—

அத்தருணத்தில் பட்டாணியர்த் தலைவனின் வாள் வீச்சு மார்பில் புதைவதற்கு மாறாக தோளில் பாய்ந்து விட்டது.

சடையத் தேவரின் தோளில் ரத்தம் பீறிட்டது.

பட்டாணியர்த் தலைவன் புரவியைச் செலுத்தி வேற்று இடம் நோக்கிப் பாய்ந்து தனது வீரர்கள் பாதுகாப்பாக இருக்கப் போர் புரியலானான்.

அடப் பேடி, பட்டாணியத் தலைவனே என்று கருதி சடையத் தேவர் அவனை முறியடிக்கக் குதிரையைச் செலுத்துகிறார். ஆனால் கரம் பலவீனப்பட்டுவிட்டது.

இத்தருணத்தில் தனது அம்மான் படைக்களம் புகுந்த செய்தி அறிந்து 'நாடு கலக்கி' எனும் புரவியைச் செலுத்திக் கொண்டு வன்னியத்தேவர் வேக வேகமாகப் போர்க் களத்தில் நுழைய—

செய்தி எட்டுகிறது.

கேவலம் ஒரு பட்டாணியத் தலைவன் தமது சேதுபதியைத் தாக்குவதா?...

வன்னியத் தேவர் மென்னியைப் பிடித்து உலுக்கும் சிங்கம் போலப் பாய்ந்து, பட்டாணியத் தலைவனை ஒரே வீச்சில் பதம் பார்க்க...

பட்டாணியத் தலைவன் தலை பந்தாக உருண்டு சிதறுகிறது...

அந்த வேக வெறியுடன், இருக்கும் பட்டாணியர்கள் அனைவரையுமே எமப்பட்டினம் அனுப்பப் பாய்ந்து சாகசம் புரிகிறார்.

ஏறத்தாழ முன்னூறு பட்டாணியர்கள் மூர்ச்சை மறந்தனர்.

பாம்பனாற்றுப் போர் மும்முரத்தை கண்டு மதுரை தளவாய் ராமப்பய்யரே மருண்டு போனார்.

போர் நாட்களை விழுங்கிக் கொண்டிருந்தது.

இத்தனை நாள் போர் எப்போதும் நிகழ்ந்ததில்லை.

கருநாடகப்போரை ஒரு காலைக் கடனைப் போல் மதித்த தளவாய் ராமப்பய்யர்—

திருவிதாங்கூர் போரை ஒரு பகல் தூக்கமாக மதித்த தளவாய் ராமப்பய்யர்...

இந்த மறவர் நாட்டுப் போரைக் கண்டு மலைத்தும் மருண்டும் போனார்.

போர்ச் செய்தி அவ்வப்போது மதுரை நாயக்க மன்னர் திருமலை நாயக்கருக்குச் சென்ற வண்ணம் இருந்தது.

இவ்வாறு ஒரு மகா யுத்தம் நீடிக்கும் என்று திருமலை நாயக்க மன்னரே எதிர்ப்பார்க்கவில்லை.

தளவாய் ராமப்பய்யரை திரும்பி வந்துவிடுமாறு ஆணை பிறப்பிக்கலாம் என்று எண்ணினாலோ, இது ஒரு கவுரவப் போர்!.

மதுரை இளவரசியைக் கடத்தி சென்ற மானப்போர்!''

நிகழ்வது நிகழட்டும் என்றெண்ணி மேலும் படைகளை அனுப்பி வைத்தார்.

இதனால் மதுரையிலும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது.

இப்பேர்ப்பட்ட வல்லரசான மதுரைப்படைகளை ஒரு சிற்றரசு எதிர்த்துக் கலக்குகிறதென்றால்....

ஆ! மறவர்க்குடி ஒரு பெருமைமிக்க வீரக்குடி என்று திருமலை நாயக்க மன்னரே வியந்து தம்முள் பாராட்டிக் கொண்டார்.

பாம்பனாற்றை ரத்தவெள்ளமாக்கிய இந்தப் போரைக் கண்டு' வியக்காதார் யார்?

அன்றிரவு தளவாய் ராமப்பய்யர் பெருத்த மந்திராலோசனையில் ஆழ்ந்தார்.

ஆலோசனைக்குழுவில் முக்கிய அங்கம் வகித்துக் கருத்துக்களை எடுத்துச் சொன்னார் துணைப்படைத்தலைவர் அரங்கண்ண நாயக்கர்,

கடற்போர் குறித்து அந்த மந்திராலோசனை விவாதித்தது.

"கடற்போரில் வல்லவன் வன்னியத்தேவன். மேலும் அவர்கள் திடும் என்று ராமேஸ்வரத்தீவில் ஓடி ஒளிந்து கொள்வார்களேயானால் நாம் இங்கே நாட்கணக்கில் வதைய நேரிடும். இதற்கு மார்க்கம் தேவை" என்றார் அரங்கண்ண நாயக்கர்.

"போர்த்துக்கீசியருக்கு தூது அனுப்பியது என்ன வாயிற்று?" என்று கர்ஜித்தார் தளவாய் ராமப்பய்யர்.

அப்போது உபதளபதியான கொண்டப்ப நாயக்கர் பதில்சொன்னார்:

"போர்த்துக்கீசியர் ஐந்து கப்பல்களை உதவுவதாகவும், துப்பாக்கி போன்ற ஆயுதங்களை உதவுவதாகவும் செய்தி வந்திருக்கின்றன".

"பெற வேண்டியதுதானே?"

"சில நிபந்தனைகள் விதிக்கின்றார்கள். அந்த நிபந்தனைகளுக்கு நாம் உட்பட்டால் அவர்களது ஆதிக்கம் பின்னாளில் மேலோங்கும்?"

"என்ன நிபந்தனைகள்?"

கொண்டப்பர் விரிவாக எடுத்துச் சொன்னார்.

நாட்டைப் பழுதாக்குகிற நிபந்தனைகள்தாம்

போர்த்துக்கீசிரியர் காலூன்ற சேதுபதி தடங்கலாக இருக்க, இதனை நாம் ஆதரிப்பது நாட்டை கெடுப்புதாகும் என்றுணர்ந்ததும், "பின்னாளைப் பற்றிய கவலை இன்னாளைக்கு எதற்கு? போரில் வெற்றிபெற வேண்டும். வெற்றிக்கு பிறகு நிபந்தனைகளில் சில மறு பரிசீலனை செய்யலாம்." என்றார் தளவாய் ராமப்பய்யர்.

"எழுத்து மூலமாக எழுதிக்கொடுத்தபிறகு நாம் அதனை மறுக்க முடியுமா?"

''எழுத்து மூலமாகவா? பரவாயில்லை. நடப்பது நடக்கட்டும். உதவிகளைப் பெற ஆவன செய்யுங்கள். அத்துடன் இன்றிரவே ராமேஸ்வரத்திற்கு பாலம் அமைக்க முயலுங்கள்.''

''ராமேஸ்வரத்திற்கு பாலமா? இது நடக்கிற காரியமா?''

''நிச்சயம் எதுவும் முடிக்கிற காரியம். பக்கத்திலிருக்கும் தீவுகளில் இருந்து இது பற்றியதில் உதவி கோரி ஆட்களை அமர்த்தி இந்தப் பாலம் நிறைவேறியே தீரவேண்டும்.''

அனைவரும் மலைத்தனர்.

ராமேஸ்வரம் வரை கடலில் பாலம் அமைப்பதாவது?

தளவாய் ராமப்பய்யரின் பிடிவாதம் அவர்கள் அறிந்ததே!

மறுநாள்—

எதிர்பாராத விதமாக மதுரையில் இருந்து போர் வீரர்களும் யுத்த தளவாடங்களும் வந்து சேர்ந்தன.

போர்த்துக்கீசியரிடமிருந்து பேரம் பேசியது போல ஐந்து கப்பல்களும் வந்து சேர்ந்தன.

கப்பலில் தமது போர்வீரர்களை ஏற்றிக்கொண்டு ராமேஸ்வரத்திற்கு சென்று முறியடிக்க முயன்றார் தளவாய் ராமப்பய்யர்.

கடல் போரில் அனுபவமற்றவர்கள் மதுரை வீரர்கள்.

ஆனால் வன்னியத்தேவர்?

கடல் போரில் வல்லவர்.

அவரும் மூன்று கப்பல்களைத் தருவித்து வீரர்களுடன் புறப்பட்டார்.

தரைப்போரில் நுரை தள்ள வைத்த வன்னியத்தேவர் தண்ணீர்ப் போரில் தண்ணீர் காட்டினார்,

அந்த ஒரே நாளில் போர்த்துக்கீசியர்பால் பெற்ற ஐந்து கப்பல்களும் அதாகதமாயின.

தளவாய் ராமப்பய்யர் பெரிதாக அரண்டு போனுர்.

மறவர்களை எத்தனை எளிதாக மதித்து விட்டோம் என்பது அவருக்கு அப்போதுதான் புரிந்தது.

மதுரைப் படைகள் கடல்போரில் படுதோல்வி அடைந்தன.

அடுத்து—

ராமேஸ்வரத்துள் நுழைய கடல்பாலம் கட்டியே தீர வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

மறவர்படைகள் அனைத்தும் ராமேஸ்வரத்திற்கு சென்று விட்டன.

ஒன்று வெற்றி அல்லது வீர சொர்க்கம் என்கிற முடிவுக்குச் சென்று விட்டார் சேதுபதி தளவாய் சடையத் தேவர்.

எல்லாவற்றுக்கும் மூல காரணம் மதுரை இளவரசி கங்கைநாச்சியாரைச் சிறை கொண்டு வந்தது என்கிற எண்ணமே சடையத்தேவருக்கு ஏற்படவில்லை. எப்படியும் இந்த யுத்தம் மூண்டே இருக்கும். காரணம் தம்பித்தேவன் என்பதும அவர் நன்கு உணர்ந்ததுதான்.

தளவாய் ராமப்பய்யர் கடற்பாலம் கட்ட முனைந்த அசுரத்தனமான முயற்சியை கேள்விப்பட்டு பெரிதாக வியந்தார். இவன் மனுஷனு? அரக்கனு?

இந்த அசுரத்தனமான செய்தியினூடே ஓர் அவலச் செய்தியும் வந்தது.

அது...

சேது சேனுதிபதி கடுமையான காய்ச்சல் கண்டிருக்கிறார் என்பது.

மிக்கவும் வேதனை நிரம்பிய நெஞ்சுடன் சென்று கவனிக்கிறார் சேதுபதி சடையத்தேவர்.

ஓ... வன்னியத்தேவா! எனது வலக்கரமே!

படுக்கையில் வைசூரி கண்டிருந்தார்.

"மருகரே! இந்த நிலையில் இப்படி ஒரு சோதனையா?" என்று கதறுகிறார் சேதுபதிதேவர்.

ஆனால் வன்னியத்தேவர் கேட்ட முதல்கேள்வி? "ராமப்பய்யன் கடல்பாலம் கட்டுகிறானமே! நாளை நான் புறப்பட்டு அதனை அழிக்கப் போகிறேன்" என்றார்.

சேதுபதி சடையத்தேவர் கண்களில் முத்து முத்தாக கண்ணீர் சரங்கோத்தது.

பக்கத்தில் அருமை சகோதரி, மறவர்குலப் பெண்மணி கங்கைநாச்சியார் அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

"கங்கைநாச்சி! இப்போது என்ன வந்து விட்டது என்று இப்படி அழுது புலம்புகிறாய்? எனக்கு ஒன்றும் வராது. எனது கடன், மறவர் கௌரவத்தை காப்பாற்றுவது. இந்தச் சரித்திரப் புகழ் யுத்தத்தில் எனது உயிர் பிரியுமானால் அது காலனை வென்றதாகும்" என்றார் வன்னியத்தேவர்.

மேலும் கதறியழுதாள் மறவர்குல கங்கைநாச்சியார்.

அப்போது—

குமரன் அழகன் பொங்கி எழுந்து கூக்குரலிட்டான்.

"கடற்பாலமா அமைக்கிறான் அந்த அசுரபிராமணன்? அதனை அழித்துவிட்டுத் திரும்புகிறேன்" என்று சூள் கொட்டிப் புறப்பட்டான்.

அவனைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியவில்லை.

அவனுக்கு உதவி செய்ய நாராயணத்தேவனும் சூள் கொட்டிப் புறப்பட்டான்.

அன்னை கங்கைநாச்சியார் எவ்வளவு சொல்லியும் நாராயணத்தேவன் கேட்கவில்லை,

''அவனைப் போகவிடு!'' என்று கடுமையாக உத்தரவு பணிக்கிறார் வன்னியத்தேவர்.

ஆனால் சடையத்தேவர்?

''வேண்டாம் நாராயணா? அப்பாவுக்கு உடல் குன்றி இருப்பதால் நீ பக்கத்தில் இரு! குமரன் அழகனுடன் வேறு தளபதிகள் செல்லட்டும்.'' என்றார்.

நாராயணத்தேவன் ஆவேசம் அடங்கவில்லை.

''கடற்பாலத்தை அழித்தான் நாராயணத்தேவன் என்கிற சரித்திரம் எனக்கே உரியதாகும்'' என்று கூறிப் புறப்பட்டான்.

தொலைவில்...

மதுரை இளவரசி கங்கைநாச்சி கண்ணீருடன் நின்று கரம் கூப்புகிறாள்.

23

கடல்பாலம் உருவாக்குவதில் அதிதீவிரமாக முனைந்து வேலை பார்க்குமாறு கர்ஜிக்கிறார் தளவாய் ராமப்பய்யர்.

உயர்ந்தோங்கிய ராமேஸ்வரம் கோபுரத்தை கவனிக் கிறார் தளவாய் ராமப்பய்யர்.

சிற்ப வேலைகளுடன் சிறந்து விளங்கிய அந்தக் கோயிலை மதுரையுடன் இணைத்தே தீருவது என்று மனத்துள் வஞ் சினம் கொள்கிறார்.

ஆயிரக்கணக்கான ஆட்கள் பெரும் பெரும் கற்களைக் கொண்டு வந்து கடலில் கொட்டிய வண்ணம் இருக் கின்றனர்.

கற்கள் கடலில் விழவிழ நீர்மேலே வந்த வண்ணம் இருக்கிறது. அதன் ஆழத்துக்கு கற்களை நிரப்பி அதன் மீது

மரக்கட்டைகளை அடுக்கி படைகளை அக்கரைக்கு கொண்டு செல்ல வேண்டும். எத்துணை பிடிவாதமான தீவிரம் இது என்று நினைக்கிற போது பணிபுரிகிறவர்களே தளவாய் ராமப்பய்யரை மனத்துள் வசைந்து கொள்கிறார்கள். பிறப்பில்பிராமணனே யொழிய நடப்பில் அரக்கன் என்றும் முணுமுணுத்துக் கொள்கின்றனர்.

சரியான உச்சி வெய்யில் நேரம்...

திடுமென்று தோணிகளில் மறவர் படைகள் வருவதை கண்டு விதிர்த்து போயின நாயக்கப் படைகள்.

தொலைவில் இருந்தவாறே கவனிக்கிறார் தளவாய் ராமப்பய்யர்.

ஓ... இவர்கள் கடல்பாலத்தை அழிக்க வருகிறார்கள்...

''கொண்டப்பய்யா! படைகளை ஆயத்தப்படுத்து! வருபவர்களை கொன்று அவர்கள் தலைகளையும் கற்களுக்கு பதிலாகப் போட்டு பாலம் எழுப்புங்கள்'' என்று கர்ஜிக்கிறார் தளவாய் ராமப்பய்யர்.

நூற்றுக்கணக்கான தோணிகளில் மறவர்குல வீரர்கள். அவர்களுக்குப் போகலூர்க் கோட்டைத் தலைவன் குமரன் அழகனும், சேது நாட்டு இளவல் நாராயணத்தேவனும் தலைமைத் தாங்கி வருகிறார்கள்.

மறவ வீரர்கள் அருகில் வந்து விட்டார்கள்.

நாயக்க வீரர்கள் அவர்களைத் தாக்க ஆயுதங்களைக் கொண்டுக் காத்திருக்கிறார்கள்.

தோணிகளை விட்டிறங்கிய மறவ வீரர்கள் 'ஓ' வென்ற கூச்சலுடன் நாயக்க வீரர்களைத் தாக்க முனைந்து விட்டார்கள். அத்துடன் கற்களை நிரப்பி வந்த அந்த பாலத்தையும் துகளாக்க முயலுகின்றனர்.

கடல் நீர் முழுவதும் நீல நிறத்தை இழந்து செந்நிறமாகிறது.

நீலக்கடலோ? ரத்தக்கடலோ? என்று வியக்குமளவுக்கு வீரர்கள் சிதறுண்டு துடிக்கிறார்கள்.

அன்று மாலை வரை நடந்த அந்தக் கடற்பாலப் போரில் இருதரப்புக்கும் இழப்பு அதிகம்.

சொல்லப்போனால் மறவர் படைகளுக்கே அதிக சேதம். பெரும்பாலான மறவவீரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டார்கள். குறிப்பாக போகலூர்க் கோட்டைத் தலைவன் குமரன் அழகன் சிறைப்பட்டு விட்ட செய்தி மறவர்களைக் கலக்கி விட்டது. அதுவே அந்தத் தோல்விக்கு மூல காரணமாக அமைந்து விட்டது.

நாராயணத்தேவனும் பாதிக்கும் குறைவான மறவ வீரர்களும் கடலுக்குள் பாய்ந்து தோணிகளைப் பிடிக்க முயல்கிற போது...

சில தோணிகளே தொலைவில் காணப்பட்டனவே யொழிய ஏனைய தோணிகள் என்னவாயின என்பது குறித்து அதிர்ச்சியடைந்தனர். கிடைத்த தோணிகளில் முக்கியமான வர்களும் சில வீரர்களும் ஏறிக் கொண்டு ராமேஸ்வரம் நோக்கி செலுத்தினர். ஏனையவர்கள் நீச்சலில் வல்லவர் களாகயிருந்தபடியால் நீந்தியே ராமேஸ்வரக் கரையை அடைய முற்பட்டனர்.

கடற்பாலப் போர் நடக்கையில் உபதளபதி அரங் கண்ண நாயக்கர் செய்த சூழ்ச்சியில் பல தோணிகள் கடத் தப்பட்டன. அதுவே அவர்களுடைய கடற்பாலத்துக்கு உதவியாக முடிந்தது.

இந்தத் தோணிகளைக் கொண்டோ, நம்பியோ ராமேஸ் வரத்தை அடைய முடியாது. நாம் செய்த சூழ்ச்சியை அவர்களும் செய்ய மாட்டார்களா என்ன?

எனவே தோணிகளையே கற்களுடன் பாலமாக்கி கடலைக் கடக்க சிந்தித்தார் தளவாய் ராமப்பய்யர். தக்க தருணத் தில் இந்தத் தோணிகள் பயன்பட்ட விதம் எண்ணி மதுரை மீனாட்சியை வணங்கிக் கொண்டார்.

சிறைப்பட்ட குமரன் அழகனுக்குப் பலத்த பாதுகாப்பு.

மாலை மறைகிறது.

அவரவர் கூடாரம் திரும்புகிறார்கள்.

ஆ! தூது வந்தபோது இந்த நாய் என்னை எப்படி அவமதித்தது என்று உறுமுகிறார் தளவாய் ராமப்பய்யர்.

"எனது குடுமியை அறுத்து தேங்காய்க் குடுமியையா கட்ட நினைத்தாய்!"

அழகன் குமரன் ஏளனமாய்ச் சிரிக்கிறான்.

"உன்து குடுமி இப்போது என் கையில். அது என்ன பாடுபடப் போகிறது பார்!

நெருப்பனைய ஆவேசம் கொண்டு உலவுகிறார் தளவாய் ராமப்பய்யர்.

பொழுது விடிவதற்குள் தனது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் துடியாய்த் துடிக்கிறார்.

"யாரங்கே! போகலூரர்க் கோட்டையில் சிறை வைத்திருக்கும் இந்த நாயின் மனைவியையும், புத்திரனையும், மருமகளையும் பொழுது விடிவதற்குள் அழைத்து வந்துவிட வேண்டும்!" என்று கடுமையாக ஆணை பிறப்பிக்கிறார்.

ஏனிந்த ஆணை?

"டேய் பொடிப்பயலே! உனது ஆணவம் இப்போது என்னவாகப் போகிறது பார்!" என்கிறார் தளவாய் ராமப்பய்யர்.

"ஒன்றும் ஆகாது. உயிரைக் குடிக்கும். எனது மனைவி மக்கள் மானபங்கப் படுத்தப்படுவர். அவ்வளவுதானே? நான் வீர நாய் என்று புகழப்படுவேன்! நீ சொறிநாய் என்று இகழப்படுவாய் அவ்வளவே."

ஒரு மாவீரனுக்குரிய மிடுக்குடன் பேசலானான் குமரன் அழகன்.

உடல் முழுவதும் பற்றி எரிந்தது தளவாய் ராமப்பய்யருக்கு.

''டேய் காமுட்டிச் சாத்தான்!'' என்று இரைகிருர்.

கொலே பாதகனை காமுட்டிச் சாத்தான் பயங்கரமாக எதிரே வந்து நிற்கிருன்.

''கசையை எடுத்து உனது கை வலிக்குமளவுக்கு இவனே அடித்து நொறுக்கு!''

ஆணையின் பயங்கரம் கசையடியில் ரத்தம் சொட்டுகிறது.

பொழுது விடிகிற வரைக்கும் கசையடி விழுந்து கொண்டே இருக்கிறது.

அடிதாளாது ரத்தம் பீறிட மயங்கி விழுந்தான் குமரன் அழகன்.

விடிவதற்குள் குமரன் அழகனுடைய' மனைவியையும் புத்திரனையும் மருமகளையும் அழைத்து வந்தனர் நாயக்க வீரர்கள்.

தந்தையின் நிலேகண்டு பதறிப் போனுன் மைந்தன்.

''அடப்பாவி! நீ ஸ்மார்த்த குலத்தின் சத்துவ குண மறிந்தவனு?'' என்ருன்.

அடுத்து—

அதே கசையடி அவனுக்கும்.

பெற்ற தாய் துடிதுடிக்கிருள்.

கட்டிய மனைவி கதறியழுகிருள்.

இருவரையும்—குமரன் அழகனேயும் அவனுடைய குமாரனையும் குப்புற படுக்க வைத்து, தச்சனே அழைத்து, அவனது மரம் சீவும் இழைபுளி கொண்டு முதுகுகளேச் சீவுமாறு பயங்கர உத்தரவு பணிக்கிருர் தளவாய் ராமப் பய்யர்! அப்போதும் அவரது ஆத்திரம் அடங்கவில்லே.

முதுகு தோலுரிந்து ரத்தம் சொட்டுகிறது...

குமரன் அழகன் மனைவி மயக்கம் கொண்டாள். அப்போது...

''நீ பிராமணனல்ல; பேய்! எனது கற்பின் மேல் ஆணை யாகச் சொல்லுகிறேன்! இத்தனை சித்திரவதையை எங்கள் முருகக்கடவுள் உனக்கு அளிப்பார்! இது சத்தியம்!''

பொழுது நன்றாகவே விடிந்து விட்டது.

காமுட்டிச் சாத்தானை விட்டு இருவர் உடல்களையும் துண்டு துண்டாக வெட்டுமாறு உத்தரவிடுகிறார் தளவாய் ராமப்பய்யர்.

அடுத்து—

குமரன் அழகன் மனைவியையும் மருமகளையும் நோக்கி—

''இந்தப் பிணத்துண்டுகளை, அதோ இருக்கும் இரு கூடைகளில் நிரப்புங்கள்!'' என்று ஆணையிடுகிறார்.

கண்ணீருடன் அவ்வாறே செய்கிறார்கள்.

உலகில் எவருக்கும் கிடைக்காத தண்டனை தங்களுக்குக் கிடைத்ததில் வேதனையடைகிறார்கள். விதி!

அந்தக் கூடைகளை அவர்களையே சுமக்கச் செய்து, தோணி மூலமாக ராமேஸ்வரம் நோக்கி அனுப்பி வைக் கிறார் தளவாய் ராமப்பய்யர்.

''சடையத்தேவனுக்கு எச்சரியுங்கள். இதே போல அவனது உடலைக் கூடையில் நொறுக்கி வைத்து அவனது மனைவிகளைச் சுமக்கச் செய்து மதுரைக்குக் கொண்டு செல்லப் போவதாகச் சொல்லுங்கள்.''

தோணி புறப்பட்டது.

தளவாய் ராமப்பய்யர் ஆத்திரம் ஒருவாறு அடங்கி, கடற்பால வேலைகளில் கவனம் செலுத்தத் தொடங்கினார்.

இராமேஸ்வர மாளிகையே ரத்தக் கண்ணீர் வடித்தது.

ஓ...குமரன் அழகன் குடும்பத்துக்கு இப்பேர்பட்ட இழிநிலைக்கதியா?

இந்த நிலையில் சேது சேனுதிபதி வன்னியத்தேவர் உயிருடன் மன்றுடிக் கொண்டிருக்கிறுர். கொடிய வைசூரி நோய் அவரை எந்த நேரத்திலும் கொன்றுவிடும் போலிருந்தது.

சோதனை மேல் சோதனை சேதுபதி சடையத்தேவருக்கு!

ஒரு ராஜமகுடம் இன்னெரு ராஜமகுடத்தை ஆட்டிப் படைக்கும் விதமா இது?

இதைவிட அநியாயமாக வட புலத்துச் சரித்திரங்களில் கேள்விப்பட்டதை எண்ணிப் பார்த்தாலும் இங்கே, நேரில் காண்கிற போது மனம் சகியாமல் குன்றிப் போனுர். இவ்வாறுன மனிதாபிமானத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் சம்பவம் தமிழ்ச் சரித்திரத்தில் இதுவே முதல் தடவை என்று எண்ணுகிறபோது இதயம் வெம்பியது.

தன்து தந்தையார் ஆட்சியில் இவ்வாறுன மனிதாபிமான மற்ற செயல் நடைபெற்றதை எண்ணி நாணிப் போனுள் மதுரை இளவரசி கங்கைநாச்சி. இதற்காக வேனும் மதுரை சென்று தந்தையாரிடம் வாதாடலாமா என்றும் எண்ணினுள். அது முடிகிற காரியமா?

சர்வ வல்லமை பொருந்திய தளவாய் ராமப்பய்யருக்கு மதுரையிலிருக்கும் செல்வாக்குக்கு...

பெரியம்மா நாயக்கமாதேவி ருத்திராபதியம்மாள் கேள்விப்பட்டால் எவ்வளவுக்கு வேதனையுறுவார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கிறுள்.

அப்போது யாரோ முதுகுப் புறமாக தொடுவது உணர்ந்து அரண்டு போய் திரும்பிப் பார்க்கிறுள்.

நாராயணத்தேவன்.

மனதில் கவலைகளும், மனிதாபிமானத்தைக் கொன்ற சம்பவமும் சேர்ந்து அவளை மறக்கச் செய்து, நாராயணத் தேவனைச் சேர்த்து அணைத்து அழச்செய்தது.

நாராயணத்தேவனும் இதனை எதிர்பார்க்கவில்லை.

மேன்மாடத்துச் சாளரத்துப் பக்கமாக இது நிகழ்ந்தது.

விளக்குகள் அளவோடு வெளிச்சம் போட்டுக் கொண்டிருந்தன.

தென்திசைக் காற்றுக்கு என்ன கவலை. இப்படி எவரேனும் காதலர்கள் சங்கமிப்பார்களா, புகுந்து விளையாடி சேட்டைச் செய்யலாமா என்கிற வேலையே தவிர அதற்கென்ன வேதனை புரியப்போகிறது?

''கங்கைநாச்சி! ஏன் அழவேண்டும்? போரில் நமக்கு வெற்றி! உங்கள் தளவாய் செய்கிற அநியாயத்துக்கு இந்தப் போர் அவர்பால் சாதகமாகத் திரும்புமேயானால் தெய்வம் என்பது இல்லை என்று என் வரை தீர்மானித்துக் கொள்வேன்.'' என்றான் நாராயணத்தேவன்.

இன்னும் அவர்களது அணைப்பு விடுபடவில்லை.

நாராயணத் தேவனுடைய பரந்த விரிந்த வீர மார் பகத்தே கங்கை நாச்சியின் கவிதை நயம் கொஞ்சம் மார் பகம் இணைந்து, கச்சையை அவமதித்து, கவிதையின் வருணனைகளை எட்டிப்பார்க்கச் செய்கிறது.

''நாம் ஒன்று செய்யலாமா?''

''என்ன கங்கை நாச்சி?''

''ஒருக்கால் போரில் தோல்வி கண்டு நம்மிருவரையும் சிறை செய்து கொண்டு போகிற துர்ப்பாக்கியம் ஏற்படு மானால், நாம் ராமேஸ்வரக்கடலில் மூழ்கி புண்ணியம் சேர்த்துக் கொள்வோம்.''

''அதற்கு அவசியமே இல்லை. இதே சேது நாட்டுக்கு எனது அண்ணனுக்குப் பிறகு நான் ராஜனாவேன். அப்போது நீ ராணியாக என் பக்கத்தில் வீற்றிருப்பாய்!''

நாராயணத்தேவன் இவ்வாறு கூறியதும் அணைப்பில் இருந்து விடுபட்ட கங்கைநாச்சி அவனது முகத்தைக் கூர்ந்து கவனிக்கிறாள். இருவர் முகங்களிலும் மகிழ்ச்சிப் பிரவாகம்.

என்ன நினைத்தாளோ ஏது நினைத்தாளோ, அப்படியே அவனது முகத்தைப் பிடித்து வலிந்து அழுந்த முத்தம் கொடுத்து வெகுநேரம் மெய்மறந்து மேனி சிலிர்த்துப் போகிருள் கங்கை நாச்சி.

''என்ன இது?''

கேட்க முனைகிறபோது வாய்விடுபட்டால் தானே?

கங்கை நாச்சியின் அந்த அதரபானத்தால் நாராயணத் தேவனும் பலவீனப்பட்டுவிட்டான்.

பின் எங்கே கேட்பது?

கேட்பதால் என்ன லாபம்?

மீண்டும் மீண்டும் மாறி மாறி அதர ஒத்தடமளிக்கிருள் கங்கை நாச்சி.

அவள் தன்னை மறந்துவிட்டாள். தனது நிலைகளைக் குறித்து கவலை கொள்ளாத அளவுக்கு மாறிவிட்டாள். இனி நடக்கப் போகிற முடிவை அவள் பூரணமாக உணர்ந்தே இவ்வாருன செயலில் இறங்கிவிட்டாளோ?

சில சமயங்கள் மனம் வக்கரித்துப் போகிறபோது எதுவும் துச்சமாகி விடுவதுண்டு. அவ்வாறே இவளுக்கும் நேர்ந்து விட்டதோ?

மெல்ல நாராயணத்தேவனை அமருமாறு செய்து மடியில் கிடத்திக் கொள்கிருள். மீண்டும் அமுதபானம்!

என்னதான் பலம்பொருந்திய மனத்திட்பமிருந்தாலும் கவலைகள் இருந்தாலும் எந்த வீரனைத் தான் இம்மாதிரி யான கட்டம் பலவீனப்படுத்தாது.

நாராயணத்தேவன் பெரிதாகவே பலவீனமடைந்து போனன்.

அவனது இடக்கரம் அவளது இடையைத் தழுவிச் சுற்றின.

"கங்கை நாச்சி! இது முறையல்ல!" என்றான் அந்த பலவீனத்திலும்.

கங்கை நாச்சி பளிச்சென்று பதில் சொன்னாள்.

"எங்கள் மதுரை செய்த முறைக்கேட்டை விட இது பெரிதல்ல. இது சாதாரணமானது; இயல்பானது. பிரபோ! நான் அறிந்தே இந்தவற்றைச் செய்கிறேன். எதையும் பூரணமாகச் சிந்தித்தே இக்குற்றத்தைச் செய்கிறேன். இது தேவையென்று உணர்ந்தே யாசிக்கிறேன். இது கூட இல்லாமல் நான் உயிர் துரப்பேனோ என்று வெதும்பி வெதும்பி இக்காரியத்தில் உங்களைத் தூண்டுகிறேன். உங்கள் தலைக்குக் கிடைக்கும் ராஜமகுடத்தை விட, இந்தச் சிம்மாசனம் எனக்குப் போதுமானதாக இருக்கிறது. இந்தச் சிலகண ஆட்சியில் நான் ராணியாக இருக்கிறேன். தெய்வம் ஆசீர்வதித்தால் ராஜ மகுடத்து ராணியாக இருக்கிறேன். இல்லை என்றால், இன்ப மகுடத்தின் ராணியாக இறப்பேன்!"

அதற்குமேல் அவள் பேசவில்லை. தனது உடல் பலம் முழுமையும் பிரயோகித்துச் சேர்த்து அணைத்து முத்தமிட்டு...

நாராயணத்தேவனும் நாராயணா என்று சரணடைந்து போனான்.

22

கடற்பாலத்தை எவ்வாறோ முடித்து மதுரை படைகள் ராமேஸ்வரம் நோக்கிவரும் செய்தி சேதுபதி சடையத் தேவரை முதன் முறையாகப் பாதிக்கச் செய்தது.

கலங்காத ராவண உள்ளம் படைத்த சேதுபதி சடையத் தவர் முதன்முறையாகக் கலங்கிப்போனார்.

ஒருபுறம் சேதுநாட்டின் வலக்கரம் போலிருந்த சேனாதிபதி வன்னியத்தேவர் உயிருடன் மன்றாடிக் கொண்டிருக்

கிறார். மறுபுறம் குமரன் அழகன் குடும்பத்துக்கு ஏற்பட்ட மானபங்கம்!

மேலும் மறவர் படைகள் சேதமாகச் சேதமாக வேறு உதவிகளில்லாமல் தவிக்கும் தவிப்பு.

நாயக்க படைகளோ சேதமாகிற அளவுக்கு மேலும் வந்து குவியும் குவிப்பு...

ஒரு வல்லரசை எதிர்ப்பது எவ்வளவு பெரிய பேதமை என்கிற அரசியல் ஞானமிக்கவராளுலும், ராமப்பய்யர் இவ்வாறு போர்த்துகீசியர்களுக்கு வாக்குறுதிகளை அள்ளிக் குவித்து ஆயுத தளவாடங்களைப் பெற்றுச் சேதுநாட்டையே எரியூட்டப் புறப்படுவார் என்று யார்எதிர் பார்த்தார்கள்? தேசப்பற்றற்ற வீரம்!

எல்லாவற்றுக்கும் மூலகாரணம், குடும்பத்தை ராமேஸ் வரம் நோக்கி அனுப்புவதைவிட்டுத் தாமும் ராமேஸ்வரத் தில் வந்து ஓய்வு கண்டதுதான்!

அன்றே போர்க்களத்தில் நாம் இறங்கி இருந்தால், இன்று கடற்பாலம் கண்டு ராமேஸ்வாம் வரை மதுரைப் படைகள் வரக்காரணமே இல்லை. எல்லாம் விதி!

விதிக்கு மேலான ஒன்று சடையத்தேவருக்குப் புரிகிறது. அது...

தமிழர்கள் காட்டிக் கொடுக்கத் தொடங்கி விட்டார்கள்.

தமிழர்களுக்கு நாட்டுப்பற்று அகன்று நாட்கள் பலவாயின...

தமிழர்களுக்கு மொழிபற்று தொலைந்து அவர்கள் எந்த மொழிக்கும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளத் தொடங்கி விட்டது...

எவன் ஆண்டால் என்ன; தனது வாழ்வுக்கு வசதி ஏற்பட்டால் போதும் என்கிற ஈனத்தனமான புத்தி தமிழர் களுக்கு ஏற்பட்டு விட்டது ஒரு துரதிர்ஷ்டவசமே!

படைகள் ராமேஸ்வரத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

"மாமா! அப்பாவுக்கு மூச்சு திணறுகிறது. உடனடியாக உங்களைப் பார்க்க வேண்டுமாம்?" என்று ஓடோடி வந்து கூறினான் நாராயணத்தேவன்.

சேதுபதி சடையத்தேவர் விரைந்து செல்கிறார்.

மாளிகையின் கீழ்க்கூடத்தில் தனியான ஓர் அறையில் படுத்துக்கிடக்கிறார் வன்னியத்தேவர்.

அவரது பக்கத்தில் மனைவி கங்கை நாச்சியும் மகன் ரகுநாதனும் மதுரை இளவரசி கங்கை நாச்சியும் இருக்கிறார்கள்.

நாராயணத் தேவனைத் தொடர்ந்து சேதுபதி சடையத் தேவர் உள்ளே நுழைகிறார்.

வன்னியத்தேவருக்கு அந்திம காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

அருகே வந்து நின்ற சேதுபதியை நோக்குகிறார். கண்களில் பொல பொலவென்று நீர்த்திவலைகள் உருளுகின்றன.

பொங்கி வரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அருகில் அமருகிறார் சேதுபதி சடையத்தேவர்.

"மருகரே! எதற்காகக் கண்ணீர் விட வேண்டும்? நடந்தது நடந்து விட்டது. தலை நிமிர்ந்த சேது குலம் இன்று தலை தாழ்ந்துவிட்டது."

வன்னியத்தேவர் தொடர்ந்தார்:

"அது என்னையும் பலி கொண்டு விட்டது!"

"மருகரே! அவ்வாறு சொல்ல வேண்டாம்."

"நான் பிழைக்க மாட்டேன். ஒன்று சொல்வேன். கேட்பதும் கேட்காமல் விடுவதும் உங்கள் விருப்பம். இனியும் நமது மறவர்களை நாசம் செய்வதைவிட, பேசாமல் சரணடைந்து விடுவது நல்லது. மதுரை இளவரசியை

அவர்களிடம் ஒப்படைத்து விடுங்கள். அவர்கள் திருமணம் நடைபெற வேண்டும் என்று லிபி இருந்தால் நடக்கட்டும். இல்லையென்ருல் நடப்பது நடக்கட்டும்.''

சில கணங்கள் மௌனம்.

இரண்டு கங்கை நாச்சிகளின் கண்களிலும் கங்கை பிரவாகமெடுத்து ஓடுகிறது..

மதுரை இளவரசி கங்கை நாச்சிக்கு மயக்கமே கண்டு விட்டது. ஆயினும் சுதாரித்துக் கொண்டு நிற்கிருள்.

''என்ன சொல்கிறீர்கள்?''

வன்னியத்தேவர் கேட்கிருர். குரலில் சுவாசமில்லே.

''அப்படியே ஆகட்டும்.''

ஓ...சடையத்தேவர் ஒப்புக்கொண்டார். அதன்பின் விளைவுகள் என்ன என்பதை நன்குணர்ந்தே ஒப்புக் கொள் கிருர்.

அடுத்து—

ரகுநாதனை நோக்கி சுறுசுறுவென்று ஆணைகளைப் பிறப்பிக்கிருர்.

''ரகுநாதா! நீயும் நாராயணத்தேவனும் நமது குடும்பத்தை அழைத்துக் கொண்டு தலைமறைவாகச் சென்று விடுகிறீர்கள். எனக்கு என்ன ஆகும் என்பதைத் திட்டவட்டமாக இப்போது சொல்வதற்கில்லே. என்ன ஆனுலும் நீங்கள் உணர்ச்சி வயப்பட்டுவிடக் கூடாது. நமது ஜன்ம எதிரி தம்பித் தேவன் எந்தச் சூழ்ச்சிக்கும் அஞ்ச மாட்டான். ஆகவே காலதாமதம் செய்யாமல் புறப்படு!''

நாராயணத் தேவன் துன்பியலாய் மதுரை இளவரசி கங்கைநாச்சியை நோக்குகிருன்.

கணீரென்று மதுரை இளவரசி கங்கை நாச்சியிட மிருந்து குரல் ஒலிக்கிறது.

''சேதுபதி ராஜா சொன்னபடி செய்யுங்கள். நான் உயிருடன் இருக்கிற வரைக்கும் அவருக்கு எந்தவித மான பங்கமும் வராது. பத்திரமாக மதுரைக்கு அழைத்துச் சென்று எனது தந்தையாரிடம் ஒப்படைப்பேன். பிரபோ! இந்த ஜன்மத்தில் நமது காதல் நிறைவேறுமானுல் சந்திப் போம். ஆனுல் ஒன்று. இந்தக் கங்கை நாச்சி நாராயணத் தேவரின் மனைவி. வேறு எவரையும் என் நிழல்கூட அனுமதிக்காது. சேது நாட்டுக்கு வந்த அக்கௌரவத்தை மதுரையில் கௌரவப்படுத்துவேன். அது எப்படி என் கிறீர்களா? கேள்விப்படுவீர்கள். புறப்படுங்கள்!''

கங்கை நாச்சியின் இந்த உருக்கமான சொற்கள் எல்லாக் கண்களையும் கலக்கி விட்டன.

மறவர்குல கங்கை நாச்சி மேலும் கேவியழுகிருள்.

அப்போது...

வன்னியத்தேவரின் உயிர் மிக நிம்மதியாக—புன்னகை யுடன் பிரிகிறது.

அந்த மாளிகையே அலறுகிறது.

இந்த அலறலுடன் மதுரை படைகளின் போர் முரசம் கேட்கிறது.

சேதுபதி சடையத்தேவர் அந்தத் துக்கத்தினூடே அவசரப்படுத்துகிருர்.

ரகுநாதன், தனது தந்தையிறப்பைக் கவனிப்பானு?

குடும்பத்தைக் கொண்டு செல்வானு?

கொடுமையோ கொடுமை!

அனைவருமே கலங்கிய கண்களுடன் விரைகிருர்கள்.

சேதுபதி சடையத்தேவர் கம்பீரமாக மாளிகை வாசலில் வந்து நிற்கிருர். அவருடன் மதுரை இளவரசி கங்கை நாச்சியும் வந்து கண்கலங்கி நிற்கிருள்.

வீரர்களுக்கு ஆணையிடுகிருர்.

''யாரும் எதிர்க்க வேண்டாம்!''

வீரர்கள் வரிசை கட்டி நிற்கிறார்கள். அவர்களுக்கு வன்னியத்தேவர் இறந்து பட்ட செய்தி தெரிந்து விட்டது.

ஒருவரும் எதிர்ப்பாரின்றி நாயக்க படைகள் வந்து கொண்டிருக்கின்றன.

தளவாய் ராமப்பய்யருக்கே அதிர்ச்சிகலந்த ஆச்சரியம்.

என்ன நடந்தது இந்தச் சேதுபதிக்கு?

யாரும் எதிர்க்கவில்லையே!

கடற்பாலம் கட்டியது வீண்தானா?

படைகள் மாளிகையை அடைகின்றன.

சேதுபதி சடையத்தேவர் கம்பீரமாக நிற்கிறார். பக்கத்தில் கங்கைநாச்சி.

"நாயக்க தளவாய் ராமப்பய்யரே! நான் உங்கள் இளவரசியை ஒப்படைக்கிறேன். அத்துடன் என்னையும் உங்களிடம் ஒப்படைக்கிறேன்." என்று கூறி இருகரங்களை நீட்ட—

"பூட்டுங்கள் விலங்கை" கர்ஜிக்கிறார் தளவாய் ராமப்பய்யர்.

அடுத்து...

"தளவாய்!" என்று பெரிதாகக் கூச்சலிடுகிறாள் மதுரை இளவரசி கங்கைநாச்சி.

"எவ்வளவு தைரியமிருந்தால், என்னையும் வணங்காமல், என் எதிரே பூட்டுங்கள் என்பீர்கள். நான் இன்னமும் மதுரை மாநகரின் வல்லமை பொருந்திய இளவரசி!"

அயர்ந்து போகிறார் தளவாய் ராமப்பய்யர்.

"இளவரசி! உங்கள் அதிகாரத்தை மதுரையில் வைத்துக் கொள்ளலாம்."

"என்னை அவமதிப்பதன் மூலம் திருமலை நாயக்கரை அவமதிக்கிறீர்கள்!"

மீண்டும் அரண்டு போகிறார் தளவாய் ராமப்பய்யர்.

"உள்ளே எனது மாமனார் உயிர் பிரிந்து சவமாக இருக்கிறார். அவரது ஈமக்கடன்கள் முடிக்க வேண்டும். அதுவரை அவகாசம் தாருங்கள். அதன் பிறகு நாங்கள் இருவருமே உங்கள் கைதிகளாக மதுரைக்கு வருகிறோம். இவரை ஒரு சேதுபதியாகவும், என்னை மதுரை இளவரசியாகவும் மதித்து மதுரைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். மதுரைக்குச் சென்றதும் உங்கள் அதிகாரம் எப்படி வேண்டுமானாலும் ஆட்டம் போடலாம்."

தளவாய் ராமப்பய்யர் மௌனமாக நின்றார். உள்ளே எரிமலை வெடித்தது.

மதுரை இளவரசி கங்கைநாச்சியும், "நீங்கள் ஆக வேண்டியதைக் கவனிக்கலாம்!" என்றாள் சேதுபதி சடையத்தேவரை நோக்கி.

அன்று மாலை நாயக்கப் படைகள் மதுரை நோக்கிப் புறப்பட்டன.

ஒரு ரதத்தில் மதுரை இளவரசி கங்கைநாச்சி மட்டும் புறப்பட்டாள்.

தோழிப் பெண் ராஜலட்சுமி வர மறுத்து விட்டாள். அவளுக்குத் தண்டனை நிச்சயமாகக் கிடைக்கும். எனவே அவள் சேதுபதி குடும்பத்துடன் மறைந்து விட்டாள்.

சேதுபதி சடையத்தேவர் புரவியிலே அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்தச் சேதுபதி குடும்பம் எங்கே மறைந்து விட்டது என்கிற ஆலோசனையுடன் புரவியில் வந்துகொண்டிருக்கிறார் தளவாய் ராமப்பய்யர். நாரயணத்தேவன் அகப்படாதது ஒரு குறையாகவே அவருக்குத் தெரிந்தது. எப்படியும் கங்கைநாச்சியைத் தேடி அவன் மதுரைக்கு வந்துதானே ஆகவேண்டும். அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று மனத்துள் உறுமிக் கொள்கிறார்.

படைகள் மதுரையை அடைகின்றன.

வெற்றிப் பெருமிதத்துடன் வருகிற படைகளைக் கண்டு மதுரை மாநகரமே கோஷமிட்டு வரவேற்கிறது.

செய்தியறிந்த திருமலை நாயக்க மன்னர் பூரித்துப் போகிறார்.

தளவாய் குவித்த வெற்றிகளுக்காக ஒட்டு மொத்த மாகக் கனகாபிஷேகம் செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொள்கிறார்.

பெரிய நாயக்க மாதேவி ருத்திராபதியம்மாளோ, கண்ணீருடன் மகள் கங்கைநாச்சியை எதிர்பார்க்கிறாள்.

ஓ... இவர்கள் இவ்வாறு தோல்வி காணவேண்டும்?

மாலைக் கதிரவன் மேலை வாயிலை நெருங்கிக் கொண்டிருக்கிறான்.

அரண்மனை முகப்பில் அனைவரும் காத்துக் கொண் டிருக்கிறார்கள்.

சேதுபதி சடையத்தேவரைப் பார்க்க மதுரைமக்களே திரளாகக் கூடியிருக்கிறார்கள்.

தளவாய் ராமப்பய்யர் புரவியை விட்டு வந்திறங்கி நாயக்க மன்னர் திருமலை பூபதியை வணங்குகிறார்.

எங்கும் வெற்றி நிறைந்த வாழ்த் தொலிகள் செவிப் பறைகளைப் பிய்க்கின்றன.

''எங்கே சடையத்தேவன்?'' என்று உறுமினார் மன்னர் திருமலை நாயக்கர்.

''இதோ நாயக்க பூபதி!'' என்று கூறியவாறு அருகே வந்து நிற்கிறார் சேதுபதி சடையத்தேவர்.

பலகணங்கள் வரை பார்வைகளில் பலவிதமான பரி மாற்றங்கள்...

ஆ? என்ன ஆஜானுபாகுவான மறவர்க்குடித் தோற்றம்!

தம்பி குமார முத்து நாயக்கர் கவனிக்கிறார்.

மகன் முத்துவீரப்ப நாயக்கன் கவனிக்கிறான்.

திருமலை நாயக்கருடைய இருநூறு மனைவிமார்களும் கவனிக்கிறார்கள்...

அரசாங்க அதிகாரிகள் அனைவருமே கவனிக்கிறார்கள்.

பானுமதியின் கண்களில் நீர்முத்துக்கள்.

"சடையத்தேவனைச் சிறையில் தள்ளுங்கள்!" என்று ஆத்திரம் கொதிக்க ஆணையிடுகிறார் மன்னர் திருமலை நாயக்கர்.

அத்தருணத்தில்—

பெரியமாதேவி ருத்திராபதியம்மாளின் குரல் ஒலிக்கிறது.

"சிறையிலடைப்பது பிறகிருக்கட்டும். எங்கே கங்கை நாச்சி என்று எவராவது கேட்டீர்களா?"

"ரதத்திலிருக்கிறார் நாயக்கமாதேவி!" என்றார் தளவாய் ராமப்பய்யர்.

"முதலில் அவளை அழைத்து வரவேண்டும் என்கிற எண்ணமில்லை. விரோதியைப் பழிவாங்கமட்டுமே எல்லோர் மனமும் துடிக்கிறது! மனிதாபிமானமற்ற இந்தப் போரில் என்னால் மனிதர்களைச் சந்திக்க முடியவில்லை. எங்கே என் கங்கைநாச்சி?"

ஓ... இவர்தான் பெரிய நாயக்கமாதேவியா?

அனைவரும் ரதத்தை நாடிச் சென்று கவனிக்க...

மதுரை இளவரசி கங்கைநாச்சி, தயாராக வைத்திருந்த வைரக்கல் பொடியை விழுங்கி, வாயில் ரத்தம் வழிய உயிர் பிரிந்து சாய்ந்து கிடந்த கோலம்...

ஓ... அந்தத் திருமலைக்குமரி...

அனைவரையுமே அதிர்ச்சியில் ஆழ்த்திவிட்டாள்...

சேதுகுலத்தை அவள் தனது சாவின் மூலம் கௌரவித்து விட்டாள்.

Wrapper Printed at
Eskay Art Printers, Madras-5
Phone : 841478